

11.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
26 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சந்தையில்...

**செ. கணேசலிங்கன்**

University of Peradeniya
26 JUL 2011
Library

விற்பனை உரிமை:

**பாரி நிலையம்**

**184, பிராட்வே :: சென்னை-600 108.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

649604

குமரன்
முதற்பதிப்பு : டிசம்பர் 1996
(C)

விலை ரூ. 36-00

| | | |
|---|---|---|
| Title | : | PUTHIYA SANTHAIYIL... |
| Subject | : | A Social Novel |
| Author | : | SE. GANESALINGAN |
| No. of Pages | : | 192 |
| Paper | : | Creamwove 10.5 kg. |
| Price | : | Rs. 36-00 |
| Binding | : | Duplex Board |
| Type | : | 10 Point |
| Publisher | : | KUMARAN PUBLISHERS<br>79, 1st Street, Kumaran Colony,<br>Vadapalani, Chennai-600 026 |

Printers : Chitra Printo Graphic, Madras-600 014.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலைப் படித்தவர்க்குச் சில குறிப்புகள்

இலங்கையில் திருமதி பண்டாரநாயகாவின் தலைமையிலான சுதந்திரக் கட்சியின் ஆட்சி 1977 தேர்தலில் வீழ்ச்சியடைந்தது அக்கட்சியின் ஏழாண்டு ஆட்சி இறக்குமதிக் கட்டுப்பாடுகள் கொண்டது; உள்நாட்டு கைத்தொழில், விவசாய உற்பத்திகளுக்கு ஆதரவளித்தது. இடதுசாரிகளோடு இணைந்ததால் அமெரிக்க ஏகாதிபத்தியச் சார்பு அற்றதாகவும் விளங்கியது. நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகளும் இக்கால கட்டத்தில் உடைக்கப்பட்டு வந்தன. பசுமைப் புரட்சி பணக்கார விவசாயிகள் என்ற வர்க்கத்தை வளர்த்து வந்தது.

ஜெயவர்த்தனா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி (யு. என். பி.) 1977 தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கிற்கு மேலான உறுப்பினர்களைக் கொண்டு வெற்றி பெற்றது. முற்றிலும் புதிதான, எதிர்மறையான பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்தது. அமெரிக்க ஏகாதிபத்தியச் சார்பாக அரசு மாறியது.

உலக வங்கிக் கடனுடன் திறந்த பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாட்டுப் பண்டங்களுக்கெல்லாம் கொழும்பு ஒரு புதிய சந்தையானது. கடன் பெற்ற பணத்தில் உலகில் கிடைக்கக்கூடிய நுகர் பண்டங்களெல்லாம் கொழும்பில் குவிக்கப்பட்டன. உள்நாட்டுக் கைத்தொழில்கள் பெரும்பாலும் மூடப்பட்டன. விவசாயிகளும் பாதிக்கப்பட்டனர்.

இப்புதிய அரசியல், பொருளாதார மாற்றம் சமூகவாழ்விலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. பூர்ஷ்வா வர்க்கத்தவரின் நுகர் பண்ட வெறி தணிந்தது. புதிய மாடல் கார்கள், பிரிட்ஜ், டி. வி., வீடியோ, தையல் மெஷின்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன எலெக்டிக் பொருட்கள், வெளிநாட்டுத் துணிகள் முதலான பல நூறு வகையான நுகர் பண்டங்கள் அவர்களது நீண்டகாலப் பசியைத் தணித்தன. இவற்றை வாங்க வாய்ப்பற்ற நடுத்தர வகுப்பினரும் நுகர்பண்ட வெறிக்கு இலக்காகி கடன்களில் மாட்டிக்கொண்டனர். வங்கிக் கடன் வட்டி 24—30 சதவீதமாக ஏறியது. எப்படியும் பணம் தேட வேண்டும் என்ற நிலையில் சமூக ஊழல்களும் மலிந்தன. கலாச்சார வீழ்ச்சியும் ஏற்பட்டது,

கூலி உழைப்பில் வாழ்ந்த மக்களே பெரும்பான்மையினர். இவர்கள் பண்டங்களின் விலையேற்றத்தாலும் என்றும் காணா வகையில் ஏறிய பண வீக்கத்தாலும் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

இவர்கள் ஒன்று திரண்டு போராட முற்பட்டனர். 1980 யூலையில் நடைபெற்ற அடையாள வேலை நிறுத்தத்தை சாட்டாக வைத்து இவர்களை அரசு அடக்கி ஒடுக்கியது. தொழிற்சங்க உரிமைகள், ஜனநாயக உரிமைகள், பேச்சு எழுத்து உரிமைகள் யாவும் பறிக்கப்பட்டன, பத்திரிகைகள் யாவும் அரசின் ஊதுகுழல்களாகின. டி. வி., ரேடியோ யாவும் அரசின் குரலையே ஒலித்தன.

ஜெயவர்த்தனா தன்னாதிக்கமும் நிர்வாக அதிகாரமும் கொண்ட ஜனாதிபதியாக தன்னை ஆக்கிக்கொண்டான். புதிய அரசியல் சட்டத்தை ஆக்கி ஒரு புதிய பாசிச ஆட்சியை நிலைநாட்டிக்கொண்டான்.

உலக வங்கியே இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தை ஆண்டுதோறும் தயாரிக்கும் நிலை ஏற்பட்டது; அமெரிக்கக் கடன் அதிகரிப்போடு டாலரின் விலை ஏறிக்கொண்டது. 1977-ல் எட்டு ரூபாவாக இருந்த டாலரின் விலை ஆறு ஆண்டுகளில் இருபத்து நாலு ரூபாவிற்கு ஏறியது. (உலகிற்கு தேயிலை வழங்கும் நாட்டில் முப்பது சதமாக இருந்த, கப் தேநீரின் விலை இக்காலத்தில் ஒன்றரை ரூபாவிற்கு உயர்ந்தது.) எமது ஆண்டு வருமானத்தில் 25 சதவீதம் வட்டி, தவணைப் பணத்திற்காக ஒதுக்கப்பட நேரிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேசக் கம்பனிகள் நுகர் பண்ட விற்பனையோடு ஐந்து நட்சத்திர ஓட்டல்களையும் கட்டினர்: சுதந்திர வர்த்தக வலயத்தில் தம் நாட்டுக்கு வேண்டிய தொழிற்சாலைகளை ஆரம்பித்தனர். முதலாளித்துவ நாடுகளின் வங்கிகள் கிளைகளை கொழும்பில் நிறுவின.

அரசியலிலும், பொருளாதாரத்திலும் இலங்கை அமெரிக்காவின் நவகாலனியாக மாறியது ஆளும் வர்க்கம் சார்ந்த ஒரு பகுதியினர் இதை வரவேற்றனர். புதிய ஓட்டல்களும் புதிய மாடல் கார்களும் அமெரிக்கப் படங்களைக் காட்டும் டி. வி. நிலையமும் இவ்வர்க்கத்தவர்களுக்குத் திருப்தியளித்தன.

புதிய தேர்தல் முறைகள் கையாளப்பட்டன. தமிழர்களுக்கு எதிராக சிங்களப் பேரினவாதப் பிரச்சாரமும் முடுக்கி விடப்பட்டது. அத்தோடு எதிர்க்கட்சிகளை அடக்கி, பிரித்து ஜனாதிபதித் தேர்தலில் ஜெயவர்த்தனா 52.8 சதவீத வாக்குப் பெற்று வெற்றி பெற்றான். நாடே தன் ஆட்சிக்கு முழு ஆதரவும் வழங்கிவிட்டதாக பிரச்சாரம் செய்யப்பட்டது. போட்டியிட்ட சுதந்திரக் கட்சி புரட்சி செய்ய முயன்றது எனக் கூறி மேலும் நசுக்கப்பட்டது.

அத்தோடுஅபிப்பிராய வாக்கெடுப்பு மூலம் மீண்டும்ஆறு ஆண்டு காலம் அதே நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து இயங்க அதிகாரம் வழங்கும் தேர்தல் நடத்தப்பட்டது. அரசு யந்திரத்தின் முழுப்பலத்துடன் யு. என். பி. காடையர்கள் எதிர்க்கட்சியினரின் ஜனநாயக உரிமைகளை முறியடித்து தேர்தலை நடாத்தினர். சிங்களப் பேரினவாதமும் பௌத்த மத வெறியும் பிரச்சாரத்தில் இணைக்கப்பட்டன.

பாசிச அடக்குமுறைக்கு எதிராகப் போராடிய இளைஞர்கள் 'பயங்கரவாதிகள்' என பிரச்சாரம் செய்யப்பட்டனர். பயங்கரவாதத்தை அடக்கி ஒடுக்க ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களியுங்கள் என்ற குரல் தேர்தலின்போது முன் வைக்கப்பட்டது. 68 சதவீத வாக்காளர் வாக்களித்ததில் 51 சதவீத வாக்குகள் பெற்று ஆட்சி மீண்டும் ஆறு ஆண்டுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தியங்க உரிமை பெற்றனர். தொண்டமானின் காங்கிரசின் வாக்குகளும் இதில் அடங்கும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆறாண்டுகால ஆட்சியில் முன் என்றுமில்லாத படியாக மக்கள் பாதிக்கபபட்டிருந்தனர். புதிய திறந்த சந்தை என்ற பொருளாதாரக் கோட்பாடு ஏழைகளை மேலும் ஏழையாக்கியது பணக்காரர் மேலும் செல்வந்தராயினர்.

பணவீக்கம் என்று மில்லாதபடி ஆண்டுதோறும் 30 சத வீதத்திற்குக் குறையாது உயர்ந்து வந்தது

வெளிநாட்டுக் கடன் பணங்கள் மோசமாகக் கையாளப் பட்டன. அவற்றிலும் ஊழல்கள் மலிந்தன.

சர்வதேசக் கம்பனிகளுக்கு சுரண்டும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. சுதந்திர வர்த்தக வலயம் மக்களின் உழைப்பை மலிவாக வாங்கி ஏற்றுமதி செய்ய வாய்ப்பளித்தது. புதிய ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் புதிய ஆடம்பரங்களையும் முதலாளித்துவ கலாசாரத்தையும் பறைசாற்றின. டி.வி. விளம்பரங்கள் ஏழை மக்களின் ஆவலையும் தூண்டின. படித்தவரிடை வேலையில்லாத் திண்டாட்டம் பயங்கர வடிவம் எடுத்தது. ஏறக்குறைய 20 லட்சம் படித்த வாலிபர்கள் வேலையற்றிருந்தனர். உழைப்பில் ஈடுபடக்கூடிய மொத்த குடித் தொகையில் இவர்கள் 20 சத விகிதத்தவராவர்.

உயர் கல்வி வாய்ப்புகள் மிகவும் குறைந்ததால் மாணவரிடை போட்டியும் விரக்தியும் ஏற்பட்டது. 198`ல் 160,000 மாணவர் உயர்கல்வி வேண்டிப் பரீட்சை எழுதியதில் 4500 மாணவர்களுக்கே மருத்துவ, இஞ்கினியரிங், பிற பட்டப் படிப்புகளுக்கு வெற்றிடம் இருந்தது மற்றவர் தெருவில் நின்று படித்த வேலையற்ற இளைஞர்படையோடு சேர்ந்தனர்.

1947ல் இருந்து ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு தடவை அரசு மாறிக் கொண்டே வந்தது. ஐக்கிய தேசியக் கட்சி ஊழல் முறையாக தன் பதவிக்காலத்தை நீடித்ததால் மாற்றம் எதிர்பார்த்த எதிர்க் கட்சியினர் ஆத்திரமடைந்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய பயங்கர நிலையைச் சமாளிக்க ஜெய வர்த்தனாவும் சகபாடிகளும் தமிழர்கள் மேல் தம் இனப்பகை யைத் தூண்டி விட்டனர். எங்கள் பௌத்த சிங்கள நாட்டைப் பிரிக்க தமிழ் 'பயங்கர வாதிகள்' முயற்சிக்கிறார்கள் என்ற பிரச்சாரம் சிங்களக் காடையர், இனவெறி இளைஞர்கள், முப்படை, பொலிசாரிடையே ஆதிக்கம் பெற்றது. இவர்கள் ஒன்றிணைந்து திட்டமிட்டு நடத்தியதே 1983 யூலைக் கலவரமாகும்.

மக்களுக்குக் கிடைக்கக் கூடிய பண்டங்கள் எப்பொழு தும் அவர்களது உழைப்பின் மூலம் பெறுவதாகவே இருக்க வேண்டும். அவை எல்லா மக்களுக்கும் சமனாகக் கிடைக்கக் கூடியதாகப் பங்கீடு செய்யப்பட வேண்டும்.

சோஷலிச சமுதாயம் அமைக்கும் காலகட்டத்தில் மூலதன ஆக்கத்திற்காக மக்களது உபரி உழைப்பில் எப்பங்கை எடுத்துக் கொள்வது என்றதோர் பிரச்சனை எழுவது இயல்பு. உழைக்கும் மக்கள் தங்கள் வாழ்க்கை வளம் பெற்று வருவதாக என்றும் உணர்ந்து கொள்ள வேண்டும்; அதற்கேற்றபடி நுகர்பண்ட உற்பத்தியும் பெருக்கப்பட்டு வழங்கப்படவேண்டும்; அத்துடன் புரட்சிகர அரசியலறிவும் மக்களிடை பரப்பப்பட வேண்டும் என மாவோ வலியுறுத் தினார்.

புரட்சிகர அரசியலறிவின் வளர்ச்சி மூலமே உழைக்கும் மக்களும் தமது உபரி உழைப்பின் பங்கீடுகள், தாம் பெறும் நுகர்பண்டங்கள், நன்மைகள் பற்றி அறிந்து அளவிட முடியும்.

கொழும்புச் சந்தையில், கடன் பெற்ற பணத்தில் கொண்டு வந்து குவிக்கப்பட்ட பண்டங்கள் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கத்தை இந்நாவல் மூலம் கூற முனைந் தேன். நுகர் பண்ட வெறி எல்லையற்றது; எந்த வர்க்கமும் இவற்றால் என்றும் திருப்தியடைவதில்லை; நடுத்தர வகுப்பினரைக் கடன்களில் மாட்டி சீரழித்து விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைக்கும் மக்கள் சரியான அரசியலறிவு இல்லாதபோது அழிவு வேலைகளிலே ஈடுபட்டு விடுகின்றனர். இவற்றை இலங்கையில் அண்மையில் கண்டோம்.

இலங்கையின் பொருளாதார, சமூக வாழ்வில் தமிழர் களின் பங்களிப்பு மிகப் பெரியது. நிர்வாகம், கல்வி, வாணிபம், தொழில் நுட்பம் ஆகியவற்றில் வட, கீழ் பகுதித் தமிழரும் உடலுழைப்பில் மலையகத் தமிழரும் ஆற்றிய சேவையின் சிறப்பை சிங்கள அறிஞர்கள், பொருளாதார நிபுணர்களே என்றும் பாராட்டி வந்தனர். ஆனால் அரசியல் தலைவர்கள் பாராளுமன்ற சந்தர்ப்பவாதம், சுயநலம், பொறாமை கொண்டு இனங்களிடை பகைமையை வளர்த்தனர்

ஆங்கிலேயர் விட்டுச் சென்ற எச்சமாகிய பேரினவாத ஜனநாயகத்தைப் பயன்படுத்தி மலையகத் தமிழர்களை நவீன அடிமைகளாகவும் வட கீழ்பகுதித் தமிழர்களை இரண்டாந்தர பிரசைகளாகவும் ஆக்கினர். இதனால் இன்று ஏற்பட்டுள்ள முக்கியமான தேசிய இனப் பிரச்சனையையும் இந்நாவல் ஆராய்கிறது.

பூர்ஷ்வா ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு பாசிசம் தலையெடுக்கும்போது தேசிய இனப்பிரச்சனைகள் மோச மடைந்து வருவது இயல்பாகும். மக்கள் ஜனநாயகம் ஏற்படும் காலத்திலேயே தேசிய இனப்பிரச்சனைகள் தீர்க்கப்படும்.

''நாட்டை முழுமையாக ஜனநாயகப் படுத்துதலே தேசிய இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஏதுவான சூழ் நிலையும் அடிப்படையும் ஆகும்.'' என்று ஸ்டாலின் கூறும் போது சோஷலிச சமுதாயத்தில் ஏற்படக்கூடிய மக்கள் ஜனநாயகத்தையே கருதினார். 1917 வரை பூர்ஷ்வா ஜனநாயகம் பெரும்பாலும் தேசங்களைப் பிரிப்பதன் மூலம் தேசிய இனப் பிரச்சினைகளைத் தீர்க்க முயன்றது.

தேசம், தேசிய இனம் என்பவை பற்றிய சரியான வரை விலக்கணங்களை வகுத்துக் கூறிய பெருமையும் அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாகத் தீர்த்த சிறப்பும் ஸ்டாலினையும் லெனினையுமே சாரும்.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகள் உடைந்து முதலாளித்துவ வளர்ச்சி ஏற்படும் பொழுதே தேசிய இனப் பிரச்சனைகள் தோன்றுகின்றன. இக்கால கட்டத்தில் ஐரோப்பாவிலும் ரஷ்யாவிலும் பல போராட்டங்களும் சிக்கல்களும் ஏற்பட்டன. வல்லரசுகள் உடைந்து பல தேசங்கள் தோன்றின இவற்றை ஆராய்ந்து கற்றே ஸ்டாலின் தேசம் என்பது வரலாற்று அளவிலே அமையப் பெற்ற மக்கள் சமுதாயம் எனக்கூறி அதன் இலக்கணத்தை வகுத்தார்.

இன்றும் இலங்கையில் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகள் உடைந்து முதலாளித்துவ வளர்ச்சி ஏற்படும் கால கட்டத்திலேயே இப்பிரச்சனை வலுவடைந்து பிரிவினையை நோக்குவதைக் காணலாம். ஈரான் நாட்டில் ஷா எண்ணெயில் கிடைத்த பணத்தில் முதலாளித்துவ முறைகளைப் புகுத்தியதும் அடக்கப்பட்டிருந்த மத அடிப்படையிலான எழுச்சி ஏற்பட்டது. கொய்மேனியும் முல்லாக்களும் முதன்மை பெற்றனர். மத எழுச்சியும் இக்காலத்தில் தவிர்க்க முடியாதது இலங்கையிலும் சிங்களவர் புத்த மதத்தைத் தூக்கிப் பிடிப்பதைக் காண்கிறோம். இதே நிலையை இந்திய பஞ்சாப் மாநிலத்திலும் காண்கிறோம். இக்கால கட்டத்தில் பொருளாதாரச் சீரழிவைப் பற்றி மதத்தலைவர்கள் கவலைப்படமாட்டார்கள். ஈரான், இலங்கை, பஞ்சாப் இவற்றிற்கு உடனடி உதாரணங்களாகும். சீக்கியர்கள் மதத்தை முன் வைத்தே காலிஸ்தான் வேண்டுகின்றனர்.

தேசம் என்பது நான்கு முக்கிய அம்சங்களைக் கொண்டு வரலாற்று ரீதியாக அமையப்பெற்ற நிலையான மக்கள் சமுகம் என்று ஸ்டாலின் விளக்கினார். அவையாவன: 1) ஒரு பொதுவான மொழி 2) பொது நிலப் பகுதி 3) பொதுப் பொருளாதார வாழ்வு 4) பொதுவான கலாச்சாரத்தைக் கொண்ட பொதுவான மன இயல்பு. (மதம், கலாச்சாரம், வாழும் முறை ஆகியன)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நான்கு முக்கிய அம்சங்களில் ஒன்று பாதிக்கப்படும் போதே தேசிய இனப் பிரச்சனை தலை தூக்கலாம். இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை நான்குமே பாதிக்கப்பட்டன. அதனாலேயே நிலைமை. மிக மோசமடைய வாய்ப்பு ஏற்பட்டது. சிங்களம் ஆட்சி மொழியானது. பரம்பரையாக வாழ்ந்த தமிழரது நிலப்பரப்புகள் சிங்களக் குடியேற்றத்தினால் பறிக்கப்பட்டன. அவர்களது பொருளாதார வாய்ப்புகள் மோசமடைந்தன. வேலையின்மை, உயர் கல்வி வாய்ப்பின்மை, தமிழர் பகுதிகள் தொழில் வளத்தில் புறக்கணிக்கப் பட்டமை பாதிப்பு ஏற்படுத்தின. பௌத்த மத ஆதிக்கமும் இந்துமத புறக்கணிப்பு, கோவில்கள் நூலக எரிப்பும், உளவியல் ரீதியாக தமிழ் மக்களின் சினத்தை மேலும் தூண்டின.

பாராளுமன்ற ஜனநாயகம் இவற்றைத் தீர்க்க எவ்வித மும் பயன்படவில்லை. பாராளுமன்ற சந்தர்ப்ப வாதத்தில் இடதுசாரிக் கட்சிகளே தேசிய சிறுபான்மை இன மக்களின் தேவைகளைப் புறக்கணித்தன. பேரினவாதம் பாசிச வடிவம் எடுத்து அடக்கி ஒடுக்க முயல்கிறது. நிலைமை மேலும் மோசமடைவதைக் கண்டும் தீர்க்க வழி தெரியாது பிரிவினை வரை பிரச்சனை நீள்கிறது. தனியான தேசம் அமைக்கக் கூடிய நான்கு அம்சங்களும் தமிழர்களுக்கு உள்ளன. எல்லா வர்க்கங்களும் அணி திரண்டே தமிழீழத் தொழிலாளர், விவசாயிகளும் போராட்டத்தில் இணைகின்றனர்.

இவ்வேளை மற்றோர் வினா எழுகிறது. இப்போராட்டம் தேசிய விடுதலைப் போராட்டமா? அல்லது புதிய ஜனநாயகப் புரட்சியா? அல்லது சோஷலிசப் புரட்சியா? தேசிய விடுதலைப் போராட்டமாயின் தேசிய முதலாளிகள், குட்டி பூர்ஷ்வாக்கள் தலைமை தாங்கி பிற வர்க்கங்களையும் இணைத்து போராடுவர். புதிய ஜனநாயகப் புரட்சியாயின் தொழிலாளி விவசாயிகள் தலைமையில் பிற நேச வர்க்கங் களையும் சேர்த்துக் கொள்வர். பாட்டாளிகள் மட்டுமே தலைமை தாங்கி நடத்துவதே சோஷலிசப் புரட்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுதப் போராட்டத்தை முன்வைக்கும் வர்க்கத்தையும் கோட்பாட்டையும் கொண்டு புரட்சியின் தன்மையை நாம் அறிந்து கொள்ளலாம்.

ஒரு தேசிய இனம் பிரிந்து போகும் போராட்டத்தை முன்வைக்கும் வேளை மார்க்சிஸ்டுகளும் தொழிலாள விவசாயிகளும் ஒரு முக்கிய விஷயத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும் என லெனின் வலியுறுத்தியுள்ளார். அப்பிரிவினை பாட்டாளி வர்க்கத்திற்கு நலன் பயக்குமா என்பதைக் கருத்திற்கொண்டே அதற்கு ஆதரவு வழங்க வேண்டும் என்றார்.

ஏகாதிபத்திய வல்லரசுகள் தம் தேவைகளுக்காக நாடுகளைப் பிரித்த வரலாறுகளை நாம் பார்த்துள்ளோம். தேசிய இனங்களையே இரண்டாகப் பிரித்துள்ளதையும் காணலாம். ஜெர்மனி, கொரியா, வியத்நாம் இதற்கான உதாரணங்களாகும். பங்களதேஷ் நாட்டின் தேசிய விடுதலைப் போராட்டத்திலும் இந்தியாவிற்கு எதிரியைப் பிரிக்கும் ஒரு தேவை இருந்ததினாலேயே பிரிவினை துரிதப்படுத்தப் பட்டது

முதலாளித்துவ நாடுகள் காலனி ஆதிக்கங்களை ஏற்படுத்திய காலகட்டத்தில் தமது சந்தை ஆட்சித் தேவைக்காக ஒரு தேசிய இனத்திற்கு ஒரு அரசு மட்டுமல்ல, ஓர் அரசின் கீழ் பல தேசிய இனங்களை உள்ளடக்கியும் ஆண்டது, இந்தியா, இலங்கை உதாரணங்களாகும்.

ஏகாதிபத்திய, காலனி ஆதிக்க கால கட்டங்களில் தேசிய இனத்தேவைகள் அடக்கி ஒடுக்கப்பட்ட நிலையிலேயே தேசங்கள் ஆளப்பட்டன. எல்லாத் தேசிய இனங்களும் ஒன்றுபட்டு விடுதலைப் போராட்டத்தை நடத்துகின்றன. தேசிய விடுதலை கிட்டிய பின்னர் பெருந்தேசிய இனங்கள் சிறுபான்மைத் தேசிய இனங்களை அடக்கி தேச எல்லைகளைக் காப்பாற்ற முயல்கின்றன. இலங்கை, இந்தியா இவற்றிற்கும் உதாரணமாக விளங்குகின்றது.

இலங்கையில் ஒற்றை ஆட்சியின் கீழ் இலங்கைத்தமிழர், மலையகத் தமிழர், முஸ்லிம்கள் ஆகிய சிறுபான்மை இனங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் பௌத்த சிங்கள பேரின ஆட்சியால் நசுக்கப்பட்டன. இந்தியாவில் மொழி அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப் பட்டு ஓரளவு சுயாட்சி வழங்கப்பட்டன. (இத்தகைய மாநிலங்களுக்கு பிரிந்து செல்லும் உரிமை மறுக்கப்பட்டுள் ளது.) இதன் மூலம் பிரதான தேசிய இனங்களின் தேவை கள் ஓரளவு சமரசம் செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் இத்தகைய வாய்ப்புகள் கூட சிங்கள பேரினவாத ஆட்சியால் வழங்கப்படவில்லை.

ஆழ்ந்து நோக்கும் போது இந்திய தேசிய இனப் பிரச்சனை மிகவும் சிக்கலானதாகத் தெரிகிறது. தற் போதைய மொழிவழி மாநில அமைப்புகளுள்ளேயே சிறு பான்மையாயுள்ள தேசிய இனங்கள் அடக்கி ஒடுக்கப்படு கின்றன. உதாரணமாக, தமிழ்நாட்டை எடுப்போமாயின் அங்கு சிறுபான்மையாக வாழும் தெலுங்கர், கன்னடியர், மலையாளிகள் ஆகியோர் தம்வீட்டில் தாய்மொழியைப் பேசிய போதும் தமிழ்மொழி மூலம் கற்க வேண்டியவரா யுள்ளனர். அதுபோலவே கர்நாடக மாநிலத்தைப் பார்ப்பின் அங்குள்ள சிறுபான்மையினரான தமிழர்கள், தெலுங்கர், மலையாளிகள் முதலியோர் கன்னட மொழி மூலம் கல்விகற்க நிர்ப்பந்திக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. அண்மையில் கன்னடியர் தமிழர்களுக் கிடையில் பங்களூரில் நடைபெற்று வரும் மோதலை யாவரும் அறிவர்.

இந்தியாவில் தரகு முதலாளித்துவம் ஆளும் வர்க்க மாக இருப்பதால் அவர்களின் மொழியான ஆங்கிலம் இன்றும் செல்வாக்குப் பெற்றதாக உள்ளது. நகரங்களில் ஆங்கிலக் கல்வியே முக்கியத்துவம் பெறுவதால் மாநிலப் பொது மொழி சிறுபான்மையினத்தவர்மேல் திணிக்கப் படுவது ஓரளவு தணிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக சென்னையில் வாழும் தெலுங்கர், தமிழர்கள் போல ஆங்கிலம் மூலம் கற்கின்றனர். கிராமங்களில் நிலமை அவ்வாறில்லை.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகள் உடையும்போதே தேசிய இனப்பிரச்சனைகள் வேகம் பெறுகின்றன என்பதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னரும் கூறினேன். பஞ்சாப், அசாம் மாநிலங்களில் இன்று வேகம் பெற்றுள்ளதன் காரணம் அங்கு முதலாளித் துவ உற்பத்தி முறைகள், வளர்ச்சியடைவதேயாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தமிழ் நாட்டிலேயும் ஓரளவு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் நாட்டில் இக்கட்டத்தில் ஒரு பிரிந்து செல்லும் போராட் டத்தை முன் வைக்க முடியுமா? இலங்கையில் தமிழரிடை ஏற்பட்டது போன்ற எழுச்சியை ஏற்படுத்த முடியுமா? அதற்கேற்ற சூழல்கள் உள்ளனவா? இன்று பலராலும் ஆராயப்படுகிறது. தமிழ் நாட்டில், தமிழ் தேசிய முதலாளி கள் தரகு முதலாளிகளாக ஆங்கிலக் கல்வியை முதன்மைப் படுத்துகின்றனர். இலங்கையில் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளிலேயே பல்கலைக் கழகம் வரை கல்வி கற்பிக்கப் படுகிறது.

மேலும், தமிழ் தேசிய முதலாளிகள் தரகு முதலாளி களாக மத்திய ஆளும் வர்க்கத்துடன் பரந்த இந்தியச் சந்தைக்காக இணைந்துள்ளனர்.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறைகள் இன்னும் தமிழ கத்தில் நிலைத்துள்ளன. இலங்கையில் பெரும்பாலும் உடைந்து விட்டது. தேசிய இன எழுச்சி இக்கட்டத்திலேயே வேகமடைகிறது என்பதே கோட்பாடு.

தமிழ் நாட்டில் நிலவும் மொழிவழி மாகாண ஆட்சி போல தேசிய உணர்வுகளை ஓரளவு தணிக்கும் மொழிவழி மாவட்ட ஆட்சி இலங்கையில் கிடையாது என்பதும் நினைவு கூரவேண்டும்.

இலங்கையில் தமிழர்களுக்கு பொது மொழி, பொது நிலப்பரப்பு. பொதுப் பொருளாதாரம், மதம், கலாச்சாரம் ஆகியவை பாதிக்கப்பட்டதால் ஏற்பட்டது போன்ற முரண் பாடுகள் தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ளனவா என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

பல்வேறு தேசிய இனங்கள் உள்ள தேசத்தில் ஒரு தேசிய இனத்திடை எழுச்சி ஏற்படும்போது பிற தேசிய இனங்களிடையேயும் நினைவு பூர்வமான தாக்கம் ஏற்படவே செய்யும். ஆயினும் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையின் உடைவும், இனதேசிய முதலாளிகளின் எழுச்சியும் மேலே கூறிய பிறபாதிப்புகளும் ஏற்படும் வேளையே அது பெரிய போராட்ட வடிவம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி வழி மாகாண ஆட்சி, மாநில சுயாட்சி, கூட்டாட்சி அல்லது பெடறலிசம் ஆகியன முதலாளித்துவ அமைப்பில் இப்பிரச்சனையின் வேகத்தை தணிக்க எடுக்கப்படும் முயற்சியாகும். இங்கு எந்த தேசிய இனமும் பிரிந்து செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. இம்முறைகளோடு சுய நிர்ணய உரிமை, பிரதேச சுயாட்சி ஆகிய வார்த்தைகளைக் கூறி நாம் மயக்கம் ஏற்படுத்தி விடக்கூடாது. லெனின், ஸ்டாலின் ஆகியோர் தேசிய இனப் பிரச்சனையைத் தீர்க்க எடுத்த முறைகளே இவையாகும்.

சுய நிர்ணய உரிமை என்பது குறிப்பிட்ட தேசிய இனம் இணைந்து கூட்டாக வாழ விரும்பாவிடின் பிரிந்து போகும் உரிமையையும் கொண்டதாகும். குறிப்பிட்ட சிறுபான்மை இனம் ஒரு குறிப்பிட்ட பகுதியில் பிரதேச சுயாட்சி நடத்தும் உரிமையும் சோஷலிச அமைப்பிலேயே ஏற்படுத்த முடியும். அதுவே பிரதேச சுயாட்சியாகும்.

சொந்த நாட்டிலேயே மற்றைய தேசிய இனங்களை அடக்கும் எந்தத் தேசமும் சுதந்திரமாக இருக்க முடியாது என ஏங்கெல்ஸ் கூறினார். அரைக்காலனி, நவகாலனி நாடுகளிலேயே பெரும்பாலும் இத்தகைய தேசிய இன அடக்கு முறைகள் நிலவுகின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திலே இலங்கை இன்றோர் நவகாலனியாக விளங்குகிறது. 'ஏகாதிபத்தியத்தை விரட்டாது தேசிய இனங்கள் விடுதலை பெறமுடியாது' என லெனின் கூறியுள்ளார். ஏங்கெல்சின் கூற்றுப் படியும் சிங்களவரும் சுதந்திர மற்றவர்கள் என்பது தெளிவாகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் இலங்கை மக்களுக்கு மிடையிலுள்ள முரண்பாடே பிரதான முரண்பாடாகும். அதைத் தீர்ப்பதை விட்டு சிங்கள பேரின வாதத்திற்கும் தமிழருக்கும் இடையில் நிலவிய தேசிய இனப்பிரச்சனையாகிய துணை முரண்பாட்டை பகைமை முரண்பாடாக தூக்கியதன் விளைவே யூலை' 83ல் ஏற்பட்ட அழிவுகளாகும். இன்று ஏகாதிபத்தியங்களிடை நிலவும் முரண்பாட்டுக் களமாக இலங்கை தள்ளப்பட்டுள்ளது

முதலாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடக்கூடிய போராட்டத்தில் தலைமை தாங்கக்கூடிய வர்க்கம் எது? முன்னேறிய யந்திர உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் பாட்டாளிகள் இலங்கையில் மிகக் குறைவே. இலங்கையிலுள்ள மிகப்பெரிய பாட்டாளி வர்க்கம் மலையகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத் தொழிலாளர்கள் என்பதை மறுப்பதற்கு எவரு மில்லை. இவ்வர்க்கம் பல்வேறு வகையாகப் பிரிக்கப்பட்டு அடக்கி ஒடுக்கப்பட்ட சோக வரலாறே இலங்கையின் இன்றைய பிற்போக்கு நிலைக்குரிய காரணமாகும்.

பிரிட்டிஷ் காலனி ஆட்சிக் காலத்தில் இவர்களும் பிரிட்டிஷ் பிரஜைகளாகக் கருதப்பட்டனர். 1947ல் நடை பெற்ற தேர்தலில் மலையகத் தமிழர்கள் ஏழு நாடாளு மன்றப் பிரதிநிதிகளைத் தேர்ந்தனுப்பினர். மேலும் ஏழு இடது சாரிகள் தேர்ந்தெடுக்கப் படுவதற்கும் இவர்கள் வாக்குகளே பயன்பட்டன. தொழிலாளர்களின் எழுச்சியைக் கண்ட அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவனான சேனநாயக 1948ல் சட்டமியற்றி மலையகத் தமிழர் அனைவரையும் நாடற்றவர்களாக்கி விட்டான்.

இதைத் தொடர்ந்து இலங்கைத் தலைவர்களும் இந்தியத் தலைவர்களும் பேரம் பேசி மலையகத் தமிழரின் ஒற்றுமையையும் போராட்டத்தையும் சிதைத்து வந்துள்ள னர். இன்றும் இலங்கையின் வடக்குக் கிழக்கா, இந்தியாவா என்ற ஊசலாட்டத்தில் அவர்கள் பிரிக்கப் பட்டு அடக்கி ஒடுக்கப் பட்டுள்ளனர். இந்நிலை நீடிக்கப் போவதில்லை. இலங்கையின் புரட்சிகர வரலாற்றில் மலையகப் பாட்டாளி களின் பங்கு மிகப் பெரியதாக அமையும் என்பதில் ஐய மில்லை. இன்றும் இவர்கள் தூங்கும் சிங்கங்களாக உள்ள னர். அவர்கள் விழித்தெழும் காலம் வெகு தூரத்திலில்லை.

இந்நாவலின் எழுத்துப் படிகளைப் படித்து ஆலோசனை கள் வழங்கிய நண்பர்கள் செ. யோகநாதன், பி. ஏ. காதர் ஆகியோருக்கு என் நன்றி.

நாவலை விரைவில் அச்சிடுவதில் உதவிய நண்பர் சீதாராமன், அச்சகத் தொழிலாளர்கட்கு என் அன்பு. முன் அட்டையை அழகுற வரைந்து உதவிய நண்பர் மணியன் செல்வனுக்கும் என் நன்றி.

சென்னை
20-3-84

செ. கணேசலிங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற நூல்கள்

## நாவல்கள்

'நீ, ஒரு பெண்', நகரமும் சொக்கமும்
வன்முறை வடுக்கள்
மரணத்தின் நிழலில்
ஒரு குடும்பத்தின் கதை
இரண்டாவது சாதி
உலகச் சந்தையில் ஒரு பெண்
ஒரு பெண்ணின் கதை
விலங்கில்லா அடிமைகள்
சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை
பொய்மையின் நிழலில்...
அயலவர்கள்
இளமையின் கீதம்
அந்நிய மனிதர்கள்
வதையின் கதை
மண்ணும் மக்களும்
போர்க்கோலம்
தரையும் தாரகையும்
செவ்வானம்
சடங்கு
நீண்ட பயணம்

## சிறுகதைத் தொகுப்புகள்

சிறுவர்க்கான சிந்தனைக் கதைகள்
கொடுமைகள் தாமே அழிவதில்லை
சங்கமம்
ஒரே இனம்
நல்லவன், சிறுகதைகள்

## கட்டுரைகள்

அறிவுக் கடிதங்கள்
பெண்ணடிமை தீர
கலையும் சமுதாயமும்
குந்தவிக்குக் கடிதங்கள்
குமரனுக்குக் கடிதங்கள்
மான்விழிக்குக் கடிதங்கள்

பாரி நிலையம்
184, பிராட்வே, சென்னை-108

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
26 JUL 2011
Library

# புதிய சந்தையில்

## 1

"பெரிய மானக் கேடாகப் போகிறது"

மனம் ஆறுதல் பெறா நிலையில் மனோகரன் மூன்றாவது தடவையாகவும் கூறினான்.

நள்ளிரவை எட்டும் குளிர்காற்று கடலிலிருந்து வீச ஆரம்பித்தபோதும் அவனது கழுத்திலும் நெஞ்சுப் புறத்திலும் வியர்வைத் துளிகள் அரும்பிக் கொண்டிருந்தன.

எதிர்பாராத அந்த நிகழ்ச்சியால் அவன் நெஞ்சு பதறிக் கொண்டிருந்தது.

இப்படியாக, தன் மானம் போகக்கூடிய பிரச்சனை ஒன்று என்றுமே ஏற்பட்டதில்லை. இன்று ஏற்பட்டு விட்டதே என மனம் பதைத்துக் கொண்டிருந்தது.

"நீ பிந்தி வந்ததால்தான் வசந்தி, இப்படி நாங்கள் மாட்டுப்பட நேர்ந்தது"

தன் மனதைச் சாந்தப் படுத்த வசந்தி மேல் பழியைப் போட்டுப் பேசினான்.

வசந்தி மனோகரனின் மனோநிலையை நன்கு புரிந்து கொண்டாள். சோர்ந்திருந்த அவனது இடது கரத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றினாள். அதில் உணர்ச்சியேயில்லை. தன் வலது புற மார்பு அவனது உடலில் படக்கூடியதாக ஒட்டியபடி நடந்தாள்.

மனோகரனை எவ்வாறு தேற்றலாம் என்பதே அவளது பிரச்சனையாயிருந்தது.

மனதுள் அவளுக்கும் ஓரளவு கலக்கம் இருந்த போதும் வெளியே காட்டிக் கொள்ளாது வசந்தி அவனோடு நடந்தாள்.

''மனோ இப்பொழுது என்ன விபரீதம் நடந்து விட்டதென்று பயப்படுகிறீங்கள்...''

வசந்தி அவனைத் தேற்ற முயன்றாள்.

''இது எங்க மானத்தை வாங்கும் காரியமில்லையா?''

வசந்தியின் பேச்சை இடைமறித்து மனோகரன் கேட்டான்.

''நாங்கள் காதலர்கள்தானே, இது எங்கள் காதலை உறுதிப்படுத்தும் காரியம் என்றுதான் நான் நினைக்கிறேன்''

வசந்தி இந்தச் சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயல்கிறாளோ என்றோர் சந்தேகமும் அவனுள் ஓடியது.

''எங்க காதலை இந்த வேளையில்தான் போய் இந்த நிலையில் பொலிஸ்டேசனில் உறுதிப்படுத்த வேண்டுமோ''

மனோகரனின் குரலில் ஓரளவு கடுமை இருந்தது. ஆயினும் வசந்தி பொறுமையாக அவனைச் சாந்தப்படுத்துவதாக அவனது விரல்களை அழுத்தியபடி நடந்தாள்.

''மனோ, நீங்க சிறிதும் பதட்டமடைய வேண்டாம். பொலிஸ் நிலையத்திற்குப் போனதும் இந்தப் பொலிஸ்காரர் இரண்டு பேருக்கும் சரியான பாடம் படிப்பிக்கிறேன், மற்ற இரண்டு சோடிகளையும் பின்புறம் திரும்பிப் பாருங்கள். எவ்வித பதட்டமும் இல்லாது நடந்து வருகிறார்கள்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தி கூறிக் கொண்டே மீண்டும் திரும்பிப் பார்த்தாள்.

இரண்டு பொலீஸ்காரருக்கும் முன்னாக மற்றிரு சோடிகளும் சாவதானமாக அமைதியாக நடந்து வந்து கொண்டிருந்தனர். ஆண்கள் இருவரும் சாரமும் சேட்டும் அணிந்திருந்தனர். ஒருவனது காலில் மட்டும் சிலிப்பர். அவனது காதலி ஜாக்கெட்டும், ஸ்கேட்டும் அணிந்திருந்தாள். மயிரை அள்ளி 'கிளிப்' ஒன்றை அடிப்புறத்தில் மாட்டியிருந்தாள். மற்றப் பெண் முழங்கால்வரை நீண்ட சட்டை மட்டும் அணிந்திருந்தாள். மயிரை இரட்டையாகப் பின்னி விட்டிருந்தாள். இரு பெண்களும் கையில் குடை வைத்திருந்தனர்.

''பொலீஸ் நிலையத்திற்குச் சென்றதும் பெயர் விலாசம் யாவும் எழுதி பிணைக்கு தெரிந்தவர் எவரையாவது அழைத்து வா என்பார்கள். எத்தனை வெட்கக்கேடு. கையிலே பணமும் இல்லை. இந்தப் பொலிஸ்காரர்களுக்கு ஏதாவது கொடுத்துவிட்டுத் தம்பிப் போயிருக்கலாம்.''

மனோகரனின் மன உளைச்சல்கள் வார்த்தையாக வெளிவந்துகொண்டிருந்தன. வசந்தி அப்பொழுதும் சாவதானமாகவே பதில் கூறினாள்:

''பணம் வேண்டுமாயின் நான் தருவேன். நீங்கள் கொடுப்பீர்களா? பொலிசார் அந்த இரண்டு சோடிகளையும் அழைத்து வந்த போது தானே எங்களையும் கண்டு எங்களது ஸ்டேட்டசைப் பார்த்தும் விட்டு விடாது எல்லோருக்கும் ஒரே நீதி என்று சமன் படுத்துவதாக எங்களையும் சேர்த்துக்கொண்டனர். எங்கே துணிச்சலிருந்தால் பணத்தை வாங்கிக் கொண்டு விட்டு விடுவார்களா? எப்படியும் இந்தப் பணத்தை வைத்துக் கொள்ளுங்கள். முடிந்தால் பாருங்கள்.''

தோளில் தொங்கிய பையைத் திறந்து ஒரு நோட்டை எடுத்து அவனது சட்டைப் பைக்குள் திணித்து விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது பதட்டத்தை ஆற்றுவதே அவளதுமுக்கிய நோக்க மாக இருந்தது.

மங்கிய தெருவின் மின் ஒளி மட்டும் ஆங்காங்கே ஒளி பரப்பியது. இடையிடை வேகமாக ஓடும் கார்களின் வெளிச் சம். கார்கள் செல்லும் வேளைகளில் மனோகரன் தன் முகத்தை மறைத்துக்கொண்டான், வசந்தி சிறிதும் தன் அச்சத்தையோ மனத் துன்பத்தையோ காட்டாது நடந்தாள். தன்னைப்பற்றி அவள் அத்தனை கவலைப்படவில்லை. மனோகரன் இந்த எதிர்பாராத நிகழ்ச்சியால் பதட்டமடைந் திருப்பதே அவளுக்குக் கவலையளித்தது. அவனைச் சமா தானப்படுத்த, தவறுகள் யாவையும் அவளே ஏற்பதற்கும் தயாராயிருந்தாள்.

# 2

மனோகரனுக்கு அவள் ஜாக்கெட்டும் ஸ்கேட்டும் போடுவது விருப்பமில்லை. அந்த உடை வசந்திக்கு மிக இளமைத் தோற்றம் கொடுத்தது. ஆயினும் அவள் சேலை கட்டுவதையே அவன் விரும்பினான். உதட்டுக்குச் சாயம் பூசுவது 'செண்ட்' போடுவது எதுவுமே அவனுக்குப் பிடிக்க மாட்டாது என்று, அவள் உதட்டுச் சாயம், 'செண்ட்' போட்டதைஅவனுக்காகவே கழுவிவிட்டே வந்தாள். ஆயினும் அந்த உயர்தர 'செண்ட்'டின் மெல்லிய நறுமணம் முற்றாகப் போய்விடவில்லை. அவன் விரும்புவதுபோல சேலை கட்டி வர முடியவில்லை. ஓட்டலில் கடமை முடிந்ததும் உடைமாற்ற முடியாதபோதும் பிந்திவிட்டாள்.

"ஐந்து நட்சத்திர ஓட்டல். அவர்கள் வேலையின் போது உடை, நடை எல்லாம் பார்க்கிறார்கள். எனக்கே இவை எல்லாம் பிடிப்பதில்லை."

மனோகரனைத் திருத்திப்படுத்த, முன்னர் கூறியபோதும் தேவையில்லாது அவன் என் சுதந்திரத்தில் வழமையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் போலவே தலையிடுகிறார் என எண்ணிக்கொண் டாள். ஆயினும் அவள் அது பற்றி அதிகம் கவலைப்பட வில்லை.

''உடையில் கூட அங்கு சுதந்திரமில்லையா?''

''வேலை செய்யும் நேரத்தையும் அவர்களே தீர்மானிக் கிறார்கள் அதனால்தான் சில வேளைகளில் பிந்தி வர நேரிடுகிறது. எனக்கு இந்த வேலையே விருப்பமில்லை. என்ன செய்கிறது? கை நிறையப் பணம் தருகிறார்கள். அதற்காக விருப்பமில்லாத தொழிலையே செய்ய நேரிடு கிறது.''

''இன்றைய சமுக அமைப்பில் எவருக்கும் தாம் விரும்பும் வேலை கிடைப்பதில்லை. அதனால் எல்லோரும் தம் ஆத்மாவையே இழந்து விடுகிறார்கள்'' என அசோகன் அடிக்கடி கூறுவது மனோகரன் நினைவில் அவ்வேளை வந்தது.

''எப்பொழுது இந்த வேலையை விடப்போகிறாய்?''

மனோகரன் கேட்டான்.

''நீங்க சொல்லும்போது விட்டுவிடுவேன். அல்லது வேறு இடத்தில் குறைந்த சம்பளத்துடனாவது நீங்கள் வேலை பெற்றுத்தரும் போது விட்டுவிடுவேன்''

வசந்தி உறுதியாகவே கூறினாள். தன்னுடைய விருப்பத்தை ஒட்டி அவள் எதுவும் செய்யத்தயாராக இருப்பது அவனுக்கு உள்ளூற மகிழ்ச்சியாகவே இருந்தது. அங்கு இரண்டாயிரம் ரூபா வரையில் சம்பளம் கிட்டும் வேலையை விட்டுவருவது பற்றி அவள் பேசுவதும் அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. நான் இஞ்சினியர் பட்டம் பெற்றும் இத்தனை பெறமுடியுமா என்பது சந்தேகமே என எண்ணிக்கொண்டான்,

''நானே வேலையில்லாமல் திரிகிறேன். அதற்குள் உனக்கும் வேலை தேடித்தரும்படி கேட்கிறாயே.''

''நீங்கள் சிவில் இன்ஜினியரிங் பட்டம் பெற்றிருக்கிறீர் கள். என்னிடம் என்ன இருக்கிறது?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உன்னிடம் என்ன இல்லை. எல்லாம் இருக்கிறது''

மனோகரன் அவளது கன்னத்தைக் கிள்ளி விட்டு, சிரித்துக்கொண்டே சொன்னான்.

''என் ஆத்மாவை நாள்தோறும் சென்று வெளி நாட்டு சூறிஸ்டுக்கு விற்கச் சொல்லுறீர்களா? நாள்தோறும் பிடிக்கா விட்டாலும் பல்லைக்காட்டிச் சிரித்து அவர்களுக்கு பிடித்த விதமாகப் பேசி நடிக்க வேண்டியிருக்கிறது. ஓட்டலில் வகுப்பு வைத்து அவர்களோடு பேசுவது, பழகுவது பற்றிச் சொல்லித் தருகிறார்கள். வெளி நாட்டாரின் பணத்தைப் பிடுங்க சர்வதேசக் கம்பனியைச் சார்ந்த இந்த ஓட்டல் முதலாளிகள் என்னவெல்லாம் செய்கிறார்கள். நாங்களும் எங்களுக்குப் பிடிக்காத போதும் எங்க ஆத்மாவையே விற்று, நாள் பூராவும் நாடகம் நடித்து உழைக்க வேண்டியிருக்கிறது.''

ஓட்டலில் பணிபுரியும் தொழிலிலுள்ள வெறுப்பு அவள் வார்த்தைகளில் உணர்வோடு தொனிந்தது.

''எனக்கு நல்லதோர் வேலை கிடைக்கும் வரை வசந்தி வேலை செய்தே தீரவேண்டும்'' மனோகரனது குரலிலே களைப்பும், அவனையறியாத தயக்கமும் தொனித்தன. அவனை ஆர்வத்தோடு பார்த்தாள்.

''உங்களுக்கு இருக்கும் தகுதிக்கு வேலை தேடுவது சிரமமல்ல. நீங்க உங்களுக்குப் பிடித்த இடத்தில் விண்ணப்பம் அனுப்பி விட்டுச் சொல்லுங்கள். நானல்லவா வேலை கிடைக்கச் செய்வது. ஆனால் ஒன்று. உங்களுக்கு வேலை கிடைத்ததும் இந்த ஓட்டல் வேலையை விட்டு விடுவேன். பிறகு எதிர்க்கப்படாது.''

மனோகரனுக்கு அவளது பேச்சில் இருந்த உறுதியும் புதிராகவே இருந்தது.

''இத்தனை செல்வாக்கு உனக்கு இருக்குமாயின் உனக்கே வேறோர் இடத்தில் வேலை தேடமுடியாதா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முடியாதபடியாலேயே உங்களிடம் சொல்லுகிறேன். சில வைத்தியர்களது மருந்தும் மந்திரமும் மற்றவர்களுக்கே சித்தியளிக்கும். அவர்களுக்கு சித்தியாது என்று சொல்லுவார்களே, அதைப் போலத் தான் என் நிலையும்.''

வசந்தி கூறிக்கொண்டே சிரித்தாள். அச்சிரிப்புள் மறைந்திருந்த உண்மைகளை அப்போது அவனால் ஊகித்து அறிந்து கொள்ளமுடியவில்லை.

நேரங்கழிவதையே மறந்து நடமாட்டம் குறைந்து வந்த காலிமுகத்திடலில் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்த போதே பொலிசார் வேறு இரண்டு சோடிகளோடு அப்பக்கமாக வந்தனர்.

மணி பதினொன்றுக்குமேலாகி விட்டது.

வசந்தியும் மனோகரனும் நாகரிகமானவர்களாகத் தோன்றிய போதும் பொலிசார் தமது அதிகாரத்தைக் காட்டவும் மற்றிரு சோடியினரைத் திருப்திப்படுத்தவும் அவர்களையும் பொலிஸ் நிலையத்திற்கு வரும்படி அழைத்தனர். மனோகரன் அதிர்ச்சியடைந்து எதிர்க்க முனைந்த போதும் வசந்தி அவனைச் சமாதானப்படுத்தி அழைத்துக் கொண்டு நடந்தாள்.

# 3

பொலிஸ்காரன் பின்தொடர மூன்று சோடிகளும் கோட்டை பொலிஸ் நிலையத்துக்குள் நுழைந்தனர். அவர்களை உட்காரும்படி ஒரு பெஞ்சைக் காட்டிவிட்டு ஒரு பொலிஸ்காரன் இரவு 'டியூட்டி'யில் காவல் நிலையப் பொறுப்பாளியாயிருந்த இன்ஸ்பெக்டரிடம் சென்றான்.

மனோகரன் பெஞ்சின் ஓரத்தில் தயக்கத்தோடும் அச்சத்தோடும் உட்கார, 'ஒரு மினிட் பொறுங்கள்' என அவனிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிவிட்டுச் சிறிதும் தயக்கமின்றி பொலிஸ்காரனைத் தொடர்ந்து வசந்தி சென்றாள்.

பொலிஸ்காரன் மூன்று சோடிகள் பற்றிக் கூறியதும், 'சார்ஜன்டிடம் சொல்லி ஐ.பி.யில் விபரங்களை எழுதச் செய்' என்று இன்ஸ்பெக்டர் ஆணையிட்டான். அவ்வேளை வசந்தி துணிச்சலோடு சாவதானமாக தன் வசீகரச் சிரிப்பை வரவழைத்து இன்ஸ்பெக்டரிடம் தன்னை ஆங்கிலத்தில் அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

அவளது அழகு, உடை, தயவான ஆங்கிலப் பேச்சு, சிரிப்பு, நறுமணம் யாவும் ஒரு கணத்தில் இன்ஸ்பெக்டரைக் கலக்கியடித்தது:

''நான் ஒரு மேஜர். என் காதலனோடு கடற்கரையில் உலாவிக் கொண்டிருந்தேன். மற்றவர்களோடு எங்களையும் அழைத்து வந்தார்கள். அதைப் பற்றி நான் குறை கூற வில்லை. நான் வீட்டுக்கு டெலிபோன் செய்ய உதவுங்கள், நான் கூறியவற்றையும் உறுதிப் படுத்தலாம்.''

இன்ஸ்பெக்டர் அடுத்த மேசையிலிருந்த டெலிபோனைக் காட்டினார். வசந்தி சென்று 'டயல்' செய்தாள். அவள் மெதுவாகவே பேசினாள். இன்ஸ்பெக்டருக்கு எதுவும் கேட்கவில்லை. ஆயினும் அவளையே அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

''போயும் போயும் பீட் டியூட்டி'யில் போன மடையன் இந்தப் பெண்ணை அழைத்து வந்தானே. எனக்குக் காட்டவா?'' என இன்ஸ்பெக்டர் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

'செய்தி சொல்லி விட்டேன். போன் செய்வார்கள். தாங்ஸ் சேர்.''

வசந்தி கூறிக்கொண்டே மனோகரன் உட்கார்ந்திருக்கும் பக்கம் செல்லத் திரும்பினாள். இன்ஸ்பெக்டர் அவளை அழைத்து தன் முன்னேயே உட்காரும்படி வேண்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காதலரிடம் செய்தி சொல்லி விட்டு வருகிறேன்.''

வெளியே வந்தபோது மற்றைய சோடி ஒன்றின் விசாரணையையே சார்ஜன்ட் எழுதிக் கொண்டிருந்தான்.

''மனோ, ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம், பதற வேண்டாம், எல்லாம் பத்து நிமிடத்தில் சரியாகிவிடும்.''

மனோகரனைச் சமாதானப் படுத்திவிட்டு இன்ஸ்பெக்டரை நோக்கிச் சென்றாள். விசாரணை எழுதுவதைத் தாமதப் படுத்த வேண்டும், இன்ஸ்பெக்டருடன் இருக்கும் வரை கடைசியாகவே தாங்கள் அழைக்கப்படுவர் என்பதை எண்ணிக் கொண்டாள்.

இன்ஸ்பெக்டரிடம் சென்றபோது டெலிபோன் மணி யடித்தது. அவர் எடுத்து ''யெஸ் சேர்! யெஸ் சேர், யெஸ் சேர்...'' என்றே சொல்லிக் கொண்டார். அவரின் முகமே மாறி விட்டது. டெலிபோனை வைத்து விட்டு எழுந்தார்.

''ஐ ஆம் வெரி சொரி மாடம்'' என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். கூட்டி வந்த பொலிஸ்காரனை அழைத்தார். வாயில் வந்தபடி திட்டினார்.

பொலிஸ் டிரைவரை அழைத்தார்.

''பொலிஸ் ஜீப் எதுவும் வேண்டாம். என் காரில் இவர்களை அழைத்துச் சென்று வீட்டில் விட்டு வா.''

ஆணை பிறப்பிக்கப் பட்டது. தூர உட்கார்ந்தபடி மனோகரன் இவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தான். இன்ஸ்பெக்டர் வசந்தியுடன் மனோகரனிடம் வந்தார்.

''மிஸ்டர் மனோகரன். இன்சினியர்''

வசந்தி அறிமுகப் படுத்தினாள். இன்ஸ்பெக்டர் அவனது கையைக் குலுக்கினார்.

'இவர்கள் 'நியூ ரிக்குரிட்ஸ்' ஆட்களையே தெரியாதவர்கள். ஐ ஆம் எக்ஸ் ரீம்லி சொரி சேர்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

649004

மானம் காப்பாற்றப்பட்டு மரியாதை கிடைத்ததாக மனோகரன் காரில் ஏறும்போது உணர்ந்தான்.

வசந்தியின் திறமையின் அடித்தளத்தை அவனால் முற்றாக உணர்ந்து கொள்ள முடியவில்லை

# 4

வசந்தி பணியாற்றிய ஓட்டலில் சவுதி அரேபியாவி லிருந்து இரு அதிகாரிகள் வந்து தங்கியிருந்தனர். அவர்கள் நாட்டிற்கு வேலைக்குத் தேர்ந்தெடுப்பதற்காக அங்கு இன்ரவியூ நடத்தினர். கொழும்பிலுள்ள அவர்களது வேலைக்கு ஆட்சேர்க்கும் ஏஜென்சியினர் எல்லா ஏற்பாடு களும் செய்திருந்தனர்.

உரிய வேலைக்குத் தகுதியானவர்களை ஓட்டலுக்கு வரும்படி அழைத்திருந்தனர். மனோகரனும் இன்ரவியூவிற்கு அழைக்கப்பட்டிருந்தான்.

அந்த ஐந்து நட்சத்திர ஓட்டலில் மனோகரன் தயக்கத் தோடு சுற்று முற்றும் பார்த்தபடியே நுழைந்தான். அத்தகைய உள் அலங்காரம் மிக்க ஓட்டல் ஒன்றை அவன் வாழ்நாளில் பார்த்ததேயில்லை. மூன்று ஆண்டுகளுள் எழுப்பப்பட்ட முதல் தர ஓட்டல் அது. சர்வதேசக் கம்பெனி யால் நடத்தப்படுவது. காலி முகத்தில் கடலைப் பார்த்தபடி தலைநிமிர்ந்து நின்றது.

அந்த ஓட்டலின் சிறப்புப் பற்றி வெளியே பேசப் படுவதை மட்டும் மனோகரன் கேள்விப் பட்டிருந்தான். ஒரு நாளுக்கு ஒருவர் தங்க வாடகை மட்டும் ஆயிரம் ரூபா வரை முடியலாம். ஒரு வேளை சாப்பிடுவதற்கு முன்னூறு ரூபா வரையும் ஆகலாம் எனப் பலர் பேசிக் கொள்வதைக் கேட்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் அங்கு தங்க இடம் கிடைப்பது சிரமமாம். வெளிநாட்டவர்களுக்கு அந்த ஓட்டலே மலிவாகத் தோன்று கிறதாம். இலங்கை ரூபாவின் மதிப்பு அத்தனை குறைவாம். ஏன், எப்படி என்ற விபரங்களை அவன் நண்பன் அசோகன் அடிக்கடி கூறுவான். அவன் மூலமே மனோகரன் ஓரளவு கிரகித்துக் கொண்டான்.

அசோகனே வெளிநாட்டு வேலை ஏற்பாடு செய்யும் அந்த ஏஜென்சியையும் அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

முகம் தெரியும் பளிங்கு மண்டபத்தில் காலடி சறுக்கி விடுமோ என நிதானமாக சுற்றுமுற்றும் பார்த்தபடி நடந்த மனோகரனின் எதிரே அந்தப் பெண் வெளியே செல்வ தற்காகப் போலும் வந்து கொண்டிருந்தாள். இளஞ்சிகப்பு நிறத்தில் மேற்சட்டை. முழங்கால்வரை அதே கலரில் ஸ்கேட். அவளோடு சேர்ந்து ஒரு நறுமணமும் வீசியது. சிங்களப் பெண்ணாக இருக்கலாம் என்ற முடிவுடன் ஆங்கிலத்தில் கேட்டான்.

''618 ஆம் றூமிற்கு எப்படிப் போவது? தயவுசெய்து எனக்கு உதவுக.''

அவள் அவனை ஏற இறங்கப் பார்த்து உள்ளூறச் சிரித் துக் கொண்டாள். ஆறாவது மாடியில் ஏறித் தேட வேண்டிய அறையை இங்கே தேடுகிறானே என நினைத்துக்கொண்டே அவளே ஒரு இன்ரவியூ நடத்தினாள்:

''உங்க பெயர்''

''மனோகரன்''

''என்ன படித்திருக்கிறீர்கள்?''

''பி. ஈ...இன்சினியரிங்''

''எந்தக் கல்லூரி?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கட்டுபெத்த, மொரட்டுவ கம்பஸ்''

அத்தோடு நிறுத்திவிட்டு அவனை அழைத்துக்கொண்டு 'லிப்ட்'வரை சென்றாள். அப்பாவியாகத் தோன்றியபோதும் அவனது கல்விக்கு மதிப்பளிப்பது தெரிந்தது.

''இங்கே வேலை கிடையாது என்றா வெளிநாட்டுக்குப் போகப் போகிறீர்கள்''. இருவரும் 'லிப்டி'ல் செல்லும்போது அவள் கேட்டாள்.

''அங்கேயே வேலை கிடைக்கும் என்பதற்கு என்ன உறுதி? முயற்சித்துப் பார்க்கலாம்''

618ஆம் அறை வாசலில் வேறும் சிலர் நின்றனர். அவள் அந்த இடத்தைக் காட்டிவிட்டுத் திரும்பும்போது அவனது கையைக் குலுக்கி வாழ்த்தினாள்:

''விஸ் யு குட்லக்.''

அவளது மென்மையான கரப்தந்த உணர்ச்சியில் தவித்தபடி மனோகரன் கூறினான்:

''தாங்யு வெரி மச். யுவர் குட் நேம்''

''வசந்தி''

ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டு அவள் சுறுசுறுப்பாக நடந்து செல்வதைப் பார்த்துக்கொண்டு நின்றான். நீண்டு பரந்த கூந்தலிடை கிளிப் ஒன்றைச் செருகியிருந்தாள். சிறிது குதி உயர்ந்த வெள்ளை சிலிப்பர்.

நேர்முகப் பரீட்சையிலும் பார்க்க அவளைக் கண்டு பேசிய அனுபவமே அவன் மனதை சில நேரம் அலைத்துக் கொண்டிருந்தது. ஏதோ அவனை அறியாத ஓர் இன்ப உணர்வு. இன்ரவியூ முடித்து, வசந்தியின் நினைவோடு 'லிப்டை' நோக்கி நடந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

இனிமேல் அந்தப் பெண்ணை எங்கு காண முடியும் என்ற நினைவோடு மனோகரன் ஓட்டலின் மண்டபம் வழியாக வாயிலை நோக்கி நடந்தான்.

''மிஸ்டர் மனோகரன். இன்ரவியூ எப்படி?''

எதிரே சிரித்தபடி வசந்தி நின்றாள். அவன் பதில் கூறுவதற்கிடையில் அவளே தொடர்ந்தாள்:

''இன்ரவியூவில் களைத்திருப்பீர்கள். வாங்க டீ சாப்பிடலாம்.''

''நோ மடம்'' என்று நெஞ்சுவரை வந்த வார்த்தை வெளியே வரவில்லை. எதுவும் தீர்மானிக்க முடியாதவனாக தொடர்ந்து நடந்தான்.

கடல் அலை கேட்கும் தூரத்தில் ஓட்டலின் முன்புறப் புற்றரையில் ஆங்காங்கே நிழற்குடைகள் நாட்டப்பட்டிருந்தன. அவற்றின் கீழே நான்கு நாற்காலிகள்.

பியர் பாட்டில்களும் கிளாசுமாக ஆங்காங்கே வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள். நிழற்குடைகளின் கீழ் இருந்தனர். நீராடும் உடையுடனேயே ஆண்களும் பெண்களும் கலகலப்பாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

மனோகரனை அழைத்துச் சென்று ஒரு நிழற்குடையின் கீழ் அமரச் செய்தாள். அருகே அவளும் உட்கார்ந்தாள். ஒரு சீருடை அணிந்த வேலையாளை அழைத்து டீக்கு ஆர்டர் செய்தாள்.

''இங்கு டீகூட ரொம்ப விலையாயிருக்குமே.''

மனோகரன் மெல்லிய குரலிலே கூறினான்.

'ஒரு கப் டீ ஐந்து ரூபா; ராக்ஸ் ஐம்பது சதம். கப்பைப் பின்னர் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோகரன் சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீர்கள்? நான் உண்மையைத்தானே சொன்னேன்."

"நீங்க சுவையாகப் பேசுகிறீர்கள்."

"என் பேச்சை ரசிக்க ஒருவராவது கிடைத்தாரே. மகிழ்ச்சியே."

"இந்த இடங்களெல்லாம் என் போன்றவர்களுக்கு ஒத்து வராது."

"எனக்குக்கூடத்தான்"

"அப்போது ஏன் இங்கு அழைத்து வந்தீர்கள்?"

"இன்று மட்டுந்தானே. வெளிநாட்டுக்குப் போகும் இஞ்சினியருக்கு மரியாதை செலுத்த வேண்டாமா? இனி மேல் எங்கே காண முடியுமோ?"

"அப்படியெல்லாம் என்னை உயர்த்திப் பேசவேண்டாம். நீங்க விரும்பும் வேளையெல்லாம் வரலாம், யு ஆர் ஏ சுவீட் கேள். உங்க பெயரே மறக்க முடியாதது."

"அப்படியா?"

"நான் சிங்களப் பெட்டை என்றுதான் முதலில் நினைத்தேன்."

"அப்ப சிங்களவருக்கும் தமிழருக்கும் வேறுபாடில்லை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்."

"உருவத்தில்தான், மொழியிலும் மதத்திலும் வேறுபாடில்லையா? தமிழ்ப் பெண்கள் சேலை உடுக்க வேண்டும். நீங்க உடுப்பதில்லையா?"

"மறுதடவை உங்களைப் பார்க்கும்போது சேலையே உடுத்து வருவேன். இங்கே இடையிடை வேலைக்கு அழைக்கிறார்கள். அப்போது இப்படியான உடையுடனேயே வர வேண்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இங்கே நல்ல சம்பளம் தருவார்களே''

''வேலைக்கு அழைக்கும் நாட்களில்தான் சம்பளம்''

''இது பெரிய இடம். உங்களுக்கு இங்கு வேலை கிடைத்தது அதிர்ஷ்டமே''

''நான் துரதிர்ஷ்டம் என்றுதான் நினைக்கிறேன், இந்த இடமே எனக்குப் பிடிக்கவில்லை''

''ஏன்?''

மனோகரன் வியப்போடு கேட்டான்.

''குறிப்பிட்ட நேரமென்று கிடையாது. அவர்கள் அழைக்கும்போது வரவேண்டும். அதுமட்டுமல்ல வேறும் பல காரணங்கள் உண்டு''

வசந்தியின் முகத்தில் அவ்வேளை வாட்டம் ஏற்பட்டதை மனோகரன் கண்டான்.

இந்தச் சமூக அமைப்பில் எவருக்குத்தான் பிடித்த வேலை கிடைக்கிறது. சம்பளத்திற்காகக் கிடைத்த வேலையைச் செய்யவேண்டியதுதான் என மனோகன் எண்ணிக் கொண்டான்.

''லட்சக்கணக்கானவர் வேலையே இன்றிக் கஷ்டப்படும்போது கிடைக்கும் வேலையைச் செய்யவேண்டியிருக்கிறது. நான்கூட அலைகிறேன். பாலைவன நாட்டிற்கே செல்லத் தயாராயிருக்கிறேன்''

மனோகரன் சமாதானம் கூறினான். ஆனாலும் அவளுக்கு அந்தப் பெரிய இடத்து வேலை பிடிக்கவில்லை என்பது ஆச்சரியமாகவே இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

வசந்தி தாயார் முத்தம்மாவுடனும் பாட்டியுடனும் கொழும்பு, ஹவ்லொக் டவுனில் ஒரு வாடகை வீட்டிலேயே வசித்து வந்தாள். இரண்டு அறை, வராந்தா, குசினி யாவும் கொண்ட அடக்கமான வீடு. வாடகைக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு அடங்கிய வீடு. அதனால் வாடகை குறை வாகவே இருந்தது.

தந்தையார் அரசாங்க சேவையில் இருந்தவர். திடீரென மாரடைப்பில் இறந்துவிட்டார். முத்தம்மாவிற்குக் கிடைத்த பென்சனுடன் சிறிய சேமிப்புடனும் அடக்கமாக வாழ்ந்து வந்தனர். வசந்தி பத்தாவது வகுப்பு முடித்து உயர்தர வகுப்பில் படித்து வந்தாள்.

அவள் அழகாக இருந்தாள். சில இளைஞர்கள் அவள் மேல் கண் வைத்தபோதும் அவள் மிகவும் கண்டிப்பாகவே இருந்தாள். தாயாரும் கட்டுப்பாடாகவே வளர்ந்துவந்தாள்.

முத்தம்மாவிற்கு ஆடம்பரமும் நுகர்பண்ட ஆசைகளும் இருந்தபோதும் பண்டங்கள் கிடைப்பது அரிதாகவும் விலை யாகவும் இருந்ததினால் அவள் எதுவும் வாங்க முயல வில்லை. சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் கண்டிப்பான லைசென்சு முறை இருந்தது.

யு. என். பி. அரசு ஆட்சியில் வந்ததும். உலக வங்கிக் கடனுடன் உலகப் பண்டங்களுக்கு கொழும்பு புதிய சந்தை யானது நுகர் பண்டங்கள் கடைகளில் வந்து குவியத் தொடங்கின எல்லோரும் அவற்றைப் பற்றியே பேசத் தொடங்கினர். அயலவர், அவள் பழகிய இடங்களெல்லாம் பிறிட்ஜ், டி. வி., கசெட் ரேடியோ, எலக்றிக் குக்கர், புதிய மாடல் தையல் மெஷீன், நைலெக்ஸ் சேலைகள் பற்றியே பேசத் தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல் வீட்டார், அறிந்தவர்களுடன் முத்தம்மாவும் அடிக்கடி புறக்கோட்டை, கோட்டைப் பக்கமாகச் சென்று வந்தாள். எத்தனை மனக் கட்டுப்பாடோடு 'சும்மா' சுற்றிப் பார்க்க எனச்சென்ற முத்தம்மாவும் சிறிது சிறிதாக அந்த வலையில் விழத் தொடங்கினாள். அவளது நீண்ட நாள் ஆசைகள் அவளை வெற்றிகொண்டன,

வெளிநாட்டுச் சேலை, துணிகள், பவுடர், சோப், விரிப்புகள். கேட்டின் துணிகள் என வாங்கத் தொடங்கினாள். அவளது சிறு சேமிப்பு யாவும் கரைந்தது.

''இறக்குமதியெல்லாம் திடீரென நின்று விடலாம், தவணைப் பணத்தில் பொருட்களை இப்பொழுதே வாங்கி விடு. பிறகு கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்து முடித்து விடலாம்.''

பொருட்களை வாங்கிய அயல் வீட்டவர் முத்தம்மாவிற்கு ஆலோசனை கூறினர்.

முத்தம்மா ஒவ்வொரு பொருளாக வாங்கத் தொடங்கினாள்.

பிறிட்ஜ், டி.வி., கசெட் போடும் ரேடியோ, எலெக்றிக் குக்கர் எல்லாம் வீட்டை நிரப்பின. வசந்திக்கு உள்ளூர பணம் பற்றிய அச்சம் இருந்தபோதும் அவளும் இவற்றை முதலில் எதிர்க்கவில்லை.

அவள் கல்வி கற்ற கல்லூரி மாணவியர் யாவரும் தாம் வாங்கிய டி.வி, பிறிட்ஜ், புதிய கார் பற்றியே பேசிக் கொள்வதை அவளும் கேட்டு ஆசைப் பட்டாள். டி.வி.யில் நடைபெறும் நிகழ்ச்சிகள் பற்றியே எல்லோரும் பேசுவது வகுப்பில் வழமையாகி விட்டது.

''உங்க வீட்டில் என்ன டி.வி., கலரா பிளாக் அன் வைட்டா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தி தலை குனிய நேர்ந்தது.

''இந்த மாதந்தான் சோனி வாங்கப் போகிறோம்.'

வாயில் வந்தபடி கூறிச் சமாளித்தாள்.

புதிய, புதிய இறக்குமதியாகும் நுகர் பண்டங்கள் பற்றிய பேச்சு தொற்று நோய் போல எங்கும் பரவிக்கொண்டிருந்தது.

காரிலே வந்திறங்கும் மாணவியர் புதிய மாடல் கார் பற்றியே பேசிக் கொண்டனர்.

வசந்தியால் அவற்றைப் பற்றி நினைக்கவே முடியவில்லை.

டி.வி.யில் புதன், வியாழக்கிழமைகளில் சினிமா பார்ப்பதற்கும் மற்றும் தோழியர் புகழும் முக்கிய நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கும் அவள் அயல்வீடு செல்ல நேரிட்டது.

முத்தம்மா டி.வி. வாங்கியதும் வசந்தியும் கல்லூரியில் வீம்பு பேசத் தொடங்கினாள்.

# 7

மிக விரைவில் வசந்தியின் வீட்டில் பல பிரச்சனைகள் எழத் தொடங்கின. முத்தம்மா வசந்திக்காக வைத்திருந்த நகைகளை அடைவு வைத்தே பொருட்களுக்கு முன் பணம் செலுத்தினாள். பின்னர் தவணைப் பணப் பிரச்சனை வந்த போது அவற்றை விற்க நேரிட்டது.

வாழ்க்கைச் செலவின் ஏற்றத்தை பென்சன் பணத்தால் முத்தம்மாவால் சமாளிக்க முடியவில்லை. மின்சார 'பில்' முன்னரிலும் பார்க்க பத்து மடங்கு அதிகரித்தது. மின்சார விலை ஏற்றம், வீட்டில் எலெக்டிக் கருவிகளின் பாவனை காரணமானது. வீட்டுக்காரன் வாடகையைக் கூட்டித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும்படி கேட்டுக்கொண்டேயிருந்தான். உணவுப் பண்டங்களின் விலையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக ஏறிக்கொண்டிருந்தது. முத்தம்மாவின் தாயாருக்கு வழமையாக வாங்க வேண்டிய மருந்துகளை வாங்க முடியாத நிலை.

தவணைப் பணங்களை செலுத்த முடியவில்லை, இரண்டு, மூன்று தவணை கடந்துவிட்டது. பொருட்களையே விற்றவர் அபகரிக்கும் நிலை. பண்டங்கள் வாங்கப் பொறுப்பாளர்களாக கையெழுத்திட்டவர் நெருக்கப்பட்டனர். அவர்கள் முத்தம்மாவைக் கண்டித்தனர். நம்பிக்கைத் துரோகம் செய்வதாகவும் குற்றம் சுமத்தினர்.

முத்தம்மா தான் அறிந்த இடமெல்லாம் கைமாற்றும் வாங்கி விட்டாள். வீட்டில் உணவுப் பிரச்சினையைச் சமாளிப்பதே சிரமமாகிவிட்டது. வாங்கிய பண்டங்களைத் தவணைப் பணம் செலுத்தாதற்காகப் பறிமுதல் செய்யவிடுவது, அயலவர் கண்களில் மானப் பிரச்சனையாகிவிட்டது.

இந்நெருக்கடி நிலையில் ஒரே ஒரு வழிதான் முத்தம்மாவிற்குத் தெரிந்தது.

வசந்தியின் படிப்பை நிறுத்தி வேலைக்கு அனுப்புவது தான் அது.

# 8

முத்தம்மாவிற்கு லீலாவதியின் நினைவு வந்தது. கணவர் வாழ்ந்த காலத்தில் அவள் தினமும் வந்து வீட்டு வேலைகளில் உதவுவதுண்டு. லீலாவதிக்கு மூன்று பெண்களும் இரண்டு பையன்களும். கணவன் நிரந்தர வேலையின்றி அலைந்து திரிந்தான். பிள்ளைகளை வளர்ப்பதே கஷ்டமாக இருந்தது. முத்தம்மாவும் முடிந்தவரை உதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாள். வீட்டில் மிஞ்சும் சாப்பாடுகளையும் லீலாவதி வீட்டுக்குப் போகும்போது கொடுத்து வந்தாள். சில ஆண்டுகளாக லீலாவதி வரவில்லை. திடீரென ஒருநாள் லீலாவதி அங்கு வந்து தன் மூத்த மகளின் திருமணத்திற்கு முத்தம்மாவுக்கு வெற்றிலை கொடுத்து வற்புறுத்தி அழைத்திருந்தாள்.

முத்தம்மா வசந்தியுடன் அங்கு திருமணத்தின் மறுநாள் சென்ற போது அவளின் வீட்டைப் பார்த்து அதிர்ந்துபோய் விட்டாள். புதுப் பணக்காரரின் வீடு போலவே எல்லாம் நவீனமாக இருந்தன. அவர்கள் சென்றபோது வீடியோவில் முதல் நாள் நடைபெற்ற திருமணச் சடங்குகளின் படம் ஓடிக்கொண்டிருந்தது.

முத்தம்மா கனவிலும் நினைக்க முடியாதபடி வீட்டு அலங்காரங்களும் நவீன நுகர் பண்டங்களும் நிறைந்திருந்தன.

லீலாவதி தன் பெண்களை அழைத்து அறிமுகம் செய்தாள்...

''இவள்தான் என் மூத்த பெண் சீதா, முன்னர் பார்த்திருப்பீர்கள். சவுதியில் வேலை செய்கிறாள். கலியாணம் சிறப்பாக நடந்தது. நீங்கள் நேற்று வருவீர்கள் எனப் பார்த்தேன். இவளது தங்கைமார் இருவரும் ஓட்டலில் வேலை செய்கிறார்கள். பையன்களுக்குத் தான் நல்ல வேலை கிடைக்கவில்லை. ஒருவனுக்கு சீதாவே ஒரு டாக்சி வாங்கிக் கொடுத்திருக்கிறாள்.''

''ஏதோ நீ முன்னர் கஷ்டப்பட்டாய். இப்பொழுது நல்லாயிருக்கிறதைப் பார்த்துச் சந்தோஷமே''

மனப்பொருமலை மறைத்துக் கொண்டே சொன்னாள், முத்தம்மா.

''அம்மே அந்தக் கஷ்ட நாட்களில் செய்த உதவிகளை என்றும் மறக்கமாட்டேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலாவதி நன்றி கூறிவிட்டு வசந்தியை ஏற இறங்கப் பார்த்தாள்.

"அப்ப சின்னப் பிள்ளையாய் தூக்கித் திரிந்தேன். இப்ப என்ன மாதிரி வளர்ந்திருக்கு பிள்ளை"

"உன்னுடைய பிள்ளைகளைப் போலத்தான். பெண்களென்றால் அப்படித்தானே."

"ஓமோம், பிள்ளைகள் வளர்ந்துதானே வயதான காலத்திலே உதவியாயிருக்கவேணும். அன்று அவசரத்தில் எதுவும் கேட்காமல் வந்து விட்டேன். எப்படி சுகமாயிருக்கிறீயளா?"

லீலாவதி கேட்டபோது முத்தம்மாவிற்குப் பதில் கூறுவது சிரமமாகி விட்டது.

"சாமான்கள் எல்லாம் விலை ஏறிக்கொண்டே போகுது. பென்சன் பணத்தோடு வாழுவதென்றால் சும்மாவா"

லீலாவதியால் முத்தம்மாவின் குடும்ப நிலைமையை உடனே அறிந்துகொள்ள முடிந்தது.

"பிள்ளை வளர்ந்து விட்டாள். வேலைக்கு அனுப்புவது தானே"

வசந்தியின் காதில் விழாதபடி லீலாவதி மெதுவாக ஆலோசனை கூறினாள்.

"அவள் இப்போது வேலைக்குப் போக விரும்பமாட்டாள். அதுபோக வேலையும் கிடைக்க வல்லவா வேணும்."

"கஷ்டமென்றால் உழைக்கத் தானே வேணும். இப்பொழுது தானே பெரிய பெரிய ஓட்டல் எல்லாம் கட்டுகிறார்கள். வசந்தி போல படித்த பிள்ளைகளுக்கு வேலை கிடைப்பது கஷ்டமில்லை. என் பிள்ளைகள் அத்தனை படிக்கவில்லை. அப்பொழுதும் கிக்கடுவ ஓட்டலில் வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்து விட்டது. கொஞ்சம் தூரம்தான். ஆனாலும் கை நிறையக்காசு கிடைக்கிறது. நான் ஏதோ கஷ்டமில்லாமல் இப்ப வாழுகிறேன்." நிறைந்த குரலிலே சொல்லி முடித்தாள் லீலாவதி.

# 9

வசந்தியை படிப்பை விட்டு வேலைக்குப் போவது பற்றி முத்தம்மா ஆலோசனை கூறியதும் அவள் தாய்மேல் சீறி விழுந்தாள்.

'ஒரு டாக்டராகி எங்களைக் காப்பாற்றவேண்டும்' என்றெல்லாம் வசந்தியிடம் அடிக்கடி கூறிக்கொண்டிருந்த தாய், இப்படித் திடீரென மனம் மாறுவாள் என அவளால் முதலில் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை. மருத்துவக் கல்லூரியைக் கனவு கண்டுகொண்டிருந்த வசந்தியால் உயர்தர வகுப்புப் பரீட்சையுடன் நிற்பதென்பது அதிர்ச்சியாகவே இருந்தது.

சாப்பாடே வேண்டாம் என நாள் முழுவதும் அழுது கொண்டிருந்தாள். பாட்டி வந்து சமாதானம் செய்தாள். தாயும் மகளும் இடையிடை முரண்பட்டு சிறிய போர்கள் நடந்தபோதும் இத்தனை பெரிய யுத்தம் முன்னர் என்றும் நடந்ததில்லை.

"நீ வளர்ந்த பெண்ணாகி விட்டாய். வீட்டு நிலைமையை எண்ணிப் பார்க்கவேண்ய வயதாகிவிட்டது. நான் கடனுக்குள் மூழ்கிக் கிடக்கிறேன். இந்த நிலையில் உன்னை மேலும் படிக்க வைக்க முடியுமா?"

"இந்த பிறிட்ஜ், டி.வி. யெல்லாம் நான் வாங்கச் சொன்னேனா. நீ வீம்புக்கு வாங்கிவிட்டு, இப்போது என் படிப்பையே பாழடிக்கப் பார்க்கிறாய்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னை இப்ப என்ன செய்யச் சொல்லுகிறாய்?"

"எனக்கு இந்தப் பொருளெல்லாம் வேண்டாம். விற்று விட்டுக் கடன்களை அடைத்துவிடு..."

வசந்தி வார்த்தைகளால் தாயாரை அடித்தாள்.

"அப்படி விற்றாலும் கடன்களை அடைக்கமுடியாது. உன்னை எப்படிப் படிக்க வைக்கமுடியும்?"

"அப்பா இருந்தால் இப்படிச் சொல்லுவாரா. நீ இப்பவே என்னைக் கொண்டு உழைத்து சொகுசாக வாழப் பார்க்கிறாய்"

தந்தையையும் இழுத்துத் தாயைத் தாக்கி விம்மி, விம்மி அழுதாள் வசந்தி.

"அவள் ஏதோ கொம்பாக உனக்கும் எனக்கும் சேர்த்து வைத்துவிட்டுப் போனவரா? இருக்கிறது கூட வாடகை வீடு. ஊரில் இருந்த நிலமெல்லாம் சகோதரிமாருக்குச் சீதனமாகப் போய் விட்டது. எனக்குத் தந்தவற்றையும் அவர் தான் கரைத்துப் போட்டார். ஏதோ நான் சிக்கனமாக வாழ்ந்ததால் தான் இவ்வளவாவது உன்னைப் படிக்க வைக்க முடிந்தது. உனக்கேதாவது சீதனம் தர இப்பொழுது இருக்கிறதா. நீ உழைத்தால்தான் இனி நீயும் வாழமுடியும். நாங்களும் வாழலாம்"

"எனக்கு நீ சீதனம் தேடவேண்டாம். என்னை நான் பார்த்துக் கொள்ளுவேன்." சினத்துடன் கூறிய வசந்தி ஒரு புழுவைப் பார்ப்பது போலத் தாயைப் பார்த்தாள். முத்தம் மாவிற்கு ஆத்திரம் பொங்கி வந்தது.

"இந்த நாட்களில் எவன் சீதனமில்லாமல் கட்டவரப் போகிறான். அப்பிடியென்றால் எங்காவது கட்டாக் காலி தான் வருவான்"— ஆவேசத்தோடு வார்த்தைகளை வீசினாள்.

"அதைப் பற்றி நீ கவலைப்படவேண்டாம் உன்னட்டைத் தானே ஒன்றுமில்லையே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தியும் இப்படி வாயடித்துப் பேசுவாள் என முத்தம் மாவும் நினைத்திருக்கவில்லை.

இருவரும் வீட்டில் கலகலப்பாகப் பேசுவதே குறைந்து விட்டது. சொல்லம்புகள் மட்டும் மாறி மாறி இடையிடை வீசப்பட்டன. பாட்டி ஒரு பக்கமும் சாராது சமாதானம் பேசி வந்தாள்: ஆயினும் வீட்டு நிலைமையைப் பார்த்து அவளும் தன் மகளின் பக்கமாகவே நின்றாள். அப்போது உயர்தர வகுப்புப் பரீட்சை எழுதிவிட்டு வீட்டிலேயே வசந்தி இருந்தாள்.

வீட்டு நிலைமைகளை அவளாலும் நன்கு உணர முடிந்தது. கைகடன்காரர் வந்து போவதும் தெரிந்தது. அவளே எங்காவது வெளியே செல்வதற்குத் தாயிடம் பணம் கேட்க முடியாத நிலை. கடைத் தெருபோவது, சினிமா பார்ப்பது, ஐஸ்கிரீம் சாப்பிடுவது யாவையும் நிறுத்திக் கொண்டாள்,

வேலைக்குப்போவது பற்றிய பேச்சு அப்படியே நின்று விட்டது. நாட்கள் கழிய மீண்டும் இருவரும் ஓரளவு சரள மாகப் பேசத் தொடங்கினர்.

வசந்தி தன் விருப்பத்தை நேரடியாகத் தெரிவிக்காமல் மறைமுகமாகச் சொன்னாள்:

''வேலையென்றால் இந்தக் காலத்திலே தெருவிலை போட்டுக் கிடக்கிறதா?''

''உனக்கென்னடி குறை. எல்லாமிருக்கு, வேலை தேடித் தருவது என் பொறுப்பு, நீ ஒன்றும் அலைந்து திரிய வேண்டாம். விருப்பமென்றால் சொல்லிவிடு.''

முத்தம்மா லீலாவதியின் பெண்களுடன் ஒப்பிட்டே கூறி னாள். படிப்பிலும் அழகிலும் வசந்தி உயர்வாக இருக்கும் போது அவர்களுக்குக் கிடைக்கும் வேலை இவளுக்குக் கிடைக்காமலா போகும் என்ற துணிவு அவள் மனதில் இருந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

முத்தம்மா மறுநாளே லீலாவதியின் வீட்டுக்குச் சென்றாள்.

வெட்கத்தை விட்டு தங்கள் குடும்ப நிலைமையை வாய் விட்டுச் சொன்னாள்.

"ஏதோ உன் மூலமாகத்தான் இந்த உதவி கிடைக்க வேண்டும் என்பது கடவுளின் கட்டளையாக இருக்க வேண்டும், அன்றைக்கு நீயாகவே நினைவூட்டினாய். அது தான் வந்தேன்."

"அம்மே முன்னர் செய்த உதவிகளை நான் மறக்க வில்லை. அம்மேக்கு இந்த உதவியாதல் நான் செய்தே தீர வேண்டும்."

லீலாவதி உறுதியான வார்த்தைகள் முத்தம்மாவின் கண்களையே கலங்க வைத்தது,

எதிரே தெரிந்த புத்தரின் படத்தைப் பார்ப்பது போல கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"பெரிய ஓட்டல்களோடு தொடர்புள்ள ஒருவரை எனக்கு நல்லாய் தெரியும் அவருக்கு வேலை கிடைத்த பின் காசு கொடுக்க வேணும். அதுதான் நான் அவருக்குக் கொடுத்து விடுவேன். பிறகு பிள்ளை உழைத்து அதை எனக்குத் தரலாம்"

லீலாவதி கூறிய வார்த்தைகளில் உறுதியும் நிதானமும் இருந்தன.

"ஏதோ கதிர்காமத் தெய்வந்தான் உன்னைக் கொண்டு வந்து விட்டது. கொழும்போடு பிள்ளைக்கு வேலை கிடைக்க வேணும். ஒரே பிள்ளை. வீட்டோடு வளர்ந்த பிள்ளை. வெளியூருக்கு போயே பழக்கமில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் அவரிடம் எல்லா விபரமும் சொல்லி வைப்பேன். நாளைக் காலையிலை எட்டு மணிக்கு பிள்ளையை வெளிக்கிட்டு நிற்கச் சொல்லுங்கள். நான் வந்து அவரிடம் அழைத்துச் செல்லுவேன்.''

லீலாவதி காப்பி தயாரிக்கச் சென்றாள். மூத்த மகள் சீதா மட்டும் அங்கே இருந்தாள். அடுத்த வாரம் துபாய்க்குச் செல்வதாகவும் பின்னர் கணவருக்கு வேறு இடத்தில் வேலைக்கு ஏற்பாடு செய்து அவரை அழைப்பதாகவும் கூறினாள். சவுதி அரேபியாவில் கட்டுப்பாடுகள் அதிகம்; அங்கு செல்ல, தான் விரும்பவில்லை எனவும் சீதா சொன்னாள்.

''கலியாணம் முடிந்ததும் பிரிந்து செல்வது கஷ்டமாயிருக்குமே.''

முத்தம்மா தன் இளமைக் கால அனுபவத்தை நினைவு கூர்ந்து கூறினாள். திருமணத்தின் பின் கிராமத்தில் தன்னை விட்டு விட்டு கணவன் கொழும்புக்கு வந்த நாள் அவளின் நினைவில் வந்தது.

''என்ன செய்வது, பணம் தானே முக்கியம். நாலு பேர் அதைத்தான் மதிக்கிறார்கள். பெருமையாக வீட்டுக்கு நாலு சாமானையும் பணத்தால்தான் வாங்க முடியுது.''

பணத்தால்தான் எல்லாத் துன்பமும் என முத்தம்மா முன்னர் கிராமத்தில் கேட்டவைக்கு மாறாக பணத்தால் தான் எல்லா இன்பமும் என்று நகரத்துப் பெண் மூலம் கேட்பது எதிர்மறையாகவே இருந்தது.

''அங்கே வேலையெல்லாம் கஷ்டமா யில்லையா?''

''கஷ்டந்தான். ஆனால் இங்கே அத்தனை கஷ்டப்பட்டாலும் கிடைப்பது சீவியத்திற்குத்தான் காணும். அங்கேயும் குறைந்த கூலிதான் தருகிறார்கள். ஆனால் அந்தப் பணத்தை இங்கே மாற்றும்போது அதிகப் பணம் கிடைக்கிறது. அதற்காகத்தான் எல்லோரும் போகிறார்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லீலாவதியின் மகள் சீதா ஒளிவு மறைவின்றிப் பேசுவது முத்தம்மாவிற்குப் பிடித்துக் கொண்டது. ஆனாலும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் பெண்களின் வாழ்க்கை பற்றி அவள் கேள்விப்படும் சில விஷயங்கள் பற்றி அவளிடம் கேட்போமா, விடுவோமா என சிறிது நேரம் மௌனமாக இருந்தாள்.

''நான் கேட்கிறேன் என்று கோபிக்காதே சீதா. தப்புத் தண்டா இல்லாமல் பெண்கள் அங்கே வேலை செய்ய முடியுமா?''

முத்தம்மா மெல்லிய குரலில் தயக்கத்தோடு கேட்டாள்.

''சில இடங்களில் அப்படியெல்லாம் இருக்கத்தான் செய்யும். அவற்றையெல்லாம் பார்த்தால் அங்கே வேலை செய்யவும் முடியாது. பணம் உழைக்கவும் முடியாது. அதெல்லாம் பெரும்பாலும் வேலைக்குச் செல்லும் பெண் களின் விருப்பு வெறுப்பையும் பொறுத்தது.''

சீதா தயக்கமின்றியே பதில் கூறினாள். வேறும் சிலரின் சந்தேகத்திற்குப் பதில் கூறிப் பழகிய பேச்சுப் போலவே அவள் குரல் ஒலித்தது.

முத்தம்மாவின் நெஞ்சால் அப்பதிலை உடன் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஒழுக்க நெறிகள் பற்றி அவள் சிறு வயதிலிருந்து கற்றவை யாவும் உடைந்து சிதறுவதாக இருந்தது. சமூகப் பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிகளெல் லாம் புதிய மதிப்புப் பெறுவதையும் சீதாவின் வார்த்தைகள். மூலம் அறிந்து கொண்டாள்.

லீலாவதி பிஸ்கெட்டும் காப்பியும் கொண்டு வந்தாள். அவளின் உதவி தேவைப் பட்டது. பொறுமையாக இருந்து பிஸ்கெட்டைச் சாப்பிட்டுக் காப்பி அருந்தினாள்.

''கோப்பி நல்லா யிருக்கிறது''

''இது நெஸ்கபே, சீதா வரும்போது கொண்டு வந்தாள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தம்மா விடைபெறும் போது சீதா வசந்திக்குக் கொடுக்கும்படி ஒருபுட்டி 'ஓடிக்கொலோனை' அன்பளிப் பாகக் கொடுத்தாள். முத்தம்மா மீண்டும் நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

# 11

மறுநாட் காலை லீலாவதி சொன்னபடி காலை எட்டு மணிக்கு முன்னதாகவே வந்து விட்டாள்.

வசந்தி ஜாக்கெட்டும் ஸ்கேட்டுமாக பின்னிவிட்ட கூந்தலோடு நின்றாள். நெற்றியில் கறுத்தப் பொட்டு ஒன்றே தமிழ்ப் பெண் போலக் காட்டியது. லீலாவதியே அவளது கன்னங்களைத் தடவி வசந்தியின் அழகை ரசித்தாள்.

தேநீர் அருந்தி விட்டுப் போகும்படி முத்தம்மா வேண்டி னாள்.

"பிறகு குடிக்கலாம், அவர் வேலைக்குப் புறப்படுமுன் போய் பார்த்து விட வேண்டும்."

லீவாவதி சிறிதும் தாமதியாது வசந்தியையும் அழைத் துக் கொண்டு புறப்பட்டாள்.

பம்பலப்பிட்டியிலிருந்த அந்த மாடி வீட்டின் வாசலில் புதிய 'டொயட்டா' கார் ஒன்று நின்றது. வேலையாள் காரைத் துடைத்துக் கொண்டிருந்தான். ஜே.டி. குணவர்த் தன என வாசலில் பெயர் எழுதப் பட்டிருந்தது.

வசந்தியை வராந்தாவில் இருக்கும்படி கூறிவிட்டு லீலாவதி நன்கு பழகிய வீடுபோல உள்ளே நுழைந்தாள்.

பத்து நிமிடம் கழித்து வெளியே வந்து வசந்தியை உள்ளே அழைத்துச் சென்றாள். நெஞ்சுக்குள் ஒருவித பயமிருந்த போதும் ஒருவித துணிச்சலை வரவழைத்துக் கொண்டு லீலாவதியைத் தொடர்ந்தாள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பளம் விரித்த வரவேற்பறையைக் கடந்து ஆபீஸ் அறைக்குள் நுழைந்தனர். அங்கே அலுவலகம் போகப் புறப்பட்ட நிலையில் ஐம்பது வயது மதிக்கத்தக்க குணவர்த்தன 'ரிவோல்வ்ங் செயரி'ல் உட்கார்ந்திருந்தார்.

வசந்தி 'குட்மோர்னிங் சேர்' என்று சிறிது நடுங்கிய குரலில் கூறியபடி எதிரே சென்றாள்.

குணவர்த்தன சில கணங்கள் அவளை ஏற இறங்கப் பார்த்தார். லீலாவதி கூறிய மதிப்பிலும் பார்க்க உயர்வாகவே அவர் அவளைக் கணித்துக் கொண்டார்.

அவளை உட்காரும்படி ஆங்கிலத்தில் கூறிவிட்டு எதிரே இருந்த தட்டச்சு யந்திரத்தில் ஒரு தாளை மாட்டினார். சில வரிகளை ரைப் செய்து விட்டு அவளைப் பற்றிய விபரங்களை கேட்டு உடனுடன் ரைப் செய்தார். ஆங்கிலத்திலேயே உரையாடல் இருந்தது. அவளது ஆங்கில அறிவையும் அறிந்து கொள்ளும் முறையிலேயே விபரங்களையும் வினவினார்.

''வயது''

''பதினெட்டு''

''உயரம்''

''ஐந்து நாலு''

''எடை''

''ஐம்பது கிலோ''

''வைற்ரல் ஸ்ரட்டிக்ரிஸ்''

வசந்தி வெட்கச் சிரிப்போடு தலைகுனிந்தாள். அவர் ஒரு மதிப்பீட்டில் குறைத்துக் கொண்டார். கல்வி பாடசாலை, விளையாட்டு, முகவரி ஆகிய விவரங்களையும் கேட்டா.

''வீட்டு டெலிபோன்''

University of Peradeniya
26 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''டெலிபோன் இல்லை''

குணவர்த்தனா ஒரு கணம் யோசித்து விட்டுக் கேட்டார்.

''அயல் வீட்டு நம்பர் ஏதாவது''

முன்னர் டி.வி பார்க்கச் செல்லும் முஸ்லிம் வீட்டாரது நம்பரைக் கொடுத்தாள். தாயாரோ, அவளோ அவசர அலுவலாக டெலிபோன் செய்வதாயின் அங்கேயே செல்வதுண்டு.

பத்து நிமிடத்தில் யாவும் முடிந்து விட்டது. ஓட்டல் வேலைக்குரிய விண்ணப்பத்தைப் படித்துவிட்டு கையெழுத்திடும்படி வேண்டினார்.

கொழும்பிலுள்ள அந்தப் பிரபல ஐந்து நட்சத்திர ஓட்டலின் பெயரை மட்டும் பார்த்து விட்டு 'தங்கள் கீழ்ப்படிவுள்ள, என்பதன் கீழ் கையெழுத்திட்டுக் கொடுத்தாள்.

''நான் டெலிபோன் செய்யும்போது ஓட்டலுக்கு வர வேண்டும். இப்போது போய் வரலாம்.''

குணவர்த்தனா கூறினார். வசந்தி நன்றி கூறிவிட்டு எழுந்த போது அவர் அழுத்தமாகச் சொன்னார்.

''இது வெள்ளைக்காரர் நடத்தும் பெரிய ஓட்டல். உன்னை அங்கு சிபார்சு செய்து சேர்த்து விடுகிறேன். பணக்கார வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் வரும் இடம். ஊதியம் தவிர டாலரில் டிப்ஸ் கூடப் பெறலாம். தகராறு எதுவும் பண்ணாது ஒழுங்காக நடந்து கொள்ள வேண்டும். பிறகு வேலை பிடிக்கவில்லை என்று தகராறு பண்ணி என் மரியாதையையும் குறைத்து விடாதே.''

''அப்படி ஒருபோதும் தவறாக நடக்க மாட்டேன்.''

வசந்தி உடனேயே கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அந்த வார்த்தையைக் காப்பாற்றிக் கொண்டால் போதும்.''

பின்னர் வந்து காண்பதாக லீலாவதியும் அவருக்கு நன்றி கூறிவிட்டு வசந்தியுடன் புறப்பட்டாள்.

# 12

மறுநாட் காலை ஒன்பது மணிக்கு ஓட்டலுக்கு வரும்படி டெலிபோன் செய்தி வசதிக்குக் கிடைத்தது.

முதல் நாள் போலவே உடையணிந்து அந்த ஐந்து நட்சத்திர ஓட்டலுக்குச் சென்றாள். உள்ளே நுழைவதே அச்சமாக இருந்தது. அவளது வாழ்நாளில் அத்தகைய அலங்காரமான ஒரு மண்டபத்தையே அவள் கண்டதில்லை. நடக்கவே கால்கள் கூசின.

இடம், மனிதர்கள், சுற்றாடல் யாவுமே புதுமையாக இருந்தன.

வாயிலில் காத்து நின்ற குணவர்த்தனா வசந்தியை மானேஜர் அறைக்கு அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தினார்.

அங்கே மற்றோர் நடுத்தர வயதில், கண்ணாடி அணிந்த பெண்ணும் இருந்தாள். நாகரிகமாக கைவெட்டிய நீள் சட்டையணிந்திருந்தாள். ஏறக்குறைய நாற்பது வயது மதிக்கத்தக்கவள். உதட்டிலே சாயம். எவரையும் மயக்கும் சென்ட் மணம் கமழ்ந்தது.

வெள்ளைக்கார மானேஜர் வசந்தியை ஏற இறங்கப் பார்த்தான். ஆங்கிலத்தில் ஓரிரு வினாக்கள் கேட்டான். அவள் மென்மையாகவே பதிலளித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சீத போர்ஹெட். வட்ஸ் த நேம் போர் இட்''

கேலியாகச் சிரித்தபடி வசந்தியின் நெற்றியைக் காட்டி மற்றப் பெண்ணைக் கேட்டான்.

''பொட்டு''

''சி இஸ் எ ரமில் கேள்.''

புதுமையைக் கண்டு பிடித்தவன் போலச் சிரித்தான்.

'மிஸ்ஸிஸ் வம்பேக். சி இஸ் ஓ. கே. யு ரேக் சார்ஜ் ஒவ் கேர்''

மிஸ்ஸிஸ் வம்பேக் அவளை அழைத்துச் சென்றாள். பொட்டு வைத்து வந்தது ஏதோ தவறு போல வசந்தி உணர்ந்தாள்,

இருவரும் செல்லும்போது 'றோசி' என அவளை எவரோ அழைத்துப் பேசிக் கொண்டிருந்தார்.

வசந்தி பளிங்கு நிலத்தையும் மண்டப சோடனைகளையும் நாகரிக உடையுடன் ஆங்காங்கே செல்பவர்களையும் வியப்போடும் வேடிக்கையாகவும் பார்த்துக்கொண்டு நின்றாள்.

இந்த உயர்ந்த இடத்தில் என்னால் வேலைசெய்ய முடியுமா? என்ன வேலை தரப் போகிறார்கள்? வேலை நேரம் என்ன? இங்கே சாப்பாடு தருவார்களா? வீட்டிலிருந்து எடுத்து வரலாமா? வைத்துச் சாப்பிட இடம் இருக்குமா? என்ன சம்பளம் தரப் போகிறார்கள்?

இவ்வாறு எத்தனையோ வினாக்கள் அவள் நெஞ்சில் அலையாக மோதின.

மெய்மறந்து நின்ற வசந்தியை 'கம் ஓன்' எனக் கூறி றோசி தன் அறைக்கு அழைத்துச் சென்றாள். அவளை எதிரே உட்கார வைத்து ஓட்டலிலுள்ள முக்கிய நடைமுறைகளைக் கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒரு மணிநேர அவகாசத்தில் அழைக்கும்போது மட்டும் வரின் போதுமானது. முதலில் ஓட்டல் டாக்டரிடம் மெடிக்கல் செக் அக் செய்துகொள்ள வேண்டும். இங்கே நடைபெறும் வகுப்புகளுக்கு ஒழுங்காக வரவேண்டும். பிரெஞ்சு, ஜெர்மன் மொழியும் ஓரளவு படிக்க வேண்டும். உடை, மேக்கப் யாவும் நான் அல்லது என் உதவியாளர் அவ்வப்போது கூறுவதுபோல செய்துகொள்ள வேண்டும். உன் உடை, கொஸ்மெட்டிக்ஸ், ஆரம்பச் செலவிற்காக இதோ ஆயிரம் ரூபா பெற்றுக்கொள்.''

ஒரு வவுச்சரில் கையெழுத்துப் பெற்றுக் கொண்டு பணத்தை வசந்தியிடம் கொடுத்தாள். முதல் நாளே இவ்வளவு பணமா என வசந்தி அதிர்ச்சியடைந்தாள்.

றோசி அவளது முகவரி, டெலிபோன் எண் ஆகிய வற்றை சரி பார்த்து ஒரு இன்டெக்ஸ் கார்ட்டில் குறித்துக் கொண்டாள்.

,'டியூட்டிக்கு வரவேண்டிய நேரத்தைப் 'போனில்' தெரிவிப்போம். இப்போது நீ போகலாம்.''

றோசி கூறியதும் நன்றி தெரிவித்துவிட்டு வசந்தி எழுந்தாள். அவ்வேளை நினைவு வந்தவள்போல றோசி கூறினாள்.

''எப்படியும் ஓரிரு மாதத்தில் வீட்டுக்கு டெலிபோன் எடுத்துப் போடவேண்டும். அடுத்த வீட்டு டெலிபோனில் அழைப்பது, இங்கிருந்து டாக்ஸி அனுப்புவதெல்லாம் வீண் சிரமமும் செலவும் வீட்டில் உள்ளவர்களால் முயன்று டெலிபோன் எடுக்க முடியாவிட்டால் எங்க செக்கிரிட் டரியை பின்னர் அறிமுகப்படுத்தி விடுவேன். அவர் உதவு வார். இது மிக முக்கியமானது; அவசரமானது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

மனோகரன் காலையில் தூக்கம் விட்டு அருண்டு நினைவுகள் படர ஏழு மணிக்கு மேலாகிவிட்டது. இரவு நடைபெற்ற நிகழ்ச்சிகள் நினைவில் நிழலாடத் தொடங்கின.

ஏதோ வசந்தியின் துணிச்சலால் மானம் காப்பாற்றி மரியாதையாக பொலிஸ் காரிலேயே வந்து இறங்கியது பெரிய நிம்மதியாக இருந்தது. அல்லது இப்பொழுது காலையில்தான் வரமுடிந்திருக்கும். அசோகனைத்தான் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து என் காதலை அம்பலப்படுத்தியிருக்க நேர்ந்திருக்கும்.

பெரிய ஓட்டலில் வேலை செய்வதால் அவளுக்கு பெரிய இடங்களில் அறிமுகம், மதிப்பு இருக்க வேண்டும். 'வேலை பெற்றுத் தருவேன். எங்காவது விண்ணப்பித்து விட்டுச் சொல்லுங்கள்' என்று அவள் கூறியது பொய்யாகாது. எப்படியும் பத்திரிகைகள் அரசாங்க கசெட்டுகளை இனிமேல் ஒழுங்காகப் பார்க்க வேண்டும். இன்றைய பத்திரிகைகள் வந்து விட்டனவா?

வெளிநாட்டு வேலையென்ற எண்ணத்தை இனி விட்டு விட வேண்டும். கிடைத்த வேலைக்கே ஏஜென்சிக்காரன் இருபதினாயிரம் ரூபா கேட்கிறான். யாரிடம் போய் இவ்வளவு தொகை கடன்பட முடியும்? வசந்தியே வெளிநாடு செல்வதை சிறிதும் விரும்பவில்லை. அசோகன் வேறு திட்டித் தீர்க்கிறான்.

அறையில் சந்தடியே இல்லை. அசோகன் எங்கே? அன்சாரி எங்கே?

மனோகரன் எழுந்த போது அசோகன் வாயில் சிகரெட்டும் கையில் பத்திரிகையுமாக வந்து கொண்டிருந்தான்.

''ஏண்டா மனோ, ஆறுமணிக்கே டீக்கும் சிகரெட்டுக்கும் ஓடும் நீ ஏழு மணிக்கும் குறட்டை விட்டுக் கொண்டிருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய். இரண்டாம் காட்சி சினிமா பார்க்கப் போனாயா? நீ வந்து படுத்ததே தெரியாது.''

''ஒரு பிரெண்டைப் பார்க்கப் போய் தாமதமாகி விட்டது.''

பொய்யைக் கூறிவிட்டு கதையை வளர்த்தாமல் இருப்பதற்காக பாத்றூம் சென்று வாயையும் முகத்தையும் கழுவிவிட்டு வந்தான்.

''ஹபிட் இஸ் எ கிரேட் போஸ். பழக்கம் பெரிய சக்தி வாய்ந்தது'' என்ற மந்திரம் அவனை ஈர்த்தது. காலை யில் எழுந்ததும் டீயும் சிகரெட்டும் இல்லாமல் அவனுக்கு எதுவும் ஓடாது. இரவு கட்டிலின் அருகே மாட்டி தொங்கி யிருந்த கால்சட்டைப் பாக்கெட்டில் சில்லரை எடுக்கக் கையை வைத்தான்.

சில்லரையுடன் வழுவழுப்பான நோட்டும் ஒன்று வந்தது.

பிரித்துப் பார்த்தான். பத்து டாலர் பச்சை நோட்டு. இரவு பொலிசார் அழைத்துச் சென்றபோது வசந்தி பாக் கெட்டுள் திணித்தது அவன் நினைவில் வந்தது.

பொலிசாருக்குக் கொடுக்க பத்துரூபா நோட்டை திணித்திருப்பாள் என நினைத்த அவனுக்கு அந்த நோட்டு வியப்பளித்தது. அவள் தவறுதலாக ரூபா நோட்டு என டாலர் நோட்டைத் திணித்தாளா அல்லது நினைவு பூர்வ மாகத் தள்ளினாளா என்ற சந்தேகம் எழுந்தது. என்ன செய்யலாம் என்று தடுமாறும் வேளை அசோகன் பார்த்து விட்டான்:

''என்ன டாலர் நோட்டுப் போல இருக்கு''

''ஆமாம் வெளிநாட்டு பிறெண்டை ராத்திரிப் பார்த் தேனல்லவா. அவன் தந்தான். இதை எப்படி ரூபாவாக மாற்றலாம்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாங்கிலே மாற்றலாம் அல்லது கோட்டைப் பக்கத்திலுள்ள கடைகளிலெல்லாம் மாற்றலாம்.''

''பாங்கிலே எப்படிக் கிடைத்தது என்று கேட்க மாட்டார்களா?''

' இங்கு நடப்பது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆட்சிதானே. ஐநூறு டாலர் வரை எவருமே வைத்திருக்கலாம். விரும்பிய வேளை மாற்றலாம். எவரும் எதுவும் கேட்க மாட்டார்கள்.''

''பத்து டாலருக்கும் எவ்வளவு ரூபா கிடைக்கும்?''

''பேப்பரை விரித்துப் பார். இருநூற்று இருபது ரூபாவிற்குக் குறையாது கிடைக்கும்.''

தன்னுடைய சில சில்லரைப் பிரச்சனைகள் தீர்ந்துவிட்டதாக எண்ணிக் கொண்டே டீ சாப்பிட மனோகரன் ஓடினான். எப்படியும் டாலர் நோட்டுப் பற்றி வசந்திக்கும் தெரிவிக்க வேண்டும் என எண்ணிக் கொண்டான். அவள் திரும்ப அந்த நோட்டைப் பெற்றுக் கொள்ள மாட்டாள் என்பதையும் அவன் அறிவான்.

## 14

மனோகரன் சிகரெட்டை ஊதியபடி திரும்பியபோது அறையுள் அசோகன், அன்சாரி, நியூட்டன் சில்வா ஆகியோர் ஏதோ விவாதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

காரசாரமான அரசியல் விவாதங்கள் அங்கு நடைபெறுவது வழமையாகவே இருந்தது. பெரும்பாலானோர் தொழிற்சங்கங்களில் இருப்பவர்கள்.

அந்தப் பழைய வீட்டில் மூன்று அறைகள் இருந்தன. பெரும்பாலும் 1980 யூலை வேலை நிறுத்தத்தில் பங்குபற்றி வேலை இழந்தவர்களே அங்கு தங்கினர். பத்துப் பேர் நிரந்தரமாக இருந்த போதும் அவர்களது விருந்தினராகவும் நண்பர்கள் வந்து தங்குவதுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசோகனின் விருந்தினனாகவே மனோகரன் வந்து நிரந்தரமாகத் தங்கி விட்டான்.

அசோகன் அந்த விடுதியில் மிகவும் பிரபல்யமானவன். எல்லோராலும் மதிக்கப் படுபவன். அரசாங்க அச்சகத் தொழிற்சங்கத்தில் செயலாளராக இருந்தவன். யூலை 80ல் நடைபெற்ற அடையாள வேலை நிறுத்தத்தின்போது வேலை நீக்கம் செய்யப்பட்டவன். பெரும்பாலோர் பல்வேறு வழிகளில் வேலையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட போதும் அவனுக்கு வேலை முற்றாக மறுக்கப்பட்டது. காரணம் அவன் தொழிற்சங்கத்தில் முக்கிய உறுப்பினனாக இருந்ததே.

குடும்பமாகக் கொழும்பில் வாழ்ந்த அசோகன் வேலை இழந்த பின் மனைவியையும் இரண்டு குழந்தைகளையும் கிராமத்திற்கு அனுப்பிவிட்டு அந்த விடுதியில் சேர்ந்தான்.

சிங்கள மொழியில் நல்ல திறமை பெற்றிருந்தான். பெரும்பாலான தொழிற் சங்கக் கூட்டங்களில் அவனே சிங்களப் பேச்சுகளைத் தமிழில் மொழி பெயர்ப்பான். அத்தோடு சிங்கள அறிக்கைகள் துண்டுப் பிரசுரங்களை தொழிற் சங்க வெளியீடுகளுக்கு தமிழில் மொழி பெயர்க்கும் வேலையையும் அவனே செய்து வந்தான்.

அதேபோல தமிழில் வெளிவரும் முக்கிய அறிக்கை களையும் செய்திகளையும் சிங்களத்தில் பெயர்த்துத் தரு வான். இவற்றின் மூலம் கிடைக்கும் வருமானத்திலேயே அடக்கமாக வாழ்ந்து வந்தான்.

மனோகரன் உட்பட அங்குள்ள அனைவரின் நன்மதிப் பையும் அசோகன் பெற்றிருந்தான்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தி நாடாளுமன்ற அங்கத்தவரின் பதவிக் காலத்தை மேலும் ஆறு ஆண்டுகள் நீடிக்கப் போவது பற்றிய செய்தி பற்றியே அங்கு அலசிக்கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஜனாதிபதி தேர்தலின் போது தேர்தல் முடிந்ததும் எல்லோருக்கும் வேலை தருவதாக வாக்களித்து ஏமாற்றி விட்டான். இந்தத் தேர்தலின் முன்னரே வேலையிழந்தவர் பிரச்னையைத் தீர்த்துவிட வேண்டும்."

அன்சாரி கூறினான்

"தொழிற் சங்கங்களைக் கூட்டி மீண்டும் நாம் வலியுறுத்த வேண்டும்."

நியூட்டன் சில்வா சொன்னான்.

"போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தவேண்டும். அதைச் செய்வோம். வேலை தந்தாலும் எங்கள் வாக்குரிமை ஒரு போதும் அவர்களுக்குக் கிடைக்காது என்பதையும் அவர்கள் அறிவார்கள்"

அசோகன் கூறினான்.

"வடபகுதிப் பயங்கர வாதத்தை முற்றாக ஒழிப்பதற்கு எமக்கு வாக்களியுங்கள் என்றே சிங்களவரிடை மீண்டும் பிரசாரம் செய்யப் போகின்றனர்."

அன்சாரி ஆபத்தான நிலைமை உருவாகுவதை நினைவூட்டினான்.

"போராட்டங்கள் நாடாளு மன்றத்துள் அல்ல வெளியே ஆரம்பித்து விட்டன என்பதை இது காட்டுகிறது"

அசோகன் கூறினான்.

"வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், மாணவரின் உயர்கல்விப் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியா நிலையிலேயே பயங்கரவாத ஒழிப்புப் போராட்டம் என சிங்கள இனவெறியைத் தூண்டுகிறார்கள் இது ஆபத்தான நிலைக்கே இட்டுச் செல்லப்போகிறது"

நியூட்டன் சில்வா சிங்களப் பத்திரிகைகள் நடத்தும் பயங்கர இனவெறிப் பிரச்சாரத்தை முன் வைத்துக் கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாடாளுமன்றம், தேர்தல் எல்லாம் வேறும் பொய்மைகள் என்பதை ஜெயவர்த்தனாவும் யு.என்.பி. தலைவர்களும் நன்கு அறிவார்கள். பொலிசார், காடையரின் உதவியுடன் எப்படித் தேர்தலில் ஜெயிப்பது என்பதையும் அவர்கள் ஜனாதிபதித் தேர்தலிலேயே கற்றுவிட்டார்கள். ஆகவே இந்த ஏமாற்றுகளில் நாமும் எடுபட்டு விடாது போராட்டங்களை வெளியே நடத்தவேண்டும்.''

அசோகன் மீண்டும் தன் கருத்தை வலியுறுத்திக் கூறினான்.

''அது சரி. பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தை தொழிலாளர்கள் தானே, முன்னெடுத்துச் செல்லவேண்டும். அவர்கள் தானே வேலை நிறுத்தம் செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்.''

''பொருளாதாரப் பிரச்சனைகளை முன் வைத்து அவர்களைப் போராட்டத்திற்குத் தூண்டவேண்டும்.''

அன்சாரிக்கு அசோகன் பதில் கூறினான்.

''சிங்கள இனவெறியை முன் வைத்து யு. என். பி. எல்லோரையும் அடக்கி ஒடுக்கி, தொடர்ந்து ஆளமுயல்கிறது. இந்த ஆபத்திலிருந்து எப்படித் தப்புவது?''

நியூட்டன் சில்வாவின் பதில் எல்லோரையும் கவலைக்குள் உட்படுத்தியது.

யாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த மனோகரன் மேசை மேல் முதல் நாளே வந்திருந்த தந்தையாரின் கடிதத்தை உடைத்துப் படித்தான்,

''உன் தம்பி முரளியை வீட்டில் நாலு நாட்களாகக் காணவில்லை உன் விடுதிக்கு வந்தானா? உடன் எழுதவும்.''

என்ன நடைபெற்றிருக்கும் என்பதை மனோகரன் பலவாறு எண்ணிப் பார்த்தான். அவனது மனதில் ஒருவித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீதியும் ஏற்பட்டது. அங்கு தொடர்ந்து நடந்த உரையாட லில் அவனது சிந்தனை ஈடுபட மறுத்தது.

# 15

மனோகரனின் தந்தை முத்தையா 1971ன் பின் வளர்ச்சியடைந்த பணக்கார விவசாயிகளில் ஒருவர்.

மனோகரனின் தம்பி ஒருவன். தங்கையர் இருவர். யாவருக்கும் உயர்கல்வி அளிக்கவேண்டும் என முத்தையா ஆசைப்பட்டார். அதற்கேற்ற பண வசதிகளும் கிடைத்தன. அவர் பயிரிட்ட வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலைகள் பல மடங்காக உயர்ந்தன.

பிள்ளைகளுக்கு கல்விக்கு டியூசன் யாவும் ஏற்பாடு செய்தபோதும் பல்கலைக்கழகப் போட்டியில் வெற்றி கிட்ட வில்லை. மனோகரன் மட்டுமே இஞ்சினியரிங் கற்க வாய்ப்புக் கிடைத்தது.

பொருளாதார நிலையில் மிகக் கீழ் மட்டத்திலிருந்து வளர்ந்து வந்த முத்தையா 1978ன் பின் தமது விளை பொருள் விலைகள் மோசமாக வீழ்ச்சியடைவதைக் கண் டார். ஆயினும் மனோகரனின் கல்விக்கு இடையூறில்லாது பணம் அனுப்பி வந்தார்.

பிள்ளைகளின் உயர்கல்விக்கு வாய்ப்பின்மை, விவசாயத் திற்கு வேண்டிய உரம், கிருமிநாசினி, மின்சாரத்தின் விலை ஏற்றம், விளைவித்த பொருட்களின் விலை வீழ்ச்சி யாவும் முத்தையாவை அரசுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடச் செய்தது.

'இளைஞர்களின் போராட்டம் நீதியானது' என்ற பரவலான கருத்தை அவரும் ஆமோதித்தார்.

வீட்டிலேயும் அதே குரல் ஒலித்த போதும், வீட்டில் இருந்த ஒரே மகன் இப்படியாகத் தலைமறைவாகி விடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான் என அவர் எதிர் பார்க்கவில்லை. வீட்டிலே முரளி அமைதியாகவே இருந்தான். திடீரென இப்படி நிகழ்ந்து விட்டது, தங்கைமார் அத்தனை கவலைப்பட வில்லை தாயே அழுது கொண்டிருந்தாள்.

கொழும்புக்குக் கடிதம் எழுதும் படியும் வற்புறுத்தியவள் தாயேதான். ஏதாவது காதல், கீதலாயிருக்குமோ என்ற சந்தேகமும் முத்தையாவிற்கு இருந்தது. ஆனால் அதற்கு ஆதாரமான தடயம் எதுவும் அவருக்குக் கிடைக்கவில்லை. வீட்டிலோ, அயலிலோ அப்படியான குசுகுசுப் பேச்சு எதுவும் அவரின் காதிலும் விழவில்லை.

மனோகரனுக்குக் கொழும்பிற்குக் கடிதம் எழுதினார்.

மனோகரனின் பதில் வரமுன்னர் அவர்களது சந்தேகம் உறுதிப் படுத்தப்பட்டு விட்டது.

அதிகாலையில் இராணுவத்தினர் வந்து வீட்டைச் சுற்றி வளைத்துக் கொண்டனர்.

"முரளி இருக்கிறானா?"

ஒரே அதட்டல்.

தயங்கிய குரலிலே வெளியே வந்து சொன்னார் முத்தையா:

"நாங்களும் அவனைத்தான் தேடிக் கொண்டிருக் கிறோம்"

"நாங்க பிடித்துத் தருகிறோம். வெளியே முழந்தாளில் நில்"

இராணுவ சார்ஜன் கட்டளையிட்டான். துப்பாக்கி முனையால் தள்ளி வந்து முத்தையாவையும் மனைவியையும் இரு பெண்களையும் முற்றத்தில் முழந்தாளில் நிற்க விட்டனர்.

வீடு முற்றும் தேடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்த நூல்கள், பாடப் புத்தகங்கள் யாவும் வெளியே வீசப் பட்டன. சுவாமிப் படங்கள், அரசியல் தலைவர்களின் படங்களெல்லாம் அடித்து நொறுக்கப் பட்டன மகாத்மா காந்தியின் படம் கூட விட்டு வைக்கப்பட வில்லை.

ஒரு மணி நேரமாக அட்டகாசம் நடந்தது. பின்னர் ஜீப்பில் ஏறிச் சென்று விட்டனர்.

நாலு நாட்களின் முன்னர் பத்திரிகையில் வந்திருந்த செய்திக்கு முரளியும் நண்பனும் பொறுப்பு என எங்கும் பேசிக் கொண்டனர். இரண்டு சிங்களப் பொலிசாரைச் சுட்டுவிட்டு யந்திரத் துப்பாக்கிகளை அபகரித்துச் சென்று விட்டார்களாம்.

முத்தையாவுக்கு அரசின்மேல் ஏற்பட்ட பகைமை இந் நிகழ்ச்சியின் பின்னர் மேலும் உக்கிரமடைந்தது.

# 16

மாலையில் அசோகனையும் அழைத்துக் கொண்டு மனோகரன் கோட்டைப் பகுதிக்குச் சென்றான். அங்கு பழக்கமான கடை ஒன்றில் மனோகரனின் பச்சை நோட் டைக் கொடுத்தான்.

''இன்றைய மார்க்கெட் இருபத்து மூன்றுதான்.''

இருநூற்று முப்பது ரூபாவை எண்ணி அவனிடம் கொடுத்தபடியே கடைக்காரன் கூறினான்.

''டீ சாப்பிடுவோம்'' மனோகரன் சொன்னான்.

கடற்கரை ஓரமாக ஏகாதிபத்தியத்தின் சின்னமாக நிமிர்ந்த நின்ற அந்த ஐந்து நட்சத்திர ஓட்டலைத் தாண்டி ஒரு சந்தினூடாக அசோகன் அழைத்துச் சென்றான். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் ஓட்டலில் நுழைந்தனர். மூலையிலிருந்த மேசையை நாடிச் சென்றனர்.

இலையான்கள் மேசையில் கும்பலாக மொய்த்திருந்தன. இருவரும் மேசையில் கை வைத்ததும் விர் என்று பறந்தன.

கேக்கும் சமுசாவும் தட்டில் கொண்டு வந்து ஒரு அழுக்குடையணிந்த பையன் வைத்தான்.

''எதிரே வெளிநாட்டாருக்கு இத்தனை ஆடம்பர ஓட்டல். இந்த நாட்டு சாதாரண பிரசைகளான எங்களுக்கு இந்த ஓட்டலும் ஆறிப்போன மட்டமான சாப்பாடுகளும்.''

சமுசா ஒன்றை வேண்டா வெறுப்புடன் கடித்தபடியே அசோகன் கூறினான்.

''அவை வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு, அவர்கள் கொண்டுவரும் அந்நியச் செலாவணியைப் பறித்தெடுப்பதற்காக வல்லவா?''

மனோகரன் சமாதானம் கூற முனைந்தான்.

''ஏனப்படிச் செய்ய வேண்டும். வெளிநாட்டுப் பிரயாணிகளாக எம் நாட்டுக்கு வருபவர்கள் எமது விருந்தாளிகளாகக் கருதப்பட வேண்டியவர்கள். அவர்களைக் கொள்ளையடிப்பது என்பது எங்கள் வீட்டுக்கு வரும் விருந்தினர்களிடமே நாம் திருடுவது போன்றது தானே.''

''நீ கூறும் கருத்து புதுமையாகத்தான் இருக்கிறது. ஆனாலும் அவர்கள் சந்தோஷமாகப் பொழுது போக்க வருபவர்கள் தானே.''

''அவர்களைக் கொள்ளையடித்து அனுப்புவது அவர்களுக்குச் சந்தோசம் தரக்கூடியதா?''

''அவர்கள் ஆடம்பரமாகச் செலவு செய்யத் தயாராகவே வருகிறார்கள்.'

''அவர்கள் எங்கள் நாட்டைப் பார்க்க வருபவர்களானால் எங்களுடைய வாழ்க்கைத் தரத்திற் கேற்றபடி இங்கு தங்கச் செய்து, எமது உணவு, கலை, பண்பாடுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிமுகம் செய்தல்லவா அனுப்ப வேண்டும். பெரிய ஓட்டல் களைக் கட்டி எம்மக்கள் கனவிலும் நினைக்க முடியாத புதிய உலகத்தையும் வெளிநாட்டு உணவுகள், கபரே நடனங்களை யும் காட்டியா அனுப்ப வேண்டும்.''

''அது சரிதான். ஆனால் வெளிநாட்டுக் கம்பெனிகளின் ஆதிக்கத்திலும் நிர்வாகத்திலும் தானே இந்த ஓட்டல்கள் நடைபெறுகின்றன. அவர்கள் தம்முடைய நாட்டவர்களைத் தான் கொள்ளையடிக்கிறார்கள் என்று ஏன் சொல்ல முடியாது?''

''எம் நாட்டு விருந்தாளிகளை வெளிநாட்டுக் கம்பெனிகள் கொள்ளையடிக்க நாம் அனுமதிப்பது எங்கள் தவறு தானே. உன் வீட்டுக்கு வரும் விருந்தாளியை கொள்ளையடிக்க நீயே விடுவது நீதி என்றால் அவர்கள் செய்வதும் சரிதான்.''

காரசாரமான உரையாடலில் டீயும் ஆறி விட்டது. வேண்டா வெறுப்பாக டீயை அசோகன் குடித்தான்

''உலகத்திற்குத் தேயிலை வழங்கும் நாட்டில் நாங்கள் இந்த மட்டமான தேநீரைக் குடிக்க வேண்டும். ஆறு வருடங் களின் முன் முப்பது சதத்திற்குக் கிடைத்த தேநீருக்கு இப் போது ஒன்றரை ரூபா கொடுக்க வேண்டியிருக்கிறது.''

''அந்த ஓட்டலில் ஐந்தரை ரூபா.''

''நீ குடித்திருக்கிறாய் போலிருக்கு.''

''இல்லை, எவரோ சொன்னார்கள்.''

வசந்தி பற்றி அவனிடம் ஒருநாள் ஓய்வாகச் சொல்லவே எண்ணியிருந்தான். அன்றே தொடங்குவோமா விடுவோமா என அவன் மனம் ஊசலாடியது.

## 17

மனோகரனும் அசோகனும் மீண்டும் ஜனாதிபதி வீதி யில் ஏறி காலி முகத்திடலை நோக்கி நடந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஐந்து நட்சத்திர ஓட்டலைத் தாண்டும் வரை மனோகரனின் இதயம் பலமாக அடித்துக் கொண்டது. திடீரென ஓட்டலிலிருந்து வசந்தி வந்து விட்டால்...! தன் இரகசியமெல்லாம் உடனே அசோகனுக்குத் தெரிய வந்து விடும். அசோகன் வசந்தியின் உறவை ஏற்பானா? எதிர்ப்பானா?

வசந்தியின் நல்ல மனதையும் தன்மேல் அவள் வைத்திருக்கும் காதலையும் அவளுடைய சிறப்புகளையும் நான் அறிந்த அளவிற்கு எவரும் அறிந்திருக்க முடியாது. எத்தனை கூறியும் புரிய வைக்கவும் முடியாது.

ஆகவே இவனது அபிப்பிராயமோ வேறு எவரின் முடிவோ எனக்கு வேண்டியதில்லை. அவளிடம் எல்லாம் இருக்கிறது. அவள் விரும்பிய கணவனைத் தேர்ந்தெடுக்கலாம். வேலையற்ற என்னை மட்டும் அவள் ஏன் காதலிக்க வேண்டும்? இதற்குரிய விடையை அவனால் இன்னும் தேடிக் காண முடியவில்லை.

மாலை நேரமாகையால் கடற்கரையில் கூட்டம் அதிகமாக இருந்தது. காதலர்கள் சோடி சோடியாக ஆங்காங்கே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். தெருவோரமாக உலகத்தில் உற்பத்தி செய்யப்படும் கார் மாடல்களெல்லாம் அடுக்கப்பட்டிருந்தன.

ஐஸ்கிரீம் வண்டிகள் ஒருபுறம். கடலை விற்பவர்களும் ஆங்காங்கே உலாவிக்கொண்டிருந்தனர்.

முதல் நாள் தான் காத்திருந்த இடத்திற்கு வந்தபோது மனம் ஒரு கணம் துணுக்குற்றது. ஒன்பது மணிக்குத்தான் வந்தாள். விரைவில் திரும்புவதற்கும் அவள் இணங்கவில்லை.

''கடற்கரையில் ஆட்களேயில்லை.''

''அதுதானே நல்லது. இரவுக் காட்சி முடியும் வரை வீட்டுக்குத் திரும்ப பஸ் இருக்கும்தானே.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''லேட்டாக வீட்டுக்கு போனால் அம்மா ஒன்றும் சொல்லமாட்டாவா.''

''ஓட்டலிலிருந்து சில வேளைகளில் மிக லேட்டாகத் திரும்புவது வழமை. அம்மாவிற்குத் தெரியும். ஓட்டலுக்குச் சென்றால் என்ன வேளை திரும்ப முடியும் என்று உறுதியாகச் சொல்ல முடியாது. உங்களை ரொம்ப நேரம் காத்திருக்க வைத்துவிட்டேன். மன்னித்து விடுங்கள்.''

இரண்டாவது தடவையாக மன்னிப்புக் கேட்டாள்.

ஒன்றரை மணிக்கு மேலாகக் கடற்கரையில் காத்திருந்த போதெல்லாம் அவளை மனதுள் வைதபோதும் அவளைக் கண்டதும் கோபமெல்லாம் மறைந்துவிட்டது. அவளும் அத்தனை நயமாக, அவனைக் கண்டதும் முதன் முதலாக மன்னிப்புக் கேட்டு விடுவாள்.

''தாமதித்தற்காக நீங்கள் என்ன தண்டனை தந்தாலும் ஏற்றுக்கொள்வேன்.''

''ரென் கிஸ்ஸெஸ்.''

''பத்தென்ன இருபது தருகிறேனே. இதெல்லாம் தண்டனையில்லை.''

இரவு பொலிஸ்காரரிடம் அகப்பட்ட இடம் வந்த போது இரவு ஏற்பட்ட மனத்துன்பமும் வசந்தியின் மேல் பழி போட்டதும் நினைவில் வந்தது.

''என்ன மனோ, ஆழ்ந்த யோசனை.''

அவனது நினைவில் ஓடிய திரைப்படத்தை அசோகன் அறுத்துவிட்டான்.

''ஒன்றுமில்லை. நீயும் ஒன்றும் பேசவில்லை. அதுதான் வேடிக்கை பார்த்துக்கொண்டு வந்தேன்.''

''இந்தக் கடற்கரையையும் காதற்சோடிகளையும் பார்த்ததும் உன் கிராமத்துக் காதல் நினைவு வந்துவிட்டதோ என நினைத்தேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசோகனின் வார்த்தைகள் பழைய புண்ணில் ஊசி ஏற்றியதுபோல ஒரு கணம் இருந்தது.

,'அதை எப்பொழுதோ கைவிட்டு விட்டேன். திலகத்தின் திருமணமே முடிந்து விட்டதே."

"நீ சொல்லவில்லையே. அந்தச் செய்தி உன்னை உலுப்பியிருக்கும்."

"எல்லாம் கொஞ்ச நாள்தான். தற்போது எல்லாம் மறந்துவிட்டேன்,"

அசோகன் கேட்டதும் நல்லதாய் போய்விட்டது. மற்றொரு தடவை வசந்தி பற்றி இனிச் சொல்லி விடலாம். மனம் ஒரு புறம் ஆறுதல் கூறியது.

"அப்பொழுது வேறு என்ன சிந்தனை?"

"காலையில் அப்பாவின் கடிதம் வந்தது. தம்பி முரளியை வீட்டில் இரண்டு நாட்களாகக் காணவில்லையாம். இங்கே வந்தானோ என்று கேட்டு எழுதியுள்ளார்."

தருணம் பார்த்து கதையை எடுத்தான்.

"அப்படியா? கவலைப்பட வேண்டிய விஷயம்தான்."

"வீட்டில் கூட அவன் அதிகமாக அரசியலே பேசுவதில்லை. ஒரு இயக்கத்தில் அவன் சேர்ந்திருப்பதாக சென்ற தடவை கிராமத்திற்குச் சென்றபோது நண்பன் ஒருவன் கூறிய போது நான் நம்பவில்லை. தற்போது தலைமறைவாகி விட்டான், வீட்டாருக்கு என்ன நடக்குமோ தெரியவில்லை" திலகாவும் எச்சரித்து எழுதியது அவ்வேளை மனோகரனுக்கு நினைவு வந்தது.

"இனியென்ன, நடப்பதைப் பார்க்க வேண்டியதுதான்."

"அம்மாவைச் சமாதானப்படுத்துவதுதான் பெரிய பிரச்சனையாயிருக்கும்."

மனோகரன் மனக்கவலையோடு கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தமிழ்ப் பகுதியிலுள்ள தாய்மாருக்கெல்லாம் இனிமேல் இதுவே கவலையாகப் போகிறது.''

''இளம் பெண்களுக்கு இருக்காதா, என் தங்கையின். காதலன் தலைமறைவாகி தமிழ் நாட்டிற்கு போய் விட்டான்.''

''எப்படி உனக்குத் தெரியும்?''

''ஊருக்குச் சென்றிருந்தபோது கேள்விப்பட்டேன். தங்கை சோர்வாக சோகை படர்ந்து இருந்ததைக் கவனித் தேன் நான் எதுவும் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள வில்லை. என்னால் என்ன செய்ய முடியும்?''

மனோகரன் கூறியதற்குப் பதிலாக அசோகன் சொன்னான்:

''நாங்கள் ஒரு புது யுகத்தை நோக்கிப்போய்க் கொண் டிருக்கிறோம். அது எங்கே போய் முடியும் என்பதுதான் உறுதியாகக் கூறிவிட முடியாததாயுள்ளது.''

# 18

மூத்த மகன் மனோகரனை எப்படியாயினும் ஒரு டாக்டராக அல்லது இஞ்சினியராகப் பார்க்க வேண்டும் என முத்தையா நெஞ்சில் திட சங்கற்பங் கொண்டிருந்தார். வெளியே எவருக்கும் அவர் சொன்னதில்லை. தோட்டத்து வேலைகளுக்கே அவனை அழைப்பது குறைவு.

வசதியுள்ள பிள்ளைகளுக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்புகள் யாவும் மனோகரனுக்குச் செய்து கொடுத்தார். வீட்டில் வேறு என்ன கஷ்டம் இருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாது அவனது படிப்பிற்கு வேண்டிய பணங் களைத் தாராளமாகக் கொடுத்து வந்தார்.

எல்லாப் பாடங்களுக்கும் டியூசன் எடுக்கும்படி சொன்னார். தமக்கெல்லாம் பணம் கேட்டும் கிடைக்காத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது 'அப்பாவின் பிள்ளை' என மனோகரனைத் தங்கை மார் கேலி செய்தனர்.

மனோகரன் இரவில் நெடுநேரம் கண்விழித்துப் படிப் பதைப் பார்த்து தாயார் கவலைப்பட்டாள். அவன் புத்த கத்தை வைத்துக் கொண்டு தூங்கி வழியும் போது 'படித்தது போதும் படு' என வற்புறுத்திப் படுக்க வைப்பாள்.

முத்தையாவிற்கு அவன் என்ன பாடங்கள் படிக்கிறான், எவற்றில் திறமைசாலி என எதுவுமே தெரியாது. மருத்துவக் கல்விக்கும் இஞ்சினியரிங் படிப்பிற்குமுள்ள வேறுபாடுகளே அவர் அறியார். உயர்தர வகுப்பில் என்ன பாடங்கள் கற்கவேண்டும் என்பதே அவருக்குத் தெரியாது.

மனோகரன் கணிதத்தில் கெட்டிக்காரனாக இருந்தான். அதனால் கணிதத்துடன், இரசாயனம், பௌதிகத்தை உயர்தர பரீட்சைக்காகக் கற்றான்.

உயர்தர பரீட்சை எழுதுங் காலத்தில்தான் திலகாவின் தொடர்பு ஏற்பட்டது அது அவனது வாழ்வில் ஒரு விசித்திர மான அறிமுகமும் அனுபவமுமாகும். ஆண்கள் பள்ளியில் தொடர்ந்து படித்து வந்ததால் பெண்களோடு பழகுவதில் மிகவும் சங்கோஷப் பேர்வளியாகவே இருந்தான். பெண் களை அவன் ஏறிட்டுப் பார்த்ததோ, பழகியதோ கிடையாது. தான் உண்டு, தன் படிப்புண்டு என கல்லூரிக்குச் சென்று வந்தான்.

கிராமத்தில் பட்டணம் போகும் தெருவிலிருந்து ஒழுங்கை வழியே இறங்கியவரின் இடது புறத்தில ஆறாவது வீடாக மனோகரன் வீடு இருந்தது. திலகாவின் வீடு முதல் வீடு. தெருவைப் பார்த்தபடி இருந்தது ஒருங்கையைப் பார்த்தபடி திலகாவின் அறையின் ஜன்னல் மட்டும் மதில் மேலாகத் தெரியும்.

சைக்கிளில் கல்லூரிக்குச் செல்லும் போது, ஜன்ன லூடாக இடையிடை அவளைக் காணும் போதெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோகரன் தலையைத் திருப்பிக் கொண்டே செல்வான். திலகாவின் தந்தை கொழும்பில் ஓர் அக்கவுண்ட னாக கல்விப் பகுதியில் இருந்தார். மனோகரனோடு ஒப்பிடும்போது அவர்களின் தரம் உயர்வாகவே கருதப் பட்டது.

மனோகரனின் இளைய தங்கை இந்திரா திலகா வீட்டிற்குப் பிள்ளைகளோடு அரி நெல்லிக்ககாய் வாங்கு வதற்குப் போவதுண்டு.

ஒருநாள் நெல்லிக்காயைக் கடித்துப் புளியில் சுவை கண்டு கொண்டிருந்த தங்கையைப் பார்த்து மனோகரன் கேட்டான்.

''எங்கேயடி இந்த நெல்லிக்காய் திருடி வந்தாய்?''

''அந்தத் திலகா அக்கா வீட்டுக்குப் போனோம். எனக்கு கனக்கத் தந்தா, அவ அண்ணா என்ன சொன்னா தெரியுமா?''

''என்ன சொன்னாள்?''

''உங்க பெரிய அண்ணா நல்ல வடிவு என்று சொன்னாள்.''

மனோகரனின் இதயம் ஒரு கணம் மென்மையாகச் சிலிர்த்தது. உள்ளூறச் சிரித்துக் கொண்டே கேட்டான்.

'' நீ என்ன சொன்னாய்?''

''எங்க அண்ணாவை நீ நாவூறு பார்க்க வேண்டாம் என்று சொன்னேன்.''

அதன் பின்னர்தான் கல்லூரிக்குச் செல்லும் வேளை பார்த்து, யன்னலோரமாக நின்று, பள்ளிக்குச் செல்லத் தன்னை அலங்கரிப்பது வழமையாக தனக்காகவே நடை பெறும் நாடகம் என்பதை உணர்ந்து கொண்டான்.

இளைய தங்கை கற்கும் பள்ளியில் திலகா பத்தாவது படித்துக் கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

மனோகரன் பின்னர் யன்னலடியில் திலகாவைப பார்க்கும் வேளைகளில் புன்னகை புரியத் தொடங் கினான். பதிலாக அவளது அழகான பல் வரிசையும் தெரிந்தது கருமையில் ஒரு அழகு இருக்கிறது என்பதை அவளைப் பார்ப்பதன் மூலமே உணர்ந்து கொண்டான்.

இக்காட்சி நாடகங்களையும் அவன் ஒரு பொழுது போக்குப் பகிடியாகவே ஆரம்பத்தில் கருதிக் கொண்டான். இரு குடும்பங்களுக்குமுள்ள வேறுபாடுகளையும் அவன் அறியாமலில்லை. திருமணமென்றால் பல ஏற்றத்தாழ்வு களால் இப்பகுதியிலும் எதிர்ப்புகள் ஏற்படும் என்பதையும் அவன் அறிவான்.

திலகா யன்னலருகே இல்லாத வேளை தான் அவ்வழி செல்வதைத் தெரிவிப்பதற்காக இருதடவை சைக்கிள் 'பெல்'லை அடிப்பான். அதுவே பெரிய அனர்த்தம் விளை வித்து விட்டதைப் பின்னரே அறிந்தான்.

சைக்கிள் மணி ஓசை சிறிய விபத்தை ஏற்படுத்திய போதும் திலகாவின் இதயத்தில் ஏற்பட்ட பெரிய விபத்தை அதன் மூலமே மனோகரன் அறிந்து கொண்டான். அது மட்டுமல்ல, அதுவே அவன் நெஞ்சையும் பலமாக அசைத்து மென்மையாக்கி விட்டது.

யன்னலில் புன்னகையால் பேசத் தொடங்கியபின் தங்கையுடன் மேலும் பழகி வீட்டுக்கும் திலகா வந்து செல்வதையும் மனோகரன் அறிந்து கொண்டான்.

அடிக்கடி அவன் கல்லூரியிலிருந்து வரும் பொழுது மங்கும் வேளைகளில் ஒழுங்கையிலும் திலகா உலாவத் தொடங்கினாள். அவள் துணிச்சலாக உலாவியபோதும் அவளைக் கண்டதும் அவன் கரங்களும் நெஞ்சும் பதறவே செய்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மாலை மனோகரன் ஒழுங்கையால் திரும்பும் போது யன்னலைப் பார்த்து ஏமாந்து மணியை அடித்து விட்டு நேரே கண்களைத் திருப்பினான். திலகா சிரித்துக் கொண்டே சயிக்கிளை மறித்தாள். பிரெக்கை அழுத்தி கால் களை நிலத்தில் ஊன்ற அவள் எதிரே வந்து ஒரு சிறு பார்சலைக் கொடுத்தாள்.

''உங்க தங்கை இந்திராவிடம்தான் போக வந்தேன் இது நெல்லிக்காய். அவளிடம் கொடுங்கள்''

நெஞ்சு பதற முன்புறமும் பின்புறமும் பார்த்து விட்டு பார்சலை வாங்கினான். அவளது வலது கைச் சுட்டு விரலில் 'பண்டேஜ்' போடப் பட்டிருந்தது. அது அவன் இதயத்தைச் சுண்டிப் பேச வைத்தது.

''கைவிரலில் என்ன நடந்தது?''

''இராத்திரி மெஷினில் தைத்துக் கொண்டிருக்கும் போது நீங்க மணியடித்தீர்கள். மெஷின் ஊசி விரலில் ஏறி விட்டது.''

வேதனையிலும் இன்பமடைந்தது போல அவள் நாணச் சிரிப்புடன் கூறினாள்.

''ச்சூ, அப்படியா?''

அவனையறியாமலே அவன் இதயம் பேசியது.

''இனிமேல் நான் மணியடிக்க மாட்டேன்''

''நீங்கள் அடியுங்கள். அதன் மூலம் தான் நீங்களும் என்னை நினைக்கிறீர்கள் என்பதை அறிந்து ஆறுதலடை கிறேன்''

திலகாவின் வார்த்தைகள் அவனது இதயத்தைச் சிலிர்க்கச் செய்தது.

திலகாவின் கண்கள் அரும்பியிருந்த போதும் பற்களும் விரிந்து பிரகாசித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சந்திப்பின் பின்னர் திலகா அவனைத் தன் அடிமையாக்கி விட்டாள்.

நிலவில்லாத இரவு நேரங்களில் ஒழுங்கை வழியே தெருவரை உலாவ வருவது போல மனோகரன் வந்து யன்னலெதிரே மென்மையாக இருமுவான். அவள் மதிலருகே நிமிர்த்தி வைத்த உரல் மேல் ஏறி நின்று அடித் தொண்டையால் பேசுவாள்.

அவனை பட்டணத்து பஸ் நிலையத்திற்கு வரச் சொல்லி ஐஸ் கிரீம் கடைக்கு அழைத்துச் செல்வாள். தியேட்டருக்கு பகல் காட்சிக்கு வரும்படி வற்புறுத்துவாள். அவன் அஞ்சியஞ்சியே செல்வான். அவளது துணிச்சலை அவனால் அளவிட முடியவில்லை.

அவள் கூறுபவற்றிற்கு மனோகரன் சிறிது தயங்கினாலும் அல்லது தவறினாலும் அவன் பொறுமை இழக்கும் அளவிற்கு ஊடற்போரை நடத்துவாள்.

ஒரு தடவை, ஓடர் செய்த ஐஸ் கிரீமை சாப்பிடாது நீண்ட மூஞ்சையுடனிருந்தாள்.

"திலகா சாப்பிடு. என்ன நடந்தது? தவறு செய்தால் மன்னித்துக்கொள். ஆட்களெல்லாம் பார்க்கிறார்கள். என்ன நடந்தது? சொல்லு."

"யன்னலருகே உங்களைப் பார்க்க நேற்று ஆறு மணியிலிருந்து பார்த்துக்கொண்டே இருந்துவிட்டு எட்டு மணிக்கு குசினிக்குப் போனேன். அப்போது தான் மணியடிச்சுக் கொண்டு போனீங்கள்."

மனோகரனுக்கு என்ன பதில் கூறுவதென்றே தெரியவில்லை. இவளென்ன தர்க்க நியாயமில்லாமல் பேசுறாகிளே என்று நினைத்தான்.

மற்றொரு நாள், தியேட்டரில் சினிமா ஆரம்பித்ததும் படம் பார்ப்பதை விட்டு அழத் தொடங்கி விட்டாள். அவனுக்குப் பரம சங்கடமாகி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திலகா, என்ன? என்ன நடந்தது? சினிமா பிடிக்காவிட்டால் போய் விடுவோம். என்ன சொல்லு? நான் தவறு செய்திருந்தால் மன்னிப்புக் கோருகிறேன்."

இடைவேளையின்போது மட்டும் கண்களைத் துடைத்து விட்டு ஒன்றும் பேசாது மூஞ்சையை நீட்டியபடி இருந்தாள்.

"என்ன கோபம், சொல்லு திலகா."

சினிமா மீண்டும் ஆரம்பித்த பின்னரே சொன்னாள்:

"பஸ் நிலையத்தில் அந்தப் பெண்ணோடு ஏன் நீங்கள் பேச வேண்டும்?"

"அது என் ஒன்று விட்ட சின்னம்மா, நான் பேசப் படாதோ. உனக்கு அத்தனை சந்தேகமா?"

அவளை அடக்குவதற்காகச் சிறிது உறைப்பாகவே சொன்னான்.

"நான் வந்ததைக் கண்ட பிறகும் அவளோடு ஏன் பேசிக்கொண்டு நிற்க வேண்டும்?"

"பஸ் நிலையத்திலேயே சின்னம்மாவோடு பேசுவதை விட்டு நீ வந்ததும் உனக்கு மாலை போடச் சொல்லு கிறாயா?"

அவளது சிறு பிள்ளைத்தனத்தைச் சுட்டிக் காட்டுவதாகச் சிறிது அழுத்தமாகவே சொன்னான்.

"உங்களுக்கு என்னிலும் பார்க்க அவள் தான் பெரிசு. அவளிட்டையே போகலாமே?"

மீண்டும் சினிமா முடியும் வரை அழுதுகொண்டே இருந்தாள்.

அவனது இரத்த நாளங்களைப் பரிசோதிப்பதாகவே அவளது நடவடிக்கைகளும் தர்க்க நியாயங்களும் இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கு வேண்டிய பொருட்களையெல்லாம் அவனைப் பட்டணத்தில் வாங்கி வரும்படி பணத்தையும் பட்டியலையும் கொடுப்பாள். மதிலருகே அவன் வரும் வேளை நின்று வாங்குவாள். அவனில்லாதபோது மணியடித்துவிட்டு மதில் மேல் வைத்து விட்டுப் போய் விடுவான். அவள் பின்னர் எடுத்துக் கொள்வாள்.

ஒரு தடவை அவள் கேட்ட 'கியூட்டெக்ஸை' வாங்கி வரத் தவறி விட்டான். மாலையில் மழை பெய்தது. மறுநாள் வாங்குவோம் என விட்டு வந்து விட்டான்.

இரவு கண்டபோது அவள் பேசவே மறுத்துவிட்டாள்.

"இதை மறந்தது போலத்தான் என்னையும் மறந்து விடுவீர்கள்"

நாலு நாட்களாக அவள் சிரிக்கவேயில்லை.

அவளது காதல் பெரிய தொல்லை தருவதாகவும் தன்னை அடிமைப்படுத்துவதாகவும் அவன் உணரத் தொடங்கினான். ஆயினும் உதறிவிட முடியவில்லை.

தன் உயிரெல்லாம் அவன் மேலேயே வைத்திருப்பதாக அவள் ஊடலில் பின் காட்டிக்கொள்வாள். கண்ணீரை வரவழைத்து அவனை அடிமைப்படுத்தி விடுவாள்.

# 20

மனோகரன் கொழும்பிற்குச் சென்று மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இஞ்சினியரிங் பட்டத்திற்குப் படிக்கத் தொடங்கினான். அப்பொழுதும் திலகாவிற்குத் தவறாமல் ஒரு கடிதம் சனிக்கிழமைகளில் கிடைக்கத் தக்கதாக எழுத வேண்டும். இது அவள் ஆணை.

அவளும் ஒழுங்காக நீண்ட கடிதங்கள் எழுதி வந்தாள். அவன் மறைமுகமாக 'மாலதி' என்றோர் தோழி ஒருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுவதுபோல எழுதவேண்டும். உரிய நாளில் கிடைக்க சிலவேளை கோட்டைப் புகையிரத நிலையம் சென்று புகை வண்டியிலே கடிதத்தைச் சேர்ப்பான்.

கடிதம் பிந்தினாலோ, தவறினாலோ காரசாரமாக நீண்ட கடிதம் வரும். அதைப் படித்தால் அன்று பூராவும் அவனால் படிக்க மட்டுமல்ல சாப்பிடவும் மனம் வராது போய்விடும்.

நுகர்பண்ட வெறி பெண்களுக்குப் பொதுவானது போல திலகாவும் கடிதங்களில் பொருட்கள் கேட்டு எழுதிக் கொண்டே இருப்பாள். ஒவ்வொரு தடவையும் ஊருக்குப் போகும் போது வாங்கிச் செல்லவேண்டும். தவறினால் அவள் மூஞ்சை நீண்டுவிடும்.

தந்தையார் அனுப்பும் பணத்தில் ஒரு பகுதி இதற்கும் செலவானது. எத்தனையோ கடைகளில் ஏறி இறங்கி அவன் வாங்கிச் செல்லும் துணியை சில வேளைகளில், 'இதுவா, எனக்கு கலரே பிடிக்கவில்லை.' என்று அவனது உணர்வுகளை அறியாதே கூறி விடுவாள். தாங்யு என்ற வார்த்தை என்றும் கிடைத்ததில்லை.

விடுமுறை விட்ட மறுநாள் அவன் கிராமத்திற்குப் போய் விடவேண்டும். வேறு மாணவர் மூலமும் விடுமுறை நாளை அவள் அறிந்து அவனுக்கு எழுதி விடுவாள்.

வெள்ளி அல்லது திங்கட்கிழமைகளில் அரசாங்க விடுமுறை இருப்பினும் மனோகரனைக் கட்டாயம் வந்து போகும்படி வற்புறுத்தி எழுதி விடுவாள்.

அவன் தவிர்க்க முடியாது தவறும் வேளை அவள் மற்றோர் பயங்கர ஆயுதத்தையும் பயன்படுத்தத் தொடங்கினாள்.

இரண்டாமாண்டுப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டிய சில வரைபட வேலைகளை முடிப்பதற்காக வெசாக் விடுமுறையை ஒட்டிய வாரத்தில் அவள் கட்டாயம் வரும்படி எழுதியபடி அவன் கிராமத்திற்குப் போக முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைமுகமாக, 'பரீட்சை வேளை. வேலைகள் அதிகம் முடிக்க உள்ளன பயணமும் சிரமமே' என எழுதி 'பயணமும்' என்பதில் 'ய' எழுத்துத் தவறுதலாக எழுதியது போல மேலிருந்து கீழாக வெட்டி விட்டிருந்தான்.

உடனே திலகாவின் பயங்கரமான பதில் வந்தது.

''இந்த வாரம் என்னைக் காத்திருக்கச் செய்து ஏமாற்றி விட்டீர்கள். வரும் சனிக்கிழமை காலையில் வராவிட்டால் ஞாயிற்றுக்கிழமை என் பிணத்தைப் பார்க்கவும் வரவேண்டியதில்லை.''

அவளது அச்சுறுத்தலுக்கு அஞ்சி வெள்ளிக்கிழமையே கிராமத்திற்குச் சென்று விட்டான். அங்குச் சமாதானம் செய்வதற்கே இரண்டு இரவுகளும் போயின.

'தற்கொலை' என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தத் தொடங்கியது மனோகரனின் மனதை மிகவும் பாதித்தது. படிப்பிற்கூட ஆர்வம் காட்டுவது குறையத் தொடங்கியது. அந்த வேளையே அசோகனிடம் திலகாவின் காதல் பற்றி அவன் விபரமாகக் கூற நேர்ந்தது.

''இது உன்னை அடிமையாக்கும் காதல். எக்ஸ்றீம் கேஸ் ஓவ் பொசெசிவ்நெஸ். விடுபடுவது சிரமமே.''

அசோகன் சில நேரம் சிந்தித்து விட்டுக் கூறினான்.

''இவளைத் திருத்தி எடுக்க வழியே இல்லையா?''

''எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவதற்கு வேண்டிய பேர்சனாலிட்டி — ஆளுமைவேண்டும். அது உன்னிடம் இருக்கிறதா என்று தான் சந்தேகமாயிருக்கிறது.''

''எனக்கு ஒன்றும் புரியவில்லை.''

''பிடிவாதம் பிடித்து அழும் குழந்தையோடு போராட முடியாது நாமே விட்டுக்கொடுக்கிறோமே. அதுபோன்ற நிலைதான் உன்னுடைய நிலையும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் மருந்து கேட்டுகிறேன். நீ நோயைப் பற்றியே சொல்லுகிறாய்"

"தற்கொலை என சொல்லிக் கொண்டிருப்பவர்கள் ஒரு போதும் தற்கொலை செய்வதில்லை. ஒரு தடவை, தற்கொலை செய்யப்போகிறேன் என எழுதினால் விட்டுப் பார்."

"தற்செயலாகத் தற்கொலையே செய்துவிட்டால்..."

"இப்படியே அஞ்சி அடிமைப்பட்டுக் கொண்டிருப்பாய். நீ எதிர்த்துப் போராடும் காலம் ஒன்று நிட்சயம் வரும், போராடும் துணிவு என்று வருகிறதோ அன்றுதான் விடுபடுவாய்."

அசோகன் கூறியபடியே ஒரு கட்டம் வந்தது.

இஞ்சினியரிங் இறுதிப் பரீட்சை எழுதிவிட்டு வேலை தேடிக்கொண்டிருந்தான். அப்பொழுதே திலகா அவசரக் கடிதம் ஒன்று எழுதியிருந்தாள்.

"உங்கள் தம்பி முரளி பயங்கரவாத இயக்கத்தில் இருப்பதாக அறிந்தேன். வந்து கண்டித்து நிறுத்துங்கள். அல்லது அவனுக்கு மட்டுமல்ல உங்களுக்கும் ஆபத்து வரலாம். உடனே புறப்பட்டு வரவும்."

குடும்பத்து அரசியலில்கூட அவள் நுழைவதை மனோகரன் சிறிதும் விரும்பவில்லை. அவன் பதில் எழுதவுமில்லை. கிராமத்திற்கு போகவுமில்லை.

மற்றொரு கடிதமும் வந்தது. முன்னர் எழுதியது கிடைக்கவில்லையா எனக்கேட்டு மீண்டும் தம்பியார் பற்றிக் குறிப்பிட்டு உடன் வரும்படியும் வரத்தவறின் இனிமேல் எழுதப் போவதில்லை எனவும் தெரிவித்திருந்தாள்

மனோகரன் கிராமத்திற்கே போவதில்லை என உறுதியாக நின்றான். தந்தையார் எழுதியபோதும் போகவில்லை.

திலகாவும் தன் பிடிவாதத்தைக் காட்டி கடிதம் எழுதாது விட்டு விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21

மனோகரனுக்கு கொழும்பில் பெரியதோர் கட்டடக் கம்பனியில் வேலை கிடைத்தது. சம்பளம் மிகக் குறைவு. சரியாக வேலை வாங்கினர்.

இரவில் மிகவும் பிந்தியே வீட்டுக்கு வருவான். ஒரே களைப்பு. படுத்துவிட்டு காலையில் மீண்டும் வேலைக்கு ஓடி விடுவான். சில ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் ஓரளவு ஓய்வு கிடைத்தது.

சிறிது சிறிதாக அக் கம்பனி பற்றிய விபரங்களை அறிய நேரிட்டது. வெளி நாட்டிலிருந்து வந்து அவனைப் போல வேலை செய்யும் இஞ்சினியர்களுக்கு அவனிலும் பார்க்க ஐந்து மடங்கு உயர்வான சம்பளம் வழங்கப்படுவதை அறிந்தான். அதைவிட இருப்பிடம், பிரயாண வசதிகளும் வழங்கப் படுவதையும் தெரிந்து கொண்டான்.

அசோகனிடம் நிலைமையைத் தெரிவித்தான்.

''இந்த நிலைமை இங்கு எல்லாத் துறைகளிலும் நடை பெறுகிறது. தொழிலாளர்களுடன் இணைந்து கம்பெனியின் வேலைகளைப் பாதிக்கத் தக்கதாகப் போராடினால்தான் பலன் கிடைக்கும், வேறு வழி கிடையாது'' என்று அசோகன் கூறிவிட்டான்.

தான் வெளிநாட்டவர்களிலும் பார்க்க அதிக வேலை, பொறுப்பான வேலை செய்வதால் தனக்கு அவர்களது சம்பளம் தர வேண்டும் என கம்பெனிக்கு நேரடியாக முறை யிட்டான். அசோகன் சொன்னது போலவே அவன் அக் கம்பெனியிலிருந்து வேலை நீக்கம் செய்யப் பட்டான். தற்காலிக வேலை ஒப்பந்தத்தில் சேர்ந்ததினால் சட்ட நடவடிக்கை கூட எடுக்க முடியவில்லை.

பின்னர், வேறு சில இடங்களில் முயன்றும் எந்த வேலையும் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் இன்ரவியூவின்போது முன்னர் எங்கே வேலை செய்தாய் என்று வினாவினர். "ஏன் அங்கு கிடைத்த வேலையை விட்டாய்? அது பெரிய இடமாயிற்றே" என்றும் கூறினர்.

"கடிதம் அனுப்புவோம்" என்று தெரிவித்தனர். எப்படியான கடிதம் வரும் என அவனே உடன் உணர்ந்து கொண்டான். முந்தி வேலை செய்த கம்பெனி விசாரணை தனக்குச் சார்பாக இருக்காது என்பதை அவனாலும் எண்ணிப் பார்க்க முடிந்தது.

அசோகனிடம் இந்நிலைமையைக் கூறினான்.

"முதலாளித்துவ அமைப்புக்குள் இருக்கும் ஒற்றுமையைப் பார்த்தாயா? உன்னை 'கலகக்காரன்' எனப் பெயர் சூட்டி விட்டனர். எங்காவது அரசாங்க வேலைக்கு முயற்சி செய். குறைந்த சம்பளத்தை வேலை செய்யாதும் பெறலாம். ஆனால் சிங்களம் கற்கவும் தயாராயிருக்க வேண்டும்."

அசோகன் கேலியாக மாற்று வழியும் கூறினான்.

வீட்டுக்கு தன் நிலைமையை மனோகரன் எழுதவில்லை. பணக் கஷ்டமும் ஏற்படத் தொடங்கி விட்டது.

முன் வேலையில் சேர்ந்த வேளை முதல் மாதச் சம்பளத்தை பிள்ளையார் கோவிலில் அபிஷேகம் செய்ய தந்தைக்கு அனுப்பியிருந்தான். அப்பா எதிர்பார்த்தது போல பலன் கிடைக்கவில்லை. ஆறு மாதத்தில் வேலையே போய் விட்டது. அபிஷேகத்திற்காக அனுப்பிய பணம் இருந்திருப்பின் இரண்டு மாதம் சமாளித்திருக்கலாம் என எண்ணும் நிலை ஏற்பட்டது.

இவ்வளவு பணம் செலவு செய்த பின்னரும், தந்தையிடம் மீண்டும் பணத்திற்கு எழுதுவதற்குத் துணிவு ஏற்படவில்லை. நண்பர்களிடம் கடன் வாங்கி, செலவுகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைத்துச் சமாளித்தான். எப்படியும் வேலை கிடைத்ததும் திருப்பிக் கொடுத்து விடலாம் என்ற நம்பிக்கை இருந்தது.

இவ்வேளையிலேயே திலகாவின் திருமண அழைப்பிதழ் வந்தது. அவன் அதிர்ச்சியடைந்தான்.

'நான் வேண்டியபடி நீ வரவில்லை. தற்கொலை செய்து உன்னைப் பழி வாங்க விரும்பவில்லை. திருமணம் செய்து பழி வாங்குகிறேன்.' என்பதுபோல அந்த அழைப் பிதழை அவனே விமர்சித்துக் கொண்டான்.

அசோகனுக்கே செய்தியைச் சொல்லாது சிகரெட்டை ஊதிக்கொண்டு நகரமெல்லாம் அலைந்தான். சாப்பிடவோ, தூங்கவோ முடியவில்லை. கடற்கரையில் ஓரிரவு தனிமை யாக இருந்தபோது விம்மி விம்மி அழுதான். தாங்கமுடியாத துன்பத்தில் தற்கொலை நினைவுகூட ஏற்பட்டது.

திலகா தன்னை ஏமாற்றி விட்டாள், வஞ்சம் தீர்க் கிறாள் எனவும் எண்ணிக்கொண்டான்.

திருமணத்தின் முன்னர் அவளின் காதல் பற்றி மாப் பிள்ளைப் பகுதியார் அறிந்து கொள்ளவேண்டும். திருமணத்தை குழப்பிவிட வேண்டும் என்று கூட அவன் மனம் ஆத்திரப்பட்டது. திருமண நாள் அன்று தன் தோல்வியை அவளிடம் மறைக்க தந்தி மட்டும் அனுப்பி னான்.

'திருமண வாழ்வில் இன்பம் பொங்க இருவருக்கும் என் நல்வாழ்த்துகள்—மாலதி'

முன்னர் தோழியாகக் கடிதம் எழுதிய பெயரிலேயே தந்தியை அனுப்பினான்.

நாட்கள் கழிய சிறிது சிறிதாக மனம் தேறிவந்தது.

நல்ல வேளை. அசோகன் கூறியதுபோல அவளை மணந்தால் நிச்சயம் என்னைத் தன் அடிமையாக்கி இருப் பாள். அல்லது தற்கொலை செய்வேன், என அடிக்கடி அடம்பிடித்து ஒருநாள் என் மானத்தை வாங்கி, எனக்குக் 'கொலைக்காரன்' என்ற பட்டமும் சூட்டியிருப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவாறு தனக்குத்தானே ஆறுதல் கூறித் தேற்றிக் கொண்டான்.

பின்னர் சில மாதங்களாக அசோகனின் ஆலோசனைப் படி வெளிநாட்டு வேலைக்காக முயற்சி செய்து கொண்டிருந் தான் அங்கும் ஏஜென்சிமார் இருபதாயிரம் ரூபா வேண்டும் எனப் பணம் கேட்டனர். தந்தையிடம் சென்று பணம் கேட்டு அவருக்கு மேலும் தொல்லைதர அவன் விரும்பவில்லை.

அவ்வேளையே வெளிநாட்டாரே நேரில் வந்து இன்ர வியூ நடத்தும் இடத்தில் வாய்ப்புக்கிட்டலாம் என அந்த ஐந்து நட்சத்திர ஓட்டலுக்குச் சென்றிருந்தான்.

# 22

திலகா தன் இதயத்தில் ஏற்படுத்திய காயத்திற்கு வசந்தியின் உறவு புண்ணை ஆற்றும் மருந்தாக இருப்பதாக மனோகரன் உணர்ந்தான். ஆயினும் சூடு கண்ட பூனை போல மிகவும் விழிப்புடனேயே வசந்தியுடன் பழகி வந்தான்.

சில மாதப் பழக்கத்தில் அவள் திலகாவிற்கு முற்றும் மாறான பெண்ணாகஇருப்பதைக் கண்டு வியப்படைந்தான். அவனிடமிருந்து அவள் எந்த உதவியும் வேண்டியதில்லை.

'நான் பகல் பூராவும் சும்மாவே இருக்கிறேன். என்ன உதவி வேண்டினும் செய்யலாம்''

பல தடவை கூறிய போதும் அவள் என்றும் எவ் உதவி யும் அவனிடம் வேண்டியதில்லை. மாறாக அவனுக்கு எவ்வித உதவிகள் தேவை என்றே கேட்டு வந்தாள்.

வசந்தியை கடற்கரை ஓர பஸ் நிலையத்தில் காத்து நிற்க விடுவது நல்லதல்ல என்ற நினைவில் அவன் எப் பொழுதும் குறிப்பிட்ட வேளைக்கு முன்னதாகவே வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவான். ஒரு தடவை வெளிநாட்டுப் பிரமுகர் ஒருவரின் வருகையை ஒட்டி பஸ்கள் யாவும் வழிதிருப்பப் பட்டு மாநகர சபை மண்டபம் அருகே தேங்கி விட்டன. அரை மணி நேரம் பிந்தி கடற்கரைக்கு வந்த போதும் அவள் அவன்மேல் குற்றம் சுமத்தவில்லை. அவள் கேட்காத போதும் அவன் காரணத்தைக் கூறினான்.

''அப்படித்தான் நான் எண்ணினேன்.'' வசந்தி நிலைமையைப் புரிந்தவளாகக் கூறினாள்.

''தாமதித்ததற்காக என்மேல் கோபம் வரவில்லையா?''

''நான் எத்தனை தடவை பிந்தி வந்தேன். நீங்கள் எத்தனை பொறுமைசாலி. என்னை நீங்கள் கோபித்ததில்லையே...''

எப்பொழுதும் அவனை உயர்வாக வைத்தே பேசுவாள்.

சேலை உடுத்தி வருவது அவனுக்குப் பிடிக்கும் என்பதை அவள் நன்கு அறிந்திருந்தாள். எதிர்பாராது அவள் சட்டை அணிந்து வரநேரிடினும் அவனைக் கண்டதும் தன் உடைக்காக மன்னிப்புக் கோருவாள்.

''இதிலென்ன, இந்த உடையிலும் வசந்தி அழகிதான்''

''உதட்டால் பேசுகிறீர்கள். அடிமனதில் இதெல்லாம் பிடிக்காது என்பதை அறிவேன்.''

''நான் அத்தனை பத்தாம் பசலியல்ல''

''உங்களுக்கு தமிழ்மொழி, பண்பாடு, கலாச்சாரங்களின் மேல் அதிக பக்தி இருக்கிறது என்பதை அறிவேன். அதில் ஒரு தவறுமில்லை. ஆனால் அமெரிக்கப் பணமும் மட்டமான கலாச்சாரமும் சில ஆண்டுகளில் மிக வேகமாகப் பயங்கரமாகப் பரவி வருகிறதைப் பார்த்திருப்பீர்கள். நாங்கள் அதிலிருந்து விடுபட முடியாமல் அந்த ஆற்றோடு போய்க் கொண்டிருக்கிறோம்.''

''சிங்களவர்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தொடர முன்னரே அவள் மேலும் தொடர்ந்தாள்.

''சிங்களவர் எங்களிலும் வேகமாக அமெரிக்க கலாச்சாரத்திற்கு அடிமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை அறிந்து அதிலிருந்து விடுபடுவதற்குப் போராடுவதை விட்டு தமிழர்கள் மேல் பகையைத் திருப்பித் கொண்டிருக்கிறார்கள்.''

மனோகரன் அவளது கருத்துக்களைக் கேட்டு ஆச்சரியமடைந்தான். இந்த விஷயங்கள் பற்றி அவள் எதையும் உணர்ந்திருக்க மாட்டாள் என அவன் எண்ணியிருந்தது தவறாகப் போய் விட்டதைக் கண்டான். அசோகன் போல் இவள் எவ்வாறு உண்மையைக் கண்டு பேச முடிந்தது. ஆச்சரியமடைந்தவனாக அவளைப் பார்த்தான்

''வசந்தி, இந்த உண்மைகளை எல்லாம் யார் உனக்குச் சொல்லித் தந்தது? எங்கே கற்றாய்?''

''இந்த ஒட்டலே இவற்றையெல்லாம் நாள்தோறும் கற்பித்துக் கொண்டிருக்கிறது. டாலரின் பெயரால் அங்கு நடைபெறும் அசிங்கங்களைப் பார்த்துக் கொண்டிருக்கவே முடியாது.''

''அப்படியெல்லாம் என்ன நடக்கிறது?''

''வெளியே பௌத்த கலாச்சாரம், சிங்கள நாகரிகம் என்று உயர்வாக ஆரவாரிக்கிறார்கள். அவர்களே இந்த ஒட்டல்களைப் பெருக்கி வெளிநாட்டாரோடு சேர்ந்து கும்மாளமடிக்கின்றனர்.''

இவர்களைத் தரகு முதலாளிகள் என்று அசோகன் அடிக்கடி கூறுவது அவன் நினைவில் வந்தது. அசோகன், தான் கற்ற சித்தாந்தத்தை வைத்துக் கூறுகிறான், இவள் தான் கண்டு வெறுக்கும் நடைமுறையை வைத்துச் சொல்லுகிறாள். இரண்டும் ஒன்றுபடுவதைக் கண்டு ஏதோ உண்மையைத் தேடிப் பிடித்தவன் போல உள்ளூற புத்துணர்வு பெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தரகு முதலாளிகள் பண்டங்களை மட்டும் லாபத்திற் காகத் திணிப்பதில்லை. தமது இத்து வரும் கலாச்சாரங் களையும் திணித்து நாட்டை சீர்குலைத்து விடுகின்றனர்''— அசோகன் அடிக்கடி கூறுவது அவன் நினைவில் வந்தது.

''டி.வி-யில் தானே உங்கள் ஓட்டல் உணவுகளை யெல்லாம் காட்டிப் பிரமாதப்படுத்துகிறார்களே. அவை யெல்லாம் அத்தனை சுவையானவையா?''

''எல்லாம் மேல்நாட்டு உணவு வகைகளே. இங்குள்ள புதிய பணக்காரருக்கும் விற்பதற்காக விளம்பரப்படுத்து கிறார்கள். இவை ஏழைகளுக்கென்ன எங்கள் போன்ற வருக்கே எட்டாதவை. ஆனால் எல்லோரது ஆசையையும் தூண்டி விடுகிறார்கள். அமெரிக்கக் கடனில் இங்கு புதிய சந்தையை அரசு ஆரம்பித்துள்ளது. இதனால் புதிய சந்தை நாகரிகமே வளர்கிறது. அதனால் ஏற்படும் விளைவுகளைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.''

''உன்னைப் போன்ற ஆயிரக்கணக்கானவர்களுக்கு இந்த ஓட்டல்களினால் நல்ல சம்பளத்தோடு வேலை கிடைக்கவில்லையா?''

''இலங்கையிலுள்ள ஓட்டல்களில் மொத்தமாக ஆறா யிரம் பேர் வரையிலேயே ஓரளவு வசதியாக வேலை பெற்றி ருக்கின்றனர். அதற்காக இந்த நாட்டின் பண்பாடு, கலாச்சாரங்களை சிங்களவர் துறந்து மேல்நாட்டவர்களது கலாச்சாரங்களை புகுத்த வேண்டுமா?''

''ஏராளமான வெளிநாட்டுச் செலாவணியையும் ஓட்டல்கள்தான் பெற்றுத் தருவதாகக் கூறுகிறார்கள்.''

பத்திரிகைகளில் வழமையாக அரசினர் கூறும் பிரச்சாரங் களுக்கு அவளது பதிலை அறிவதற்காகக் கேட்டான்.

''அது கூடத் தவறு. இந்த ஓட்டல்களில் உள்ள தளவாடங்கள், விரிப்புகள், அலங்காரப் பொருள்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுகள், ஓடும் வாகனங்கள் எல்லாவற்றையும் கணக்கிட்டுப் பார்த்தால் எழுபத்தைந்து சதவீதமானவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுபவையே. உல்லாசப் பயணிகளால் கிடைக்கும் வெளிநாட்டுப் பணத்தில் பெரும் பகுதி இவற்றை வாங்குவதற்கே செலவாகிறது. இங்கு கிடைப்பதைவிட மட்டமான பொருட்களும் இறக்குமதி செய்யப்படுவதுமே வேதனைப்பட வேண்டியது''

'இவற்றையெல்லாம் நீ எப்படி அறிந்து கொண்டாய்?'

''ஓட்டல்களைப் பற்றி ஆங்காங்கே வரும் கட்டுரைகளையெல்லாம் நான் தவறாது படிக்கிறேன். பலவற்றை நேரிலேயே காண்கிறேன். இங்கே இடையிடை நடைபெறும் மகாநாடுகளில் ஏற்படும் விவாதங்களையும் கேட்டிருக்கிறேன். பெரும்பாலும் கம்யூனிஸ்டுகள் இவற்றை எதிர்ப்பதைப் பார்த்தேன். நியாயம் அவர்கள் பக்கமே இருக்கிறது என்பது உண்மையே.''

அடங்கிய குரலிலே வசந்தி கூறினாள்.

என்னதான் ஓட்டல்கள் பற்றி இழிவாகக் கூறியபோதும் தனக்கு வேலை கிடைத்த பின்னர் ஓட்டல் வேலையை விட்டு விடப் போவதாக வசந்தி அடிக்கடி கூறுவதை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

# 23

வசந்தி வாரத்தில் இரண்டு தடவையாவது மனோகரனைச் சந்திக்கத் தவற மாட்டாள்.

எந்த விஷயம் பற்றியும் மனந்திறந்து விரிவாக அவனுடன் பேசும் வசந்தி ஒரு சில அலுவல்களில் புதிராக இருப்பது அவனுக்கு வியப்பளித்தது.

தாயையும் பாட்டியையும் பற்றி விரிவாகக் கூறிவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் குடும்ப வரலாறு எல்லாம் விபரமாகச் சொல்லி விட்டாள். தாயின் நுகர்பண்ட ஆசையே தன் கல்வியைத் தடுத்து ஓட்டல் தொழிலுக்கு இழுத்தது என்பதையும் அறிவித்து விட்டாள்.

இவற்றால் வசந்தியின் நெஞ்சில் தாய் மேல் ஏற் பட்டுள்ள வெறுப்பை அவன் பலமுறை கேட்டு ஊகித்துக் கொண்டான்.

என்ன இருப்பினும் வசந்தி தன் வீட்டுக்கு அவனை அழைக்க விரும்பவில்லை. இத்தனை துணிவான பெண் தாய்க்கு ஏன் அஞ்ச வேண்டும்?

வீட்டுக்கு அவன் டெலிபோன் செய்வதையும் வசந்தி அவ்வளவாக விரும்பவில்லை. மிக அவசரமாயின் அதி காலை ஏழு மணிக்கும் எழரைக்குமிடையில் மட்டும் டெலி போன் செய்யும்படி கூறியிருந்தாள்.

ஓட்டலில் வந்து அவன் சந்திப்பதையும் அங்கு டெலி போன் செய்வதையும் அவள் சிறிதும் விரும்பவில்லை.

பொலிசாரிடம் அகப்பட்ட நிகழ்ச்சியின் பின் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு மணித்தியாலத்திற்குள் வரத்தவறினால் அவனைக் காத்திருக்க வேண்டாம், மறுநாள் தவறாது வரும்படியும் சொல்லி வைத்தாள்.

சில வேளைகளில் வசந்தி மிகவும் சோர்வுடன் எதிலும் ஆர்வமற்றவளாக வருவதுண்டு. அவ்வேளையும் மனோகர னைத் திருப்திபடுத்த அவள் நடிக்க முயல்வதை அவன் கவனித்தான்.

''ஏன், வசந்தி இன்று சோர்வாயிருக்கிறாய்?''

''அந்த வெள்ளை நாய்களுக்கு பல்லைக் காட்டி சலாம் போடுவதிலேயே அலுப்பு ஏற்படாமலா விட்டுவிடும்'' அசோகன் அடிக்கடி வெள்ளையர்களை ஏகாதிபத்தி யங்களின் காவல் நாய்கள் என்று கூறுவது அவன் நினைவில் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தியை அசோகனுக்கு அறிமுகப்படுத்தும் காலம் வந்து விட்டதாக மனோகரன் எண்ணினான்.

தன் நண்பர்கள் பற்றிப் பேசும்போது அசோகனைப் பல தடவை அவளுக்கு அறிமுகப்படுத்திப் பேசியிருக்கிறான். நேரில் தற்போது அறிமுகப்படுத்துவதை அவள் விரும்ப வில்லை என்பதையும் அவன் அறிவான்.

''நண்பன் அசோகனை ஒரு நாளைக்கு நேரில் அறிமுகப்படுத்த வேண்டும்.''

''நிச்சயமாக அவர்களையெல்லாம் நான் பார்க்கவே விரும்புவேன். ஆனாலும் இன்னும் ஓரிரு மாதம் கழியட்டும். இப்ப என்ன அவசரம்.''

எதையும் நயமாகவும் பிறரைப் புண்படுத்தாமலும் அவள் பேசும் பண்பும் அவனை மிகவும் கவர்ந்தது

மனோகரனுக்குச் செலவிற்குப் பணமில்லாதிருப்பதை அவள் அறிந்து கொண்டாள். அவன் மறுத்த போதும் அவள் வற்புறுத்திப் பணம் கொடுத்து வந்தாள்.

''உங்களுக்கு வேலை கிடைத்ததும் உங்கள் உழைப்பில் தானே நான் வாழப் போகிறேன். பிறகு நான் வட்டி குட்டி யோடு பறித்தெடுப்பேன்.''

வசந்தி சிரித்துக் கொண்டே அவனது பாக்கெட்டுள் பணத்தை வைத்து விடுவாள்.

புது வருடப் பிறப்பை ஒட்டி அவனுக்குப் பரிசு வழங்க ஒரு புதிய வழியைக் கையாண்டாள். அவனிடம் போதிய உடைகள் இல்லாதபோதும் தன்னிடமிருந்து உடைகளை அன்பளிப்பாகப் பெற விரும்ப மாட்டான் என்பதை அவள் நன்கு அறிவாள்.

அன்று மாலை கடற்கரைச் சுற்றுலா, பேச்சுவார்த்தை கள் முடிந்து பஸ் நிலையம் வந்து விடைபெறும் போது வசந்தி கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு குவிஸ் கேட்க வேண்டுமென நினைத்து வந்தேன் பதில் கூறுவீர்களா?"

"சரி கேட்கலாமே."

'ஒரு பொருளை எவராவது உங்களிடம் தந்தால் ஆங்கிலத்தில் என்ன வார்த்தை கூறுவீர்கள்!"

ஏதாவது பொடி வைத்திருப்பாளா என்ற சந்தேகம் ஒரு கணம் எழுந்தபோதும் அவன் வழமையாக எவரும் கூறக் கூடிய பதிலையே கூறினான்.

"தாங்யு"

"இந்தப் பார்சலைப் பிடியுங்கள்."

"இது என்ன?"

"ஏன் தாங்யு சொல்லவில்லை? உடனே சொல்லுங் கள்."

"தாங்யு"

அவள் சிரித்துக் கொண்டே பஸ்ஸில் ஏறிக் கொண் டாள்

பார்சலைக் கையில் வைத்தவாறு திகைத்துப் போய், இனிய உணர்வுகளில் சில கணங்கள் ஆழ்ந்து போய் நின்றான் மனோகரன்.

## 24

மனோகரன் பத்திரிகைகளில் வரும் வேலை காலி பற்றிய விளம்பரங்களையெல்லாம் நாள்தோறும் கவனித்து வந்தான். சிவில் இஞ்சினியர் பதவிக்கு பெரும்பாலும் முன்னர் முயன்று தோல்வியுற்ற கம்பனிகளே இடையிடை விளம்பரங்களை வெளியிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் கொழும்பிலேயே பணியாற்றும் வேலைக்கே விண்ணப்பிக்க வேண்டும் அவ் வேண்டுகோளை வசந்தி வற்புறுத்தி அடிக்கடி நினைவூட்டுவாள்.

தமிழ் இளைஞர்கள் வன்முறை அரசு யந்திரத்திற் கெதிராக நடத்தும் ஆயுதப் போராட்டங்களைத் தொடர்ந்து சிங்களவரிடம் இனவெறி வளர்ந்து வருவது பத்திரிகைச் செய்திகள் மூலம் நன்கு தெரிந்தது. சிங்களப் பகுதியில் வேலை பெறுவதினால் உள்ள ஆபத்துகளைப் பற்றியும் அவளே கூறி வந்தாள்.

''பத்திரிகைகளில் அடிக்கடி விளம்பரம் பார்க்கிறேனே. நீங்கள் அவற்றில் விரும்பியவற்றிற்கு விண்ணப்பித்துவிட்டு எனக்குத் தெரிவிக்கலாமே.''

வசந்தி அன்று கேட்டிருந்தாள்.

எல்லா இடங்களிலும் முன்னர் விண்ணப்பித்து, தான் பெற்ற அனுபவங்களை மனோகரன் விரிவாகக் கூறினான்.

இந்தப் பிரச்னை பற்றி அவன் முன்னரே கூறத்தவறியது வசந்திக்கு வருத்தந்தந்தது. சில மாத காலத்தை வீணாக்கியதற்கு மனோகரன் மேல் உள்ளூற கோபமும் ஏற்பட்டது. ஆயினும் அதை வெளிப்படுத்தாது சொன்னாள்.

''பரவாயில்லை மனோ, மற்றொரு தடவை உங்களுக்குப் பிடித்த எந்த இடத்திற்கென்றாலும் விண்ணப்பம் அனுப்பி விட்டு ஒரு பிரதியை என்னிடம் தாருங்கள்.''

பல புதிய ஓட்டல்கள் கட்டுவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்ட பிரபல கம்பனி ஒன்றிற்கு மீண்டும் விண்ணப்பம் அனுப்பினான். இஞ்சினியரிங் பரீட்சை முடிவுகள் வெளிவந்த வேளையே பத்திரிகையில் பெரிய விளம்பரமும் வந்தது. பலத்த போட்டியிருக்குமென்று தெரிந்த போதும் வசந்தியைத் திருப்திப்படுத்த விண்ணப்பப் பிரதியை அவளிடம் கொடுத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ரவியூவிற்கு மனோகரனுக்கும் அழைப்பு வந்தது. இன்ரவியூ நாளின் முதன் நாளிரவு கடற்கரையில் வசந்தி யின் வேண்டுகோளின்படி வந்திருந்தான்.

''வேலை கிடைத்ததும் என்னை மறந்து விடமாட்டீர் களே?''

''அத்தனை சந்தேகமா?''

''வேலை கிடைப்பதற்காக நான் ஒரு பரிசு தரப்போ கிறேன்.''

''அதற்கு தாங்யு சொல்ல மாட்டேன்''

முன்னர் வருடப்பிறப்பின்போது அவள் திணித்த பரிசை நினைவூட்டுவதாக அவன் சிரித்துக்கொண்டே கூறினான்.

''தாங்யு வேண்டாம். அந்தப் பரிசைப் பத்து மடங்காக வேலை கிடைத்ததும் திரும்பத் தரவேண்டும்.''

''புலியைச் சுட முன்னர் தோலுக்கு விலையா?''

''சுட்டாச்சு என்றே வைத்துக் கொள்ளுங்களேன்''

''சரி பரிசைத் தரலாம்''

''கண்களை மூடிக்கொண்டு கையை நீட்டுங்கள்''

''சரி''

அப்படியே செய்துகொண்டு நின்றான்.

மனோகரன் எதிர்பாராதபடி 'பளிச்'சென்று அவனின் உதடுகளில் முத்தமிட்டாள்.

# 25

மறுநாள் மனோகரன் இன்ரவியூவுக்குப் போகும் போதும் வசந்தியின் செயல் அவனை மெய்மறக்கச் செய்து கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ரவியூ நடத்திய அதிகாரிகள் மூவரில் இருவர், முன்னர் ஒரு தடவை அவன் சென்றபோது இருந்தவர்களே. அவ் இருவரும் அவனை இனங்கண்டு கொண்டனர் முந்திய தடவை திரும்பத்திரும்ப பழைய கம்பெனியை விட்ட காரணங்கள் பற்றித் துளைத்துக் கேட்டுக்கொண்டே இருந்தவர்கள் தற்போது அவைபற்றி எதுவும் பேசவில்லை.

மனோகரனுக்குக் கேட்காத விதமாக அவனது விண்ணப்பம் அடங்கிய பைலில் ஏதோ குறிப்பிட்டிருந்ததை மூவரும் குசு குசுப் பேச்சோடு பார்வையிட்டனர்.

''உங்களுக்கு முன்னரேயே கட்டிட வேலைகளில் அனுபவமிருக்கிறது''

''ஆமாம்''

''வேலை தரின் அதிக அவகாசமின்றி உடனே பொறுப்பேற்க முடியுமா?''

''ஆமாம்''

அத்துடன் யாவும் முடிந்துவிட்டது. வேலைக்காகத் தன்னுடைய பெயர் எவரோ பெரிய அதிகாரியால் சிபார்சு செய்யப் பட்டிருப்பதையும் அவனால் ஊகிக்க முடிந்தது. அதனால் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை, இன்ரவியூ முடிந்ததும் பலமாக அவன் மனதில் ஏற்பட்டது.

இன்ரவியூவில் நிகழ்ந்தவை பற்றி வசந்திக்கு சொல்லிவிட வேண்டும் என்ற ஆவல் அவனை உந்தியது. மறுநாட் காலை முதல் வேலையாக அவளுக்கு டெலிபோன் செய்தான்.

வேறு ஒரு குரலே டெலிபோனில் ஒலித்தது. தாயாக இருக்க வேண்டும் என ஊகித்துக்கொண்டான்.

''மிஸ் கதிர்காமர்''

'வேலைக்குப் போய்விட்டாள்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலையில் வேலைக்குச் சென்ற செய்தி அவனுக்கு வியப்பாயிருந்தது. வழமையான வேலை நேரங்களில் மாறுதல் ஏதாவது செய்துவிட்டார்களா? அவள் ஏன் இதை முன் சொல்லவில்லை? வினாக்கள் அவன் மனதில் எழுந்தன.

அவன் வசந்திக்கு டெலிபோன் செய்யவேண்டி ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் மிகக் குறைவே. இன்ரவியூவிற்குச் செல்லும் முதல் நாள் வசந்தி பரிசு பற்றிய வேடிக்கை விளையாட்டை இறுதி நேரத்தில் தொடங்கியதால் புறப்படும் வேளை அடுத்த தடவை சந்திக்கும் நேரம், காலத்தை முடிவு செய்ய வில்லை. இப்படியான தவறு முன்னரும் ஓரிரு தடவை ஏற்பட்டது? இரண்டு மூன்று நாள் கழித்து அவன் போன் செய்து மறு சந்திப்பைத் தீர்மானித்துக் கொண்டனர்.

# 26

மனோகரனுக்கு மறுநாட் காலை டெலிபோன் செய்ய வாய்ப்புக் கிட்டவில்லை. அதிகாலையில் மூர்த்தி என்ற வழக்கறிஞரை வெள்ளவத்தையில் சந்திக்க வேண்டியிருந் தது. இவரே பெரும்பாலான தமிழீழப் போராளிகளுக்காக நீதிமன்றங்களில் வாதாடி வந்தார். அவரைக் கண்டு விசாரிப்பின் தன் நெருங்கிய நண்பனாகிய நாதனைப் பற்றிய விபரங்களை அறிய முடியும் என அசோகனும் வேறு நண்பர்களும் கூறியிருந்தனர். வீட்டு முகவரியையும் அசோகனே அறிந்து கூறியிருந்தான்.

அதிகாலையில் போனாலே அவரைக் காணலாம். எல்லோருக்கும் உதவும் நல்ல மனிதர் என்று அறிந்தேன்' என அசோகனே சொல்லியிருந்தான்.

நாதனின் முழுப் பெயர் நல்லநாதன். இருவரும் ஒரே கல்லூரியிலேயே கற்றனர். உயர்தர வகுப்பில் தேறிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் பல்கலைக் கழக நுழைவு அவனுக்குக் கிட்ட வில்லை. பரீட்சை எழுதியவர்களில் நூற்றுக்கு மூன்று நான்கு பேருக்கு மட்டுமே நுழைவு கிடைத்தது. பல்கலைக் கழகங்களில் அதற்கு மேலாக வெற்றிடங்கள் கிடையாது. நாதன் படிப்பிலும் விவேகமானவன். என்ன காரியமாயினும் முன்னோடியாக நிற்பான். பிறருக்கு உதவி செய்யத் தயங்க மாட்டான். எவரின் எச்செயலாவது அநீதி என அவனுக்குப் பட்டால் அதைச் சிறிதும் தயங்காது எதிர்ப்பான். மிக விரை வில் உணர்ச்சி வசப்பட்டு விடுவான்.

மனோகரன் கொழும்பில் முதலாண்டு படித்துக் கொண் டிருக்கும் போது ஒருதடவை அவனிடம் நாதன் வந்திருந் தான். மாலையில் மனோகரனையும் அழைத்துக் கொண்டு செட்டித் தெருவிலிருந்த சந்தொன்றின் வழியாகச் சென்று மரப்படிகளில் ஏறி, மாடி வராந்தாவில் அவனை நிற்கும்படி கூறிவிட்டு ஒருவனது அறையை விசாரித்தான் வந்த வனோடு திடீரென காரசாரமான விவாதம் நடந்தது. பின்னர் நாதனின் குரல் தெளிவாகக் கேட்டது:

''நீ கலியாணம் செய்வதாக வாக்குக் கொடுத்தாய், இப்பொழுது ஏன் ஏமாற்றப் பார்க்கிறாய்? இரண்டில் ஒரு முடிவை இப்பொழுது சொல்லு''

''அது ஆலோசிக்க வேண்டும்''

''உது தட்டிக்கழிக்கக் கூறும் அரசியல் வார்த்தை. எனக்கு இப்பொழுது முடிவு தெரிய வேண்டும்''

அவன் மௌனமாக நின்றான்.

''ஓம் அல்லது இல்லை என்று ஒரு முடிவு சொல்லு''

''இப்பொழுது எப்படிச் சொல்வது?''

''சொல்லலாம் சொல்லு. அல்லது உதை போட்டுக் கேட்க வேணுமா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனமாக நின்ற அவனைத் தள்ளத் தொடங்கினான். நாதனின் நிலையைக் கண்டு மனோகரன் ஓடிச் சென்று தடுத்தான்.

''சொல்லடா சொல்லு.''

மீண்டும் முன் சென்ற நாதனை மனோகரன் தடுத்தான்.

''முகத்தைப் பார். அவன் முடியாது என்றுதானே சொல்லுகிறான்.''

''அப்படியாடா, நாயே நீ ஒரு மனுஷனா, மிருகம்.''

நாதன் கூறிக் கொண்டே அவனது மூஞ்சியில் காறித் துப்பி விட்டான்,

மனோகரன் நாதனை படிக்கட்டு வரை இழுக்க, அந்த நபர் சுருண்ட புழுப்போல முகம் நாண, துப்பலைத் துடைந்தபடி உள்ளே சென்றான்.

நாதனின் உணர்ச்சிகள் அடங்க சில நிமிடங்கள் ஆயின. விஷயம் முழுவதும் அறியாத மனோகரனுக்கு நாதன் சுருக்கமாக நடந்ததைக் கூறினான்.

முப்பது வயதான நாதனின் தூரத்து உறவுப் பெண்ணை அந்த நபர் ரெயில் வண்டியில் கண்டு கதைத்துத் திருமணம் செய்வதாக வாக்களித்தானாம். பின்னர் காரணம் எதுவும் கூறாது தட்டிக் கழிக்கத் தொடங்கி விட்டானாம். எவரும் அறியாது அந்தப் பெண் நாதனிடம் இந்த விஷயத்தைச் சொல்லி அழுது, அவனிடமிருந்து ஒரு முடிவு எடுத்து வரும்படி சொன்னாளாம்,

அன்று நடந்த நாடகத்தை மனோகரனால் என்றும் மறக்க முடியவில்லை.

இயக்கத்தின் பல நடவடிக்கைகளில் நாதன் பங்கு பற்றியிருந்தான் என்று தற்போது கூறப்பட்டது. தலைமறைவாக இருந்த காலத்திலும் ஒருநாள் இரவு மனோகரனோடு வந்து தங்கிச் சென்றான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் அவன் கைதாகி பனா கொடை இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது. அவ்வேளை, தலைமறைவான காலத்தில் நாதன் பயன்படுத்திய வேறும் மூன்று புனை பெயர்கள் குறிப்பிடப்பிட்டிருந்தன.

அவன் மேலும், மோகன் என்றோர் மற்றொரு நபர் மேலும் சுமத்தப்பட்டிருந்த குற்றம் இரு சிங்கள இராணுவத்தினரைக் கொலை செய்து அவர்களது யந்திரத் துப்பாக்கிகளையும் பறித்தெடுத்ததாகும்.

அந்த இரண்டு சிங்கள இராணுவத்தினரும் அவனது இயக்கத்தைச் சார்ந்த தோழர் சிலரை மிக மோசமாக ஈவிரக்கமின்றிச் சித்திரவதை செய்தார்களாம். ஒரு தோழன் செவிடாகி விட்டதாகவும் மற்றொருவன் மனநோயாளியாகி விட்டதாகவும் கதை அடிபட்டது. வதை செய்பவர்களைப் பழி வாங்குவது அவன் சார்ந்த இயக்கத்தின் ஒரு கோட்பாடாயிருந்தது.

வழக்கறிஞர் மூர்த்தியிடம் அன்று காலை சென்று மனோகரன் தன்னை அறிமுகப்படுத்தினான் அவர் மிக எளிமையாக ஒரு வீட்டில் தனி அறையில் வாழ்ந்து வந்தார். இயக்கத்தைச் சார்ந்தவர்கள் எவரிடமும் பணம் பெறாது லட்சிய நோக்குடன் வழக்குகளைத் திறமையாக நடத்தி வந்தார். அவரது பெயர் பெரும்பாலும் நாள்தோறும் பத்திரிகைகளில் வெளியாகிக் கொண்டிருந்தது.

பொலீசார், இராணுவத்தினரின் பகையைத் தேடிக் கொண்டபோதும் துணிச்சலுடன் இளைஞர்களுக்காக நீதி மன்றத்தில் போராடி வந்தார். நாதன் தற்போது காயங்கள் ஆறி நலமாயுள்ளான் என்று ஆறுதல் கூறிவிட்டு மூர்த்தி மேலும் தொடர்ந்தார் :

''நாதன், மோகன் இருவரும் கொலை செய்தார்கள் என்பதற்கு சாட்சிகளில்லை. மோகன் ஒரு அப்பாவி. அவனை வதை செய்து இருவரும் செய்ததாக வாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலத்தில் கையெழுத்து வாங்கி விட்டார்கள். இதை வைத்துக் கொண்டே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றவாளி ஆக்கப் பார்க்கிறார்கள். விசாரணைக்கு வர சில மாதங்கள் ஆகலாம். அப்போது போராடிப் பார்ப்போம். தற்போதைய நீதிமன்றத் தீர்ப்புகளைப் பத்திரிகைகளில் படித்திருப்பீர்,''

மூர்த்தி நடுநிலையாகவே கூறினார். வெற்றி எதையும் உறுதியாகக் கூறவில்லை. நீதிமன்றத்தில் அநீதிகளை அம்பலப்படுத்துவதே அவரின் நோக்கமாயிருந்தது.

''இராணுவ முகாமில் ஒரு தடவை சென்று நாதனைப் பார்க்க உதவுவீர்களா?''

''மிகவும் சிரமம், நாங்கள் வழக்கு விஷயமாகப் பார்ப்பதற்கு எத்தனையோ கட்டுப்பாடுகள்.''

''உயிரான நண்பனை ஒரு தடவை பார்க்க ஆசையாயிருக்கிறது. முடிந்தால் உதவி செய்யுங்கள். மற்றொரு தடவை வந்து பார்க்கிறேன்''

நன்றி கூறிவிட்டு மனோகரன் கதவண்டை நடந்தான். மூர்த்தி மீண்டும் அவனை அழைத்துச் சொன்னார் :

''எதற்கும் முயற்சி செய்வோம். முடிந்தால் சரி. இல்லாவிட்டால் என்ன செய்வது? ஒரு வழி இருக்கிறது. நாளைக் காலை நான் இராணுவ முகாமிற்கு தற்போது நடைபெறும் வழக்கு அலுவலாக ஒருவரைப் பார்க்கப் போகிறேன் நீர் இதே வேளை வாரும். வரும்போது வி எஸ். ஓ. சாராயப்புட்டி ஒன்று கொண்டு வாரும். அங்கே குடிகாரக் காப்டன் ஒருத்தன் இருக்கிறான். பெரும்பாலும் அவன் உதவுவான்.''

மனோகரன் மகிழ்ச்சியோடு திரும்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27

மறுநாட் காலை மூர்த்தியுடன் இராணுவ முகாமிற்கு மனோகரனும் சென்றான். மூர்த்தியின் திட்டம் வெற்றி பெற்றது. மூர்த்தியின் உதவியாளராக அவனும் கைதிகளைப் பார்க்க அனுமதிக்கப்பட்டான்.

நாதனைக் கண்டதும் மனோகரனின் கண்கள் கலங்கின. நாதன் எவ்வித கலக்கத்தையும் காட்டவில்லை. உடலில் மட்டும் சிறிது வாட்டம் இருந்தது. மற்றும் படி வீரனாகவே காணப்பட்டான்.

அவர்களைக் கண்காணிக்க ஒரு சார்ஜனும் இரு இராணுவத்தினரும் யந்திரத் துப்பாக்கியுடன் கதவின் வாசலில் நின்றனர் இலக்கணத் தமிழில் மறைமுகமாக இருவரும் பேசிக் கொண்டனர். அக்குறியீட்டுத் தமிழ் அவர்கள் இருவரும் மட்டுமே புரியக்கூடியது.

மூர்த்தி அவ்வேளை நடைபெற்றுக் கொண்டிருந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட இருவருடன் உரையாடிக் கொண்டிருந்தார்

நடைபெற்ற சம்பவங்கள் பற்றி மனோகரன் விசாரித்தான். நாதனும் தான் கூற விரும்பிய யாவையும் விபரமாகக் கூறினான். நீண்ட கதைபோலக் கூறினான். சில வேளை அவன் உணர்ச்சி வசப்பட்டே பேசினான். காப்டன் செனிவிரத்தினா என்பவன் எத்தனை ஆபத்தானவன் என்பதை விளக்கியே விபரமாக யாவையும் விரித்தான்.

அந்தக் காப்டனைப் பற்றிக் கூறும் வேளை "ப்பூ, அந்த நாய்?" என்று உமிழ்ந்து கூறினான். அவ்வேளை திருமணத்தில் தூரத்து உறவுப் பெண்ணை ஏமாற்றியவன் முகத்தில் அன்றொரு நாள் நாதன் காறி உமிழ்ந்தது போலிருந்தது. மனோகரனுக்கு மீண்டும் அச்சம்பவம் நினைவில் ஓடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் மெல்லிய குரலில் நாதன் சொன்னான் :

“மனோ, நீ இயக்கத்தில் இல்லாத போதும் நான் வந்த போது அன்று தங்க இடமளித்தாய். அதற்கும் இன்று துணிச்சல் வேண்டும். என்றோ நீயும் இயக்கத்தில் சேர வேண்டிய நிலைவரும். தற்போது நீ ஒரு உதவி செய்ய முடியுமா?”

“முடியுமாயின் நிச்சயமாகச் செய்வேன்.”

“இந்த காப்டன் செனிவிரத்தினா என்பவன் என்னை மாட்டினாலும் பரவாயில்லை. அப்பாவியான மோகனையும் மாட்டி விட்டான். இவன் குற்றவியல் நுட்பங்கள் தெரிந்த ஆபத்தான பேர் வழி. எல்லா இயக்கங்களுக்கும் மிக ஆபத்தானவன். இவனது பெயரை எங்கள் முதலாவது எதிரிகள் பட்டியலில் போடச் செய்ய வேண்டும். நான் சொல்லும் விபரப்படி எம் தோழரிடம் தெரிவிப்பின் அவர்கள் ஆவன செய்வர்.”

“நிச்சயம் செய்வேன்.”

தோழரின் முகவரி, விசாரிக்கும் முறை, சந்தேகம் ஏற்படின் அறிமுகப்படுத்தும் வழி யாவையும் நாதன் கூறினான்.

“இங்கு நீ வர முயன்றிருக்கப்படாது. உன் மேலும் இனி மேல் நோட்டம் போடலாம். விழிப்பாக இருக்க வேண்டும்.”

நாதன் மனோகரனை அச்சுறுத்திச் சொன்னான். அவனைக் கண்டு நீண்ட நேரம் பேச முடிந்ததில் மனோகரன் ஆறுதல் பெற்றான். உள்ளூற ஓரளவு அச்சமும் ஏற்படவே செய்தது.

“காந்தீய இயக்கத்தைச் சார்ந்த டேவிட் ஐயாவும் இங்கே தான் உள்ளாரா?”

“ஆமாம்.”

“நிர்மலா, நித்தி, டாக்டர் ஜெயகுலராசா, பாதர் சின்னராசா......”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எல்லோரும் இங்கேதான்.''

மூர்த்திக்கு வழி நெடுக நன்றி கூறினான் மனோகரன்.

''சாராயம் இங்குள்ள சட்ட விதிகளையெல்லாம் உடைத்து விட்டதைப் பார்த்தீரா? இந்த காப்டன் முன்னர் வட பகுதியில் இருந்தவன். ஆள் பரவாயில்லை. உமது அதிஷ்டமுந்தான். இதுவரை வெளியார் எவருக்கும் இந்த வசதி அளிக்கப்படவில்லை. நீரே முதல் ஆள்'' - மூர்த்தி கூறி விட்டு சாராயம் பெற்று அனுமதி வழங்கிய காப்டன் அமர சிங்கா தன்னிடம் கூறிய ஒரு சம்பவத்தையும் சொன்னார்.

''வவுனியாவில் விமானப்படையினரைத் தாக்கிய வேளை படுகாயமுற்ற குமாரை விசாரிப்பதற்கு அனுராதாபுர ஆஸ்பத்திக்குச் சென்றானாம். இயக்கத்தைச் சார்ந்தவரின் பெயர்களைக் கூறும்படி கேட்டானாம். மார்பிலிருந்த சேட்டை இரு கையாலும் கிழித்து 'முடியாது' வேண்டுமானால் என்னைச் சுட்டுவிடு' என்று மார்பைக் காட்டினானாம். 'இப்படிப்பட்ட வீர இளைஞர்களை நாங்கள் எப்படி வெல்ல முடியும்?' என்றும் சொன்னான் ''

வீடு திரும்பும் வரை மனோகரனின் சிந்தனையில், நடைபெற்ற சம்பவங்கள் பற்றிய ஆராய்வே நடந்து கொண்டிருந்தது. ஒன்று குமார் போன்றவரின் வீர மரணம் பற்றியது. மற்ற வினா பெண்களின் மானம், கற்பு பறிக்கப் படும்போது தமிழர்கள் மட்டுந்தானா ஆவேசப்படுகின்றனர் என்பதாகும். மற்ற இனத்தவர் அத்தகைய சம்பவங்களைப் பார்த்துக் கொண்டிருப்பார்களா? தமிழர் மட்டுமா பெண் கற்பை உயர்வாகப் பேணுகின்றனர்? தமிழ்ப் பெண்களின் கற்பு, மானத்தை தமிழர்கள் தம் சொத்துப்போலக் கருது வதால் தான் பங்கம் ஏற்படும்போது சீறுகிறார்களா? துரௌபதியைத் துகிலுரியும்போது பாண்டவர்கள் பார்த்துக் கொண்டுதானே இருந்தார்கள் மகாபாரதம் வட இந்தியக் கதை. வட நாட்டவர் பெண்களின் கற்பைத் தமிழர்கள் போல இறுக்கமாகக் கொள்வதில்லையா? ஐவரை மணக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்கும் கற்பா அது துகிலுரிவதே மானபங்கம் அது? துகிலுரிவது என்பது மானபங்கப்படுத்துவதே அல்லாது கற்பழிக்கப்படுவதில்லை என்பதாலா?

பல வினாக்கள் நாதன் கூறிய கதையை ஒட்டி நெஞ்சில் எழுந்து மனோகரனின் சிந்தனையைக் குழப்பிக் கொண்டிருந்தது. ஒரு விஷயம் மட்டும் தெளிவாகத் தெரிந்தது. கப்டன் செனிவிரத்தினா விவேகமானவன். தமிழ் இளைஞர்களின் திறமைகளையும் குறைபாடுகளையும் நன்கறிந்தவன். அதனால் இயக்கத்தவருக்கு மிக ஆபத்தானவன். நாதனை என்ன யூகமாக மாட்டிவிட்டான். இந்த எதிரியை ஒழித்துக் கட்டுவது நியாயமானதே? எனக்கு என்ன ஆபத்து வரினும் பரவாயில்லை இவன் பெயரைத் துரோகிகள் பட்டியலில் போடச் செய்ய வேண்டும்.

நாதன் கூறிய சில வார்த்தைகள் மனோகரனின் நெஞ்சைக் குடைந்து கொண்டிருந்தது.

''பாண்டவர்கள் போல் பொறுமையாக இருக்க முடிந்தால் நாங்களும் தப்பியிருக்கலாம். நாங்கள் என்ன பாண்டவர்களா?''

# 28

மனோகரன் மறுநாள் காலையில் வசந்திக்குப் போன் செய்தான். விபரம் எதுவும் கூறும் முன்பே அவள் மாலையில் கட்டாயம் சந்திப்பதாகக் கூறிவிட்டு போனை வைத்து விட்டாள். பேசும்போது அருகே எவராவது இருந்திருக்க வேண்டும் என அவன் எண்ணிக் கொண்டான்.

மாலையில் வசந்தியைக் கண்டதும் இன்ரவியூ நடைபெற்ற முறைகளை விரிவாகக் கூறினான்.

''என் சிபார்சு நிச்சயம் வேலை செய்திருக்கும். உங்கள் முன்னைய முயற்சியின் தோல்வி பற்றியும் சொல்லியிருந்தேன். எப்படியும் சில நாளில் அறிந்து விடலாம்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தி நம்பிக்கையோடு சொன்னாள். மனோகரனின மனதில் மேலும் உறுதி ஏற்பட்டது. விபரம் எதையும் அவன் விசாரிக்கவில்லை. அவள் சொல்ல விரும்பாததைதான் கிண்டிக் கேட்பது நாகரிகமில்லை என விட்டுவிட்டான். பெரிய ஓட்டல், எவராவது முக்கியமான நபரைக் கொண்டு முயற்சி செய்திருப்பாள் என எண்ணிக் கொண்டான்.

இன்ரவியூவின் மறுநாள் காலையில் வீட்டுக்கு டெலிபோன் செய்து ஏமாந்த நிகழ்ச்சியைக் கூறினான்.

''இப்பொழுது அதிகாலையிலேயும் ஓட்டலில் வேலைக்கு அழைக்கிறார்களா?''

மனோகரன் கேட்டான்.

''பெரிய வெளிநாட்டுக் கோடீஸ்வரர் வரும்போது சில வேலைகளில் 'கைடு' ஆகப் போகும்படியும் என்னையும் வற்புறுத்துகிறார்கள். பெரும்பாலும் காலையில் போனால் இரவுக்குள் திரும்பி விடுவோம். அன்று எதிர்பாராமல் இரவு கண்டியில் தங்க நேர்ந்துவிட்டது. மறுநாள் நண்பகல் தான் வந்து சேர்ந்தோம்.''

வசந்தி சாதாரணமாகச் சொன்னாள்.

''இரவு தனியத் தங்க வசதி கிடைத்ததா?''

''நல்ல வசதி, கிங்ஸ் ஓட்டல் பெரிய ஓட்டல்''

''அதற்காக இரண்டு நாள் ஓய்வு தருவார்களா?''

''அப்படியல்ல பெரும்பாலும் ஓட்டல் டிரைவர் மாரே, கைடு ஆகப்போவார்கள். ஸ்பெஷலாக என்னைப் போன்றவர் போக நேர்ந்தால் அந்த உல்லாசப் பயணியின் 'பில்லி'ல் ஆயிரம் ரூபாவைச் சேர்த்து விட்டு அதில் எங்களுக்கு முன்னூறு ரூபாயைத் தருவார்கள். எங்களை வைத்து உல்லாசப் பயணிகளைக் கொள்ளையடிப்பது தானே இந்த ஓட்டல் தொழில்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தி ஓட்டல் பற்றிக் கூறும் செய்திகளெல்லாம் ஆரம்பத்தில் அவனுக்கு வியப்பாக இருந்தது. தற்போது அவனுக்கு உள்ளூற கொதிப்பும் ஏற்படத் தொடங்கிவிட்டது. அசோகனுடையதும் வசந்தியுடையதும் வெறுப்பான வார்த்தைகளே அவனையும் தற்போது ஆக்கிரமித்து விட்டது.

''சேலையோடு வரும்போதுதான் அசல் தமிழ் பெண்ணாக உன்னைப் பார்க்கிறேன். வசந்தி உடுத்திருப்பதால் இந்தச் சேலையே அழகாயிருக்கிறது.''

வசந்தியின் உதட்டில் புன்னகை. அவனது பாராட்டை விரும்பாதபோதும் அவள் நயமாகச் சொன்னாள்.

''பாராட்டுக்கு நன்றி. வீட்டிலிருந்து நேரே வந்தேன். அதனால்தான் சேலை உடுக்க முடிந்தது.''

''இன்று ஓட்டலுக்குச் செல்லவில்லையா?''

'மாலையில் அழைத்தார்கள். உடம்பு சரியில்லை எனச் சொல்லிவிட்டேன். உங்களை இன்ரவியூவின் பின் ஒரு தடவையும் காணவில்லை என்பதற்காகவே இன்று வந்தேன். அல்லது நாளை மறுநாள் வரையில்தான் பார்த்திருப்பேன்.''

வசந்தி சிரித்தபடியே கூறி முடித்தாள். மனோகரன் அவள் 'உடம்பு சரியில்லை' எனக் கூறியதைப் புரிந்து கொண்டான்.

'சேலை உடுத்த போதும் ஏன் பொட்டு வைக்கவில்லை?'

''தமிழ்ப் பெண்கள் கொழும்பில் பொட்டு வைப்பதே குறைந்துவிட்டது. உங்களுக்குத் தெரியாதா? சேலை உடுப்பது, நகை போடுவது கூட ஆபத்தாகி வருகிறது.''

''நீ நகை போடுவதையே நான் காணவில்லையே.''

''அம்மா எனக்காக வைத்திருந்த நகை எல்லாவற்றையும் விற்றுவிட்டா. இப்போது நகை செய்யும்படி ஒரே கரைச்சல். எனக்கு விருப்பமேயில்லை. ஒருவேளை உங்களுக்கு விருப்பமாயின் பின்னர் போடுவேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தி புன்னகையோடும் உரிமையோடும் கூறினாள்.

"சேலை ஆசை, நகை ஆசை இல்லாத முதற் பெண்ணை இப்போதுதான் பார்க்கிறேன்."

"ஓட்டலுக்கு வெளிநாட்டு வேலைக்காக இன்ரவியூவுக்கு வந்தபோது காணவில்லையா?"

வசந்தியின் கேலி அவனையும் சிரிக்கச் செய்தது.

எதிர்வரும் திங்கட்கிழமை மாலை சந்திப்பதாக விடை பெற்றாள்.

# 29

சனிக்கிழமை காலையில் நாதன் கூறிய இடத்தைத் தேடி மனோகரன் சென்றான்.

சிரமப்பட்ட போதும் கொட்டாஞ் சேனையில் உள்ள அந்தப் பழைய வீட்டைத் தேடிப்பிடித்து விட்டான். சிறு சிறு அளவுகளாக அடைக்கப்பட்ட அந்த வீட்டில் அரசாங்க, வாணிப நிலையங்களில் பணிபுரியும் பலரும் சில மாணவர்களும் வசிப்பது தெரிந்தது.

வீட்டு வராந்தாவில் காலைத் தமிழ் தினசரியைப் படித்துக் கொண்டிருந்த ஒருவர் அவனிடம் விசாரணை நடத்தினார்.

"யாரைப் பார்க்க?"

"சிவராசாவைப் பார்க்க வேண்டும்."

"அப்படி ஒருவர் இங்கே இல்லையே."

சிறிது நேரம் சிந்தித்துவிட்டு பத்திரிகையை மடித்துக் கொண்டு பதில் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இங்கேதான் இருக்க வேண்டும். உள்ளே கேட்டுச் சொல்லுங்கள்.''

அவர் பத்திரிகையைப் போட்டு விட்டு உள்ளே சென்றார்.

சிறிதுநேரம் கழிந்தபின் அவரோடுமற்றொருவர்வந்தார்.

'சிவராசாவையா தேடுகிறீர்கள். அவர் ஊருக்குப் போய்விட்டார். ஏதாவது செய்தி இருந்தால் சொல்லுங்கள், வரும்போது தெரிவிப்பேன்.''

மனோகரன் உரிய ஆளைக் கண்டு விட்டதையிட்டு மகிழ்ந்தான். தான் கூறிய அடையாளம், பேச்சு சரியாக இருந்தது.

தனியாக அவரை அழைத்துச் சென்று தன்னை அறிமுகம் செய்தான். நாதனைக் கண்ட செய்தியைச் சொன்னதும் சிவராசா ஆர்வமாக விசாரித்தான்.

அச்சம் சிறிதுமின்றி கப்டன் செனிவிரத்தினா செய்த கபடத்தனங்களை விரிவாகக் கூறினான். ''தமிழர்கள் பேணும் கற்புநெறியை அவன் தமிழரின் குறைபாடாகக் கருதுகிறான்'' என்று கூறி நாதனின் வேண்டுகோளையும் தெரிவித்தான்.

'நான் கவனித்துக் கொள்வேன். செய்திகள் யாவும் மிக இரகசியமாக இருக்க வேண்டும்.''

சிவராசா மனோகரனையும் அச்சுறுத்தினான்.

# 30

திங்கட்கிழமை இரவு எட்டு மணி வரையில் கடற்கரையில் மனோகரன் காத்து நின்றான். நாள்தோறும் தபாற்காரனைப் பார்த்துவிட்டே அவன் வெளியே புறப்படுவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டு. அன்று வரை வேலை பற்றிய முடிவு எதுவும் வர வில்லை.

வசந்தி ஏதாவது விசாரித்திருப்பாளா, மறந்திருப்பாளா என்ற சந்தேகமும் அவனது மனதில் எழுந்தது.

இக் காலத்தில்தான் வேலையற்ற லட்சக்கணக்கானவர் களின் மன நிலைகளையும் உளைச்சல்களையும் வாழ்க்கைத் துன்பங்களையும் அவனாலும் எண்ணிப் பார்க்க முடிந்தது. சிங்கள மக்களின் வேலையில்லாப் பிரச்சனையைத் தீர்க்க முடியாத நிலையில், ஜெயவர்த்தன ஆட்சியைக் காப்பாற்ற தமிழர்மேல் இனவெறியைத் தூண்டுகிறான் என அசோகன் கூறுவது அவன் நினைவில் வந்தது.

நான் ஓரளவு அதிஷ்டக்காரன என தன்னுள் மனோ கரன் ஆறுதல் கூறிக் கொண்டான்.

வசந்தியைக் காண நேராவிட்டால் இன்னும் எத்தனை துன்பம் அனுபவிக்க நேர்ந்திருக்கும் என எண்ணிப் பார்த் தான். பொருளுதவி மட்டுமல்ல வேலை தேடுவதில் உதவி, அதற்கும் மேலாக திலகா ஏற்படுத்திவிட்ட ஊமைக்காயம். அதை ஆற்றியவளும் அவளேதான்.

திலகா நன்மையே செய்தாள் என மனதிற்கு ஆறுதல் கூற மனோகரன் முனைந்தான். குணத்தில் மட்டுமல்ல அழகில்கூட வசந்திக்கு முன்னே அவள் நிற்க முடியுமா? ஒரு நாளைக்கு அவளது கர்வம் அடங்க திலகாவிற்கு முன்னே வசந்தியை அழைத்துச் சென்று நிறுத்த வேண்டும்

திலகா திருமணத்தின் பின் கொழும்பிற்கு வந்திருப் பாளா யாழ்ப்பாணத்திலா? அவளைத் தனியே ஒருபோதும் காணப்படாது. வசந்தியோடுதான் காணவேண்டும்.

வசந்தி தூரத்தில் வேகமாக நடந்து வருவது மின் ஒளியில் தெரிந்தது. தான் பிந்தி விட்டேன் என்பது நடை யிலும் புன்னகையிலும் தெரிந்தது. அவள் முகத்தில் களைப்பும் சோர்வும் இருந்தது. அதை மறைக்கவே புன்னகையை வரவழைத்துக் கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் வார்த்தையாக, பிந்தியதற்கு மன்னிப்புக் கேட்டபடியே வந்தாள். அடுத்ததாக 'கொன்கிராயுலேஷன்ஸ்' எனக் கூறி அவனது கையைக் குலுக்கினாள்.

''இந்த வாரத்திலேயே வேலைக் கடிதம் வந்து விடும். யூன் முதல் தேதியிலிருந்து வேலைக்குப் போகலாம்''

''தாங்யு வெரிமச். வெற்றிப் பெருமையெல்லாம் வசந்திக்குத்தான்.''

''நல்ல செய்தியைக் கொண்டாட வேண்டாமா?''

''அதற்கும் வசந்திதான் கடன் தரவேண்டும்''

''அதிலென்ன தருகிறேனே. இதோ''

ஒரு பச்சைப் பத்து டாலர் நோட்டை அவன் பாக்கெட்டில் வைத்தாள்.

''இத்தனை பணமா, நான் கேட்டேன்.''

''பரவாயில்லை. எனக்கு 'ரிப்' பாக இன்று கிடைத்தது. வைத்துக்கொள்ளுங்கள் இன்று நல்ல நாளல்லவா?''

''நான் உனக்கு எவ்வளவு கடன் பட்டுள்ளேன்.''

அவனது குரலிலே வருத்தம் தொனித்தது.

''இதென்ன பிரமாதம். இந்த நாட்டில் எல்லோருக்கும் எங்கோ ஒருவித கடன் இருக்கிறது. இந்த நாடே வெளி நாட்டுக் கடனில் தானே வாழ்ந்து கொண்டிருக்கிறது.''

நாட்டை இழுத்துச் சமாளித்துக் கொண்டே அவள் கூறினாள். அதில் இருந்த உண்மையையும் அவன் உணர்ந்து கொண்டான். 'நாடே உலக வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ளது. அவர்களே எம் நாட்டு வரவு செலவுத் திட்டத்தையும் தீர்மானிக்கிறார்கள், எங்களுக்கு எங்கே சுதந்திரம் இருக்கிறது' என அசோகன் அடிக்கடி வாதிடுவது அவன் நினைவில் வந்தது.

''எந்த ஓட்டலுக்குப் போகலாம். உங்கள் ஓட்டலில் இருவரும் இரவு சாப்பிட இந்தப் பணம் போதுமா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன சாப்பிடுவது என்பதைப் பொறுத்தது அங்கு ஒரு பிளேட் 'லொப்ஸ்டர்' வாங்கத்தான் இந்தப் பணம் போதும்."

வசந்தி சிரித்துக் கொண்டே அவனது வலது கையில் தன் கையைக் கோர்த்தபடி தெரு வோரம் நின்ற ஐஸ்கிறீம் வானை நோக்கி நடந்தாள்.

"லொப்ஸ்டர் அத்தனை விலையா? நம்பவே முடிய வில்லை. நான் சாப்பிட்டதேயில்லை. அத்தனை ருசியோ."

"எனக்கு அது கொஞ்சமும் பிடிக்காது. ஆனால் அமெரிக்கர்களும் ஐரோப்பியரும் மிகவும் விரும்பிச் சாப்பிடு கிறார்கள், விலையைப் பற்றிக் கவலைப்படாமல்."

மனோகரனே இரு'கோன்' ஐஸ்கிறீமுக்குப் பணம் கொடுத்தான். இருவரும் சாப்பிட்டபடி மீண்டும் கடற்கரைப் பக்கமாக நடந்தனர்.

வசந்தி இடையிடை மனோகரனின் குடும்ப விஷயங்கள் பற்றியும் விசாரித்துக் கொள்வாள். அவன் பெற்றார் தங்கை யரைப் பார்க்கப்போவது பற்றியும் விசாரிப்பாள்.

"இனிப்போய்ப் பார்த்து விட்டு வரலாமே."

"வேலையில் சேர்ந்த பின்னர் தான் ஒரு வார இறுதி யில் போய் வர எண்ணியுள்ளேன்"

"வீட்டிற்குக் கடிதம் எழுதுவதில்லையா?"

"இடையிடை எழுதுவேன்."

தன் குடும்ப அமைப்பைப் பற்றிய யதார்த்த நிலை யையே அவளிடம் மனோகரன் கூறியுள்ளான். பொய்மை களைக் கூற விரும்பவில்லை.

வசந்தியின் தாயார் பாட்டி பற்றி மனோகரனும் இடை யிடை விசாரித்துக் கொள்வான். அவள் தன் குடும்ப விஷயத் தில் அத்தனை ஆர்வம் காட்டுவதில்லை என்பதையும் அவன் ஓரளவு அறிந்திருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இருவரும் சுகமா யிருக்கின்றனர். அம்மாவிற்கு பென்ஷன் வருகிறது. அதற்கு மேலாக அம்மாவின் தாராள மான செலவுக்காக நானும் உழைத்துக் கொடுக்கிறேன்."

தாயின் 'வீம்புச்' செலவிற்காக தான் உழைக்க நேரிடு கிறது என்ற தொனி எப்பொழுதும் வசந்தியின் பதிலில் ஒலிப்பதை மனோகரன் பல தடவைகளில் கண்டு கொண் டான்.

''வசந்தி, நீ களைத்துப் போயிருக்கிறாய் சீக்கிரம் போய் விடுவோம்.''

பதிலை எதிர்பாராது கையைப் பிடித்து அழைத்தபடி காலிமுக பஸ் நிலையத்தை நோக்கி நடந்தான்.

''நான் தாமதித்து வந்ததற்காகச் சொல்லுகிறீர்களா?''

''இல்லை, முகத்தைப் பார்த்தே தெரிந்து கொண்டேன், வசந்தி நிரந்தரமில்லாமல், குறிப்பிட்ட வேலை நேர மில்லாமல் இப்படியே 'கசு வலாக' நெடுக இருக்க நேருமா?''

''எங்க வேலை பெரும்பாலும் அப்படித்தான் இருக்கும்''

''எத்தனை பேர் இந்த 'கசுவல்' வேலையில் இருக் கிறீர்கள் ''

''சரியாகத் தெரியாது கேள்ஸ் நாற்பது ஐம்பது பேர் இருக்கலாம். போய்ஸ் பதினைந்து இருபது பேராவது இருக் கலாம்.''

இத்தனை பேரை 'கசுவலாக' தொடர்ந்து வைத்திருக்க தொழிற் பகுதி அனுமதி வழங்குகிறதே என மனோகரன் எண்ணிக்கொண்டான்.

''வசந்தி, நீ கோவிலுக்குப் போவதில்லையா?''

''படிக்கும் காலத்தில் அம்மாவோடு போவேன் பின்னர் விட்டு விட்டேன்''

'',ஏன்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனக்கு அந்த நம்பிக்கையெல்லாம் குறையத் தொடங்கி விட்டது தற்போது உங்கள் கொள்கைதான் என் கொள்கையும். என் அம்மா ஒழுங்காகக் கோவிலுக்குப் போவா. ஒரே தெய்வபக்தை. என்ன வரந்தான் கேட்பாவோ தெரியவில்லை.''

''நீ சினிமாப் பார்ப்பதில்லையா, வசந்தி''

''முன்னர் இடையிடை போவேன். தற்போதுதானே வீட்டிலே டி.வி. இருக்கிறது. தியேட்டரில் சினிமா பார்ப்பதிலும் பார்க்க உங்களோடு பேசிக் கொண்டிருப்பது தான் சந்தோசமானது''

ஒரு தடவையும் வசந்தி அவனை சினிமாவிற்கு அழைத்தது கிடையாது.

''அப்படியா? நானும் அப்படித்தான் நினைக்கிறேன்''

மனோகரன் சிரித்துக் கொண்டே வசந்தியின் இடையில் கிள்ளினான்.

காலிமுக பஸ்நிலையத்தை நோக்கி நடந்தனர்.

நடைபாதை வழியாக நடந்து நிலையத்தை நெருங்கியதும் ஒரு டாக்ஸி வசந்தி அருகே வந்து நின்றது.

''அம்மா ஏறுங்கோ''

''நான் இப்போது வீட்டுக்குப் போகவில்லை''

வசந்தி ஓரளவு வெறுப்புடனேயே கூறினாள் தங்கள் ஓட்டல் முன்றிலில் கியூவில் நிற்கும் டாக்ஸிக்காரன் என வசந்தி மனோகரனுக்குக் கூறினாள்.

''இவர்களால் பெரிய தொல்லை எப்போதும் டாக்ஸியில் செல்லத்தக்க பணக்காரர் என நினைத்துக் கொள்ளுகிறார்கள்.''

இத்தொல்லைகளால் பஸ் நிலையத்தில் நிற்கும் வேளைகளிலும், அவள் பெரும்பாலும் மறைவாக நின்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடன் பேசுவதையும் மனோகரன் கவனிக்கத் தவற வில்லை.

# 31

வேலை கிடைத்த செய்தியோடு வசந்தியைப் பற்றி அசோகனுக்கு விபரமாகச் சொல்லி வைக்கவேண்டும் என எண்ணி சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். மனோகரன்.

அன்று சனிக்கிழமை மாலை இருவரும் வியத்நாம் யுத்தம் பற்றிய 'டியர் ஹன்டர்' என்ற அமெரிக்கப் படத்தைப் பார்க்கச் சென்றனர்.

படம் முடிந்ததும் இருவரும் ஒரு ஓட்டலில் சாப்பிட்டு விட்டு மாநகரசபை பஸ்நிலையத்தை நோக்கி நடந்தனர். அசோகன் அந்தத் திரைப்படத்தின் தாக்கத்திலிருந்து விடுபட முடியாதவனாக சிந்தித்தபடியே நடந்து கொண் டிருந்தான்.

''அமெரிக்காவிலேயே ஏகாதிபத்திய அமைப்பின் எதிர்ப் பைத் தெரிவிக்கும் கலைஞர்களும் இருக்கவே செய்கிறார் கள் வியத்நாம் யுத்தத்தில் மனிதர்கள் எவ்வாறு பணயம் வைத்துச் சூதாடப்படுகிறார்கள் என்பதையும் பார்த்தாயா?''

அசோகன் ஆழ்ந்த சிந்தனையோடு சொன்னான்.

''யுத்தத்தில் மனிதர்கள் சூதாடப்படுகிறார்கள் என்ப தற்கு நல்ல குறியீட்டு முறையைத் தேர்ந்திருக்கிறார்கள்''

''வியத்நாம் யுத்தத்தில் அமெரிக்கா பல ஆயிரம் கோடி டாலர்களைச் செலவு செய்தது. அத்தனையும் தவறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதாபிமானமற்றது. வீண் விரயம் என்பதை ஒரு கோடி டாலர் செலவில் ஒரு கலைஞன் சினிமா மூலம் காட்டி விட்டான் பார்த்தாயா.''

''அதே அமெரிக்காதான் தற்போது எங்கள் நாட்டுக்கும் நாவை நீட்டுகிறது.''

மனோகரன் சொன்னான்.

'அமெரிக்க நவகாலனியாக இலங்கை வந்து விட்டது. சாரை புகுந்து வீடு பாழ் என்று கிராமத்தில் சொல்லுவார்கள். அந்த போலவே அமெரிக்க ஏகாதிபத்தியம் நுழைந்த எந்த நாடும் உருப்பட்டது கிடையாது. வியத்நாமைப் பார், லெபனனைப்பார், மத்திய அமெரிக்கா, லத்தீன் அமெரிக்க நாடுகளைப் பார். அமெரிக்காவை விரட்ட எத்தகைய போராட்டம் நடத்த வேண்டியுள்ளது. இங்கேயும் அதே நிலையே வந்து கொண்டிருக்கிறது''

சிறிது தூரம் மௌனமாக இருவரும் நடந்தனர்.

நகரமண்டபத்தை நெருங்கியதும் மனோகரன் மௌனத்தைக் கலைத்து அசோகனின் சிந்தனையையும் தன் பக்கம் திருப்ப முயன்றான்,

''அசோக், நீண்ட நாட்களாக ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றி உனக்குச் சொல்லச் சந்தர்ப்பம் தேடிக் கொண்டிருந்தேன். இன்று கட்டாயம் சொல்லித் தீர்க்க வேண்டும். கொஞ்சநேரம் ஓரமாக உட்கார்ந்து பேசிவிட்டுப்போவோம்''

நகரசபை மண்டபத்தின் முன் பக்கமாக, புற்றரைக்கு மனோகரன் அழைத்துச் சென்றான். அங்கு ஆண்டுதோறும் மே தினத்தன்று நடைபெறும் தொழிலாளர் கூட்டத்திற்கு இருவரும் வருவது நினைவில் வந்தது. இருவரும் புற்றரை மேல் உட்கார்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது அப்படி என்ன முக்கிய விஷயம்? ஒரே அறையில் இருக்கிறோம் விஷயத்தைச் சொல்ல தனிச் சந்தர்ப்பமும் இடமும் வேண்டும்."

அசோகன் கூறினான்.

வசந்தியுடன் தொடர்பு ஏற்பட்ட நாளிலிருந்து தனக்கு வேலை கிடைக்க உதவியது வரை மனோகரன் விவரமாகக் கூறினான் வசந்தியின் தாயாரின் நுகர்பண்டப் போராசை பற்றியும் ஓட்டல் வேலையில் அவளுக்குரிய வெறுப்புப் பற்றியும் சுருக்கமாகத் தெரிவித்தான்,

அசோகன் மௌனமாக அவனது சுவையான கதையைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

"இந்தச் சுவையான காதல் கதையை இத்தனை நாள் மறைத்துவிட்டியே. திலகா போக வசந்தி கிடைத்தாளே. நீ அதிர்ஷ்டக்காரன் தானடா."

சிரித்துக்கொண்டே அசோகன் சொன்னான்.

"திலகா தன் காதலையும் கற்புச் செருக்கையும் வைத்து என்னை அடிமையாக்கிக் கொண்டிருந்தாள். வசந்தி என் அடிமையாக சமைத்துப்போட வருவதாக நிற்கிறாள். இருவரும் இரு துருவங்கள்."

"வசந்தியின் அரசியல் உணர்வின் மட்டம் எப்படி இருக்கிறது?"

'அவள் இதுவரை மற்றப் பெண்கள் போலவே அரசியலில் அத்தனை ஆர்வம் காட்டவில்லை. ஆனால் ஓட்டல் தொழிலின் பேரில் நடைபெறும் கொள்ளைகள், ஏமாற்றுகள், கலாச்சாரச் சீரழிவுகள் பற்றி நீ சித்தாந்தத்தை வைத்துச் கூறுவது போலவே அவள் நடைமுறையை வைத்துச சொல்லுகிறாள். அந்த இடத்து வேலையே வேண்டாம் என்கிறாள் திருமணத்தின் பின் தானும் குடும்பத்திற்காக உழைக்க வேண்டுமாயின் வேறு வேலை தேடித் தரும்படி கூறுகிறாள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''விவேகமான விசித்திரமான பெண்ணாகவே இருக்கிறாள்.''

அசோகன் அமைதியாகக் கூறிவிட்டுத் தொடர்ந்தான்:

''சரி நீ இப்பொழுது என்ன முடிவு செய்திருக்கிறாய்?''

''உயிர் போயினும் வசந்தியை நான் கைவிட முடியாது?''

''அவளின் பெற்றோர், குடும்பம், வேலை பற்றியெல்லாம் நன்கு விசாரித்தாயா?''

''விசாரிப்பதென்ன எனக்கு எல்லாம் பிடித்துக் கொண்டது.''

''உன் அப்பா கேட்பாரே. அவரைத் திருப்திப்படுத்த வேண்டாமா?''

''எனக்கு யாவும் திருப்தி. பிறகு அவரை என்ன திருப்திப்படுத்துவது?''

''உன் தங்கைமாரின் பிரச்னைகளை முதலில் முடிக்கும்படி அப்பா கேட்பாரே.''

'மூத்தவளின் பிரச்சனை தமிழரின் அரசியல் பிரச்சனை முடிந்த பின்தான் தீர்க்க முடியும். மற்றவளுக்கு காலம் இருக்கிறது. பிறகு நான் பார்ப்பேன்.''

''கொழும்புப் பெண்ணைக் கொண்டுபோய் உன் அம்மாவை எப்படித் திருப்திப்படுத்தப் போகிறாய்?''

''அம்மாவா அவளைக் கட்டப் போகிறா எனக்குத் திருப்தியென்றால் பிறகு அவர்கள் திருப்தி யாருக்கு வேண்டும்.''

''ஓ அத்தனை துணிச்சல் வந்துவிட்டதா? நீயும் குடும்ப உறவிலிருந்து பிரியும் முதலாளித்துவ அமைப்பின் புதிய மனிதனாக...தனி மனிதனாக வந்துகொண்டிருக்கிறாய். சந்

தோஷமே. வசந்தி ஓட்டலில் ரிசெப்ஷனிஸ்டா, கிளார்க்கு வேலையா செய்கிறாள்?''

''அவர்கள் அழைக்கும்போது மட்டும் 'கசுவலாக'த்தான் வேலைக்குப் போகிறாள். பிரெஞ்சு, ஜெர்மன் மொழி கொஞ்சம் அங்கு படித்திருக்கிறாள். நல்ல சம்பளம், ரிப்ஸ்' கிடைப்பது தெரிகிறது. நான் இந்த விபரங்களைக் கேட்ப தில்லை',

''ஓ. நீ மாற்றிய டாலர்கள் அவளது 'ரிப்ஸ்' தான். இப்பொழுதுதானே உண்மை தெரிகிறது''

அசோகன் நளினமாகக் கூறினான். மனோகரனும் தலை குனிந்தபடி சிரித்தான்.

மனோகரன் தன் நெஞ்சிலிருந்து ஒரு பாரம் இறங்கிய தாக உணர்ந்தான். இருவரும் எழுந்து பஸ் நிலையம் செல்லும்போது அசோகன் மீண்டும் சொன்னான் :

''உன் கஷ்டமான காலத்தில் அவள் உனக்கு உதவி யுள்ளாள் என்பதை மறக்க முடியாது. ஏதோ திருமணம் என்பது உன் விருப்பம். உன் வீட்டாரைப் பற்றிக் கவலைப் படாதபோது அது உன் பொறுப்பு. நீயே நன்கு ஆலோ சித்துத் தீர்மானமெடுக்க வேண்டும்''

''நான் சில மாதங்களாகப் பழகிய போதும் நன்கு சிந்தித்தே இம்முடிவிற்கு வந்துள்ளேன்''

மனோகரனின் குரலில் உறுதியிருந்தது.

''பெரும்பாலும் பாலுணர்வினால் ஏற்படும் ஆரம்பகால கவர்ச்சியையே நாம் காதல் என்ற காவியமாக்க முயலு கிறோம். திருமணமாகி சில மாதங்களில் இக்கவர்ச்சிக் காதல் மறைந்து விடலாம். பின்னர் சட்டப் பிணைப்பு, சமூக வழமைகள், குழந்தைகள் ஆகிய பிணைப்புகளே குடும்பங்களைக் கட்டி வைத்திருக்கின்றன. இவற்றை இப் போது நீ ஏற்றுக்கொள்ள மாட்டாய். அனுபவத்தின் மூலமே அறிந்து கொள்ள முடியும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசோகன் கூறிய கருத்து அவனுக்கு அவ்வேளை விசித்திரமாகவே தோன்றியது. ஆயினும் எதுவும் மறுத்துப் பேசாது நடந்தான்.

# 32

அதிகாலையில் தம்பி முரளியை அறையில் கண்டதும் மனோகரன் திடுக்கிட்டான்; இரவு பிந்தியே வந்து படுத்தான். முரளி வந்தே அவனை எழுப்பினான் மணி ஏழாகி விட்டது. அறையில் வேறு எவருமில்லை. அசோகனும் அன்சாரியும் வெளியே போய்விட்டனர்.

''நீ எங்கே இங்கே வந்தாய்?''

மனோகரனின் குரலிலே கலவரம்.

''ஏன் வரப்படாதோ?''

உடனே தன்னைச் சமாளித்தவாறு துணிந்து கூறினான்.

'கொழும்பு உனக்கு ஆபத்தான இடமல்லவா?''

''இதுதான் பாதுகாப்பான இடம். ஆனாலும் நான் வடக்கேதான் வேலை செய்கிறேன். இங்கே ஒரு அலுவலாகவே வந்தேன்.''

''என்ன அலுவல்?'.

''அதெல்லாம் உங்களுக்குச் சொல்ல வேண்டுமா?''

''சரி வா டீ சாப்பிட்டுவிட்டு வருவோம்.''

தான் கேட்டது தவறு என்பதைச் சரிசெய்ய மனோகரன் கதையை மாற்றினான்

மனோகரன் எழுந்து முகத்தைக் கழுவி. தலையை வாரி விட்டு ஒரு சேட்டைப் போட்டுக்கொண்டு வந்தான். இருவரும் வெளியே புறப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ வீட்டுப் பக்கம் போவதில்லையா?"

"அங்கே போவதில்தான் ஆபத்து. ஆனால் வீட்டுச் செய்திகளெல்லாம் அறிந்து வருகிறேன்."

"வீட்டிலே எல்லாரும் சுகந்தானே"

"நீங்கதானே ஒழுங்காகக் கடிதம் எழுதுவதில்லை. அந்தப் பக்கம் எட்டியே பார்ப்பதை விட்டு விட்டீர்களாம். காசுகூட அனுப்புவதில்லையாம்."

"ஓ அவ்வளவுக்கு உனக்கு செய்திகள் கிட்டுகிறதா? நான் சிலகாலம் வேலையில்லாமல் இருந்தேன். இப் பொழுது தான் மீண்டும் வேலைக்குப் போகத் தொடங்கியிருக்கிறேன்."

"அதெல்லாம் எனக்குத் தெரியும்."

"நல்லது. அப்பாவிற்கும் தெரிவித்து விட்டாயா?"

"நான் தெரிவிக்கவில்லை. வேறு எவர் மூலமாவது அறிந்திருக்கலாம்."

"அவர் கவலைப்படுவார் என்றே நான் தெரிவிக்க வில்லை. இந்த மாதந்தானே வேலையில் சேர்ந்தேன். இனிமேல் ஒழுங்காக பணம் அனுப்புவேன். சில வாரத்தில் வீட்டுக்குப் போய் பார்த்து வருவேன்."

முரளிக்கு இட்லி வரவழைத்துச் சாப்பிடச் செய்தான். தான் பிறகு குளித்துவிட்டுச் சாப்பிடுவதாகக் கூறி வழமையான டீ, சிகரெட்டை மட்டும் வாங்கிக் கொண்டான் இருவரும் வெளியே வந்தனர்.

"நீ அடையாள அட்டையெல்லாம் வைத்திருக்கிறாயா?"

"ஆமாம்."

"உன் சொந்தப் பெயரிலா."

"அதெல்லாம் பாதுகாப்பாக உள்ளது. நீங்க கவலைப் படவேண்டாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரளியின் பதில் எதிலும் அண்ணன் என்ற மரியாதை குறைவாகவே இருந்தது.

''நீயாவது அப்பா, அம்மாவின் வயதான காலத்தில் வீட்டைப் பார்ப்பாயென்றால் இப்படிப் போய் விட்டாய்.''

''நீங்க கவனிப்பீர்கள் என்று பார்த்தால் நீங்களும் இப்படி மாறுவீர்கள் என நான் கனவிலும் எதிர்பார்க்க வில்லை''

முரளி எதிர்த்துக் கூறினான்.

''என்னடா சொல்லுறாய்?''

மனோகரனுக்குச் சிறிது கோபம் வந்து விட்டது.

''நீங்க தானே ஒரு சிங்களப்பெட்டையோடு கோல் பேஸில் சுற்றித் திரிகிறீர்களாம்.''

''அது தமிழ் பெட்டையடா. ஆரெடா சொன்னது சிங்களப் பெட்டை என்று.''

மனோகரன் உடனே ரோசத்தோடு பதிலளித்தான். இச்செய்தியை முரளி அறிந்திருந்தது அவனுக்கு அதிர்ச்சி யளித்தது.

''ஏதோ நீங்க ஒப்புக்கொண்டு விட்டீர்களே. அதுவே போதும்.''

முரளி உள்ளூற தன் விவேகத்தை எண்ணியே அவ்வாறு கேட்டான். அவசர புத்தியில் உண்மையை உடனே கக்கி விட்டதில் வெட்கமும் அடைந்தான், மனோகரன்.

''இந்தச் செய்தி யெல்லாம் உனக்கு யாரெடா சொன்னது?''

மனோகரன் மீண்டும் ஆற்றா நிலையில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தம்பி யாரிடம் அணைவாகக் கேட்டான்

''எங்களிடமும் ஒரு இரகசியப் படை இருக்கிறது எல்லா இடங்களிலும் ஆட்கள் இருக்கிறார்கள். அந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணைப் பற்றிய விபரங்கள்கூட அறிந்து அப்பா, அம்மாவிடம் கூறமுடியும் நீங்க வேண்டுமென்றால் கூட்டிக் கொண்டு திரியலாம். கலியாணம் கிலியாணமென்று மட்டும் இப்போது இறங்கிவிட வேண்டாம்.''

''அதெல்லாம் என்னுடைய சொந்த விஷயம், நீ ஆரெடா புத்தி சொல்ல?''

''உங்க தம்பி''

''தம்பிமாரா அண்ணனுக்குப் புத்தி சொல்லுறது.''

''ஏன் சொல்லப்படாது? அப்பா, அம்மா, தங்கைமார் இருக்கும்போது நீங்க பொறுப்பில்லாமல் நடக்க நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?''

மனோகரனுக்கு அவனுடைய பேச்சு மீண்டும் ஆத்திரத்தையே கொடுத்தது.

''நீதான் பொறுப்பில்லாமல் இப்படியெல்லாம் காரியங்களைச் செய்துவிட்டு தலைமறைவாகத் திரிகிறாய். இப்ப எனக்குப் புத்தி சொல்ல வந்து விட்டாய். வீட்டு நிலைமையெல்லாம் எனக்குத் தெரியும். நான் பார்த்துக் கொள்வேன் நீ கண்டபடி திரிந்து எங்காவது மாட்டுப்பட்டு விடாதே.''

''விடுதலைப் போராட்டத்தில் இறங்கும்போதே உயிரை அர்ப்பணிக்கத் தயார் செய்து கொண்டுதான் இறங்கினோம். எங்களுக்கு எந்த நேரமும் ஆபத்து ஏற்படலாம். அதைப் பற்றியெல்லாம் எவரும் கவலைப்பட வேண்டியதில்லை.''

''உனக்கு ஏதாவது நடந்தால் நான் கவலைப்பட மாட்டேனா அப்பா அம்மா தங்கைமார் துடிக்கமாட்டார்களா.''

''அவர்களுக்கு ஆறுதல் சொல்லவேண்டியதும் உங்க கடமைதான். உங்க மனதைப் புண்படுத்துவதற்காக நான் எதுவும் பேசவில்லை. அப்படிப் பேசியிருந்தால் மன்னித்து விடுங்கோ. வீட்டை நினைத்தே பேசினேன். நான் போய் வருகிறேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கூறிவிட்டு திடீரென எதிர்ப்புறமாக நடந்தான். தம்பியின் இறுதி வார்த்தைகளும் அவனைச் சூழ்ந்திருக்கும் ஆபத்துகளையும் எண்ணியபோது மனோகரனின் மனம் கலங்கியது. அதே வேளை வசந்தி பற்றிய செய்தி பரவலாகு வதையும் நினைத்து ஓரளவு பீதியடைந்தான்.

காலையில் முரளி வந்து, அமைதியாகத் தேறிவந்த தன் மன நிலைகளைக் கலக்கியடித்து விட்டதாகவே மனோகரன் எண்ணிக்கொண்டான். அதே வேளையில் சிறையிலிருந்த நண்பன் நாதனும் அவனது மனவெளியிலே முகங்காட்டத் தவறவில்லை.

# 33

மனோகரன் அன்று மாலை வசந்தியைக் கண்டபோது நெஞ்சு கிறுகிறுக்கவே செய்தது. முரளி ஏற்படுத்திய களங்கமும் அதிர்ச்சியும் இன்னும் மனதை ஓரளவு அலட்டிக் கொண்டிருந்தது' ஆயினும் அவளது ஸ்பரிசம் ஏற்பட்டதும் ஒரு கணத்தில் யாவையும் மறந்து விட்டான்.

அவனைப் போலவே அவளும் சிந்தனையாலோ ஓட்டல் வேலையினாலோ சோர்ந்தேயிருந்தாள். ஆயினும் சோர் வைச் சிறிதும் காட்டாது நடிப்பதிலும், அவனுக்கு எவ் வேளையும் வருத்தம் ஏற்படுத்தாத விதமாக நயமாகப் பேசுவதிலும் அவள் வல்லவளாகவே இருந்தாள் இவற்றை யெல்லாம் கூட ஓட்டலில் சொல்லித் தருகிறார்களோ அல்லது இவளாகவே கற்றுக்கொண்டாளோ என்று எண்ணிக்கொண்டான்.

அவனுக்கு வேலை கிடைத்ததில் வசந்தி பெரிய நிம்மதி யடைந்திருப்பதாக அவளின் பேச்சுகளிலிருந்து தெரிந்தது.

''புதிய இடத்தில் வேலை எப்படி?'' வசந்தி கேட்டாள்.

'முந்திய இடத்திலும் பார்க்க இவ்விடம் எல்லா வகை யிலும் இதுவரை நல்லதாகவே இருக்கிறது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்த வேலையையும் விட்டுவிட மாட்டீர்களே.''

சிரித்துக்கொண்டே வசந்தி சொன்னாள்.

''இனிமேல் அடிமை வேலை யென்றாலும் விட்டுவிட முடியாது''

''எனக்காகச் சொல்லுகிறீர்களா?''

''எல்லோருக்குமாகத்தான். வேலையில்லாத காலத்தில் பட்ட துன்பங்கள், கடன்கள் எல்லாவற்றின் அனுபவங்களையும் வைத்தே சொல்லுகிறேன்.''

''உங்களுக்கு வேலைக்கு அழைத்த கடிதத்தில் குறிப்பிட்டதிலும் பார்க்க இங்கே கூடிய சம்பளம் தருவார்களாம்.''

'ஏன் அப்படியெல்லாம் தரப்போகிறார்கள்?''

சந்தேகத்துடன் மனோகரன் கேட்டான்.

''நீங்கள் வேலையை விட்டுப் போய் விடாமலிருக்க.''

வசந்தி சிரித்துக்கொண்டே சொன்னாள்.

'எங்க மானேஜரைக் கொண்டே முன்னர் சிபார்சு செய்வித்தேன். பின்னரும் உறுதிப்படுத்தப் போன் செய்யும் படி வேண்டினேன். அப்போயின்மென்ட் லெட்டரெல்லாம் தயாராகி விட்டதாக உங்கள் டைரக்டர் சொல்லி, நபர் நல்ல வேலையாள் ஆனால் கலகக்காரன் என முந்திய கம்பெனியின் ரிப்போட் இருந்ததையும் பற்றிச் சொன்னாராம். 'சம்பளத்திற்காகக் கலகம் செய்திருப்பான் கொஞ்சம்கூடக் கொடுத்து விடுங்கள்' என்று மானேஜர் பகிடியாகச் சொல்லி விட்டாராம் டைரக்டரும் டெலிபோனில் சிரித்துவிட்டு நிச்சயம் கவனிக்கிறேன் என்று சொன்னாராம்.''

வசந்தி விரிவாகக் கூறினாள்.

' எப்படியும் நீ கெட்டிக்காரிதான்.''

மனோகரன் அவளது முதுகில் தட்டிக்கொண்டே கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓட்டல் வேலையை ஒரிரு மாதத்தில் விட்டுவிடுவேன் உங்கள் சம்பளத்துடனேயே சிக்கனமாக என்னால் சரிக்கட்ட முடியும். மானேஜர் சொன்னபடி ஐநூறு ரூபாவாதல் சம் பளம் உயர்த்தித் தருவார்கள். உங்க வீட்டையும் நீங்கள் கவனிக்கலாம். அதற்கு மேலும் செலவுக்குப் பணம் வேண்டு மாயின் வேறு இடத்தில், உங்களுக்குப் பிடித்த இடத்தில் வேலை எடுத்துத் தாருங்கள். அது உங்கள் பொறுப்பு.''

''இப்படியெல்லாம், ஓட்டலில் நல்ல சம்பளம் பெற்று சுற்றித்திரிந்து பணங்களைச் செலவழித்துப் பழகிவிட்டு எப்படித்தான் எனக்குச் சமைத்துப் போடுவதையே செய்து கொண்டு இருக்கப் போகிறாயோ தெரியவில்லை.''

'அது என் விருப்பத்தைப் பொறுத்த விஷயம்''

தற்போது உரையாடல் யாவும் குடும்பம் நடத்துவதைப் பற்றியே இருந்தது

எப்படியும் இரண்டு மூன்று மாதத்தில் திருமணம் செய்து குடும்பம் நடாத்துவது என மனோகரன் எண்ணிக் கொண் டான்.

# 34

தன் முதல் சம்பளத்தில் வசந்திக்கு ஒரு அன்பளிப்புச் செய்யவேண்டும் என வேலையில் சேர்ந்ததுமே மனோகரன் எண்ணியிருந்தான். அன்று மாலை ஏழு மணிவரையில் வசந்தியைச் சந்திப்பதாக இருந்தது. அலுவலகத்திலிருந்து நேரடியாக கடைத் தெருவிற்குச் சென்றான்.

கடைகளில் எல்லாம் வெளிநாட்டுப் பண்டங்கள் நிரம்பி யிருந்தன. தெருவோரத்தில் நின்று ஷோ கேசுகளில் அலங் கரித்த பொருட்களைப் பார்த்தபடியே மொய்த்தபடி மக்கள் கூட்டம். தெருக்களில் வாகனங்கள் ஓட இடமின்றி ஆங்காங்கே தேங்கி நின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுப்பிட்டியிலுள்ள சுங்கத்தீர்வையற்ற சந்தையை அவன் அடிக்கடி பஸ்ஸில் வரும்போது பார்ப்பதுண்டு. அங்கு நுழைவதற்காக டாலர், ஸ்ரேலிங் பணங்களுடன் வெளிநாட்டாரும் வெளிநாடுகளில் உழைக்கும் இலங்கையரும் நீண்ட கியூவரிசையில் நிற்பதைப் பார்த்துள்ளான். நுகர் பண்டவெறியா, விளம்பரங்களால் ஏற்படும் தாக்கமா சமுதாயத்தைச் செல்கிறது என்ற சந்தேகங்களும் அவன் மனதில் அடிக்கடி ஏற்படுவதுண்டு.

கடைத்தெருவில் உள்நாட்டுப் பணத்துடன் கூடிய மக்கள் குவிந்திருந்தனர். பெரும்பாலும் பெண்களே. ஒவ்வொரு கடையாக மனோகரனும் ஏறி இறங்கினான்.

''உலகத்திலேயே உள்ள ஒருசில கட்டுப்பாடற்ற இறக்குமதிச் சந்தையில் கொழும்பும் ஒன்றாகி விட்டது அமெரிக்கா, ஜப்பான், பிரிட்டன், ஜெர்மனி போன்ற முதலாளித்துவ நாடுகளிலேயே இறக்குமதிக் கட்டுப்பாடுகள் உள்ளன. எம் நாட்டில் எதுவும் கிடையாது. எமது சிறு கைத்தொழில்களெல்லாம் மூடப்பட்டுவிட்டன'' என அசோகன் அடிக்கடி கூறுவது அவன் நினைவில் வந்தது.

உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் மிகக் குறைவாகவே இருந்தன. அவற்றை ஒதுக்குப் புறமாக வைத்திருந்தனர்.

''இவை யப்பான் நைலெக்ஸ், இவை லோக்கல்'' என கடைக்காரர் சேலைகளைப் பிரித்துக் காட்டினர். தனக்கும் வசந்திக்கும் பிடிக்கக்கூடியதான சேலையைத் தேடி பல கடைகளில் ஏறி இறங்கினான். இருநூற்றைம்பது ரூபாவிற்கு மேலாக சேலைக்கு செலவிட முடியாத பட்ஜெட்.

1977-க்கு முன் ஒருதடவை கொழும்பிற்கு வந்தபோதும் மெயின் வீதியிலுள்ள அதே பிரபல கடைகளில் அவன் தங்கைமாருக்குத் துணி வாங்குவதற்காக ஏறி இறங்கியதுண்டு. அவ்வேளை உள்நாட்டுத் துணிகளே குவிந்திருந்தன. வெளிநாட்டுத் துணிகள் அரிதாக இருந்தன. அவையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்து கூட்டுறவுக் கடைகளில் மலிவான விலையில் கிடைத்து வந்தன. கட்டுப்பாடுகள் உடைந்து வெள்ளம் பெருக்கெடுத்ததுபோல புதிய சந்தை இருந்தது புதிய வெள்ளத்தால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளையும் எண்ணிப் பார்த்தான்.

அக்காலத்தில் காண அரிதாக இருந்த பண்டங்களெல்லாம் சாதாரண கடைகளிலேயே நிரம்பி வழிந்தன. முன் பஸ்கள் ஓடிய மெயின் வீதியின் நடுத்தெருவெல்லாம் புதிய கடைகள்.

ஒவ்வொரு கடையிலும் நூற்றுக்கு மேற்பட்ட சேலைகளைக் காட்டினர் அவன் ஊன்றிக் கவனித்த சேலைகளையெல்லாம் 'நல்லாயிருக்கிறது. எவருக்கும் பிடிக்கக்கூடியது எடுத்துக் கொள்ளுங்கள்' என்று கூறும் விற்பனையில் தேர்ந்த இளம் பெண்கள்.

நூறு சேலைகளுக்கு மேலாகப் பார்த்தபின் 'பிங்' கலரில் பெரிய ரோசா மலர்கள் அச்சிட்ட ஒரு சேலையை வாங்கிக் கொண்டான்.

பொழுது போக்காக கடைத்தெருவையும் பெண்களது பண்ட வெறிகளையும் வேடிக்கை பார்த்துக் கொண்டே நடந்தான்.

நேரத்தைச் சரி பார்த்து காலிமுகத்திடரை நோக்கி நடந்தான் மனோகரனது கையில் பார்சலை அன்று கண்டதும் ஏதோ·பரிசு வைத்திருக்கிறான் என்பதை வசந்தி ஊகித்துக் கொண்டாள். அவள் எதுவும் கேட்கவில்லை.

''எவராவது ஏதாவது கொடுத்தால் நீங்க தாங்யு சொல்வீர்கள்தானே.''

''தமிழர் வழக்கப்படி அப்படிக் கூறுவதில்லை. நெஞ்சால் அல்லது உதட்டுச் சிரிப்பால் காட்டிக் கொள்வோம்.''

மனோகரன் எதிர்பார்த்தது நடவாத போலும் ''இது என் முதற் பரிசு'' எனப் பார்சலைக் கொடுத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசு பெறுவதை, அதற்காக அவன் பணம் செலவு செய்வதை அவள் விரும்பாதபோதும் வெளியே காட்டிக் கொள்ளாது பெற்றுக் கொண்டாள். பார்சலைச் சிறிது பிரித்து சேலையின் 'பிங்' கலரைப் பார்த்து விட்டு கூறினாள் :

''ஓ வொண்டர்புல். மை பேவரிட் கலர், எப்படி உங்களுக்குத் தெரிந்தது?''

''உன்னோடு இத்தனை மாதம் பழகுகிறேனே. இதையும் அறியாது இருப்பேனா?''

''உங்கள் அம்மா தங்கைமாருக்கும் ஏதாவது வாங்கி அனுப்புங்கள். நானே நாளைக்கு ஷொப்பிங்போய் வாங்கி வந்து தருகிறேன்''

மனோகரன் எதிர்ப்பு எதுவும் சொல்லவில்லை.

வசந்தி தன் வீட்டார்மேல் காட்டும் ஆர்வம் அவனையே வியப்பில் ஆழ்த்தியது தன் தாய், பாட்டி பற்றி அவள் அத்தனை ஆர்வம் காட்டுவதில்லை, அதுவும் அவனுக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

''உங்க அம்மா, பாட்டிக்கு நான் ஒன்றும் வாங்கப் படாதா?''

மனோகரன் கேட்டான்.

''அவர்களுக்கு எல்லாமிருக்கிறது. ஏதாவது தேவைப் பட்டால் பிறகு பார்க்கலாம்''

'கலியாணத்தன்றுதான் அம்மா, பாட்டியைப் பார்க்க அழைத்துச் செல்வாயா?''

மனோகரனின் மனதில் நீண்ட நாட்களாக அடக்கி வைத்திருந்த வினா திடீரென வெளியே வந்தது,

''நாங்க வேறு இடம் எடுத்தல்லவா தனிக் குடித்தனம் நடத்தப் போகிறோம். அவர்களைப் பார்க்க வேண்டிய வேளை நான் அழைத்துச் செல்வேன் தானே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோகரன் அவளின் பதிலைக் கேட்டு அதிர்ச்சியடைந்தான். இதுவரை காலமும் அவளுடைய வீட்டில் தாய், பாட்டியோடு குடித்தனம் நடத்துவதைப் பற்றியே கற்பனை செய்திருந்தான். இரண்டு அறையுள்ள வசதியான வீடு என்று வசதி கூறியிருந்தாள். வசந்தி இப்படி ஒரு திட்டம் வைத்திருப்பதை அவன் என்றுமே ஊகித்தும் பார்கக வில்லை. சிறிது நேரம் சிந்தனையோடு மௌனமாக இருந்தான்.

''ஏன் மனோ. உங்களுக்குப் பிடிக்காததைச் சொல்லி விட்டேனா? முன்னரே என் அம்மாவைப் பற்றிச் சொல்லி யிருக்கிறேன். அவர்களுக்கு எல்லாம் இருக்கிறது. ஆனாலும் நான் ஒட்டல் வேலையை விடுவதை ஒருபோதும் விரும்ப மாட்டா. அதுவும் உங்களோடு வாழ்வதற்காக விடுவதென்றால் உங்களையும் வெறுப்பா அதை என்னால் பொறுக்க முடியுமா?''

மனோகரனின் கன்னங்களை வருடியபடியே கூறினாள். மேலும் சொன்னாள்:

''நாங்கள் இருவரும் தனிய ஒரு வீட்டில் வாழ்வதுபோல் அங்கே வாழ முடியுமா? உங்களுக்குப் பிடித்ததையெல்லாம் நான் செய்வேன். சாப்பாடு கூட அம்மாவிற்குப் பிடித்ததை அம்மா செய்து சாப்பிடட்டும். உங்களுக்குப் பிடித்ததை யெல்லாம் நான் செய்து தருவேன். தனிய நாங்கள் அந்நியோன்யமாக எவருக்கும் பயப்படாது உரிமையோடு வாழலாம்''

வசந்தி கூறியதில் உண்மை இருப்பதை அவன் உணர்ந் தான். ஒரு தாய் இப்படிச் சுயநலமுள்ளவளாக இருக்க முடியுமா? பெரும்பாலான தாய்மார் இப்படித்தான் இருப் பார்களா?

''இன்றைய சமூகத்தில் பெரும்பாலானவர்களிடம் சுய நலம் இருக்கிறது. சிலர் வெளியே காட்டிக் கொள்வதில்லை சிலர் நேரடியாகக் காட்டிக் கொள்கிறார்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசோகன் ஒரு தடவை கூறியது அவன் நினைவில் வந்தது.

வசந்தி கூறியவற்றை அவன் ஆமோதித்த போதும் திருமணம் பற்றி அவன் இதுவரை நாள் கொண்டிருந்த கருத்தும் முரண்படுவதைக் கண்டான், அவளது பேச்சின்படி தாயில்லாமலே திருமணம் போலத் தெரிந்தது.

அவளது தாயில்லாது குடும்பமில்லாது திருமணமா? என் குடும்பத்தவருக்கு மட்டும் அழைப்பா? வீட்டார் என்ன நினைப்பார்கள்? வெறும் பதிவுத் திருமணத்துடன் சடங்கு யாவையும் முடித்துவிடுவதா? தாலி எதுவும் கட்டவேண்டிய தில்லையா? மதச் சடங்குகள்? வசந்தி என்றும் மதத்தைப் பற்றிக் கவலைப் பட்டதாகவோ, கோவில்களுக்குச் செல்வ தாக அவள் கூறியதாகவோ நினைவில்லை.

''வசந்தி, நீ கூறுவதைப் பார்த்தால் திருமணம் என்று என் பெற்றார் எவருக்கும் சொல்லி அழைத்து வரமுடியாது. அப்படியானால் வெறும் பதிவுத் திருமணம் மட்டும் செய்து விட்டுத் தனிக்குடித்தனம் நடத்தலாம் என்று சொல்லு கிறாயா?''

அவளது உள்ளக் கிடக்கையை ஓரளவு அறிந்தவன் போலவும் ஏற்றுக்கொள்பவன் போலவும் காட்டும் விதமாகக் கூறினான்.

'மனோ, பதிவுத் திருமணம் கூட எதற்கு? நான் உங்களைக் காதலிக்கிறேன். உங்களை நம்புகிறேன். உங்களுடன் குடும்பம் நடாத்தத் தயாராயிருக்கிறேன். சட்ட பூர்வமாக இதைச் செய்யவேண்டுமா? அப்படியானால் உங்கள் மேல் எனக்கு நம்பிக்கை இல்லை என்றே அர்த்தம். உண்மை அதுவல்ல.

வசந்தியின் தர்க்க ரீதியான நயமான பேச்சு அவனைப் பிரமிக்கச் செய்தது. இத்தகைய கருத்தை அவன் என்றும் முன்னர் கேட்டதில்லை. கருத்து சரியாக, நியாயமாகத் தெரிந்த போதும் வழமைகளில் ஊறியிருந்த அவனால் நடைமுறையில் ஏற்பது சிரமமாகவே இருந்தது. அவளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து அவனது சிந்தனையைத் தாக்கிக் கொண்டிருந்தது. அவ்வேளை வசந்தி மேலும் சொன்னாள்:

"மனோ, நான் உங்களை எவ்விதமாயினும் வற்புறுத்தியோ கட்டுப்படுத்தியோ குடும்பம் நடாத்த வரும்படி கேட்கவில்லை. என்னோடு வாழ்ந்து பாருங்கள், என்னையோ எங்கள் குடும்பத்தாரையோ உங்களுக்கு என்று பிடிக்கவில்லையோ நீங்கள் சுதந்திரமாகப் புறப்பட்டுப் போகலாம். வேறு எந்தப் பெண்ணையும் திருமணம் செய்து கொள்ளலாம். பதிவுத் திருமணம் செய்தால் கூட பின்னர் மூன்றாவது நபரான நீதிபதியிடம் சென்று இல்லாத பொய்களையெல்லாம் கூறியா நாங்கள் சட்டத்தின் பிடியிலிருந்து விடுதலை பெறவேண்டும்."

இப்படி யெல்லாம் பேச வசந்தி எங்கே கற்றுக் கொண்டாள்? வெறும் வாய்ப் பேச்சு மட்டுமல்ல, செயலாற்றவே துணிந்து வருகிறாளே என மனோகரன் மேலும் மேலும் வியப்படைந்தான்.

"வசந்தி, நீ கூறுவதிலெல்லாம் நியாயம் இருக்கிறது. பெண் விடுதலை பேசுபவர்கள் கூட இத்தனை துணிவாகப் பேசுவதேயில்லை. பேசினாலும் செயலாற்ற முன் வரமாட்டார்கள்"

"மனோ, வேறும் ஒன்றை நான் கூறவேண்டும், எங்கும் பெண்கள் தான் சட்டத்தால் ஆண்களைப் பிணைக்கப் பார்ப்பதைக் கண்டிருப்பீர்கள். நான் அதை விரும்பவில்லை. திருமணம் என்பது ஒருவரை ஒருவர் சட்டத்தால் கட்டி வைப்பதையோ, அடிமையாக்குவதையோ நான் தவறாகக் கருதுகிறேன். உங்கள் பெற்றாரைச் சமாதானப்படுத்த வேண்டின் பதிவுத் திருமணம் செய்ததாக நீங்கள் கூறலாம். உங்கள் நண்பர்களைத் திருப்திப்படுத்த பதிவுத் திருமணத்திற்கு என்னையும் அழைப்பதானால் என் விருப்பமில்லாமல் அங்கு வற்புறுத்திக் கையெழுத் திடுவதாகவே இருக்கும்."

மனோகரனால் எதுவும் பேசமுடியவில்லை. அவளது தர்க்க ரீதியான நியாயங்களைப் புரிந்துகொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை தன் நண்பர்களிலோ சமுகத்திலோ அசோகன் ஒருவனால் தான் புரிந்துகொள்ள முடியும் எனவும் எண்ணிக் கொண்டான். வசந்தியின் கதையை முதல் தடவை கூறிய போது காதல் பற்றி அசோகன் சொன்னதும் அவள் நினைவில் வந்தது. காதல் அல்ல சட்டப் பிணைப்புத்தான் குடும்பங்களை இணைத்து வைத்திருக்கிறது என்று கூறினான்.

இங்கே அவனுக்குச் சவால் விடுவதாக வசந்தி கூறுகிறாள். அசோகனுக்கு நாங்கள் நிருபித்துக் காட்ட வேண்டும் எனவும் அவனது மனம் எண்ணியது வசந்தி என்ற பெண்ணைப் பற்றி முழுமையாக அன்று வரை அறிந்து கொள்ளத் தவறியது தன் தவறா, அவளே வேண்டுமென்றே இவற்றைக்கூறாது விட்டாளா. இவள் எத்தகைய புதுமைப் பெண் என்றெல்லாம் எண்ணி அவனது மனம் அன்றிரவு முழுவதும் குழம்பிக் கொண்டிருந்தது. வழமைக்கு மாறாக அவள் கருத்துகள் இருந்தபோதும் அவளது தர்க்க நியாயங்களை எவராலும் எதிர்க்க முடியாது என்பதையும் எண்ணிக் கொண்டான்,

# 35

வசந்தியின் முடிவுகளைப் பற்றிப் பல நாட்களாக இரவும் பகலும் மனோகரன் சிந்தித்தான். எல்லா வகையிலும் அவளது கருத்துகள் சரியாகத் தோன்றின. அது மட்டுமல்ல வசந்தியின் முடிவுகள் நடைமுறையிலும் அத்தனை சிரமமின்றி நிறைவேற்றக் கூடியதாகவும் இருந்தன குறைந்த வாடகையில் இருப்பிடம் ஒன்று தேடுவதே பிரச்சனை அந்தப் பொறுப்பையும் அவளே பொறுப்பெடுத்து நிறைவேற்றி விடுவாள்,

சாதி, குடும்ப ஏற்றத்தாழ்வுகள், சீதனம், சாதகம் ஆகியன தந்தையார் எழுப்பக்கூடிய பிரச்சனைகள் என்பதை அவன் அறிவான். பின்னர் திருமண நாள் பார்ப்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பிதழ்கள் அனுப்புவது, சடங்கு முறைகள், வீண் விரயச் செலவுகள் எதுவுமே இங்கு ஏற்படப் போவதில்லை.

பல நாட்கழிந்த பின் பதிவுத்திருமணம் செய்து குடும்பம் நடத்துவதாக வீட்டுக்கு எழுதிவிடலாம். அப்பாவின் கோபம் ஆறிய பின்னர் கிராமத்துக்கு அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தி விடலாம். வசந்தி தன் வீட்டாரை ஒரே நாளில் வென்று விடுவாள். மனதில் திட்டம் யாவும் போட்டு விட்டான்

எப்படியும் இதன் முன்னர் கிராமத்துக்குச் சென்று பெற்றாரையும் தங்கைமாரையும் ஒரு தடவை பார்த்து, நீண்டகாலம் வராததற்கு சமாதானம் கூறிவர முடிவு செய் தான் ஆனால் நினைத்தபடி அங்கிருந்து புறப்பட முடியாது தடைகள் ஏற்பட்டன.

யாழ்ப்பாணத்தில் எக்ஸ்பிரஸ் வண்டி ஒன்று தேவ னின் தலைமையிலான ஈழ விடுதலை இராணுவ இளைஞர் களால் எரிக்கப்பட்டதை ஒட்டி ரெயில் வண்டிகள் வடக்கே ஓடுவது நிறுத்தப்பட்டது, ஆறுகோடி ரூபா அரசுக்கு நஷ்ட மானது என செய்திகள் கூறின.

அதைத் தொடர்ந்து காங்கேசன் துறையிலுள்ள சீமெந் துத் தொழிற்சாலையிலுள்ள டைனமையிற்றுகள் யாவும் புலிப்படை சார்ந்த இளைஞர்களால் திருடப்பட்டுவிட்டன அவை எங்கே, எவ்வேளை வெடிக்கும் என அரசே அஞ்சிக் கொண்டிருந்தது.

ஈழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சார்ந்த இரு வீரர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். மூன்று மாணவியர் சிங்கள இராணுவத்தினரால் கற்பழிக்கப் பட்டனர்.

இவற்றிற்கு வஞ்சம் தீர்ப்பதாக யூலை 23 சனி இரவு யாழ் நகர் தெருவில் சென்ற இராணுவ டிரக்கிற்கு 'டைன மயிட்' வைக்கப்பட்டது. 13 சிங்கள ராணுவ வீரர்கள் அன்றிரவு கொல்லப்பட்டனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குப் பழிவாங்குவதற்காக இராணுவத்தினர் மறு நாள் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் அப்பாவி மாண வர்கள் பொது மக்களாக 52 பேரைச் சுட்டுக் கொன்றனர்.

அதே ஞாயிறு இரவு கொழும்பு கணத்தை மயானத்தில் இறந்த இராணுவத்தினரை அடக்கம் செய்வதற்கென வந்த ஆயிரக்கணக்கான சிங்களக் காடையர் தமிழர்களின் கடை களையும் வீடுகளையும் கொள்ளை யடித்து தீ வைக்கத் தொடங்கினர்.

மறுநாளான திங்கட் கிழமை கொழும்பிலுள்ள தமிழர் கட்குச் சொந்தமான தொழிற்சாலைகள், வியாபார நிலை யங்கள், சிறுகடைகள், ஓட்டல்கள், வீடுகள், வாகனங்கள் தீயிடப்பட்டன; கொள்ளை யடிக்கப்பட்டன தமிழர்கள் பட்டப் பகலில் தெருக்களில் வெட்டிக் கொல்லப்பட்டனர், உயிரோடு எரிக்கப்பட்டனர். உடைக்கப்பட்ட கடைகளி லிருந்த பண்டங்களை தொழிலாளர் உட்பட காடையர்களும் ஏழை மக்களும் எடுத்துச் சென்றனர். அரிசி, சீனி, கோதுமை, மாவுமட்டுமல்ல புடவைகள், தைத்த ஆடைகள், தகர உணவுகள், வாசனைப் பொருட்கள், டி வி. ரேடியோ ரெக்கோடர், எலெக்டிக் பொருட்கள் முதலான நுகர் பண்டங்களையும் எடுத்துச் சென்றனர்.

அன்று மாலை வெலிகடை சிறையிலிருந்த தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் முதலான முப்பத்தைந்து ஈழ விடுதலைப் போராளிகள் சிங்கள இனவெறிக் கைதிகளால் மிருகத்தன மாகக் கொல்லப்பட்டனர்.

அகதிகள் முகாம்களில் பல்லாயிரக் கணக்கானவர் புகலிடம் தேடினர்.

செவ்வாய் கிழமையன்று கண்டி, பதுளை நகரங்களில் தமிழர்களது வீடுகள், கடைகள் தீயிடப்பட்டன. கொலைகள் கொள்ளைகள் நடந்தன. பெருந் தோட்ட லாயங்கள் எரிக் கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் கிழமை நாவலபபிட்டி, நுவரெலியா, பண்டாரவளை, மாத்தளை நகரங்களில் தமிழர்களதும் மலையகத் தமிழர்களதும் வசிப்பிடங்கள், கடைகள், வீடுகள், கொள்ளையடிக்கப்பட்டு தீயிடப்பட்டன. நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டனர். அன்று மாலை மீண்டும் வெலிகடை சிறையிலிருந்த பதினெட்டு ஈழ விடுதலைப் போராளிகள் சிங்கள வெறியர்களால் கொல்லப்பட்டனர். கொழும்பில் மீண்டும் கடைகள், வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப் பட்டன.

வியாழக்கிழமை தலவாக்கொலை, பதுளை நகரங்களில் சிங்கள இன வெறியர்களின் அட்டகாசங்கள் மீண்டும் நடைபெற்றன. அன்றிரவு டி.வி. ரேடியோவில் ஜனாதிபதி பேசும்போது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எவ்வித அனுதாபமும் தெரிவிக்கவில்லை. சிங்கள மக்களின் உணர்வுகளை தற்போதுதான், தான் புரிந்து கொண்டிருப்பதாகவும் கூறினான்.

வெள்ளிக்கிழமை மீண்டும் கொழும்பிலும் சுற்றி வர இருந்த பகுதிகளிலும் கொலை, கொள்ளை, தீ வைப்புச் சம்பவங்கள் நடைபெற்றன.

இந்திய வெளி விவகார அமைச்சர் கொழும்பிற்கும் கண்டிக்கும் விஜயம் செய்தார். கொழும்பிற்கும் புலிப்படையினர் வந்து விட்டதாக தெருக்களில் நின்ற சிங்களவர், காடையர் உட்பட பாதுகாப்புத் தேடி ஓடத் தொடங்கினர்.

சனி பகலும் இரவுமாக ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்தது. இடதுசாரிக் கட்சிகள் தடை செய்யப்பட்டன. பலர் கைது செய்யப்பட்டனர்.

ஞாயிறு முழுவதும் ஊரடங்குச் சட்டம்.

திங்கட் கிழமை நிலைமைகள் ஓரளவு சீரடையத் தொடங்கின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானூறு பேர் வரை கொல்லப்பட்டதாக அரசு அறிவித்தது. அகதிகள் இரண்டு இலட்சம் வரையில் முகாம்களில் அடைக்கலம் புகுந்தனர்.

செவ்வாய் கிழமை தமிழ்நாடு பூராவும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக வேலை நிறுத்தம் நடைபெற்றது.

## 36

அசோகன், மனோகரன் உட்பட அவ் விடுதியிலிருந்த தமிழர்களை வெளியே புறப்பட வேண்டாம் என அன்சாரி, நியூட்டன் சில்வா சேர்ந்த பிற தொழிற் சங்கங்கள் சார்ந்தவர்கள் தடுத்துப் பாதுகாப்பாக வைத்திருந்தனர். எவராவது சிங்களக் காடையர்கள் வந்தால் தாக்குவதற்கும் அவர்கள் தயாராக இருந்தனர்.

விடுதியின் மாடியில் ஏறி நின்று கொழும்பு மாநகரம் ஆங்காங்கே எரிந்து புகை கக்குவதை அசோகனும் மனோகரனும் பார்த்துக் கொண்டு நின்றனர்.

ரேடியோ செய்திகளைவிட கொலை, கொள்ளை, தீ வைப்பு. கற்பழிப்புச் சம்பவங்கள் பற்றிய பயங்கர செய்திகள் அன்சார், நியூட்டன் சில்வா முதலியோர் மூலம் வந்து கொண்டிருந்தன.

கொள்ளையடித்த பொருட்களை சிறுவர் தொடக்கம் முதியவர் ஈறாக தெருக்களில் சுமந்து கொண்டு செல்வதும் மாடியிலிருந்து பார்க்கும்போது தெரிந்தது.

பொலிசாரும் இராணுவத்தினரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும் காண முடிந்தது. அவர்களும் அதே தெருக்களிலேயே நடமாடிக் கொண்டிருந்தனர். தமிழர்களை சிங்களப் பகுதிகளிலிருந்து விரட்ட அரசு யந்திரமும் இணைந்து திட்டமிட்டுச் செய்யப்பட்ட சதிபோல யாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ந்து கொண்டிருந்தன. தமிழ் ஈழப் போராளிகளான பயங்கர வாதிகளின் செயல்களுக்குப் பதிலடியாகவே இவை என்பதே அரசினதும் விளக்கமாகும்.

''ஏழை மக்கள் சந்தர்ப்பம் கிட்டும்போது கிடைக்கும் பொருட்களைப் பறித்தெடுப்பது வியப்பல்ல. தொழிலாளர் கூட கொள்ளையில் ஈடுபட்டிருந்ததை புறக் கோட்டையில் பார்த்தேன். புரட்சிக்காலம் போலிருந்தது''

அன்சாரி சொன்னான்.

''புரட்சி என்றால் நாங்கள் சொத்துகளையோ பண்டங் களையோ எரிக்க விடமாட்டோம். தமிழரது கடைகள் என்று மட்டும் பாராது சிங்களவர், முஸ்லிம்களது கடைகளையும் திறந்து விட்டிருப்போம்''

நியூட்டன் சில்வா கூறினான்.

''இனவெறியில் தேசியச் செல்வங்களையே எரித்து விட்டார்கள் கொள்ளையடித்தாலும் பண்டங்கள் நாட்டி லேயே இருக்கும். ஏழைகளுக்கும் பயன்படும். எரிப்பதால் யாருக்கு லாபம், லட்சக்கணக்கானவர்கள் வேலையையே இழக்கப் போகிறார்கள். இனவெறியின் கொடுமையைப் பார்க்கிறோம். தொடர்ந்து பார்க்கப் போகிறோம்''

''வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு தமிழர்களே காரணம். அதுபோக சிங்கள சிறீலங்காவில் பங்குவேறே கேட்கிறார்கள். பயங்கரவாதப் புலிகள்தான் எல்லாக் கஷ்டங்களுக்கும் காரணம் என்று ஆட்சியிலுள்ள அரசியல் தலைவர்களே சிங்கள மக்களிடை மட்டுமல்ல பொலிஸ், இராணுவத்தினரிடையேயும் பிரசாரம் செய்தார்கள். கடை சியில் எல்லோருக்கும் சேர்ந்து தாமே அழிவையும் தேடிக் கொண்டார்கள்''

நியூட்டன் சில்வா மனவேதனையோடு கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பூர்ஷ்வா ஜனநாயக உரிமைகள் சில இருந்தன. அவை யாவும் அழிந்து பாசிச ஆட்சி ஏற்பட்டுவிட்டது. எதிர்கட்சிகளே இல்லை. பத்திரிகைகள் யாவும் அரசின் ஊது குழல்களாகின. தொழிற்சங்க உரிமைகளெல்லாம் 80 யூலையில் நாம் நடத்திய அடையாள வேலை நிறுத்தத்தோடு பறிபோய் விட்டன.'

''மக்களது பேச்சுச் சுதந்திரம். எழுத்துச் சுதந்திரமெல்லாம் பறிபோய் விட்டது. பொலிசார், ராணுவ ஆட்சியே தற்போது நடைபெறுவதைக் கண்டு கொண்டிருக்கிறோம். அரசு யந்திரமே காடையர்களுடன் சேர்ந்து அழிவு வேலையில் ஈடுபடுவதைக் கண்டோம். பாசிச ஆட்சிவளர தேசிய இனப்பிரச்சனைகள் மேலும் மேலும் மோசமடைந்து வருவதையும் பார்க்கிறோம்.''

அசோகன் தன் கருத்தைத் தெரிவித்தான்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததால் பெரும்பாலான நேரமெல்லாம் அங்கு விவாதங்களும் அரசியல் ஆராய்வுகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தன.

சாப்பாட்டுப் பொருட்களுக்கு மிகவும் தட்டுப்பாடு இருந்து வந்தது. அன்சாரி, நியூட்டன் முதலியோர் வெளியே சென்று கிடைத்தவற்றை வாங்கிவந்தனர். எல்லோரும் பகிர்ந்து உண்டனர். தேனீர்மட்டும் தொடர்ந்து அங்கேயே தயாரித்து வழங்கப்பட்டது.

தொழிற்சங்கங்கள் மூலம் ஏற்பட்ட அரசியலுணர்வினால் அவ்விடுதியில் இனவெறி எதுவுமே தலை தூக்கவில்லை. கூட்டுணர்வினால் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி அனைவரும் வருத்தமே தெரிவித்தனர்; மனவேதனைப்பட்டனர். நாட்டை அழிவிற்கு இட்டுச் செல்லும் ஆட்சியாளர் மேல் ஆத்திரமடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 37

மனோகரனும் விடுதியைவிட்டு எங்கும் செல்லமுடிய வில்லை. அச்சத்தோடும் மனவேதனையோடும் யாவரும் நேரத்தைக் கழித்தனர், நடைபெற்ற விவாதங்களை மனோ கரனும் ஆர்வமோடு கேட்டான்.

மனோகரன் வசந்தியைப் பற்றியும் அவள் தாயார், பாட்டி பற்றியும் அடிக்கடி எண்ணிக் கவலைப்பட்டான்.

நாலு நாட்கள் கழிந்து ஊரடங்குச் சட்டம் பகலில் தளர்த்தப்பட்ட வெள்ளிக்கிழமையன்று அன்சாரியிடம் வசந்தி யின் வீட்டு டெலிபோன் நம்பரைக் கொடுத்து விசாரித்து வரும்படி கூறினான்.

''அந்த டெலிபோன் வேலை செய்யவில்லை.'' என மாலையில் அன்சாரி வந்து கூறினான். மனோகரனுக்கு அச்செய்தி மேலும் கவலையளித்தது.

அன்சாரி அன்று நேரில் தான் கண்ட பயங்கர சம்பவங் கள் சிலவற்றைக் கூறினான்.

''தமிழர் மூவர் வந்த ஒரு வான் மேல் பெற்றோலை ஊற்றித் தீவைத்து விட்டார்கள். அதை வேடிக்கை பார்த்த படி பல சிங்களக் காடையர் நின்றனர் அவர்களெல்லோரும் பௌத்த மதத்தவர்கள் என்ன கேவலம். தவச பத்திரிகை நிலையத்திற்கு முன்புறத்தில் நடுத்தெருவில் ஒரு பைய னைக் கொன்று பெற்றோல் ஊற்றித் தீ மூட்டி எரித்துக் கொண்டிருந்ததையும் கண்டேன். வெள்ளைக்காரப் பத்தி ரிகை நிருபர்கள் படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.''

உடல் சிலிர்க்கும் சம்பவங்களை வேதனையோடு அன்சாரி சொன்னான்.

நியூட்டன் சில்வா கூறிய மற்றொரு சம்பவம் இனவெறி யின் கண் மூடித்தனத்தைக் காட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பம்பலப்பிட்டி பெற்றோல் நிலையத்தருகே ஒரு கிழவரை தெருவிலேயே வெட்டிக் கொன்று விட்டார்கள். இரத்தம் வடிய இறந்து கிடந்த கிழவரின் தலைமேல் கூட்ட மாகச் சென்ற காடையர்களில் பலர் பெரிய கற்களைத் தூக்கி தலையில் வீசிவிட்டுச் சென்றதைப் பார்த்தேன். உலகில் மனிதாபிமானமே அழிந்துவிட்டதா? இவர்கள் பௌத்தர்களா? இறந்த பிண ஊர்வலங்கள் செல்லும்போது எழுந்து நின்று மரியாதை செலுத்துகிறார்கள் மிருகங்கள் கூட உணவிற்காக மட்டுமே காடுகளில் பிற மிருகங்களைக் கொல்லுகின்றன. தம் இனத்தை ஒரு போதும் கொல் வதில்லை. இங்கே மனிதன் மொழியைக் காரணமாக வைத்துக்கொண்டு மனிதனையே கொன்று தெருவில் போடுகிறான்.''

நியூட்டன் சில்வா மனிதப் பண்பாட்டின் அழிவைக் கூறி வேதனைப்பட்டான்.

''மலைநாட்டுச் செய்திகள் யூனியனுக்கு வந்தது. மலை யகத் தமிழர் தனிநாடு கேட்கவில்லை. அப்பொழுதும் அவர் கள்தான் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தோட்ட லாயங்களில் கஷ்டப்பட்டு உழைத்துத் தேடிவைத்த சிறு உடைமைகளையும் எரித்து விட்டார்கள். சில இடங் களில் கொள்ளையடித்து விட்டனர். கொலை செய்யப்பட்ட வர்களில் பெரும்பாலானோர் அவர்களே.''

அன்சாரி சொன்னான்.

''தமிழர்களை யெல்லாம் சிங்கள இனவெறியர்களே ஒன்றுபடுத்துவது மட்டுமல்ல நாட்டையும் பிரித்துக் கொண்டிருக்கிறார்கள்.''

நியூட்டன் சில்வா கூறினான்.

''தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கவேண்டிய தமிழ் தேசிய முதலாளிகள் சிங்களப் பகுதிகளிலேயே தொழிற்சாலைகளை நிறுவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தமிழரின் தனிநாடு கோரிக்கையை எதிர்த்தனர். தற்போது அவர்களது தொழிற்சாலைகளையும் எரித்து தமிழீழப் பகுதிக்குச் சென்று விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொள்ளும்படி அரசே செய்துள்ளது'' அசோகன் புதிய விளக்கம் கூறினான்.

# 38

வெலிகடைச் சிறையில் திங்கட்கிழமையன்று கொல்லப் பட்ட 35 அரசியற்கைதிகளின் பட்டியலைரேடியோவில் கேட்டபோது நாதனின் பெயர் கூறப்படுகிறதா என நெஞ்சு பதற மனோகரன் கேட்டுக் கொண்டிருந்தான். தங்கத்துரை, குட்டி மணி, ஜெகன் உட்பட தமிழீழ விடுதலைக் கைதிகள் அனைவரும் புறநகரிலுள்ள பனாகொடை இராணுவ முகாமி லிருந்து கொழும்பு நகரிலுள்ள வெலிக்கடைச் சிறைக்கு மாற்றப்பட்ட செய்தியை பத்திரிகையில் படித்திருந்தான்.

இராணுவத்தினரின் கொடுமையிலிருந்து தப்பி ஓரளவு கொடுமை குறைந்த இடத்திற்கு வந்துவிட்டார்கள் என மகிழ்ந்திருந்த வேளை சட்டியிலிருந்து கொதிக்கும் எண் ணெய்ச் சட்டியில் விழுந்த கதையாகிவிட்டது நாதனின் பெயர் கூறப்படவில்லை.

புதன்கிழமை மீண்டும் 18ப்பேர் கொல்லப்பட்ட செய்தி தெரிவித்தபோதும் பட்டியல் வெளிவரவில்லை. காந்திய இயக்கத் தலைவர் டாக்டர் இராஜசுந்தரம் 18ப் பேரில் ஒருவர் என்பது மட்டும் நண்பர்கள் மூலம் தெரிய வந்தது.

நான்கு நாட்கள் கழித்தே 18ப்பேரின் பெயரும் ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்தது. பதட்டத்தோடு படித்தபோது, ''மோகன் என அழைக்கப்படும் சுந்தரமோகன் நாதன் நிமலன் என அழைக்கப்பட்ட நல்ல நாதன்...'' அதன்மேல் மனோகரனால் படிக்கமுடியவில்லை. ஆயிரக் கணக்கானவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகொலை செய்யப்பட்டு நூற்றுக்கணக்கான பெண்கள் கற்பழிக்கப்பட்ட செய்திகளைக் கேட்டபோதும் சிறையிலே அநியாயமாக அரசியற் கைதிகளாக இத்தனைபேர் கொல்லப்பட்ட போதும் தன் நண்பன் ஒருவன் கொல்லப் பட்ட செய்தியை அவனால் தாங்க முடியவில்லை.

நண்பனைப் பற்றிய செய்திகளை, இளமைக்காலச் சம்பவங்களை, தன் மனம் ஆறுவதற்கு, அசோகனிடம் கூறிக் கொண்டிருந்தபோது அவனது நெஞ்சு அடைத்து விம்மி அழத் தொடங்கினான். அசோகன் பரவலாக நடைபெற்ற சம்பவங்களை யெல்லாம் கூறி ஆறுதல் கொன்னான்:

'அகதிகள் முகாம்களிலே லட்சக் கணக்கானவர் வீடு வாசலை இழந்துவந்து துன்பப்படுகிறார்கள். இறந்தவர் களின் குடும்பத்தவரின் கவலையை எண்ணிப்பார், வாழ்நாள் முழுவதும் தேடிய சொத்துக்களை ஒரே நாளில் இழந்து உடுத்த உடையோடு அகதிகள் முகாம்களில் உள்ளவர்களின் நிலையை சிந்தித்துப்பார் கொடுமைகளைக் கண்ட அவர் களின் மரண பயமே இன்றும் தீரவில்லை. நீ என்ன குழந்தைபோல் அழுகிறாய்''

அசோகனின் தர்க்க நியாயம் சரியாக இருந்தபோதும் மனோகரனால் முற்றாகத் தேறமுடியவில்லை. அவரவரின் துன்பத்தை அவரவரால் தான் உணரமுடியும், ஆற்றமுடியும் என மனோகரன் எண்ணிக் கொண்டான்.

பழைய நினைவுகள் மட்டுமல்ல இராணுவ முகாமில் நாதனைச் சந்தித்தபோது அவன் கூறிய சம்பவங்களும் நினைவில் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தன. 'நாங்கள் பாண்டவர்களல்ல' என்ற நாதனின் குரல் அவனது செவி யில் மட்டுமல்ல நெஞ்சிலும் ஒலித்துக் கொண்டிருந்தது.

தான் சார்ந்திருந்த இயக்கத்தோழர்களை சித்திரவதை செய்த இராணுவத்தினர் இருவரையும் பழிவாங்கும் பொறுப்பை நாதனும் அவனது மற்றொரு தோழனான கந்த சாமியும் ஏற்றுக்கொண்டனர். இரு இராணுவத்தினரையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்கண்டு பல நாட்களாக அவர்களது வழமையான நடமாட்டங்களை இருவரும் கவனித்து வந்தனர்.

அந்த இரு இராணுவத்தினருக்கு வரும் டெலிபோன் அழைப்புகளையும் தந்தித் தொடர்பு நிலைய நண்பர் மூலம் ஒற்றுக்கேட்க ஏற்பாடு செய்திருந்தனர்.

# 39

ஒரு நாள் மாலை யாழ்ப்பாணத்தை அடுத்த தீவுப் படகுத்துறைக்கு வரும் நண்பர்களை அழைக்க இரு இராணு வத்தினரும் ஜீப்பில் சென்றனர். இச்செய்தி கிட்டியதும் நாதனும் கந்தசாமியும் காத்திருந்து வான் ஒன்றில் அவர் களைத் தொடர்ந்தனர்.

படகுத் துறையில் யந்திரத் துப்பாக்கிகளை ஜீப்பில் வைத்துவிட்டு சாவதானமாக உரையாடிக் கொண்டிருந்த வேளை நாதனும் கந்தசாமியும் தாம் கொண்டு சென்ற யந்திரத் துப்பாக்கியால் இருவரையும் கணப்பொழுதில் தீர்த்துக் கட்டினர். அவர்களது யந்திரத் துப்பாக்கிகளையும் எடுத்துக்கொண்டு தமது வானில் மறைந்து விட்டனர்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டதும் துறையில் நின்ற பொது மக்கள் யாவரும் ஓடிவிட்டனர்.

அத்தோல்வியை ஒட்டி ஆத்திரமடைந்த இராணுவத் தினர் தம்மிடமிருந்த சந்தேகப் பேர்வளிகளின் பட்டியலை வைத்து பல இடங்களில் திடீர் சோதனைகள் நடத்தினர். அகப்பட்ட இடங்களில் இளைஞர்களை அடித்துத் துன்புறுத் தினர். ஓரளவு எதிர்ப்புக் காட்டிய இளைஞர்களைக் கைது செய்தனர். நண்பன் வீடொன்றில் தங்கியிருந்த வேளை எதிர்பாராது நாதனையும் இராணுவத்தினர் தமது நடவடிக் கைக்கு எதிர்த்து நின்றதற்காக வேறு சிலரோடு டிரக்கில் ஏற்றிச் சென்றனர். சாட்சியம் எதுவும் அவர்களால் பெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது என்பதை நாதன் அறிவான். இராணுவ முகாமில் விசாரணை நடத்திய பின் பெரும்பாலான இளைஞர்களை யும் விடுதலை செய்தனர்.

இறுதியில் ஒன்பது பேரைத் தடுத்து வைத்திருந்தனர். நாதனும் அவர்களுள் ஒருவனாக இருந்தான் "நீதான் கொலை செய்தாய்" என அனைவரையும் முதலில் வதைத் தனர்.

' நீ செய்யா விட்டால் கொலை செய்தவர்களின் பெயர் களைக் கூறு. இயக்கத்தில் இருப்பவரைச் சொல்லிக் கொடு. விட்டு விடுவோம்."

பின்னர் இவ்வாறு கூறி ஒன்பது பேரையும் சித்திரவதை செய்தனர். நகக் கண்களிடை ஊசியால் குற்றினர். நிர்வாணமாகப் படுக்க வைத்து குதிக்கால்களின் அடித்தனர். கன்னத்தில் ரிவால்வரை வைத்துப் பயமுறுத்தினர். சிகரெட்டால் உடலின் மென்மையான பகுதிகளைச் சுட்டனர்.

அப்பாவிகளான இளைஞர்கள் வதைகளைத் தாங்க முடியாது சத்தமிட்டனர்.

ஓலச் சத்தங்கள் முகாமில் ஆங்காங்கே கேட்டுக் கொண் டிருந்தன.

எப்படியும் அந்த ஒன்பது பேரில் இருவரை அந்தக் கொலைக் குற்றத்தில் மாட்டியே தீர வேண்டும் என்பதை சார்ஜன் அறிவான் இருவரைத் தேர்வதே அவன்பிரச்சனை.

கொலை செய்தவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்கா விட்டால் இராணுவத்தின் மதிப்புக் குறைந்து விடும் என்பதே தலைமைப் பீடத்தின் கருத்தாயிருந்தது.

'ஒன்பது பேரில் கொலை செய்ததற்கு ஆதாரமாக எவருமில்லை என்னால் முடிந்த 'தேட் டிகிரி'யெல்லாம் செய்து விட்டேன்."

சார்ஜன், கப்டன் செனிவிரத்தினாவிடம் வந்து சொன் னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாற்பது பேரில் ஒன்பது பேரைத் தெரிந்து விட்டாய். கொலை செய்யாதவனாயினும் இயக்கத்தைச் சார்ந்த இருவரைப் பிடித்து, கொலை செய்ததாக வாக்குமூலத்தை ரைப் செய்து நாலாவது மெதேட்டைப் பயன்படுத்தி கையெழுத்தை வாங்கு கமாண்டருக்கு இரண்டு மூன்று நாளில் ரிப்போட் அனுப்ப வேண்டும்.''

கப்டன் கடுமையாகக் கூறினான்.

''இயக்கத்தைச் சார்ந்த எவனும் இருப்பதாகத் தெரிய வில்லை.''

சார்ஜன் தன் முடிவைத் தெரிவித்தான்.

''நாற்பது பேரில் இயக்கத்தைச் சார்ந்த ஒருவனு மில்லை என்றால் நீ கையாண்ட முறைகளெல்லாம் பிழை. நீ ராணுவ இன்ரலிஜன்ஸ்ஸில் இருப்பதற்கே தகுதி யற்றவன். எங்கள் கணக்குப்படி எண்பது வீதமான தமிழ் இளைஞர்கள இயக்கங்களின் அனுதாபியாக இருக்கிறார் கள். நாற்பது வீதமானவர் இயக்கத்தவரை ஓரளவாவது அறிந்துள்ளனர். ஐந்து வீதமானவர் ஏதோ ஒரு பயங்கர வாத இயக்கத்தைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். என் கணக்குப்படி நீ எங்கு ஓட்டை விட்டாயோ தெரியவில்லை. முறைப்படி விவேகத்தைப் பயன்படுத்தி யிருந்தால் இந்த ஒன்பது பேரில் இந்தக் கொலையைச் செய்த இரண்டு பேர், அல்லது பயங்கரவாத இயக்கத்தைச் சார்ந்த இரண்டு பேர் இருக்க வேண்டும்.'

கப்டன் செனிவிரத்தினா தன் மதிப்பீட்டுப் புள்ளி விவரங்களை வைத்துப் பேசினான்.

''இந்தக் கொலையில் மாட்டுபவர்கள் நிட்சயம் தூக்குத் தண்டனை பெறுவார்கள். அப்பாவிகளை மாட்டித் தூக்குத் தண்டனை வழங்குவது......''

சார்ஜன் மேலும் கூறமுடியாது இழுத்தான்.

''அதற்காகத்தான் இயக்கத்தைச் சார்ந்த பயங்கர வாதிகளைப் பிடித்து மாட்டி விடு. அவர்களை யெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிப்பதில் எவ்வித தவறுமில்லை. அரசாங்கமும் அதற்குத் தான் எங்களை இங்கே அனுப்பி யிருக்கிறார்கள்.''

''எப்படியும் இரண்டு பேரைத் தேடும் வேலையை......''

சார்ஜன் அந்தப் பொறுப்பை எடுக்க விரும்பாதவன் போல மழுப்பினான். தான் தேரின் பின்னர் நீதிமன்றத்தில் தனக்கு ஏற்படக்கூடிய சிக்கல்களையும் அவன் உணர்ந்தான்

''சரி, இரண்டு கொலையாளிகள் அல்லது பயங்கரவாதிகளை நான் தெரிந்து தருகிறேன். நீயும் இந்த முறைகளை மூளையைப் பயன்படுத்திக் கற்றுக்கொள்ள வேண்டும். உன் லெப்டினன் எங்கே?''

''அவர் லீவில் போய் விட்டார்.''

''சரி ஒன்பது பேருக்கும் நல்ல சாப்பாடு கொடு. தங்க வசதிகள் செய்து கொடு. காய மடைந்தவர்களுக்கு வைத்திய ஏற்பாடு செய். அவர்கள் எல்லோரையும் விடுதலை செய்வது போலக் காட்டிக் கொள். காலையில் வந்து பார்.''

கப்டன் செனிவிரத்தினா ஆணையிட்டான்.

அவன் சாண்டேஸ்டில் ஆங்கிலேயரின் இராணுவக் கல்லூரியில் பயிற்சி பெற்றவன். பயிற்சி முடித்த பின்னரும் ஓராண்டு இன்ரெலி ஜென்சில் விசேஷ திறமை பெற்றவன். அதற்காக ஆஸ்திரிய—கங்கேரிப் பேரரசின் இராணுவ முறைகள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிச் சமர்ப்பித்துப் பாராட்டும் பெற்றவன்.

## 40

மறுநாட் காலை எட்டு மணிக்கு சார்ஜன், கப்டன் செனி விரத்தினாவிடம் வந்து சலூட் அடித்து நினைவூட்டினான்.

''காலையில் சாப்பாடெல்லாம் கொடுத்தாயா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''யெஸ் சேர்.''

''முதலில் ஒன்று செய். அவர்களையெல்லாம் வீட்டுக்கு அனுப்ப ஏற்பாடு செய்வது போல வராந்தாவின் எதிர்புற மாக புற்றரையில் உலாவ விட்டுவிட்டு இங்கே வா.''

கப்டன் கூறிவிட்டு தன் அறையினூடாக இடத்தையும் காட்டினான்.

சார்ஜன் உடனே சென்று ஏற்பாடு செய்துவிட்டு வந்து மீண்டும் சலூட் அடித்தான்.

கப்டன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான்.

''சரியாக எட்டரை மணி, கடற்கரைத் தெருவிலுள்ள பெண்கள் கல்லூரிக்கு அந்தத் தெருவால் அல்லது குறுக்குத் தெருவால் இப்பொழுது லேடி டீச்சர்மார் போய்க் கொண்டிருப்பார்கள். ஒரு டிரக்கை எடுத்துக் கொண்டு போ. கலியாணம் கட்டாத அழகான இளம் பெண்ணாக ஒருத்தியைப் பிடித்து உள்ளே போட்டுக் கொண்டு வா. சேலை உடுத்தவளாக இருக்க வேணும் கலியாணம் கட்டாதவளென்றால் கழுத்தில் தாலிக் கொடி இருக்காது என்பது உனக்குத் தெரியவேணும். ஒரு இன மக்களை அடக்கி ஒடுக்க வேண்டுமென்றால் முதலில் அவர்களது பழக்கங்கள், கலாச்சாரங்களையெல்லாம் முதலில் நன்கு கற்றுக் கொள்ள வேண்டும். திறமைகளையும் குறைபாடுகளையும் அறிய வேண்டும். குறைபாடுகளைப் பயன்படுத்தி திறமைகளை உடைக்க வேண்டும்; தெரிந்ததா. நேரமாகிறது போ.''

சார்ஜன் திகைப்போடு தயங்கினான். பட்டப் பகலில் கல்லூரிப் பெண் ஆசிரியையைக் கடத்துவதா?

''திஸ் இஸ் மை ஓடர். கோ''

கப்டன் அதட்டினான். சார்ஜன் எதுவும் கூறமுடியாது சலூட் அடித்து விட்டுப் புறப்பட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகான டீச்சருக்கும் பயங்கரவாதிகளைப் பிடிப்பதற்கும் என்ன தொடர்பு என்று சார்ஜனுக்குப் புரியவில்லை. கப்டன் மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போலத் தோன்றியது.

இராணுவ 'டிரக்கில்' கடற்கரைத் தெருவழியாகப் போன போது குறுக்கு ரோட்டால் ஒரு கையில் புத்தகங்களும் மறுகையில் குடையுமாக குதி உயர்ந்த சிலிப்பருடன் தலைப் பின்னலும் உடலும் அசைய, பல வர்ண நைலெக்ஸ் சேலை கடற்காற்றில் அசைய, தெரு ஓரமாகச் சென்ற ஒரு லேடி டீச்சரைக் கண்டார்கள்

டிரைவர் அருகே இருந்த சார்ஜன் அவளின் முன் அழகைப் பார்ப்பதற்காக அவளைக் கடந்து சந்திவரை டிரக்கை விரைவாக ஓட்டி மெதுவாகத் திரும்பும்படி டிரைவரிடம் கூறினான்.

பொலிவான மார்பும் இளமை ததும்பும் முகமும் அவனையும் கவர்ந்தன.

அந்தப் பெண் துடிதுடித்துச் சத்தமிட இருவர் தூக்கி டிரக்குள் மறைத்தனர். சத்தமிட்டால் கொன்று விடுவோம் எனவும் மிரட்டினர்.

வேகமாக ஓடிய 'டிரக்' இராணுவ முகாமுள் நுழைந்தது.

கப்டன் முன்னே சார்நுன் மீண்டும் வந்து சலூட் அடித்தான்.

''ஓ கே. சேர். நல்ல சரக்கு சேர். இங்கே கொண்டு வாறதா...'.

கப்டனுக்காகக் கொண்டு வரப்பட்டது போல சார்ஜனின் குரல் ஒலித்தது.

''ஃபூல், நான் சொல்வதைச் செய், பின்புறமாக, அந்த ஓடைக்கு இந்தப் பெண்ணைக் கொண்டுபோ. நீயும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொருவனுமாக பலாத்காரம் செய்வது போல அவளின் சேலையை உரி அவள் இறுக்கிப் பிடித்துக் சப்தமிடுவாள்."

ஓடையைக் கையால் காட்டிச் சொன்னான்.

''அந்த ஓடையென்றால் அந்த ஒன்பது பேரும் பார்க்கப் போகிறார்களே''

''மடையா. அவர்கள் பார்ப்பதற்காகத்தானே சேலையை உரியப் போகிறாய். பிறகு பாவாடையைக் கழட்டு, அதன் பின் ஜாக்கெட், மற்றவன் பிடிக்க நீ கழட்டு. பிறகு பிறெசியர், எதற்கும் அவசரப்படாமல் ஆறுதலாகச் செய்ய வேணும். ஆனால் ஒன்று. நான் 'நிறுத்து' என்று சப்த மிட்டதும் நிறுத்தி விடவேண்டும். இது ஓடர்: போ''

கண்ணீர் கன்னத்தால் வழிய அழுது கொண்டிருந்த அந்தப் பெண்ணின் வாயைப் பொத்தியபடி பின்புறமாக அழைத்துச் சென்றனர்.

பின் அந்த வராந்தா ஓடைக்குக் கூட்டிச் சென்றனர் பொத்திய வாயை விட்டு விட்டு அந்தப் பெண்ணின் மார்புச் சேலையை சார்ஜன் இழுத்தான். ஜாக்கெட்டோடு சேர்த்துக் குத்தப்பட்டிருந்த ஊசியைப் பிய்த்துக் கொண்டு முந்தானை சேலை முழுவதும் அவன் கையில் வந்தது. அவள் கதறி னாள். பின் பல்லைக் கடித்துக் கொண்டு அரைச் சேலையின் முனையைப் பிடித்து இழுத்துப் பார்த்தாள். சார்ஜனின் இழுவையில் சேலை அவளது கையிலிருந்து விடுபட்டது. அரையில் சுற்றிய சேலை உரிபடத் தொடங்கியது. மீண்டும் கத்திக் கொண்டே கடைசிச் சுற்றுச் சேலையை இறுகப் பிடித்தாள்.

அவளின் அலறல் சத்தம் கேட்டு ஒன்பது பேரும் வராந் தாவின் ஓடைக்கு எதிரே நின்று பார்த்தனர் எல்லோர் இரத்தமும் கொதித்தது. நெஞ்சு படபடத்தது பல்லைக் கடித்தபடி பார்த்துக் கொண்டு நின்றனர்.

சேலையின் நுனி பாவாடையில் செருகியிருந்தது. மற்ற வன் அவளது கைகளைப் பிடிக்க சார்ஜன் பாவாடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தியிருந்த 'சேப்டி' பின்னைக் கழட்டக் குனிந்தான். அவள் உடலை உதறிக் கொண்டே, "ஐயோ. அம்மா ஐயோ விடுங்கடா. என்னைக் காப்பாற்ற இங்கே ஒருத்தரு மில்லையா?"

பலமாகக் கத்திக் கொண்டே பாவாடையை அரையோடு பிடிக்க கைகளை விடுவிக்க முயன்றாள். இராணுவ காப்ரலின் இரும்புப் பிடியிலிருந்து கைகளை விடுவிக்க முடியவில்லை.

இடம் சுற்றாடலை மறந்து நாதன் முன்னே ஓடினான்' மோகன் மட்டும் அவனைத் தொடர்ந்தான். இருவரும் சார்ஜனையும் காப்ரலையும் பலங்கொண்ட மட்டும் தள்ளி அவளை அவர்கள் பிடியிலிருந்து விடுவித்தனர். அவளிடம் சேலையை எடுத்து வீசி விட்டு இடையில் சண்டைக்குத் தயார் போல எதிர்த்து கோபாவேசத்தோடு நின்றனர். அவள் நாதன், மோகனின் பின்புறத்தில் பதறிப்போய் அடைக்கலமாக நின்றாள். அவளது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. சேலையை மார்போடு பிடித்துக் கொண்டு நின்றாள்.

"ஸ்ரொப் தற்"

சத்தமிட்டபடி கப்டன் வந்தான். சார்ஜனை 'கெட் அவுட்' என அதட்டினான். அந்தப் பெண்ணையும் நாதனையும் மோகனையும் அழைத்துச் சென்றான். அவள் சேலையை மார்போடு அணைத்தபடி நடந்தாள். தன் அறைக்குச் சென்றதும் அவளிடம் தன் கழிவறையைக் காட்டி, சேலையை உடுத்து, முகத்தைக் கழுவி வரும்படி ஆங்கிலத்தில் கூறினான்.

ஒரு லெப்டினனை 'இன்ர கொம்'மிலே அழைத்தான்.

அவன் வந்தபோது சேலை உடுத்து, முகத்தைக் கழுவிய போதும் உயிரற்ற பொம்மை போல தலை குனிந்தபடி அப்பெண் வந்து நின்றாள்.

"எந்த ராஸ்கல் இந்தத் தமிழ்ப் பெண்ணை இங்கே அழைத்து வந்தது. அந்த சார்ஜன் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளியே நிற்கும் 'வானில்' இந்தப் பெண்ணை அழைத்துச் சென்று வீட்டருகே விட்டு வா."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை குனிந்தபடி நடந்த பெண், ஒரு கணம் நாதனையும் மோகனையும் நிமிர்ந்து நன்றி உணர்வோடு பார்த்தாள். அவ்வேளை, "நாங்கள் பாண்டவர்களல்ல. வீரத் தமிழ் இளைஞர்கள் என்று ஒரு கணத்தில் அப்பெண்ணுக்குத் தெரிவிப்பது போல வீரப் புன்னகை புரிந்தோம்"

இயக்கத்தைச் சார்ந்தவர்கள் உணர்ச்சி மிக்க இளைஞர்கள், துணிச்சல்காரர், ஆபத்தைப் பற்றிக் கவலைப் படாதவர். இவற்றையெல்லாம் அறிந்து, பரீட்சை நடத்தி நாதனையும் மோகனையும் இராணுவ வீரர் கொலை வழக்கில் கப்டன் மாட்டி விட்டான். நாதன் அளவில் அவன் கணிப்பு சரியே.

மோகன் 'அப்பாவி'. வெறும் உணர்ச்சியைக் காட்டி மாட்டுப்பட்டுவிட்டான்.

நாதன் பனாகொடை இராணுவ முகாமில், "நாங்கள் பாண்டவர்கள் அல்ல" எனக் கூறிய வார்த்தை மனோகரனின் செவிகளில் அவ்வேளை மீண்டும் மீண்டும் ஒலித்தது.

"கப்டன் செனிவிரத்தினாவின் ஈவிரக்க மற்ற தந்திரத்தையும் பண்பாடற்ற விவேகத்தையும் பின்னர்தான் அறிந்து கொண்டேகம். எங்கள் பரம்பரையான பண்பாட்டை அறிந்து அதையே இழிவுபடுத்த முயன்ற கயவன் அவன். அவன் சாதியே அப்படித்தான்."

நாதன் ஆத்திரத்தோடு உணர்ச்சி வசப்பட்டுக் கூறிய கடைசி வார்த்தைகள் சிங்கள மக்கள் அனைவரையுமே இழிவுபடுத்துவதாக அவ்வேளை மனோகரனுக்குப் பட்டது.

"ஒருவனைப் பதம் பார்த்து சிங்கள மக்கள் அனைவரையும் இழிவுபடுத்தலாம்?"

மனோகரன் தணிவான குரலில் கூறினான்.

"அரசின் ஒடுக்குமுறை யந்திரமான இராணுவத்தினரதும் போலீசாரதும் நடவடிக்கைகளைப் பார்த்தே சொல்லுகிறேன். இவர்கள் அந்தச் சமூகத்தின் பிரதிநிதிகள் தானே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதனின் இக்கருத்தை அசோகனிடம் முன்னர் ஒரு தடவை,சொன்னபோது 'ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதிகள் என்றே சொல்ல வேண்டும்' எனத் திருத்தியது மனோகரன் நினைவில் வந்தது.

ஆனால் தற்போது நடைபெற்ற கொலைகள், கொள்ளைகள், கற்பழிப்புகள், தீவைப்புகள் எவரது பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன? பௌத்தமத பண்பாடென்றால் என்ன? இதுவா? மீண்டும் அசோகனுடன் விவாதிக்க வேண்டும் என மனோகரன் எண்ணிக் கொண்டான்,

# 41

கப்டன் செனிவிரத்தினா தமிழ்ப் பெண்கள் பற்றிக் கூறிய கருத்தொன்றை, நாதனையும் மோகனையும் வதை செய்த சார்ஜனே பின்னர் அவர்களிடம் கூறினான்.

இருவரையும் தலைகீழாகத் தொங்கவிட்டு, அரையிலே இரு பக்கமும் வாயுள்ள கோணிப்பையின் ஒரு பக்கத்தைக் கட்டி, முகத்தில் படத்தக்கதாக மிளகாயைப் போட்டு எரித்து விட்டுக்கொண்டே ரைப் செய்த முறைப்பாட்டில் கையெழுத்திடுகிறாயா என்று கேட்டுப் பெற்றார்களாம்.

தன்னில் ஒரு தவறுமில்லை. கப்டன் செனிவிரத்தினா சொல்வதையே நான் செய்கிறேன். செய்யாவிட்டால் என் வேலை போய்விடும் என்று சார்ஜன் தங்களிடம் பழகிய பின்னர் கூறினானாம். ''நான் ஒரு உண்மையான பௌத்தன். கதிர்காமத் தெய்வத்தை நம்புபவன்'' என்று அடிக்கடி சொல்லி வந்தானாம். தனக்கும் மூன்று பெண்கள் படிக்கிறார்கள் என்று சொன்னானாம்.

'இராணுவத்தினர் என்மேல் பலாத்காரம் செய்து கற்பழிக்க முயன்றனர்' என்று அந்தப் பெண் எல்லோருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்பாடு செய்தால் என் தலைமேல்தான் வரும் என்று சார்ஜன் சொன்னபோது கப்டன் சொன்னானாம்:

'தமிழ்ப் பெண்கள் தங்களைக் கற்பழிக்க முயன்றது என்பதை ஒருபோதும் வெளியே சொல்லமாட்டார்கள். இந்த உண்மை கூட தமிழ்ப் பெண்களைப் பற்றி உனக்குத் தெரியாதா?''

கப்டன் பற்றி நாதன் விபரமாகக் கூறியவற்றால் உந்தப்பட்டே மனோகரனும் ஆபத்தைச் சிறிதும் பொருட் படுத்தாது இயக்கத்துக்கு உதவ முன் வந்ததையும் மீண்டும் எண்ணிப் பார்த்தான். கப்டன் பெயர் துரோகிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டதை மீண்டும் நினைவு கூர்ந்தான். அன்றுவரை அவன் மேல் நடவடிக்கை எடுக்கப்படாததற் காக வருந்தினான்.

கப்டன் நாடகம் நடத்திய ஒரு பெண்ணின் கற்பென்ன இப்போது எத்தனை நூறு பெண்கள் சிங்களக் காடையர் களுக்குப் பலியானார்களோ என்றும் மனோகரனின் மனம் எண்ணியது.

வசந்தியும் மனோகரனின் நினைவில் திடீரெனப் பயங்கரமாகத் தோன்றினாள். அழகான, கவர்ச்சியான பெண், சிங்களக் காடையரின் கண்களில் சிக்கியிருப்பாளோ. சிக்கினால் நிச்சயம் ஆபத்தே. அப்படி ஒன்று நடை பெற்றால் மன்னித்து திருமணம் செய்யும் துணிவு தன்னிடம் உண்டா எனவும் எண்ணிப் பார்த்தான்.

எங்கெல்லாம், எத்தனையோ நடைபெற்றிருக்கும் எல்லோரும் இவற்றை வெளியே கூறப்போகிறார்களா, அதுவும் தமிழ்ப் பெண்கள். கப்டன் தமிழ்ப் பெண்களின் குறைபாட்டைக் கற்றுவிட்டான்.

கப்டன் செனிவிரத்தினா தமிழர்களது சுபாவங்கள், உணர்ச்சிகள், பண்பாடுகள் பற்றியெல்லாம் விவேகமாகக் கற்றுள்ளான். அவன் மேல் இயக்கத்தவர் இன்னும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதன் வெளியே வந்திருந்தால் நிட்சயம் அவனை முடித்திருப்பான்.

''நாங்கள் பாண்டவர்களல்ல'' என்று ஐவர்களுக்கும் மேலாகக் கூறிக்கொள்ளும் தமிழன் அவன். அவனது முடிவு இப்படியான பயங்கர படுகொலையிலா முடியவேண்டும். என்ன கொடுமை. மனோகரனால் ஆறமுடியவில்லை.

கப்டனின் ஆணைகளை நிறைவேற்றிய சார்ஜனை நாதனும் மோகனும் மன்னித்து விட்டனர். கப்டனுக்கும் தனக்கும் நடந்த உரையாடல்களையும் தான் செயலாற்ற நேர்ந்தவற்றையும் சார்ஜனே பின்னர் விரிவாக நாதனிடம் கூறி மன்னிப்புக் கேட்டானாம் தன்னைப் பழிவாங்காமல் விட்டு விடும்படி அவர்களிடம் மன்றாடி வேண்டிக் கொண்டானாம். அதனாலேயே அவனது பெயரையே துரோகிகள் பட்டியலில் போட்டு விடவேண்டாம் என நாதன் வேண்டியிருந்தான்.

நாதனின் மனிதாபிமான உணர்வும் மனோகரனைப் பல தடவை நெஞ்சை உருகவைத்தது. அந்தச் சம்பவங்களெல்லாம் அடிக்கடி நினைவில் ஓடி மனதை உடைத்துக் கொண்டிருந்தது.

# 42

சனி ஞாயிறு முழுநாளும், 48 மணிநேரமும் ஊரடங்குச் சட்டம் போட்டிருந்தால் எவரும் வெளியே போகமுடியவில்லை. அரைப் பட்டினியாகவே பிஸ்கெட்டுடனும் தேநீருடனும் சமாளித்தார்கள். திங்கட்கிழமை உணவுப் பொருட்கள் வாங்குவதற்காக ஊரங்குச் சட்டம் பகல்வேளை நாலுமணி வரை தளர்த்தப்பட்டது. அன்சாரியும் சில்வாவும் வெளியே சென்று சிரமப்பட்டு ஓரளவு உணவுப் பொருட்கள் வாங்கி வந்தனர். நுகர்பண்டங்களைக் கொள்ளையடித்தவர்களும் பட்டினி கிடந்த செய்திகள் பற்றி சில்வா கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசோகனையும் மனோகரனையும் அன்றும் வெளியே செல்ல வேண்டாம் எனத் தடுத்திருந்தனர். திங்கள் அன்று அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடைபெறவில்லை என்று செய்திகள் கிட்டின.

எட்டுநாட்களின் பின் முதல் தடவையாக செவ்வாய்க் கிழமை அன்று மனோகரன் தெருவில் இறங்கினான். வாகனங்கள் ஓரளவு வழமைபோல் ஓடிக்கொண்டிருந்தன. பஸ்களும் வான்களும் பிரயாணிகளை ஏற்றிச் சென்றன. ஆங்காங்கே தமிழர்கள் நடாத்திவந்த ஓட்டல்கள்; மளிகைக் கடைகள் எரிந்து கிடந்தன. மழை தூறிக்கொண்டிருந்த போதும் ஒரு எண்ணெய் மண்டி புகைத்துக் கொண்டிருந்தது.

எரிந்த வீடுகள், சூறையாடப்பட்ட வீடுகள் ஆங்காங்கே திறந்து கிடந்தன.

மனப் பதட்டத்துடனேயே சுற்றிவரப்பார்த்தபடி தெரு வழியே நடந்தான்.

வழமையாக டெலிபோன் செய்யும் கடைகளே எரிந்து கிடந்தன. காலையில் சாப்பிட, தேநீர் சாப்பிடக் கூட ஒரு தமிழர் ஓட்டலுமில்லை.

இறுதியில் ஒரு முஸ்லிம் ஓட்டலுள் நுழைந்தான். ஒரே கூட்டம். இடியப்பமும் தேநீரும் சாப்பிட்ட பின்னர் ஒரு சிகரெட்டை வாங்கிப் பற்றவைத்தான்.

அங்கிருந்த டெலிபோனை எடுத்து முதலில் தன் அலுவலகத்திற்குப் போன் செய்தான். தொடர்ந்து மணி அடித்தபோதும் எவருமே டெலிபோனை எடுக்கவில்லை. அடுத்ததாக வசந்தியின் வீட்டுக்கு டெலிபோன் செய்தான். டெலிபோன் மணியடிக்கும் ஓசையே எழவில்லை. அன்சாரி கூறியபடி டெலிபோன் பழுதடைந்துவிட்டது தெரிந்தது.

மனோகரனின் மனம் இருப்புக் கொள்ளவில்லை. அவளுக்கு என்ன நடந்ததோ? எட்டு நாட்களாக அவளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடவில்லை என என்னைப்பற்றி என்னவிதமாக எண்ணி யிருப்பாளோ எனவும் மனோகரனின் மனம் அங்கலாய்த்தது.

வீட்டிற்குச் சென்று பார்ப்போமா என முதலில் எண்ணினான். பின்னர் ஓட்டலில் முதலில் கேட்போம் என டைரக்டரியைக் கேட்டுப் பெற்று ஓட்டல் எண்ணைக் குறித் துக் கொண்டான்.

வசந்தி அங்கு டெலிபோன் செய்யவேண்டாம் என முன்னர் கூறியது அவன் நினைவில் வந்தது. அந்தக் கட்டுப் பாட்டை மீறி முதல் தடவையாகப் போன் செய்தான்.

"மிஸ் வசந்தி—வசந்தி கதிர்காமரோடு பேசலாமா?"

"வெயிட் போர் எ மினிட்—அப்படி எவரும் இந்த ஓட்டலிலில்லை"

"சொறி—அங்கு வேலை செய்பவர்—"

"அந்தப் பெயரில் இங்கு வேலை செய்பவர் எவரு மில்லையே"

அந்தப் பெண் டெலிபோனை வைத்து விட்டாள்.

மனோகரனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இது என்ன மர்மம்? சிந்தனை குழம்பி வியர்த்துக் கொட்டி யது. டெலிபோனுக்குரிய பணத்தைக் கொடுத்துவிட்டு சோர்வோடு தெருவில் இறங்கி நடந்தான்.

திடீரென அவனது மனம் உறுதி கொண்டது. அங்கு வேறு பெயர் கொடுத்திருப்பாளா? வசந்தி என்னை ஏமாற்று வாளா? இத்தனை காலமாக ஓட்டலிலிருந்தே வருகிறாளே. டெலிபோனில் கூறியது பொய்!

மீண்டும் அதே ஓட்டலுக்குத் திரும்பி நடந்தான். அங்கு வேறு ஒருவர் டெலிபோனைத் தூக்கிவைத்துப் பேசிக் கொண்டிருந்தார். இரண்டு மூன்று நிமிடங்கள் தாமதிப்பதே அவனுக்குக் கஷ்டமாகி விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் ஓட்டலை டெலிபோனில் எடுத்தான்

மனோகரன் உறுதியான குரலில் பேசினான்;

"மிஸ் வசந்தி...... வசந்தி கதிர் காமர் அங்கு 'காசுவ' லாக வேலை செய்பவள், அவற்றிற்குப் பொறுப்பான பகுதிக் குப் போட்டு விடு, நான் விசாரித்துக் கொள்கிறேன்."

"வன் செக்கண்ட் பிளீஸ்."

"யெஸ் மிஸ் வம்பெக் ஹியர்."

"நான் மனோகரன். மிஸ் வசந்தியின் உறவினர். அவர்களின் குடும்பம் பற்றி அறிய ஆவலாயுள்ளேன் நலமா யுள்ளாளா? வேலைக்கு வரவில்லையா?"

ஒரே தடவையில் நம்பிக்கை ஏற்படும் விதமாகவும் தன் ஆர்வத்தைக் காட்டுவதாகவும் கூறினான்.

"பூவர் கேள். வீடெல்லாம் கொள்ளை யடித்து விட்ட தாகவும் இந்துக் கல்லூரி அகதிகள் முகாமில் இருப்பதாகவும் போன் செய்தாள். நான் இங்கே ஓட்டலில் வந்து தங்கும் படியும் அதற்கு ஏற்பாடு செய்வதாகவும் சொன்னேன். இனிமேல் ஓட்டலுக்கு வர முடியாது என்றும் சொல்லி விட்டாள். நீங்கள் கண்டால் என் கவலையை தெரிவியுங்கள். வேறு உதவி ஏதாவது வேண்டுமானாலும் போன் பண்ணும் படி சொல்லுங்கள். நாங்கள் எவ்வேளையும் உதவத் தயாரா யிருக்கிறோம்."

மிஸ் வம்பேக் மிகவும் நயமாக யாவையும் ஒரே மூச்சில் கூறி முடித்தாள்.

மனோகரனின் மனம் ஓரளவு ஆறுதலடைந்து மறுபடி யும் துன்பத்தில் ஆழ்ந்தது.

உடனே பம்பலப்பிட்டி நோக்கிச் செல்லும் ஒரு பஸ் ஸில் ஏறிக்கொண்டான் கூட்டம் குறைவாகவே இருந்தது. பஸ் ஓடும் வழியில் இருமருங்குலும் எரிந்த கட்டிடங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைகளையும் பார்த்தான். யுத்தம் முடிந்த பின் தோன்றும் அழிவுக் காட்சியே தென்பட்டது.

கோவிலடியில் இறங்கியபோது எதிர்ப்புற வரிசையாக இருந்த கடைகள், இருப்பிடங்கள் யாவும் எரிந்து கிடந்தன. வியாழன்தோறும் சாயி பாபா பூசை நடைபெறும் தெருவோர வீடும் சாம்பலாகிக் கிடந்தது.

பிள்ளையார் கோவிலிலேயே வேல் திருவிழாக் காலம் போல மலையகத் தமிழர்கள் அகதிகளாகக் குவிந்திருந்தனர். குழந்தைகள் முதியவர் ஈறாக ஆயிரக் கணக்கானோர். பத்து நாட்களின் முன்னரே அங்கு வேல் ரதம் வந்தது. திரும்பிப் போக முடியவில்லை. இராணுவ டிரக்கில் திரும்ப ஏற்றிச் சென்றதாக அறிந்திருந்தான்.

ஓரத் தெருவில் நடந்து இந்துக் கல்லூரியை அடைந்தான். சரஸ்வதி மண்டபமும் இந்துக்கல்லூரியும் அகதிகளால் நிறைந்திருந்தன. படலைகள் யாவும் அடைக்கப்பட்டிருந்தன. வெளியே அகதிகளைத் தேடி வந்த அவன் போன்ற நூற்றுக்கணக்கானோர் நின்றனர்.

ஒலிபெருக்கியில் பல்வேறு அறிவித்தல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. அகதிகளைப் பார்க்க வந்தவர் விபரங்களும் அறிவிக்கப்பட்டன. எல்லோரும் பெயர் விவரங்களை எழுதிக் கொடுத்து விட்டுக் காத்து இருந்தனர்.

# 43

தூரத்தே கழுத்தில் மாட்டப்பட்ட ஸ்ரெதஸ் கோப்புடன் தன் நண்பன் டாக்டர் வேலாயுதத்தை மனோகரன் கண்டான். படலைக்குக் காவலாக நின்றவனிடம் "டாக்டர் வேலாயுதத்தைக் காண வந்தேன்" எனச் சொன்னான். அவன் அரைமனதுடன் மறுக்காது உள்ளே விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர் வேலாயுதமே எப்பொழுதும் அகதிகள் முகாமிற்கு உதவ முன்வரும் டாக்டர் என்பதை அவன் அறிவான்.

அறிவிப்பாளரிடம், கதிர்காமரைத் தேடி மனோகரன் என்பதை மட்டும் கொடுத்துவிட்டு காத்துக் கொண்டு நின்றான். அவன் அறிந்த பெரிய புள்ளிகள் பலர் குடும்பத்தாருடன் அங்கு நிற்பதைக் கண்டான்,

சுற்றுமுற்றும் பார்த்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். அவர்கள் செய்த குற்றம் தமிழராகப் பிறந்தது ஒன்றுதான்.

அவளது பெயர் அறிவிக்கப்பட்டது.

ஆவலோடு சுற்றுமுற்றும் பார்த்தான்.

சரஸ்வதி மண்டபப் பக்கத்திலிருந்து வசந்தி வந்து கொண்டிருந்தாள். ஜாக்கெட்டும் ஸ்கேட்டும், வாராத தலைமயிர். காலில் எதுவுமில்லை. சோர்ந்த முகத்தில் துன்பத்தை வலிந்து மறைக்கும் சிரிப்பை வரவழைத்தபடி நடந்து வந்தாள்,

மனோகரனின் கண்கள் கலங்கத் தயாராயிருந்தன. அவள் நெருங்கி வந்ததும் சொன்னாள்:

''எப்படி நீங்கள் சுகந்தானே? உங்களைப் பற்றியே கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன்.''

அவன் நெஞ்சிலும் அதே வார்த்தைகள் வெளிவர இருந்தன. ஆயினும் வசந்தி முந்திக் கொண்டாள்.

''எங்களுக்கு எதுவுமில்லை. உன்னைப்பற்றி விசாரித்து உடனே வந்து பார்க்க முடியவில்லை.''

''இன்று வந்து விட்டீர்களே, சுகத்தோடு பார்க்கிறேனே. அதுவே போதும்...''

துன்பத்தின்போதும் நயமாகப்பேசும் அவளின் நற்பண்பு அப்போதும் அவனைப் பிரமிக்க வைத்தது. தான் அவளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடி அறிந்த விவரம் பற்றிக் கூறினாள். ஓட்டலில் வம்பேக்குடன் பேசிய விபரத்தையும் சொன்னான்.

"ஓட்டலுக்கு இனிமேல் வருவதில்லை என்று நான் உறுதியாகக் கூறிவிட்டேன். பெரிய துன்பங்கள் வரும்போது தான் சில வேலைகளில் துணிச்சலான நல்ல முடிவுகளையும் நாம் எடுக்கிறோம்."

துன்பத்தைப் பெரிய சித்தாந்தமாக்கி அவள் பேசுவது போலத் தெரிந்தது.

"என்ன முடிவு?"

"கிராமத்திற்குச் சென்று, அம்மாவையும் பாட்டியையும் விட்டுவரப் போகிறேன். அம்மாவும் இத்துன்பத்தின் பின்னர் தான் ஒப்புக் கொண்டார்."

"இந்த நிலைமையில் இனிமேல் இங்கே வாழ முடியுமா?"

"பொறுத்துப் பார்ப்போம், நீங்கள் வாழலாம் என்றால் நானும் வாழலாம் தானே, இங்கு வாழ முடியாவிட்டால் நீங்களும் யாழ்ப்பாணம் வந்துவிடுவீர்கள். அங்கே இருந்து விடுவோம்."

வசந்தி தன் உறுதியான தீர்மானத்தைத் தயக்கமின்றிக் கூறினாள்.

"உங்கள் வீட்டு நிலைமை என்ன? என்ன நடந்தது?"

"அது பெரிய கதை. எல்லோருக்கும் நடந்தது போல தான் எங்களுக்கும் நடந்தது. இங்கே ஒவ்வொருவர் கூறும் அனுபவத்தையும் ஒவ்வொரு நாவலாக எழுதலாம். காடையர்கள் கூட்டமாக வந்து அம்மாவின் டி. வி. பிறிட்ஜ், ரேடியோ, புளோர் பொலிஷர், குக்கர், மிக்ஸர், டெலிபோன், தையல் மெஷின் கண்ணாடிகள் எல்லாவற்றையும் அடித்து நொறுக்கி விட்டார்கள். இரண்டு சூட்கேஸில் உடைகளை மட்டும் மதிலால் அடுத்த வீட்டில் கொடுத்துக் காப்பாற்றினோம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இது என்ன கொடுமை? எல்லாமே போய் விட்டதா?''

''கதவுகளுக்குப் போட்டிருந்த திரைச் சேலைகளையும் அறுத்துக்கொண்டு போய்விட்டார்கள். நான் இவை பற்றி இப்போது கவலைப்படவில்லை. எங்களுக்கு மட்டுமா? இங்கு உள்ள எல்லோருக்கும் நடந்திருக்கிறது. உடுத்த உடுப்போடு எல்லாவற்றையும் பறிகொடுத்து வந்தவரே ஏராளம்.''

''இனி உழைத்து எப்படித்தான் இவற்றையெல்லாம் ஈடு செய்யப் போகிறார்களோ.''

மனோகரன் கவலையோடு கூறினான்.

''நான் எங்களுக்கேற்பட்ட நஷ்டங்களைப் பார்த்துக் கவலைப்படவில்லை. அம்மாவிற்குத்தான் ஒரே கவலை பைத்தியம் பிடித்தது போல இருக்கிறா. என் படிப்பைப் பாழாக்கி என்னை இவற்றிற்காகத்தான் ஓட்டலில் உழைப் பதற்கு விட்டா. அம்மாவிற்காக அந்த வெள்ளை நாய் களுக்கு விற்ற என் உழைப்பெல்லாம் பாழாகி விட்டது. இப்பொழுதும் தன் தவறை அம்மா உணரவில்லை. சிலர் என்றும் உணர மாட்டார்கள். தவறுகளைத் திருத்த மாட்டார் கள். என் கண் முழுமையாகத் திறந்து விட்டது. என் தவறுகளைத் திருத்தப் போகிறேன். இனிமேல் அம்மா விற்காக உழைக்கப் போவதில்லை. உங்களுக்கு வேண்டு மென்றால் மட்டுந்தான் உழைப்பேன். அதுவும் ஓட்டலி லல்ல''

வசந்தியின் நெஞ்சு அடைத்தது. அவள் முதற்தடவை கலங்குவதை அன்றுதான் கண்டான். அதுவும் இத்தனை துன்பத்திற்காக அல்ல. தாய் சொல்லைக் கேட்டு, தன் கல்வியை விட்டு ஓட்டல் வேலைக்குச் சென்றதற்காகவே என்பதைக் கண்டு கொண்டான்.

''வசந்தி, நான் இருக்கும்போது நீ கலங்க வேண்டிய தில்லை. நீ கலங்குவது எனக்கே வேதனையாயிருக்கிறது.''

''ஒன்றுமில்லை நான் உசாராகத்தான் இருக்கிறேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இங்கே சாப்பாட்டுப் பிரச்சனை எல்லாம் எப்படி?''

''முதலில் சில நாட்கள் மிகவும் கஷ்டமாயிருந்தது. இப்போது ஓரளவு பரவாயில்லை. வெளியேயும் வாங்க முடிகிறது.''

''உங்களுக்கு இப்போது ஏதாவது வாங்கித்தர வேண்டுமா?''

''ஒன்றும் வேண்டியதில்லை. இங்கே எல்லாம் சமாளிக்லாம்.''

''இங்கே என்ன ஏற்பாடுகள் செய்கிறார்கள்?''

''யாழ்ப்பாணத்திற்குக் கப்பலில் அனுப்ப ஏற்பாடு செய்கிறார்கள். அதில் பெண்களுக்கும் வயதானவர்களுக்கும் முதல் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே நாங்கள் விரைவில் போய் விடலாம்.''

''இத்தனை விரைவில் திடீரென இப்படியான நிலைமை ஏற்படும் என நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை,''

''ஏற்பட்டுவிட்டது இனி என்ன செய்யலாம்,''

''நானே இயக்கத்தில் சேர்ந்து விடலாமோ என எண்ணுகிறேன்''

''அப்படிச் செய்வதைக் கூட நான் ஒருபோதும் தடுக்க மாட்டேன்.''

வசந்தியின் வார்த்தை அவனுக்கும் தெம்பாயிருந்தது. நாலு மணியிலிருந்து ஊரடங்குச் சட்டம் அமுலாகிறது என்பதை வசந்தியே நினைவூட்டினாள்.

''நான் போய் விட்டு நாளைக்கு வருகிறேன்.''

''ஏதாவது தேவையென்றால் தயங்காமல் சொல்லு வசந்தி.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாட்டிக்கு கொஞ்சம் மல்ரி வைட்டமின் பில்லை வாங்கி வாருங்கள். அதிகம் சிரமப்பட வேண்டாம்.''

அவனைத் திருப்திப்படுத்தக் கூறுவதாகவே இருந்தது.

''கைச் செலவிற்குப் பணமெல்லாம் இருக்கிறதா?''

''இருக்கிறது. அது பற்றிக் கவலை வேண்டாம். ஏதாவது தேவைப்பட்டால் உங்களிடம்தானே நான் கேட்க வேண்டும்.''

வசந்தி உரிமையோடு அவ்வாறு சொன்னது அவனுக்குத் திருப்தியளித்தது.

''அம்மாவையும் பாட்டியையும் வந்து நான் பார்க்க வேண்டாமா?''

'அவர்கள் சுகமாகவே இருக்கிறார்கள். அம்மாவின் கவலை என்றும் ஆறாது. இன்று வேண்டியதில்லை மற்றொரு முறை பார்க்கலாம்.''

தாய் மேல் வசந்திக்கு உள்ள வெறுப்பு அப்பொழுதும் தெரிந்தது.

''சரி வசந்தி. நான் நாளை கட்டாயம் வருவேன்.''

மனோகரன் கூட்டம் நிறைந்திருந்த படலையைத் திறக்கச் செய்து வெளியே வந்தான்.

வழியெல்லாம் நடைபெற்ற கொடுமைகளைப் பார்த்து வேதனைப்பட்டுக் கொண்டு திரும்பியபோதும் வசந்தியின் துன்பமும் அவன் மனதை விட்டு விடவில்லை. அவள் திருமணம் செய்தால் தன் சுக வாழ்வு தடைப்பட்டு விடும் என எண்ணும் வசந்தியின் தாயையும் எண்ணிப் பார்த்தான். தன்னை அவளின் தாயே வெறுக்கலாம் என்பதற்காகவே இன்னும் தாய்க்கு அறிமுகப்படுத்தத் தயங்குகிறாள் என எண்ணிக் கொண்டான்.

விடுதியைச் சேர்ந்தபோது எல்லோரும் அன்று தாம் கண்ட காட்சிகளையும் பெற்ற அனுபவங்களையும் பகிர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 44

"இனவெறி, வானத்திலிருந்தோ, சிந்தனையி லிருந்தோ தானாகத் தோன்றுவதில்லை. அதற்கோர் அடிப்படை இருக்கிறது. அதுவே வேலையில்லாத் திண் டாட்டம்"

அசோகன் இனவெறி பற்றிப் பேசிய ஒருவருக்குப் பதிலளிப்பதாகக் கூறினான். அன்சாரி அதை ஆமோதிப்பது போலச் சொன்னான்.

"நான் எங்கள் தொழிற் சங்கத்தில் வேலையில்லாத் திண்டாட்டமும் சிங்கள இளைஞர்களும் என்ற விஷயம் பற்றி ஆராய்ச்சிக் கட்டுரை தயாரிக்கும்போது ஒரு உண் மையைக் கண்டு பிடித்தேன். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும் வேளையெல்லாம் இனவெறிப் பிரச் சாரத்தையே சிங்கள முதலாளித்துவக் கட்சிகள் பிரச்சாரம் செய்துள்ளன."

"அதற்கு ஆதாரம் என்ன?"
மனோகரன் கேட்டான்.

"இரண்டாவது உலக யுத்தத்தின்போது எல்லோருக் கும் வேலை கிடைத்தது. 1945-ன் பிறகு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்ததும் மலையகத் தமிழருக்கு எதிரான பிரச்சாரம் ஆரம்பித்தது அவர்களது குடியுரிமையைப் பறித்தனர். கொரிய யுத்தத்தின்போது அது ஓரளவு அடங்கியிருந்தது. அவ்வேளை வேலையில்லாப் பிரச்சனை மோசமாக இருக்கவில்லை. 1954-ன் பின் இலங்கைத் தமிழருக்கும் எதிராக இனவெறி கிளறப்பட்டு 1955-ல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் இன்று வரை வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தே வந்தது. இனவெறிப் பிரச்சாரமும் தற்போது உச்ச கட்டமடைந்து வெடித்தது."

அன்சாரி தன் ஆராய்ச்சியைக் கூறினான்

"1967-ன் பின்னர் இந்த யு என் பி ஆட்சி அமெரிக்கா வில் கடன்பட்டு பண்டங்களைக் கொண்டுவந்து சந்தையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவித்துவிட்டு வீரம் பேசும் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கும் தற்போதைய கொள்ளைகளுக்கும் அழிவு கட்கும் ஒரு தொடர்பும் இல்லையா?''

வசந்தி ஒரு தடவை ஓட்டல் உணவுகள் பற்றிக் கூறிய தையும் அவளது அம்மா உட்பட அனைவரிடையேயும் ஏற்பட்டிருந்த வெளிநாட்டு நுகர் பண்டப் பொருட்கள் மேல் ஏற்பட்ட அண்மைக்கால வெறியையும் நினைவு கூர்ந்தே மனோகரன் கேட்டான்.

''எப்பொழுதும் அரசியல் உணர்வை வளர்த்தே அத்தோடு நுகர் பண்டங்களையும் நாட்டின் பொருளாதார வளத்திற்கேற்ப, பகிரப்பட வேண்டும். மக்கள் தம் வாழ்க்கைத் தரம் உயர்வதாக எண்ணும் அளவிற்குப் பண்டங்கள் வழங்கப்பட வேண்டும். அதைவிட்டு பணக் காரருக்கு வேண்டிய சொகுசுப் பண்டங்களை கடன் பணத்தில் கொண்டு வந்து குவித்துவிட்டு ஏழை உழைப் பாளிகளையும் வேலையற்றவர்களையும் அவற்றை வாங்கும் படி பிரச்சாரம் செய்தால் ஒன்று அபகரிப்பு நடைபெறும். அரசியல் வளர்ச்சி குன்றிய வேளை இங்குபோல் இன வெறியைத் தூண்டிவிடின் அழிவும் ஏற்படும்.''

அசோகன் கூறிய கருத்தை எல்லோரும் உடனே கிரகிக்க முடியாத போதும் அவர்களெல்லோரையும் சிந்திக்கத் தூண்டியது. நியூட்டன் சில்வா மட்டும் அசோக னின் கருத்தின் ஆழத்தைக் கிரகித்துக் கொண்டு உடனே பதில் கூறினான் ;

''புரட்சிகர அரசியலுணர்வோடுதான் பொருளா தாரத்தை வளர்த்தெடுக்க வேண்டும். மக்கள் வாழ்வு உயர்ந்து வருவதாகப் பண்டங்கள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று மாவோ கூறியதை வைத்தே அசோகனும் விளக்கங் கூறுவதாக இருக்கிறது. பொருளாதார வளர்ச் சியை முன் வைத்து புரட்சிகர அரசியலைப் பின் வைத்தால் அமெரிக்கர் வழியாகத்தான் போக நேரிடும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவோவின் கோட்பாட்டை முன் வைத்து, சீனாவையும் தாக்கி, உலக அரசியலுக்கு இழுப்பதாக நியூட்டனின் பேச்சு இருந்தது.

"ஒன்றை நாம் மறந்து விடப்படாது. கொழும்புச் சந்தையில் குவிக்கப்பட்டிருக்கும் பண்டங்கள் இங்கு உற்பத்தி செய்யப்பட்டவையல்ல அமெரிக்கக் கடன் பணத்தில் இறக்குமதி செய்யப்பட்டவை" — அசோகன் கூறினான்.

"இந்திய வெளி விவகார அமைச்சர் நரசிம்மராவ் சென்ற வெள்ளிக்கிழமை வந்ததுடன் இலங்கைப் பிரச்சனை சர்வ தேசப் பிரச்சனையாக வந்துகொண்டிருக்கிறது. அமெரிக்கப் பாதையில் இன்னும் ஜெயவர்த்தனா எத்தனை காலம் ஓட முடியும் என்பதே கேள்வி."

அன்சாரி நியூட்டனின் பேச்சை ஒட்டி இலங்கை அரசியலை உலக அரங்கிற்குத் திருப்பினான்.

"இந்தப் பிரச்சனை நீண்ட நாட்களாகவே இருக்கிறது. இனிமேல், மேலும் கூர்மையடையப் போகிறது."

அசோகன் கூறிக்கொண்டே எழுந்து மனோகரனையும் அழைத்துக் கொண்டு தன் அறைக்குச் சென்றான். அங்கு வசந்தியின் குடும்பத்திற்கு நடந்தவற்றைப் பற்றி விசாரித்தான்.

## 45

மறுநாட் காலை மனோகரன் பஸ்ஸில் ஏறி கோட்டையிலிருந்த தன் அலுவலகத்திற்கு முதலில் புறப்பட்டான். புறக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்தபோதே அங்கு ஏற்பட்ட சேதங்களைப் பார்த்துப் பிரமித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசையாக எரிந்த கடைகள், தமிழர்களது பிரபல ஓட்டல், வியாபார நிலையங்களெல்லாம் எரிந்துபோக எரியாது வெறும் கட்டிட சுவர்களே எஞ்சியிருந்தன. அவற்றை வேடிக்கை பார்க்கும் கூட்டம் வேறாகப் போய்க் கொண்டிருந்தது. எரியும் வேளை வேடிக்கை பார்த்த இராணுவத்தினர் ஆங்காங்கே யந்திரத் துப்பாக்கிகளுடன் காவல் புரிந்து நின்றனர்.

ஜனாதிபதியின் மாளிகையின் அண்மையாக இருந்த கடைகள், ஓட்டல்களே எரிந்து கிடந்தன.

ஆங்காங்கே சில இடங்களில் வியாபாரமும் நடந்து கொண்டிருந்தது.

சிகரெட் வாங்குவதற்கு பெரிய கியூ ஒன்று நின்றது. இருமடங்கு விலையில் வெளியே பையன்கள் சிகரெட் விற்றுக் கொண்டிருந்தனர்.

பல நாட்களாக அவனுக்குச் சிகரெட் கிடைக்கவில்லை. இத்துன்பங்களுக்குள் இதுவா அவசியம் என மனதைத் தேற்றிக் கொண்டிருந்தான். தற்போது மீண்டும் சிகரெட் வெறி ஆட்கொண்டது. ஒரு பையனிடம் ஒன்றரை ரூபா விலை கொடுத்து ஒரு சிகரெட்டை வாங்கிப் புகைத்தான்.

அலுவலகம் சென்றபோது அங்கு ஒரு சிலரே வந்திருந் தனர். அவனது சுகம் விசாரித்தனர்.

கட்டிட வேலைகளெல்லாம் நிறுத்தப்பட்டு விட்டன. மறுவாரமே மீண்டும் வேலைகள் ஆரம்பிக்க முடியும் எனக் கூறினர்.

அடுத்த திங்கட்கிழமை வரை விடுமுறை எடுப்பதாகச் சொல்லிவிட்டு அகதி முகாமிற்குப் பஸ் ஏறினான். திறந் திருந்த ஒரு பார்மசியில் வசந்தி வேண்டிய வைட்டமின் பில்லைகளில் ஒரு புட்டி வாங்கிக் கொண்டான்.

இந்துக் கல்லூரிக்குச் சென்றபோது அங்கு பார்வை யாளர்கள் முதல்நாள் அளவாக இல்லை. உள்ளே சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரைக் கொடுத்துவிட்டு சுற்றிவர ஆங்காங்கே நின்று பேசிக் கொண்டிருந்தவர்களைப் பார்த்தான். சிலர் கண்ணீருடன் தமது துன்பங்களைக் கூறிக் கொண்டிருந்தனர்.

திடீரென சிறிது தூரத்தில் திலகா தன்னைப் பார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டான். கண்கள் மோதின. இதயத்தில் பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. ஆயினும் தன்னைச் சமாளித்துக் கொண்டு திலகாவை நோக்கி மெதுவாக நடந்தான். முதல் முதலாக அவளை சேலையோடு அன்று தான் பார்க்கிறான். பள்ளிப் பெட்டைபோல இல்லாது பெண் போலக் காட்சியளித்தாள்.

அண்மையில் சென்றதும் ''திலகா, நீ எங்கே இங்கே...'' வார்த்தைகள் முழுமையாக வெளிவரவில்லை.

அவள் எதுவும் பேசவில்லை. வாயடைத்தபடி அவனைப் பார்த்தாள். கண்கள் நீரினால் முட்டிவழிய தலைகுனிந்தாள்.

இவள் எதற்காக அழவேண்டும்? என்னை ஏமாற்றியதற்காகவா? பழைய காதலை இழந்த நினைவிலா? தற்போது நடைபெற்ற கலவரத்தினால் ஏற்பட்ட துன்பத்தாலா?

மனோகரனால் சரியான விடையை ஊகித்து அறிய முடியாது குழம்பியபடி நின்றான்.

''ஏன் திலகா அழுகிறாய்? என்ன நடந்தது? உன் கணவர் எங்கே? எல்லோரும் சுதந்தானே''

சேலைத்தலைப்பால் கண்ணீரைத் துடைத்தபடியே சிரிக்க முயன்றாள். பின் சிறிது நேரமானதும் வாயைத் திறந்தாள்.

''அவர், வெளியே போயிருக்கிறார். பார்த்துக் கொண்டு நிற்கிறேன். வெளியே தெருக்களில் ஒரு பிரச்சனையும் இல்லைத்தானே'' அகதிகள் முகாமுள் பரவலாக இருந்த அச்சமே அவளிடமும் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கவலைப்பட எதுவுமில்லை. உங்களுக்கு எவ்வித பிரச்சனையும் இல்லைத்தானே''

''திங்கட்கிழமை அவர் வேலைக்குப் போய் திரும்பி வர வில்லை. நானும் அப்பாவும் இங்கே மாலையில் வந்து விட்டோம். அவரைப் பற்றிய செய்தியே இல்லாது எட்டு நாட்களாக அந்தரித்து விட்டோம். நேற்றுத்தான் கொட்டாஞ்சேனை முகாமிலிருந்து இங்கு கூட்டி வந்தோம்''

''அந்த எட்டு நாள், ரொம்பக் கஷ்டப்பட்டிருப்பாயே'' பரிதாபத்தோடேயே கூறினான்.

''அந்த வேளை உங்களைக் கைவிட்டதற்குத்தான் எனக்கு இப்படி நிகழ்ந்து விட்டது என்று கூட எண்ணி அழுது கொண்டிருந்தேன்''

''அப்படியெல்லாம் ஒருபோதும் நடப்பதில்லை. இப்படி நினைப்பதெல்லாம் வெறும் மனப் பிராந்தியே, திருமண மெல்லாம் நாம் நினைப்பதுபோல் நடந்து விடுவதில்லை. ஏதோ ஆபத்தில்லாது ஒன்று சேர்ந்தீர்களே அதுவே பெரிய சந்தோசம். பொருட்சேதம் ஒன்றுமில்லைத்தானே''

''என் நகைகள் கூடப் போய்விட்டது. அவற்றைப் பற்றிக் கூட நான் கவலைப்படவில்லை. இவரைக் காணாதது பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.''

''இப்போது என்ன முடிவு?''

''கிராமத்திற்கே போகப்போகிறோம். இவரே வேலையை விட்டு உங்கள் தம்பியோடு சேரப் போகிறாராம்''. கண்களைத் துடைத்துவிட்டு சிரித்தபடி கூறினாள்.

'பாதிப்பு ஏற்பட்டபின் தான் பலர் கண் திறந்து கொள்கிறார்கள்''

மனோகரன் பொதுமையாகக் கூறியது அவளையும் சுட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் ஏற்கனவே சேர்ந்துவிட்டது போலத் தெரிகிறது. முன்னர் உங்கள் தம்பியைப் பற்றிக் குறைவாக எண்ணியது தற்போதுதான் தவறாகத் தெரிகிறது"

அவள் கூறிமுடிக்கும் போது ஒலி பெருக்கியில் அவனது பெயர் அறிவிக்கப்பட்டுவிட்டது.

"யார் வசந்தி, உங்க புதுக் காதலியா?"

திலகா ஆர்வத்தோடு கேட்டாள். 'புதுக்காதலி' என அவள் கூறிய நளினத்தை அவன் விரும்பவில்லை.

"என் வருங்கால மனைவி. இப்பொழுது வருவாள். நான் அறிமுகப்படுத்தி விடுகிறேனே"

'காதலி' என்று கூறாது 'எதிர் கால மனைவி' என்று மனோகரன் கூறியது திலகாவின் மனதில் ஓரளவு பொறாமையை ஏற்றியது.

"என்னிலும் பார்க்க அழகாயிருந்தால் எனக்கு எரிச்சல் வரும்"

திலகா பச்சையாகவே சொன்னாள்.

"அழகு என்பது அவரவர் மனதில் கொண்டிருக்கும் பாசம், விருப்பு வெறுப்புகளைப் பற்றியது காதலிக்கும் வேளை ஒவ்வொரு பெண்ணும் தானே உலகத்தில் பெரிய அழகி என காதலன் கூற வேண்டும் என எதிர்பார்க்கிறாள்"

"எப்படியென்றாலும் உங்கள் எதிர்கால மனைவியை ஒரு தடவையாவது பார்க்க விரும்புவேன்தானே"

வசந்தி முதல் நாள் அணிந்திருந்த உடையுடனே வந்து கொண்டிருந்தாள். திலகா அவளை ஏறிட்டுப் பார்த்தாள். மனோகரன் தன் அயல் வீட்டுப் பெண் என அறிமுகப்படுத்தினான்.

"எங்க மண்டபத்திலேயே உங்களைப் பார்த்திருக்கிறேனே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தி நினைவூட்டி திலகாவின் கதைகளைக் கேட்டாள். பின் மனோகரனைப் பார்த்துச் சொன்னாள்.

''இரவைக்கு அல்லது நாளைக்குப் புறப்படும் கப்பலில் நிச்சயம் போய் விடுவோம்''

''நாங்களும் பெரும்பாலும் அதே கப்பலிலேயே போக நேரிடும்''

''கப்பலுக்குப் பெயர் கொடுக்க நின்ற கியூவிலும் உங்களைக் கண்டேன்''

வசந்தி கூறினாள்.

''நல்லதுதானே. ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கலாம்.''

மனோகரன் கூறினான்.

திலகாவின் கணவர் அவ்வேளை மதிற்பக்கமாகப் போய்க் கொண்டிருந்ததைக் கண்டதும் திலகா கூறினாள் :

''அவர்தான் என் கணவர்''

திலகா கையால் காட்டி அறிமுகப்படுத்திக் கொண்டே, 'வருகிறேன்' என்று கூறிக் கொண்டு கணவரை நோக்கிச் சென்றாள். அவள் தன் கணவரை அழைத்து அறிமுகப் படுத்த விரும்பவில்லை என்பது தெரிந்தது. அவளது உயரம், நிறம். சிறிது பருத்துக் காணப்பட்டார். வயதில் அவனிலும் பார்க்க சில வயது கூடியவராகத் தெரிந்தது. அரசாங்கப் பகுதியில் உதவி அக்கவுண்டன் என எவரோ கூறியது அவன் நினைவில் வந்தது.

''என்ன மனோ, அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள்.''

''அவள் திருமணம் செய்ய முன்பே தெரியும். மாப்பிள்ளையை இன்றுதான் முதலில் பார்க்கிறேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோகரன் சொல்லிக் கொண்டே வசந்தியின் முகத்தில் ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று பார்த்தான். அவளது களங்கமற்ற சிரிப்பு அப்படியே இருந்தது. அவள் ஒரு திலகா அல்ல என்பதை அவன் பலதடவை முன்பே அறிந்திருந்தான்.

மறுநாள் வந்து ஏமாற வேண்டாம் என வசந்தி வேண்டினாள்.

போக்குவரத்து சீரானதும் யாழ்ப்பாணத்துக்கு உடனே வரும்படி வற்புறுத்திக் கூறினாள்.

"நிச்சயமாக வருவேன். வீட்டுக்கே போய் எத்தனையோ மாதமாகிவிட்டது."

கடிதம் எழுதி விட்டுவரின் பட்டணத்திலேயே குறிப்பிட்ட நேரம் சந்திக்கலாம். அல்லது வீட்டுக்கே தவறாது வரும்படி வேண்டினாள்.

"எப்படியும் அடுத்த மாதம் முடிவதற்குள் ரெயில் அல்லது பஸ்கள் ஓடத் தொடங்கி விடும். வந்து விடுங்கள். நீங்கள் வரத் தவறினால் நிலமை சீரடைந்ததும் நானே இங்கு வந்து விடுவேன்."

வசந்தி கேலியாகவே கூறினாள்.

"வந்து ஓட்டலில் தங்குவாயா?"

"அங்கே எதற்குப் போக வேண்டும்?"

"எங்கள் வீட்டுச் சாவி என்னிடமே இருக்கிறது. அது தவிர அயலவர்கள் எல்லோரும் அறிந்தவர்களே."

"இவ்வளவும் நடந்த பிறகும் துணிச்சல் மட்டும் குறையவில்லை."

மனோகரன் பகிடியாகவே கூறினான்.

"நீங்கள் இருக்கும் வரை துணிச்சல் இருக்கவே செய்யும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கப்பலில் போகிறவர்கள் எவராவது திரும்பிக் கொழும்புக்கு வருவதாகக் கூறுகிறார்களா."

"இல்லைத்தான். ஆனால் நான் இருக்கிறேனே."

வசந்தி சிரிப்பை வரவழைத்துக் கொண்டே சொன்னாள்.

மனோகரன் கொண்டு வந்த வைட்டமின் புட்டியைக் கொடுத்தான். அவள் 'தாங்ஸ்' கூறினாள்.

மருத்துவப் பகுதியில் டாக்டர் நண்பர் ஒருவரையும் பார்த்துப் போகவேண்டும் என மனோகரன் கூறினான்.

"என் கடிதம் வந்ததும் ஒழுங்காக எழுதுங்கள்."

வசந்தி கூறிக்கொண்டே தங்கள் வீட்டுச் சாவியையும் அவனிமே கொடுத்தாள்.

"ஆட்டுக்கல்லு, அம்மி, மேலும் உடைந்த பொருட்கள் மட்டும் உள்ளன. நிலமை சீரடைந்தால் நீங்கள் கூட அங்கே சென்று குடியிருக்கலாம்."

வசந்தியிடம் சாவியை வாங்கிக் கொண்டே டாக்டர் நண்பனைப் பார்ப்பதற்காக உள்ளே சென்றான்.

வசந்தி விவேகமான, ஆழமான திட்டத்துடன்தான் ஒவ்வொரு விஷயத்தையும் சிந்தித்துச் செயலாற்றுவதாக அவன் உணர்ந்து கொண்டான்.

•

ஒரே கப்பலில் செல்லும்போது திலகா எதையாவது உளறி வசந்தியின் மனதைக் குத்தி விடுவாளோ எனவும் மனோகரன் அஞ்சினான். 'இவர் முன்னர் என் பின்னால்' சுற்றியவர். நான்தான் மறுத்துவிட்டேன் என வசந்தியையும் என்னையும் மட்டந்தட்ட ஒரு பக்க உண்மை கூறத்தக்கவள் எனவும் எண்ணினான். திலகாவின் பொறாமையாலும் 'பொசசிவ்நெஸ்' சாலும் முன்னர் பட்ட துன்பங்களும் அவன் மனதில் நிழலாடின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 46

மலையகத் தமிழரின் தொழிற் சங்க வேலையில் ஈடு பட்டிருந்த இராமையா அன்று விடுதியில் தங்குவதற்காக வந்திருந்தான்.

மலையத்தில் நடைபெற்ற கொடுமைகளை யெல்லாம் அவன் விவரித்தான். நாவலப்பிட்டி, பதுளை ஆகிய மலையக நகரங்கள் எரிக்கப்பட்டு அடையாளம் காணமுடியாதபடி ஆக்கப்பட்டிருப்பதைப் பற்றிக் கூறினான்.

அகதிகள் முகாம்களில் மலையகத் தமிழ் மக்கள் படும் அல்லல்களையும் விவரித்தான்.

யு.என்.பி அரசியல் தலைவர்களே பொலிசார், இராணு வத்தினரின் உதவியுடன் நடாத்திய அட்டகாசங்களையும் கூறினான்.

இலங்கைப் பிரஜா உரிமை பெற்றவர்களே இந்தியா விற்குச் செல்ல முயல்கிறார்கள் என்றும் கூறினான்.

''நாடற்றவர் என்ற பிரச்சனையையே யு.என்.பி யினர் தீர்த்துவிட்டனர். பிரஜா உரிமை பெற்றவர்களே இந்தியா விற்குத் திரும்ப விரும்புகின்றனர். பிரஜா உரிமை பெறாத வர்கள் இனிமேல் ஏன் முயற்சிக்கப் போகிறார்கள்?''

இராமையா கூறினான்.

''இந்த அரசைத்தான் ஆதரிக்கும்படி கூறி தொண்ட மான் இரண்டு தடவை மலையகத் தமிழரின் வாக்குரிமை களைப் பெற்றுக் கொடுத்தான்.''

அன்சாரி சாடினான்.

''நடந்ததை விட்டுவிட்டு இனிமேல் நடக்கக் கூடி யதைப் பற்றிப் பேசுங்கள்''

மனோகரன் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இலங்கைத் தமிழர்களையும் மலையகத் தமிழர்களையும் ஒன்றாகவே சிங்களவர் பார்க்கிறார்கள். மலையகத் தமிழர் இலங்கைத் தமிழரோடு சேர்ந்து தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடமுடியாதா?''

அன்சாரி கேட்டான்.

''இதுவரை வடக்கு, கிழக்குத் தமிழர் பகுதிகளில் குடியேறிய மலையகத் தமிழர் ஈடுபடலாம். மலையகத்திலே வாழ்பவர்கள் எவ்வாறு ஈடுபடமுடியும்?''

மனோகரன் கூறினான்.

''இலங்கைத் தமிழரில் எல்லா வர்க்கத்தவரும் ஒன்றிணைந்து தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தேசிய விடுதலைப் போராட்டத்தின் பின்னரே பாட்டாளி தலைமையில் சோஷலிசப் புரட்சியை நடாத்த முடியும். மலையகத் தமிழரைப் பொறுத்தவரை எல்லோரும் பாட்டாளிகளே. அவர்கள் சோஷலிசப் புரட்சியை நடாத்தத்தக்க தகுதி பெற்றுள்ளார்கள். சோஷலிசப் புரட்சி ஒன்றின் மூலமே தேசிய இனப்பிரச்சனையைத் தீர்க்க முடியும் அங்குதான் தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமையும் கிடைக்க முடியும். முதலாளித்துவ, சர்வாதிகார ஆட்சிகளால் தேசிய இனப் பிரச்சனையைத் தீர்த்ததாக வரலாறு கிடையாது.''

அசோகன் விரிவாக விளக்கியதை யாவரும் அமைதியாகக் கேட்டிருந்தனர்.

''மலையக மக்கள் தம்மைத் தனித் தேசிய இனமாகக் கொள்ளலாமா?''

''மலையக மக்களே அதைத் தீர்மானிக்கவேண்டும். மொழி ஒன்றைமட்டும் வைத்து தீர்மானிக்க முடியாது. மலையக மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வரும் நிலப்பரப்பு இருக்கிறது. மொழி, பொருளாதார வளர்ச்சி, கல்வி, கலை கலாச்சாரத்தில் அவர்கள் மிகவும் பின் தங்கியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகவே இருக்கின்றனர். எல்லோரும்பாட்டாளிகளே. ஒரு சோஷலிசப் புரட்சியின் மூலமே அவர்களது தேசிய இனத் தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும். இந்த நாட்டின் புரட்சிக்கு என்றோ ஒருநாள் தலைமை தாங்கப் போகிறவர் அவர்களே''

மலையகத் தமிழர்கள் பாதிக்கப்பட்ட அந்த நிலையிலும் அசோகன் அவர்களை உயர்வாக வைத்தே கூறினான்.

''முஸ்லிம்களுடைய நிலை என்ன?'' மனோகரன் கேட்டான்.

''முஸ்லிம்களின் பொது மொழி தமிழே. அவர்கள் பரந்து நாடெங்கும் வாழ்கின்றனர். தேசிய சிறுபான்மையினராகக் கருதப்பட்டு அவர்களது உரிமைகள் வழங்கப்பட வேண்டும். தமிழ் பகுதிகளில் சில மாவட்டங்களில் 25 சதவீதம் தொடக்கம் 40 சதவீதம் வரை வாழ்கின்றனர். மதம், பண்பாட்டில் அவர்களது நலன்கள் பேணப்பட்டு வாய்ப்புகள் வழங்கப் படவேண்டும்''—அசோகன் கூறியதை அன்சாரி ஆதரித்தான்.

''மக்கள் ஜனநாயகம் ஒன்றே தேசிய இன உரிமையை வழங்கும் என ஸ்டாலின் கூறினார். இங்கு பூர்ஷ்வா ஜனநாயகம் கூடஅழிந்து பாசிஸம் உருவாகியதாலேயே தேசிய இனப் பிரச்சனை இத்தனை மோசமடைந்துள்ளது'' நியூட்டன் சொன்னான்.

இராமையா மலையகத்தில் நடைபெற்ற பல பயங்கர நிகழ்ச்சிகள் பற்றி விரிவாகக் கூறினான். வீடுகளில் வைத்து எப்படிப் பலர் எரிக்கப்பட்டார்கள் என்பதை பெயர்களைக் குறிப்பிட்டே சொன்னான்.

''எவரும் தற்பாப்பு நடவடிக்கை எடுக்கவில்லையா?''

பதுளையில் ஒரு குடும்பத்தவர் எடுத்த தற்காப்பு நடவடிக்கையின் விளைவு பற்றி இராமையா சொன்னான்.

சிங்களக் காடையர்கள் இராமநாதன் என்பவர் வீட்டைத் தாக்க வந்தபோது வீட்டில் லைசென்சு பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்த துப்பாக்கியால் அந்தத் தமிழர் சுட்டதும். எல்லோரும் ஓடி விட்டனராம். பின்னர் பெரிய கூட்டம் ஒன்று பொலிஸ், இராணுவத்தினருடன் வந்ததாம்.

தமிழரை சரணடையும்படி சத்தமிட்டுக் கூறினராம். அந்தத் தமிழர் தோளில் இரண்டு வயதான பெண் குழந்தை யுடன் கையை உயர்த்தியபடி வந்தாராம். அவரை இராணு வத்தினர் சுட்டு விட்டனராம். அவர் நிலத்தில் விழ ஒரு சிங்களக் காடையன் குழந்தையைக் காலால் தூக்கி ஒரு மரத்தில் அடித்துக் கொன்றானாம். பின்னர் அவ்வீட்டில் பதினைந்து தமிழர் எரிக்கப்பட்டனராம்.

அந்தப் பரிதாபச் செய்திகள் எல்லோர் நெஞ்சுகளையும் பதறச் செய்தது.

''இது பௌத்தர்கள் நாடு''

நியூட்டன் சில்வா நினைவூட்டினான்.

## 47

பிரயாண வசதிகள் ஓரளவு ஏற்பட்ட போதும் அச்சமும் பீதியும் கொழும்பிலும் நிலைக்கவே செய்தன. தமிழரின் பிரச்சனையில் இந்தியா தலையிட்டு பேச்சு வார்த்தை நடத்த இந்தியப் பிரதிநிதியை அனுப்புவதை சிங்கள மக்கள் விரும்பவில்லை. தமது சுதந்திரத்திற்குப் பங்கம் விளையப்போவதாக அஞ்சத் தொடங்கினர். அதனால் கொழும்பில் மட்டுமல்ல, மலையக, தமிழ்ப்பகுதிகளிலும் அமைதியின்மை நிலவவே செய்தது.

பல மாதங்கள் கழித்து யாழ்ப்பாணம் சென்றபோது மனோகரனுக்கும் பல விஷயங்கள் புதுமையாயிருந்தன.

பொலிசாரைத் தெருக்களில் காண்பது அரிதாயிருந்தது. இடையிடை ஜீப்புகளில் மட்டுமே பார்க்க முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாட்டுக்கும் யாவரும் செல்லாததால் நீதிமன்றத்தில் வழக்குகளே மிகக் குறைந்து விட்டது என ஒரு வழக்கறிஞர் அவனிடம் கூறினார்.

கவசக்கார்களைத் தொடர்ந்து இராணுவ டிரக்குகள் யந்திரத் துப்பாக்கியைத் தாங்கிய சிங்கள இராணுவத்தினருடன் இடையிடை செல்வதையும் மனோகரன் கண்டான். தாமே தமிழர்களை இன்னும் ஆளுவதாகக் காட்டிக்கொள்வது போல அவர்களது தர்பார் இருந்தது.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு விட்ட போதும் மாலை ஆறுமணிக்கு மேல் இரவு முழுவதும் தெருக்களில் நடமாட்டம் மிகக் குறைவாயிருந்தது.

தெருக்களில் கையால் எழுதப்பட்ட போஸ்டர்கள் ஏராளமாக ஒட்டப்பட்டிருந்தன. விடுதலை இயக்கங்களில் பல பிரிவுகள் உள்ளன என்பதை அவை காட்டின.

மனோகரன் பல மாதங்களின் பின்னர் வந்தது வீட்டில் அனைவருக்கும் மகிழ்ச்சியாயிருந்தது. யூலை கலவரத்தின் போது தாங்கள் அவனுக்காக அஞ்சிக் கவலைப்பட்டது பற்றி யாவரும் கூறினர்.

தந்தையார் இன்னும் தனியவே தோட்ட வேலையில் கஷ்டப்படுகிறார் என்று தாயார் கூறினார். முரளி வீட்டை விட்டுப் போனதற்காகவும் தாயார் தன் கவலையை அடிக்கடி கூறி மனம் நொந்தார். தங்கைமார் அவன் பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. மூத்தவளின் அமைதியையும் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டிருப்பதையும் அவன் புரிந்து கொண்டான்.

இராணுவத்தினர் முரளியைத் தேடி வந்து செய்த அட்டகாசம் பற்றியும் மூத்தவள் ஆத்திரத்தோடு வர்ணித்தாள். மறைமுகமாக தன் காதலனை நியாயப்படுத்துவதை மனோகரன் ஊகித்தான்.

''சிங்களவர் இன்னும் எத்தனை காலத்திற்குத் தமிழர்களை ஆளப்போகிறார்களாம்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையார் நளினமாகவே கேட்டார்.

''அமெரிக்காவின் ஆதரவு இருக்கும் வரை ஆளவே பார்ப்பார்கள்.''

''தமிழீழம் அமைப்பதற்கு இந்தியா இராணுவம் அனுப்பி உதவி செய்யமாட்டதா?''

தந்தையார் மிகப் பெரிய கேள்வி எழுப்புகிறார் என்று மனோகரன் எண்ணிக் கொண்டான்.

''அமெரிக்கப் பிடியிலிருந்து இலங்கையை இந்தியா, சோவியத் ரஷ்யா சார்பாகக் கொண்டு வந்து விட்டால் தமிழர் பிரச்சனை தீர்ந்துவிடும் என இந்தியா கருதுகிறது, அதற்காக இளைஞர் இயக்கங்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமக்குச் சார்பான நாடுகளின் இராஜதந்திரம் எல்லாவற்றையும் இந்தியா பயன்படுத்துகிறது.''

ஒரு விவாதத்தின்போது அசோகன் கூறிய கருத்தையே தந்தையிடம் தன் கருத்தாகக் கூறினான். தமிழீழ விடுதலை பற்றி மனோகரன் கூறாதது அவருக்கு ஏமாற்ற மளித்தது.

''அப்போது தமிழீழம் தனியாக எமக்கு அமையாது என்று நீயும் சொல்லப் பார்க்கிறாயா.''

''அதைப்பற்றி இரண்டாவது படியாகவே பார்க்க வேண்டும்.''

அவன் பதிலை அவர் ஏற்பதாக இல்லை.

''இளைஞர்கள் ஒன்று சேர்ந்ததும் தமிழீழம் எடுத்துத் தருகிறார்களோ இல்லையோ பொறுத்துப் பார்.''

''அப்படி யென்றாலும் இந்தியப்படையில்லாமல் இன்றைய நிலையில் தமிழீழ எல்லைகளைக் காப்பாற்ற முடியுமா?''

''அதுதான் தமிழீழம் கிடைத்ததும் இந்தியப் படைகளை பாதுகாப்பிற்காக அழைப்போம்!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தியப் படைகளை வைத்துக்கொண்டு சுதந்திர தமிழீழம் பற்றி எப்படிப் பேச முடியும்?"

"சிங்களவனுக்கு அடிமையாயிருப்பதிலும் பார்க்க இந்தியாவிற்கு அடிமையா யிருக்கலாம். அது எங்கள் தாய் நாடுதானே."

"அப்படி அடிமையாய் இருப்பதென்றால் சுதந்திர தமிழீழம் பெற்றோம் என்று மட்டும் நாம் பெருமையாகக் கூற முடியாது."

அதன் மேல் தந்தையாருடன் பேச விரும்பாதவனாக எழுந்து வீட்டின் பின்புறமாக இருந்த வாழைத் தோட்டத்தில் உலாவச் சென்றான்.

இளைய தங்கை இந்திரா அவனைத் தொடர்ந்து வந்தாள்.

"அண்ணா அந்தத் திலகா அக்கா ஒரு கதை சொன்னா – அதெல்லாம் உண்மையா?"

"என்ன சொன்னாள்?"

"உங்களுக்கு ஒரு கேள் பிரெண்டு கொழும்பிலை இருந்ததாம். அது தன்னோடு கப்பலில் வந்ததாம்."

"வேறை என்ன சொன்னாள்?"

"கொஞ்சம் வடிவுதான். ஆனால் கொழும்பு பாஷன். உன் அண்ணாவை ஆட்டி வைக்கப் போகிறாள் என்றாள்."

"அவ்வளவுந்தானா சொன்னாள்."

"இந்தக் கதையை ஒருவருக்கும் சொல்ல வேண்டாமென்றாள்."

"நீ எல்லாருக்கும் பறை தட்டி விட்டாயா?"

"இன்னும் ஒருத்தருக்கும் சொல்லவில்லை? இதெல்லாம் உண்மையா அண்ணா. அந்த அண்ணியை ஒருக்கால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்க ஆசையாயிருக்கு. திலகாவிற்கு முந்தி உங்களிலை ஒரு கண் இருந்ததெல்லே. இப்ப பொறாமையோடுதான் அவள் எல்லாம் சொன்னாள்.''

''நீ ஒருத்தருக்கும் பறைதட்ட மாட்டாய் தானே. சத்தியம் பண்ணு.''

வேடிக்கையாக மனோகரன் அவளுக்கு எதிரே கையை நீட்டினான்.

''அண்ணா ஆணை, ஒருத்தருக்கும் சொல்ல மாட்டேன். அண்ணியை எப்ப காட்டுவாய்?''

அவன் கையிலடித்துச் சத்தியம் செய்தாள்.

''ஒரு நாளைக்குக் கூட்டி வந்து உனக்குத்தான் முதலில் காட்டுவேன்.''

''அண்ணி இங்கே இல்லையா?''

''கொழும்பிலே தான்,''

''கப்பலில் வந்தாவாமே.''

''பிறகு கொழும்புக்கு போய் விட்டா.''

தங்கை அவனது பொய்யை நம்பி விட்டாள். வசந்தியின் கதையை இப்பொழுது எடுத்து அம்பலப்படுத்த அவன் விரும்பவில்லை. வசந்தியின் திட்டப்படி செய்வதே நல்லது என எண்ணிக் கொண்டான்.

# 48

முந்திய ஏற்பாட்டின்படி மறுநாட் காலை வசந்தியை குறித்த நேரத்தில் மனோகரன் நகரத்தில் சந்தித்தான். உட்கார்ந்து பேசுவதற்கு வாய்ப்பான ஓட்டல் எதுவும் பெரிய கடைப் பகுதியில் இல்லாததால் உரையாடியபடி தபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையப் பகுதியாக, ஓய்வாகச் சுற்றி நடந்து, மணிக் கூட்டின் எதிரே இருந்த புதிய ஓட்டல் ஒன்றிற்கு வந்தனர்.

சுற்றுலாப் பயணிகளுக்காகக் கட்டப்பட்ட அந்த ஓட்டலில் யூலை கலவரத்தினால் பயணிகளே மிகக் குறைவு. ஓய்வாக இருந்து தமது எதிர்காலத் திட்டங்களை வகுத்தனர்.

''வசந்தி. அசல் யாழ்ப்பாணத் தமிழ்ப் பெண்ணாக மாறி விட்டாய்.''

வெள்ளைப் புள்ளியிட்ட இளம் பச்சை கலரில் நைலெக்ஸ் சேலையும் வெண்நிற ஜாக்கெட்டும் அணிந்திருந்தாள். நெற்றியில் கரும் பொட்டிட்டு கூந்தலைப் பின்னி விட்டிருந்தாள். உதட்டுச் சாயமோ சென்ட் வாசனையோ கிடையாது. அப்போதும் உதடு ரோசா மலரின் நிறமாகவே இருந்தது. காதில் கம்மல் தவிர நகை எதுவுமே அணியவில்லை. கைக் கடிகாரம் மட்டும் கட்டி யிருந்தாள்.

''உங்களுக்கு இவைதானே பிடிக்கும்''

''விரும்பிய உடைகள் அணிய உனக்குச் சுந்திரமுண்டு. இவற்றிலெல்லாம் நான் தலையிட மாட்டேன்.''

''வெளியே பல ஆண்கள் அப்படிக் கூறினாலும் உள்ளூற தமக்கு விரும்பியதையே தம் மனைவியர் அணிய வேண்டும் என விரும்புகிறார்கள். உங்களை நான் குறிப் பிட்டுக் கூறவில்லை''

வசந்தி சிரித்துக் கொண்டே கூறினாள். அவள் எத்தனை சாதுரியமாகப் பேசுகிறாள் என எண்ணிக் கொண்டான்.

''ஆண் தலையெடுத்த சமுதாயம், பெண்களை இன்னும் ஆண்கள் தமது அடிமைகளாக எண்ணுகிறார்கள் என்பதைத் தான் நீ கூறுகிறாய்''

''ஆமாம், ஆண்கள் எத்தனை தவறும் செய்யலாம், பெண்களின் விருப்பமின்றி ஆண்கள் தவறு செய்தாலும், பெண்களின் சம்மதத்துடன் ஆண்கள் தவறு செய்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களையே குறைவாகவே இன்றும் சமூகத்தில் பார்க்கிறார்கள் ஆண்கள் தவறினர் என்று பார்ப்பதில்லை, முதலாவதைக் கற்பிழந்தவள் என்கிறார்கள், மற்றதை விபசாரம் என்கிறார்கள், எல்லா வழியிலும் பெண்தான் சமுகத்தில் பாதிக்கப்படுகிறாள்."

''இவையெல்லாம் இங்குள்ள சமூகத்திற்குத் தெரிய வரும்போதுதான் பிரச்சனையாகின்றன. பெரும்பாலும் தெரிய வந்து விடுவதில்லை, சமுதாயம் வளர்ச்சியடைய சமநிலை வந்துவிடும். மேல் நாடுகளில் கற்பு என இங்கு போல நுணுக்கமாக ஆராய்வதெல்லாம் மறைந்து விட்டது. இங்கும் விதவா விவாகங்கள் நடைபெறுகின்றன. சினிமா உலகில் மதிப்பான திருமணங்கள் நடைபெறுகின்றன. மேலும் முன்னர் போல் பெண்களைக் காட்டிக் கொடுக்கும். கர்ப்பம், நோய்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ளும் முறைகளை கிராமப் பெண்களே இன்றும் அறிந்துள்ளனர்."

மனோகரன் முற்போக்கானவனாகவே பேசினான்.

''இந்த விஷயங்கள் பற்றிப் பெரிய ஆராய்ச்சியெல்லாம் செய்திருக்கிறீர்கள் போல் தெரிகிறது''

''அசோகன் என்றோர் நண்பனுடனேயே விடுதியில் தங்கியுள்ளேன். நாங்கள் அடிக்கடி விவாதிப்போம். இவை பற்றி யெல்லாம் அவன் புதிய கருத்துகளைக் கூறுவான். கொழும்புக்கு நீ வந்ததும் முதலில் அவனையே அறிமுகப் படுத்துவேன்''

''பேச்சுக்கும் நடைமுறைக்கும் இடையில் பெரும்பாலோர் முரண்படுவதுண்டு. உங்கள் நண்பர் அத்தனை முற்போக்கானவரா''

''திருமணம் பற்றிய உன் கருத்துகளை அவர் முழுமையாக, புரட்சிகரமானது எனக்கூறி ஏற்றுக்கொண்டார்''

''அவர் வெறும் பேச்சில்தானே கூறியிருப்பார். உண்மையில் செயல்வீரர் நீங்கள்தானே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தி வழமைபோலவே அவனைப் புகழ்ந்தாள் அவனும் அவளின் பாராட்டை அவ்வேளை ஏற்றுக் கொண்டான்.

கொழும்பு திரும்பியதும் வீட்டிற்கு அவசியமாக வாங்கிப் போடவேண்டிய சிறு பட்டியல் ஒன்றை வசந்தி கொடுத்தாள். இரண்டு கட்டில்கள், சில நாற்காலிகள் அலுமினிய சமையற் பாத்திரங்கள் ஆகியவையே. குறிப்பிடப் பட்டிருந்தன. அத்துடன் அயல் வீட்டாரிடம் இரண்டாயிரம் ரூபா பெறுவதற்குரிய கடிதம் ஒன்றையும் கொடுத்து விட்டு கூறினாள்:

''அவர்கள் நல்ல வசதியானவர்கள். வெளிநாடு செல்லும்போது டாலர் கேட்டுக் கொடுத்திருந்தேன். அதற்குரிய பணத்தைப் பின்னர் வாங்குவதாகக் கூறினேன் கலவரத்தின்போது தந்தபோதும் நான் பெறவில்லை.''

சிற்றுண்டியும் டீயும் வரவழைத்து அருந்தினர். வசந்தி கொழும்புக்குப் புறப்படவேண்டிய நாளை, நிலைமைகளைப் பார்த்துப் பின்னர் எழுதுவதாக மனோகரன் கூறினான்.

''தமிழர்கட்கு இத்தனை இன்னல் நேர்ந்த வேளையில் எமது புது வாழ்வைத் தொடங்கப் போகிறோம்''

''அமெரிக்க ஆதிக்கம் விரைவில் விழுந்துவிடும். அப்போது தமிழர்களுக்கும் புதுவாழ்வு ஆரம்பமாகும்''

அசோகன் வழமையாகக் கூறும் கூற்றோடு வசந்தியின் வார்த்தைகளை ஒப்பிட்டுப் பார்த்தான்.

''அமெரிக்க ஆதிக்க வீழ்ச்சியுடன் இங்கு சோஷலிசப் புரட்சி ஆரம்பித்துவிடும்''

மீண்டும் பஸ்நிலையத்தை நோக்கி நடந்தனர்.

''ஒன்று சொல்ல மறந்து விட்டேன். உங்க அயல் வீட்டுப் பெண் என நீங்கள் அறிமுகப்படுத்திய திலகாவை கப்பலில் கண்டேன்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்படியா?''

மனோகரனின் மனதுள் அரிந்துக்கொண்டிருந்த விஷயத்தை அவளாகவே தொட்டாள். அதில் ஆர்வம் காட்டாதவனாக மனோகரன் சமாளித்தான்

''மாற்றிக்கட்ட சேலையே இல்லை. நான் என் சேலையில் ஒன்று கொடுத்தேன்''

''குட் அன் நைஸ் ஒவ் யு தாங்யு. சொன்னாளா?''

அவன் எதிர்பார்க்காது கடைசி வார்த்தை வந்துவிட்டது.

''இல்லை''

மனோகரன் எதிர்பார்த்தபடியே பதில் இருந்தது. திலகாவின் பொறாமையை அளந்து கொண்டான். ஆயினும் இக்கேள்வியை வசந்தியிடம் கேட்டிருக்கப்படாது என தன்னையே கண்டித்தான். அதன்மேல் திலகா பற்றிய பேச்சை அவன் வளர்க்க விரும்பாதவனாக கதையை வேறு திசைக்கு மாற்றினான்.

''கடைத்தெருவில் ஏதாவது ஷொப்பிங் இருக்கிறதா?''

''இல்லையே. நான் பஸ்ஸில் போய்விடுவேன். உங்களுக்கு வேறு அலுவல் இருந்தால் பார்த்துக்கொள்ளுங்கள்''

வசந்தி சுறுசுறுப்பாக நடந்து சென்று பஸ்ஸில் ஏறுவதைப் பாத்துக்கொண்டு நின்றான்.

இளைய தங்கைக்கு ஏதாவது பரிசு வாங்கிக் கொடுத்துவைக்கவேண்டும் என எண்ணிக்கொண்டே புதிய சந்தையுள் நுழைந்தான். அவ்வேளையும் திலகா வசந்தியிடம் ஏதாவது உளறியிருப்பாளோ என்றேமனம் அங்கலாய்த்தது. சேலை வாங்குமளவிற்குப் பழகிப் பேசியிருக்கிறாள் என்பது மட்டும் நன்கு தெரிந்தது. வசந்தியை மட்டம் தட்டுவதற்காக தங்கள் பழைய காதல் பற்றி அளந்திருப்பாள் என்றே எண்ணிக் கொண்டான். வசந்தி அவற்றை ஒருபோதும் தன்னிடம் கூறமாட்டாள் என்பதையும் அவன் அறிவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 49

கொழும்புக்குத் திரும்பிய சில நாட்களில் அயல் வீட்டாரிடம் வசந்தி கொடுத்த கடிதத்தை மனோகரன் கொடுத்தான். ஐம்பது வயதைத் தாண்டிய வசதி படைத்த முகமது என்பவர் கடிதத்தை உடைத்துப் படித்ததும் அவனை மரியாதையாக உட்காரச் செய்தார்.

வசந்தியின் குடும்ப நலம் விசாரித்தார்.

'நல்ல பெண்' என்றார்.

உள்ளே சென்று சில நிமிடங்களில் திரும்பி வந்து பணத்தைக் கொடுத்தார். மனோகரன் எழுந்ததும் டீ சாப் பிட்டு விட்டுப் போகும்படி வற்புறுத்தினார். உடனேயே டீயும் வந்தது.

டீ கொண்டு வந்த பெண் அவனிடம் கூறினாள்:

''இனி ஒரு பயமுமில்லை. வசந்தியை வீட்டுக்கு வரும் படி எழுதுங்கள் நாங்களெல்லாம். பார்த்துக் கொள்வோம்.''

முகமது அவனுக்குக் கைகொடுத்து வழியனுப்பினார்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை அசோகனையும் அன்சாரியையும் அழைத்து வந்து வீட்டைக் காட்டினான். யாவரும் வீட்டைக் கூட்டித் துடைத்துத் துப்புரவாக்கினர். அவர்களது உதவி யுடன் வசந்தி கொடுத்த பட்டியல் பொருட்களையும் வாங்கிப் போட்டான்.

கலவர நெருக்கடி வேளையில் எழாத ஆவல் தற்போது அவனுள் வளரத் தொடங்கியது. வசந்தியை விரைவிலேயே அழைத்து விடவேண்டும் என்ற ஏக்கம் மனதில் உந்திக் கொண்டிருந்தது.

கொழும்பை விட்டுக் கிராமங்களுக்குச் சென்ற ஏராள மான தமிழ்ப் பெண்கள் திரும்பி வர அஞ்சி இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களிலேயே தங்கி விட்டனர். பெரும்பாலானோர் இனித் திரும்புவதில்லை என முடிவு செய்து அங்கேயே தங்கிவிட்டனர்.

மனோகரன் கிடைத்த வேலையை விட்டுவிட முடியாது. எப்படியும் மீண்டும் அங்கு வாழமுடியாத நிலை ஏற்படும் வரை வாழ்ந்தே தீரவேண்டும் என்ற முடிவு வசந்தியின் துணிச்சல் விடுதி நண்பர் சிலர் எதிர்ப்புத் தெரிவித்த போதும் வசந்திக்கு நிலைமைகளை விளக்கி எழுதினான்.

''சனிக்கிழமை காலை இங்கு புறப்படும் பஸ்சில் வந்து விடுவேன். முடிந்தால் மாலை மூன்றரை வரையில் கோட்டை ரெயில் நிலையம் முன்பாக வருக. அல்லது நான் நேரடியாக வீட்டுக்கு வந்து விடுவேன். உங்களைக் காண ஏங்கிக் கொண்டிருக்கிறேன்—உங்கள் வசந்தி''

கடிதம் எழுதிய முறையே வசந்தியின் நல்ல சுபாவத்தைக் காட்டுவதாக மனோகரன் எண்ணிக் கொண்டான். மற்றைய பெண்கள் போல அவனிடமிருந்து எந்தக் கடமையையோ, உரிமையையோ அவன் எதிர்பார்க்கவில்லை என்பதும் நன்கு தெரிந்தது.

அவன் கோட்டை நிலையத்திற்கு மூன்று மணிக்கே சென்று காத்து நின்றான். எதிர்பார்த்தபடி சரியாக மூன்றரைக்கு பஸ் வந்து விட்டது.

''பிரயாணம் எப்படி?''

''நல்லாயிருந்தது.''

''களைப்பாயில்லையா?''

''உங்களைக் கண்டதும் தீர்ந்து விட்டது.''

ஒரே சூட்கேஸ். அதையும் அவளாகவே தூக்க முயன்றாள்.

''பஸ்சிலேயே போகலாம்.''

வசந்தி சொன்னாள்.

''ஓட்டோவில் போகலாம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் ஒன்றும் பேசவில்லை. ஓட்டோ எடுக்க அருகே நொறிஸ் வீதி பஸ் தரிப்பிடத்திற்குச் சென்றனர்.

மனோகரன் ஒரு ஓட்டோவை நிறுத்த முயன்றான்.

அதற்கிடையில் ஒரு மொரிஸ் மைனர் டாக்ஸி அவளெதிரே நின்றது:

''அம்மா ஏறுங்கள்''

டிரைவரே இறங்கி சூட்கேசை எடுத்து டிக்கியில் வைத்தான். கதவைத் திறந்து விட்டான். வசந்தி விரும்பாத போதும் மனோகரனையும் அழைத்து இருவரும் பின்புறமாக ஏறிக்கொண்டனர்.

டாக்ஸி புறப்பட்டதும் அந்தச் சிங்கள டிரைவர் சொன்னான்:

''அம்மா இப்ப ஓட்டலுக்கு வாறதில்லை.''

''ஆமாம்,''

''கலியாண மாச்சா. மிச்சங் சந்தோஷம்.''

''ஆமாம்.''

''கலவரத்தோடு ஓட்டல் தொழிலே போச்சு. ரூறிஸ்டே வருவது மிகக் குறைவு. இப்ப தெருவிலேயே டாக்ஸி ஓட்டுகிறேன்.''

ஒரு லாரியைக் கடந்ததும் மீண்டும் சொன்னான்: ''நம்ப ஆட்கள் மடவேலை செய்திட்டாங்க. பக்டரிகளுக்கும் நெருப்பு வைத்துவிட்டு தெருவிலை ரஸ்தியாதியடிக்கிறாங்க. நம்ம டாக்ஸிக்கார சுந்தரத்தை நான்தான் வீட்டிலை பத்திரமா வைச்சிருந்தது. நம்ம சிங்கள ஜாதிக்கு இது பெரிய வெட்கம். இதெல்லாம் புத்தருக்கே பொறுக்காத காரியம்.''

அவனது உண்மையான வார்த்தைகளையிட்டு யோசித்துக் கொண்டிருக்கையில் வசந்தி மனோகரனை உற்று நோக்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓட்டலின் முன்றிலில் கியூவரிசையில் நின்று ரூறிஸ்டு களுக்கு டாக்ஸி ஓட்டுபவன். எங்கள் பண நிலைமை தெரியாமல் டாக்ஸியில் ஏற்றி விட்டான்"

வசந்தி ஆங்கிலத்தில் மனோகரனுக்குக் கூறிக் கொண்டே ஒரு சிரிப்பை வரவழைத்து அவனது கரத்தைப் பற்றி அழுத்தினாள்.

"முந்திய வீடுதானே அம்மா"

"ஆமா"

அவர்கள் வீட்டு வாயிலில் இறங்கியதும் சூட்கேசை எடுத்துச் சென்று வராந்தாவில் வைத்தான்.

வசந்தி கொடுத்த பணத்தை நன்றி கூறி வாங்கிக் கொண்டான்.

"இதுவே கடைசி டாக்ஸி. இனிமேலெல்லாம் நான் ஒரு போதும் டாக்ஸியில் ஏறமாட்டேன்."

வசந்தி கூறினாள்.

மனோகரன் வசந்திக்காக சாப்பாடு வாங்கி வைத்திருந்தான்.

உள்ளே நுழைந்து மனோகரன் வாங்கிப் போட்ட பொருட்களைப் பார்த்து ஒவ்வொன்றாகப் பாராட்டினாள்.

"எல்லாமே நல்ல செலக்ஷன், தற்போது இவையே போதும். பிறகு தேவைக்கு நானே வாங்கிக் கொள்வேன்"

உடைந்த டெலிபோனையும் நொருங்கிய நுகர் பண்டங்களையும் ஒரு மூலையில் பார்த்து இவையெல்லாம் இனிமேல் எமக்கு வேண்டாம் என்று கூறினாள்.

"அம்மாவிடம் என்ன சொல்லி வந்தாய்?"

"ஓட்டல் வேலைக்கு என பொய் சொல்லி வந்தேன் ஓரிரு வாரத்தில் உண்மையைத் தெரிவித்து விடுவேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையில் தனியவே அயல் வீடுகளுக்குச் சென்று வந்தாள்.

"அவர் இஞ்சினியர், இங்கேயே காதலித்திருந்தோம். யாழ்ப்பாணத்தில் பதிவுத் திருமணம் செய்து கொண்டோம்" அயல் வீட்டாரிடம் தயக்கமின்றிக் கூறினாள்.

"தாலி எங்கே?"

"நகையையே கொழும்பில் இனிமேல் போட முடியுமா?"

வசந்தி எல்லோரையும் சமாளித்து ஆசி பெற்று வந்தாள். கணவரை பின்னர் அழைத்து வருவதாகவும் கூறி வந்தாள்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அசோகன், அன்சாரி, நியூட்டன் ஆகிய நண்பர்களை வரவழைத்து வசந்தியை அறிமுகப் படுத்தினான்.

வசந்தி சுறுசுறுப்பாக சிற்றுண்டி தேநீர் வழங்கினாள். எல்லோரிடமும் சரளமாகப் பேசி யாழ்ப்பாணத்து நிலைமைகளை தான் கண்டு, கேட்டபடி விளக்கினாள். இளைஞர்கள் தவிர முதியவர்களில் பெரும்பாலானோர் விடுதலைக் கூட்டணியை ஆதரிப்பதாகச் சொன்னாள் இந்தியா தமிழரின் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கை பலரிடம் நிலவுவதாகவும் கூறினாள். ஆயிரக்கணக்கான மாணவர்களையும் இளைஞர்களையும் காணவில்லை, அவர்கள் ஆயுதப் பயிற்சிக்கு இந்தியாவிற்கு சென்றிருப்பதாகவும் இரகசியமாகப் பேசிக் கொள்ளுகின்றனர் எனவும் சொன்னாள்.

மனோகரன் அறைக்குள் சென்றபோது அசோகனைப் பார்த்து வசந்தி புன்னகையோடு சொன்னாள்:

"உங்களைப் பற்றி ரொம்பச் சொல்லியிருக்கிறார். இன்றுதான் பார்க்க முடிந்தது மகிழ்ச்சியே"

"அப்படி என்ன சொல்லியிருந்தான்?"

"திருமணத்தின் பின்னரும் புரட்சி அரசியலை விட்டு விடாதவர் என்றும் கூறுவார்"

"நீங்களும் அவனது அரசியலைத் தடுக்க மாட்டீர்கள் தானே"

"நான் நிட்சயமாக உதவியாயிருப்பேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50

மனோகரனின் ஆரம்ப வாழ்வு சொர்க்க வாழ்வாகவே இருந்தது. வெளியே செல்லும் போது தமிழர்களின் அரசியல் நிலைமை வருத்தமளித்த போதும் வீடு இன்பமய மாகி யாவையும் மறக்கச் செய்தது.

வசந்தியின் அன்பும் ஆதரவும் பணிவிடைகளும் அவனை வானத்தில் பறக்கச் செய்தன.

திலகாவுடன் கழித்த காதல் வாழ்க்கையையே வசந்தி யுடன் ஒப்பிட்டுப் பார்த்தான். அவனது இரத்த நாளங் களைப் பரீட்சிக்கும் அளவிற்கு அவள் உடலை வளர்த்து அடிமையாக்கி கொடுத்த சிறு இன்பத்தோடு, வசந்தி ஆரம்பத்தில் சிறிது நாணயம் காட்டியபோதும் நாளாக அவள் வழங்கிய இன்பத்தை ஒப்பிட்டுப் பார்த்தான். வசந்தி தன் வாழ்வில் எதிர்பாராது வந்த வசந்தமாகவே எண்ணிக் கொண்டான்.

மனோகரனின் படிப்பு, பதவியைப் புகழ்ந்தாள் அதற் குரிய சிறிது சீதனமுமின்றி தன்னை மனைவியாக ஏற்று வாழ்வது பற்றிப் பாராட்டினாள். அவனது அழகு, இளமை பற்றியெல்லாம் போற்றினாள். அவனது சுதந்திரம் பழக்க வழக்கம் எதிலும் அவள் தலையிடவில்லை.

வீட்டுக்கு பிந்தி வருவதற்கெல்லாம் அவள் காரணமே கேட்பதில்லை. அவனாகக் கூறினால். "அப்படித்தான் நினைத்தேன்" என்று கூறிவிடுவாள்.

"களைத்து விட்டீர்கள். குளித்துவிட்டு வந்து டீ சாப் பிடுங்கள்."

அவனது சப்பாத்தையும் உடைகளையும் களைந்து டவல் சாரத்தை எடுத்து வந்து கொடுப்பாள்.

அவனது உடைகளை தானே தோய்த்து, தேய்த்து அடுக்கி வைப்பாள். ஒரு தடவைக்கு மேலாக எந்த உடை யையும் அணிய விடமாட்டாள்.

அவனுக்குப் பிடித்த உணவுகளைச் சமைத்து வைப்பாள் அவனுக்குப் பிடிக்கக்கூடிய உடைகளையே தானும் அணிவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமை பெற்ற முற்போக்கான பெண்ணாக வசந்தி இருந்தபோதும் சாதாரண வீட்டுத் தமிழ்ப் பெண்ணாக பழகுவது, வீட்டு வேலைகளைச் செய்வது யாவும் அவனையே அடிக்கடி சிந்திக்க வைத்தது.

''வசந்தி நீ அளவுக்கு அதிகமாக என்மேல் கவனம் செலுத்துகிறாய்.''

''ஆர் மேல் கவனம் செலுத்தச் சொல்லுகிறீர்கள்.''

''உன் மேல்.''

''இதுதான் எனக்கு அதிகம் மகிழ்ச்சி தருகிறது. நான் சந்தோஷ மடைவதை நீங்கள் விரும்பவில்லையா?',

அவளுடன் உரையாடி எதிலும் வெல்ல முடியாது என்பதை மனோகரன் பல தடவை கண்டுவிட்டான்.

அமைதியாக ஓடிக்கொண்டிருந்த இன்ப வாழ்வை சிறிதும் குலைக்க விரும்பாத விதமாக மனோகரனும் நடந்து கொண்டான்.

# 51

மாலையில் அலுவலகத்தில் பணியாற்றிக் கொண் டிருந்த அறைக்குள் முரளி நுழைவதைக் கண்டதும் மனோ கரன் திகைப்படைந்தான்.

அண்மையில் எவரும் இல்லாதபோதும் மெதுவாகவே கேட்டான்.

''நீ எங்கே இங்கே வந்தாய்?''

''ஏன் அண்ணா வரப்படாதோ?''

''எப்படி உனக்கு இந்த இடம் தெரிந்தது?''

'அசோகண்ணாதான் விலாசம் தந்தார்,''

''இந்த நெருக்கடியான நேரத்தில் கொழும்புக்கு ஏன் வந்தாய்?''

''இயக்க அலுவலாக வந்தேன். அதோடு உங்களையும் பார்த்துவிட்டுப் போகவே இங்கே வந்தேன்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கொழும்பில் நீ நிற்பது ஆபத்தில்லையா?''

''அது இயக்க விஷயம். என்னைப் பொறுத்த விஷயம்?''

''நீ எப்படி அப்படிச் சொல்ல முடியும். உனக்கு ஆபத்து ஏற்பட்டால் எங்களுக்குக் கவலை ஏற்படாதா?''

''முன்னரும் இப்படித்தான் நீங்கள் கூறியதை நான் மறக்கவில்லை. முக்கிய விஷயம் பேசவேண்டும் வெளியே போவோமா.''

''கடற்கரைக்குப் போவோம்.''

வானம் மப்பாக இருந்தது. கடற்கரையில் போடப்பட்டிருந்த கருங்கற்களின் மேல் கடல் அலைகள் மோதிக் கொண்டிருந்தன.

முரளியே உடனே விஷயத்திற்கு வந்தான்:

''நான் முன்னர் சொன்ன பிறகும் அப்பா, அம்மாவிற்கும் தெரியாமல் அந்தப் பெண்ணைக் கலியாணம் கட்டி வாழத் தொடங்கி விட்டீர்கள் என்று அறிந்தேன். அதுதான் எனக்குக் கவலை.''

''ஓம் அதிலென்ன உனக்குக் கவலை.''

முரளி அநாவசியமாக தன் வாழ்வில் தலையிடுவது போல அழுத்தமாகவே மனோகரன் பதிலளித்தான்.

''அந்தப் பெண் ஆர் தெரியுமா? அந்த ஓட்டலோடு சேர்ந்த 'கோல் கேளி'ல் ஒருத்தி: அந்த ஓட்டலுக்கு 'கோல் போய்ஸ்' கூட இருக்கிறார்கள். ஓட்டலில் வேலை செய்யும் இயக்க அனுதாபிகள் எனக்குச் சொன்னபோது எனக்கே வெட்கமாகி விட்டது. அந்தப் பெண் வலை போட்டு உங்களைப் பிடித்து விட்டாள் என்று ஒரு நண்பன் சொன்னான். சீதனமில்லாமல் ஒரு இஞ்சினியர் மாப்பிள்ளை கிடைத்து விட்டது......''

மனோகரனுக்கு மூளையில் சுத்தியலால் அடிப்பது போலிருந்தது. கையிலிருந்த சிகரெட்டை ஊதியபடி சிறிது நேரம் பேசாது நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்படிப் பேசுவது உனக்கும் நீ சார்ந்துள்ள இயக்கத்திற்கும் இழுக்கில்லையா?"

கடைசி வார்த்தைகளை மட்டும் பிடித்துக் கூறி தற்காலிகமாகச் சமாளிக்க மனோகரன் முயன்றான்.

"என் தங்கைமாரை சீதனமில்லாமல் உங்களால் கட்டிக் கொடுக்க முடியுமா?"

"அது நான் பார்த்துக் கொள்வேன். இன்னும் ஏதாவது சொல்ல இருந்தால் இப்பொழுதே சொல்லி விடு."

"இதற்கு மேல் சொல்ல என்ன இருக்கிறது?"

"அப்ப நீ வீட்டுக்கு வரமாட்டாய்?"

"எனக்கு மனம் சரியில்லை."

"கொழும்பில் பாதுகாப்பாக தங்க வேறு இடமிருக்கிறதா? அல்லாவிடில் அசோகனிடம் போய் தங்கலாம்"

"அதற்கு வேறு இடமிருக்கிறது."

"சரி நான் போகவேண்டும். கொழும்பில் விழிப்பாகத் தங்கவேண்டும். கண்டபடி சுற்றித் திரியாதே"

இருவரும் எதிர்த்திசைகளில் நடந்தனர். மனோகரனின் முகமாற்றத்தை முரளியால் புரிய முடிந்தது. தலைகுனிந்தபடி அவன் நடந்துகொண்டிருந்ததை ஒருதடவை திரும்பிப் பார்த்தான். தான் கேட்டது தவறுபோல ஒரு உணர்வு.

மனோகரன் அவ்வேளை முரளியின் முன் ஓரளவு சமாளித்த போதும் அவன் இதயத்தில் ஈட்டிபாய்ந்தது போல இதயத்திலிருந்து இரத்தம் சொட்டிக் கொண்டிருந்தது.

கழுத்து முழுவதும் வியர்வையில் நனைந்து விட்டது. கடற்கரை வழியே நடந்து கொண்டிருந்தான்.

வசந்தியை ஓட்டலில் முதன் முதலாகக் கண்ட நாள் தொடக்கம் நடைபெற்ற சம்பவங்கள், உரையாடல்களெல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் ஒவ்வொன்றாக அவன் நெஞ்சில் ஓடிக்கொண்டிருந்தன.

அவள் காட்டிய காதல், பாசம், இன்பமேல்லாம் கரைந்து சிந்தனையில் வேறு பெண்ணாக அவள் காட்சியளித்தாள்.

நடந்து கொண்டே. சிகரெட்டை ஊதிக்கொண்டிருந்தான். எங்கே போவதென்றே தெரியவில்லை. கால்கள் தெருவழியே நடந்து கொண்டிருந்தது.

இடையிடை நெஞ்சுபொங்கி விம்மிக் கொண்டிருந்தது.

அசோகனைச் சென்று பார்ப்போம் என மனோகரன் திடீரென எண்ணினான்.

முன் போலவே அந்த விடுதி கலகலப்பாகவே இருந்தது.

அரசியல் பேச்சே அங்கு முக்கிய இடம் பெற்றது.

இந்தியாவின் தலையீடு சிங்கள வரிடை ஏற்படுத்தியிருக்கும் அச்சத்தைப் பற்றி அன்சாரி கூறினான்.

நடை பெற்ற கொள்ளை, கொலை, தீ வைப்பு, கற்பழிப்புகளால் சிங்களவர்கள் பண்பாடற்றவர், அநாகரிகமானவர்கள் என உலக அரங்கில் எண்ணப்படுகிறது என்பதை அரசைச் சார்ந்தவர்களே ஒப்புக்கொள்கின்றனர் எனவும் அன்சாரி சொன்னான்.

தமிழர்களிடம் சிங்களக்காடையர் கப்பம் வாங்கித்திரிகின்றனர்; அதைத் தடுப்பதற்கு எவருமில்லை என இராமையா குறைபட்டுக் கொண்டான்.

அங்கு அலசப்பட்ட பிரச்சனைகளோடு ஒப்பிடும்போதும் தன் பிரச்சனையே அவ்வேளையும் மனதில் பூதாகாரமாக மனோகரனுக்குத் தெரிந்தது.

அசோகனை வெளியே வரும்படி அழைத்தான். டீக் கடைக்கு அழைத்துச் சென்றான்.

''முரளி வந்தான். உன் அலுவலக விலாசத்தையும் வீட்டு விலாசத்தையும் கொடுத்து அனுப்பினேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அலுவலகத்தில் வந்து பார்த்தான்."

"அவன் எத்தனை துணிச்சலாக இந்த வேளை இங்கேயே திரிகின்றான் பார்த்தாயா. நீ கண்டிக்க வில்லையா?"

"நானும் அதைத்தான் கண்டிப்பாகச் சொல்லி அனுப்பி னேன். சில இயக்கத்தவர்கள் எதிரியை குறைவாக மதிப் பிடப் பார்க்கிறார்கள். 1971-ல் சிங்கள இளைஞர்களுக்கு நடந்ததை மறந்துவிடப் பார்க்கிறார்கள்" — அசோகன் கூறினான்.

"இதை நீ கூறவில்லையா"

"உறைப்பாகக் கூறினேன்"

வசந்தி பற்றிய பேச்சை எடுப்போமா விடுவோமா என அவன் மனம் ஊசலாடிக் கொண்டிருந்தது. அவனது மௌனத்தை கலைப்பதாக அசோகனே சொன்னான்:

"எப்படி வசந்தி நலமா? அவளை எனக்கு நன்கு பிடித்துக் கொண்டது. நீ அதிஷ்டசாலியே."

மனோகரனால் வாயே திறக்க முடியவில்லை.

மனோகரன் விடைபெற்றுத் திரும்பும்போது திடீரென நினைவு பெற்றவனாக தோளைத் தட்டி அசோகன் சொன்னான் :

"ஒரு விஷயம் சொல்ல மறந்துவிட்டேன், நாதனை இராணுவ முகாமில் நீ கண்ட விஷயமெல்லாம் முரளிக்குத் தெரிந்திருக்கிறது. அந்த விஷயமாகத்தான் அவன் இங்கே அனுப்பப்பட்டிருக்கிறான் போலத் தெரிகிறது."

மனோகரனின் நெஞ்சு ஒரு கணம். அதிர்ந்தது.

## 52

அசோகனிடம் விடைபெற்று தெருவழியே மீண்டும் ஆழ்ந்த சிந்தனையுடன் மனோகரன் நடந்தான். நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிய சிந்தனை மழுங்க வசந்தியின் நினைவே மீண்டும் இதயத்தில் புற்றெடுத்தது.

வசந்தி என்றும் ஓட்டல் வேலையே விரும்பவில்லை. தாயை என்றுமே மதிக்காத காரணத்தையும் எண்ணிப் பார்த்தான். தாயாரின் நுகர் பண்ட வெறியை அவள் வெறுத்து வந்தாள். அவையெல்லாம் நொருக்கப்பட்ட போதும் அவள் கவலைப்படவில்லை. தாயாருக்கும் தனக்கும் தண்டனை கிடைத்ததாகவே எடுத்துக் கொண்டாள்.

திலகாவிற்கு இருந்த கர்வத்தில் சிறிதளவும் வசந்திக்கு இருக்கவில்லை. இன்று வரை வசந்தி எனக்கு உதவிகள். வசதிகள், இன்ப வாழ்வு தந்தாளே தவிர துன்பத்தை என்றும் தரவில்லை.

இன்றும் என்னை எவ்விதத்திலும் அவள் கட்டி வைக்க வில்லை. பதிவுத் திருமணமே வேண்டியதில்லை என வற்புறுத்தியவள் அவளே. தன்னுடன் வாழ விரும்பாத வேளை எந்நேரமும் வெளியேறலாம் என அவளே கூறி னாள். சட்டப் பிணைப்பு எதுவுமேயில்லை. பழக்கம், காதல் பிணைப்பு மட்டுமே. குழந்தை பெறுவது பற்றியும் என்னையே முடிவு செய்யும்படி கூறினாள்.

வசந்தி நாணயமானவள், நேர்மையானவள். அவளை ஆழமாக இப்பொழுதே அறிய முடிகிறது.

நான் இன்றுகூட விடுதிக்குப் போய் விடலாம், அவள் குறை எதுவுமே கூறமாட்டாள்.

யாழ்ப்பாணத்தில் சந்தித்தபோது பெண்களின் இன்றைய நிலை பற்றி இருவரும் உரையாடியதும் அவனது நினைவில் வந்தது.

இந்த விஷயம் பற்றி அவளிடம் கேட்பது முட்டாள் தனம். அவள் மறுக்கலாம். என்னால் நிரூபிக்க முடியுமா? அல்லது காரணம் கூறலாம். தாயார் மேல் பழி போடலாம். என்னைப் போன்றவருக்கு வாழ்க்கை இல்லையா என்று கேட்கலாம். கலவரத்தின் போது கற்பழிக்கப்பட்டவர்களுக்கு என்ன வழி கூறுவீர்கள் எனக் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலகா வீம்பிற்காக வாயினும் தன் காதலைப் பற்றி நிச்சயம் உளறியிருப்பாள். வசந்தி அந்தப் பேச்சையே எடுக்கவில்லை. நான் எடுத்தால் அவளால் அதையும் கூற முடியும்.

விக்டோரியா பூங்கா எல்லாம் சுற்றி அலைந்தான். நடந்து களைப்போடு வீடு சேர இரவு பத்து மணிக்கு மேலாகி விட்டது.

வழமை போல வசந்தி வரவேற்றாள். அவனால் தலை நிமிர்ந்து அவளது முகத்தைப் பார்க்க முடியவில்லை. வசந்தி அவனை உட்காரச் செய்து சப்பாத்தைக் கழட்டினாள். சேட்டைக் கழட்டியபோது அவனது உடலின் வியர்வை தெரிந்தது.

''களைத்துப் போயிருக்கிறீர்கள். குளித்து விட்டு வாருங்கள், சாப்பிடலாம். உங்களுக்குப் பிடித்த நூடில்ஸ் செய்துள்ளேன். உங்களுக்கு வியப்பான செய்தி ஒன்றும் வைத்திருக்கிறேன்.,'

வசந்தி வழமையான புன்சிரிப்புடனேயே கூறினாள்.

அச் செய்தியில் எவ்வித ஆர்வமும் காட்டாதவனாக குளியல் அறையை நோக்கிச் சென்றான். அவன் தோளில் டவலையும் சாரத்தையும் வசந்தி போட்டு விட்டாள்.

சாப்பிடக் கூடிய மனநிலையோ பசியோ எழவில்லை. எப்படியும் வசந்தியைத் திருப்திப்படுத்த மேசைக்குச் சென்றான். 'செய்தி' என்பது அவளது வழமையான சாதுரியம் என எண்ணியபடி ஆர்வம் எதுவும் காட்டாது குனிந்த தலையுடன் நூடிள்சைச் சாப்பிடுவதாகப் பாவனை செய்தான்.

''அந்தச் செய்தி பற்றி அறிய உங்களுக்கு ஆர்வமேயில்லை. ஏன் சோர்ந்து போயிருக்கிறீர்கள்? ஏதாவது உடம்பு சரியில்லையா?''

எழுந்து அவனது நெற்றியில் தன் குளிர்ந்த கைகளை அழுத்தினாள். அவனது உணர்வுகள் உடனே ஓரளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்படைவது போன்ற உணர்வு. தொடர்ந்து நெற்றியை அவள் அழுத்திக் கொண்டிருக்க வேண்டும் போல எண்ணினான். அவளிடம் கேட்கத்தக்க திராணியில்லை.

''நெற்றியில் சூடு எதுவுமில்லை. அந்தச் செய்தியைச் சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள்.''

''சரி சொல்லேன்.''

''உங்க தம்பி முரளி இங்கே வந்திருந்தார்.''

''அப்படியா?''

அவனையறியாது வார்த்தைகள் வெளிவந்தன.

''ஆறரை மணியளவில் உங்களைப் பார்க்க என வந்தார். டீ சாப்பிட்டுவிட்டு எட்டு மணி வரையில் காத்திருந்தார். இங்கே தங்கும்படியும் நீங்கள் எந்த வேளையும் வந்து விடலாம் எனவும் சொல்லிக் கொண்டிருந்தேன். தங்குமிடத்தில் சொல்லாது வந்து விட்டேன் எனக்கூறிப் புறப்பட்டார். சாப்பிட்டுப் போகும்படி கேட்டேன். சாப்பிட்டார். செலவிற்குப் பணம் வேண்டுமா எனக் கேட்டேன். தன்னிடம் இருக்கிறதாகக் கூறிவிட்டுப் போனார்.''

தம்பி வந்த வியப்பான செய்தியோடு வசந்தி அவன் மேல் காட்டிய மதிப்பும் மனோகரனை உற்சாகப் படுத்தியது. மரியாதை காட்டிப் பேசியதும் அவன் மனதைத் தொட்டது.

''அவன் என்ன சொன்னான்?''

''காலையில் கட்டாயம் உங்களைப் பார்க்க வருவதாகச் சொன்னார். இங்கே காலையில் சாப்பிட வருவதாகவும் ஒப்புக்கொண்டார். முதல் தடவையாக நானும் ஒரு புலியைக் கண்டேன்!''

குதூகலமும் புத்துணர்ச்சியும் வசந்தியின் குரலில் ஒலித்தது.

''வேறு ஏதாவது சொன்னானா?''

''உங்க அண்ணா என்னைக் கைவிட்டுப் போனால் என்னையும் இயக்கத்திற் சேர்க்கும்படி வேண்டினேன். சிரித்துக் கொண்டே சம்மதித்தார்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
26 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
26 JUL 2011
Library

649004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
26 JUL 2011
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய சந்தையில்...

கொழும்புமாநகர் 1977ன் பின்னர் புதியதோர் உலகச் சந்தையாகிறது. உலகத்து நுகர் பண்டங்கள் அங்கு குவிக்கப்படுகின்றன. தாயாரின் நுகர்பண்ட வெறிக்குப் பலியாகும் வசந்தி, படிப்பை இடைநிறுத்தி, ஓர் ஐந்து நட்சத்திர ஓட்டலில் உழைக்க நேரிடுகிறது. அவள் அவ்வேலையையும் தாயையும் வெறுக்கிறாள்; வேலை தேடி அலைந்து வரும் மனோகரனைக் கண்டு பழகுகிறாள்.

கிராமத்துப் பள்ளி நாட்களில், விளையாட்டாக ஏற்பட்ட சிறு விபத்து ஒன்றால் திலகாவைக் காதலிக்க நேர்ந்த மனோகரன் பின் அவளை மறக்க முயல்கிறான்; வசந்தி யாவற்றிலும் சிறந்து விளங்கக் காண்கிறான். பெற்றார் அனுமதியின்றி இருவரும் ஒருமித்து வாழத் தீர்மானிக்கின்றனர். அவ்வேளை யூலை 83, இனக் கலவரம் ஏற்படுகிறது...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org